15.3
10026 to 10030
10286

# தக்கை ராமாயணம்

எம்பெருமான் கவிராயர் பாடிய

# தக்கை ராமாயணம்

## தொகுதி-II

[கிட்கிந்தா, சௌந்தரிய காண்டங்கள்]

பதிப்பாசிரியர்

கு. அருணாசலக் கவுண்டர்

பொறுப்பாசிரியர்

டாக்டர் இரா. நாகசாமி

இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை - 600 028

1983

முதற் பதிப்பு ; 1983

தொ. பொ. ஆ. துறை. எண் 92

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

தக்கை ராமாயணம் - இரண்டாம் தொகுதி

கு. அருணாசலக் கவுண்டர்

விலை :

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப் பெற்றது.

## அஞ்சலி மலர்த்தல்

கம்பன் அபிமானிகளை நினைவுகூர்ந்து, தக்கை ராமாயணச் சுவடியை பாதுகாத்து வைத்திருந்த **வித்வான் வே. ரா. தெய்வசிகாமணி கவுண்டர்** அவர்கள் நினைவுக்கு அஞ்சலி மலர்த்தி,

என்னை இச்சிவிகையில் ஏற்றுவித்த தமிழக முதல்வர் **மாண்புமிகு எம். ஜி. ராமச்சந்திரன்** அவர்களுக்கு இந்நூலை உரித்தாக்குகிறேன்.

கு. அருணாசலக் கவுண்டர்

# முகவுரை

தமிழ்நாடு அரசு அச்சில் வராத அரும் தமிழ் நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் கூடிய சிறந்த பதிப்பாக வெளிக் கொண்டு வரவேண்டும் என்ற ஒரு திட்டத்தின் கீழ் இதுகாறும் 16 நூல்களை வெளிக் கொணர்ந்துள்ளது. இந்த வரிசையில் தக்கை இராமாயணம் என்ற நூல் கு. அருணாசலக் கவுண்டர் அவர்களால் பதிக்கப் பெற்று வெளிப்படுத்தப்படுகிறது. இந்த நூலில் மொத்தம் ஆறு காண்டங்கள் இருக்கின்றன. இவை கீழ் வருமாறு:

1. பால காண்டம்
2. அயோத்யா காண்டம்
3. ஆரண்ய காண்டம்
4. கிட்கிந்தா காண்டம்
5. சௌந்தரிய காண்டம்
6. யுத்த காண்டம்

என்பவையாகும். இந்நூலை இயற்றியவர் எம்பெருமான் என்னும் கவிராயர் ஆவார். இவரை இந்நூல் இயற்ற ஊக்குவித்தவர் மோரூர்க் கண்ணன் அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் ஆவார். இந்நூல் சற்றேறக்குறைய 1600-ல் எழுதப்பட்டதாகும். நல்லதம்பிக் காங்கேயன் திருசெங்கோட்டு அர்த்தநாரீஸ்வரர் கோயிலுக்கு அரும் பணிகள் ஆற்றி யிருக்கிறார். இவரது உருவச் சிலை திருச்செங்கோட்டுக் கோயிலில் இவரது மனைவிமாருடன் காணப்படுகிறது.

தக்கை இராமாயணம் தக்கை என்ற உடுக்கை போன்ற ஒரு இசைக் கருவியை இசைத்துக் கொண்டே வில்லுப் பாட்டுப் போல பாடுவதற்காக இயற்றப்பட்டதாகும். ஆதலால் இதை இசை இலக்கியம் அல்லது இசை இராமாயணம் என்றும் குறிப்பர். சடையப்ப வள்ளல் கம்பனை ஆதரித்து இராமகாதை எழுத ஊக்குவித்தார். இதே அடியைப் பின்பற்றி மோரூர் நல்லதம்பிக் காங்கேயன் எம்பெருமானாரை ஆதரித்து இந் நூலை இயற்றியுள்ளார். சடையப்ப வள்ளலின் புகழையும்

இணைத்துப் பாடப்பட்டுள்ளது. இதைப் போன்றே தக்கை இராமாயணத்திலும், மோரூர் நல்லதம்பிக் காங்கேயன் அவர்களது புகழும் பாடப்பட்டுள்ளது. கம்பன் சுமார் 10,000-க்கும் மேற்பட்ட பாடல்களால், விருத்தப் பாக்களால் இராம காதையை எழுதினார். அப்பாடல்கள் முழுவதையும் படித்து நினைந்து சுருக்கி 3250-க்கும் மேற்பட்ட பாடல்களால் தக்கை இராமாயணம் எழுதப்பட்டுள்ளது. கம்பன் எழுதிய இராம காதை 6 காண்டங்களை உடையது. அதே அமைப்பில் தக்கை இராமாயணமும் 6 காண்டத்தில் எழுதப்பட்டுள்ளது. அனுமன் சீதையை அசோகவனத்தில் கண்டு கணையாழியைக் கொடுத்ததைக் கம்பன் 'சுந்தரகாண்டம்' என்பர். இக்காண்டத்தை எம்பெருமானார் தக்கை இராமாயணத்தில் சௌந்தர்ய காண்டம்' என்று உரைக்கிறார். கம்பனின் சுருக்கம் தக்கை இராமாயணம் எனலாம். ஆதலின் 350 ஆண்டுகளுக்கும் முன்னதாகக் கம்பனை நன்கு பயின்று சுருக்கித் தனிப்பெரும் காப்பியமாக்கிய பெருமை எம்பெருமானாருக்கு உண்டு. கம்பன் பாடலுக்குப் பல்வேறு கருத்துரைப்போர் உண்டு. தக்கை இராமாயணம் கம்பன் பாடலை மிகவும் சிறப்பாகப் பின்பற்றுவதால் கம்பன் பாடல் இவை, கம்பன் கருத்து இது 300 ஆண்டுகளுக்கு முன்னர் எவ்வாறு கருதினர் என அறிந்துகொள்ளவும் கம்ப இராமாயணத்தை ஆராய்ச்சிப் பதிப்பாக்கவும் உதவ தக்கை இராமாயணம் பெரிதும் பயன்படுகிறது.

தமிழ்ப் பெரும் புலவர்களில் உன்னதமான கருத்துக்களையும் உன்னதமான இலக்கிய அமைப்பினையும் தோற்றுவித்த ஒப்பரும் புலவன் கம்பன். கொங்கு நாட்டு மக்கள் குறிப்பாகக் கொங்கு நாட்டு வெள்ளாளர் தங்களை கம்பனுக்கு அடிமையாகவே கூறிக் கொண்டனர். 'கல்லும் காவிரியும் உள்ள அளவும் கம்ப நாடன் தமிழுக்கு அடிமை நாம்' என்று கூறிக்கொள்ளும் அளவுக்கு கடந்த 350 ஆண்டுகளுக்கும் மேலாக கம்பனின் அடியார்களாக, அவனது இலக்கியத்தில் மெய்மறந்திருந்தார்களாக வாழ்ந்த பெருமை அவர்களுக்கும் உண்டு. ஆதலின் இந்தச் சூழ்நிலையில், மனப்பக்குவம் நிறைந்த கொங்கு நாட்டில் இத்தக்கை இராமாயணம் தோன்றியுள்ளது மிகவும் பொருத்தமே. இதைத் தமிழாகரன் மிகவும் புலமை மிக்க ஆராய்ச்சி முன்னுரையுடன் பதிப்பித்துள்ளார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றி.

இரா. நாகசாமி

# பதிப்புரை

25 ஆண்டுகளுக்கு முன்னம் காரைக்குடி கம்பன் விழாவில் தக்கை ராமாயணத்தை முதன்முதல் அறிமுகப்படுத்தி நான் பேசியபோது தலைமை தாங்கிய தெ. பொ. மீ அவர்கள், பட்டியும்தொட்டியுமான கொங்கு நாட்டில் தக்கை தவிர வேறு என்ன கிடைக்கும் என்று தமக்கே உரிய பாணியிற் கேலியாய்க் கேட்டுவிட்டுப், பின் சிந்தனையில் ஆழ்ந்தவராய், இத் தக்கைப் பாட்டு கம்பரின் மாற்றுருவம் version போல் அல்லவா தோன்றுகிறது. ஏடு தேடி இதைப் பதிப்பிப்பது கம்பர் ஆய்வுக்கு அடிப்படை ஆகும். இதைக் கவுண்டரவர்கள் செய்ய வேண்டும் என்று என்னை வெகுவாகப் பாராட்டி வாழ்த்தினார்கள். அப்போது அமரர் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் என் கையெழுத்துப் பிரதியில் இருந்த தக்கையின் சில பாடல்களைக் கிராமீய முறையில் பாடிக் காட்டி அவற்றின் அருமையை வலியுறுத்தினார்கள்.

85 ஆண்டுகளுக்கு முன்னம் திருச்செங்கோட்டிலே அப்போது பெரும்புலவராய் இருந்த அ. முத்துசாமிக் கோனார் அவர்கள், ஏடு தேடித் தக்கை ராமாயணத்தைப் பதிப்பிக்க முயன்றிருக்கிறார்.* கொங்கு நாடெங்கும் சென்று அந்நாடு சம்பந்தமான நாட்டார் பாடல்கள், பட்டயங்கள், பிரபந்தங்களின் ஏடுகளைத் தேடி தொகுத்து வைத்திருந்தார்கள். கார்மேகக் கவிஞர் கொங்கு மண்டலசதகம், சக்கரை மன்றாடியார் காதல் போன்ற ஒரு சில நூல்களை வெளியிடவும் செய்தார்கள். தக்கை ராமாயண ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்து-

---

*கோனார் அவர்கள், 1897 அக்டோபர் 17 ஏவிளம்பி ஐப்பசி ஞாயிறு என்று தேதியிட்டு அவர்கள் நடத்திய விவேக திவாகரன் என்ற பத்திரிகையிலே பின்வருமாறு விளம்பரம் செய்திருக்கிறார்.

'' தக்க ராமாயணம் என்பது ஓர் அரியநூல். இதை ஆக்குவித்தோன் மோரூர் நல்லதம்பிக் காங்கேயன் என்று தெரிகிறது. ஆக்கியோன் பெயர் முதலிய தெரியவில்லை. தயவு செய்து யாரேனும் அறிவித்தால் ரூ 10 பரிசு கொடுக்கப்படும்'',

ஆரணிய காண்டம் வரை அச்சிடவும் செய்தார்கள். பின் என்ன காரணமோ ஏதோ ஒரு மனக்கசப்பிலே அச்சிட்ட பகுதிகள் அத்தனையையும் தேடி வைத்திருந்த ஏட்டுப் பிரதிகளுடன் வெந்நீர்ப் பானைக்கு ஆகுதி செய்து விட்டார்கள்.*

இந்த வேள்வித் தீயினின்றும் தப்பிய சில பாரங்கள் - பகுதிகளை யாரோ ஒரு தமிழன்பர் தொகுத்து வைத்திருந்தது, ஊமையன்பட்டி - கவிஞர் கந்தசாமி அவர்கள் கைக்குக் கிட்டுவதாயிற்று. சுந்தர காண்டம் வரை கவிஞரிடம் இருக்கும் அச்சுப் பிரதியிலும் அங்கங்கே சிற்சில பாரங்கள் - பக்கங்கள் இல்லை.

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுக்குப் பின், அவர்களைப் பின்பற்றி ஏடுதேடும் முயற்சியில் முனைந்து, இருநூற்றுக்கு மேற்பட்ட அபூர்வமான சுவடிகளைத் தொகுத்து வைத்திருந்தார், வேலம்பாளையம் வித்வான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரவர்கள். இவர்கள் காலமான பின்னர், ஜஸ்டிஸ் செங்கோட்டுவேல் அவர்கள், முயற்சியால் கவுண்டரவர்களுடைய ஏடுகள், பேரூர் ஆதீனம் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் மடாலயத்தில் பாதுகாப்பாய் வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் பலவும் அச்சாகாதவை. கவுண்டரவர்களுடைய தொகுப்பில் தக்கைராமாயண ஏடுகள் இரண்டு இருந்தன. ஒன்று அவர்கள் காலத்திலேயே கைமாறிப் போய்விட்டது; போன திசை தெரியவில்லை. தற்போது இருப்பது ஒரே ஒரு பிரதிதான்; முதலிருகாண்டங்களின் குறைப்பிரதி ஒன்றும் இருக்கிறது.

பேரூர் ஆதீனகர்த்தர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தக்கையின் ஏட்டுச் சுவடிகளையும், கவுண்டரவர்கள் பெயர்த்து எழுதிய சுந்தர காண்டம் யுத்த காண்டங்களின் சில படலங்கள் மட்டுமே உள்ள காகிதப்பிரதி ஒன்றையும்

---

*இது போலும் நிகழ்ச்சி ஒன்றைப் பேராசிரியர் மு. அருணாசலம் அவர்கள் தமது இலக்கிய வரலாற்றிலே (கி. பி. 15-ஆம் நூற். பக்கம் 75) குறிப்பிட்டு உள்ளார். ஹர்ஷசக்கிரவர்த்தியின் சபையிலே வீற்றிருந்த பட்டபாணரின் காதம்பரி என்ற வசன காவியத்தை ஆதிவராகக்கவி என்பார் கி. பி. 1411-ல் தமிழில் செய்யுள் நடையில் மொழி பெயர்த்தார். இந்நூல் கி.பி.1912-ல் அச்சாகியது 1232 பாடல்களுடையது. இதை வெளியிட்டவர், சீரங்கம் வக்கீல் ஜே. கிருஷ்ணையங்கார். இவர் பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியாரையும் தமிழ்ப் பண்டிதர் குரு சுப்பிரமணிய ஐயரையும் கொண்டு, 188 பக்கம் கொண்ட விரிவான வசனமும், 17 பக்கத்தில் அரும்பத உரையும் எழுதுவித்துச் சேர்த்துப் பெரு நூலாக்கி அச்சிட்டார். ஆனால் பின்னால் ஏற்பட்ட ஒரு பூசல் காரணமாக அச்சிட்ட புத்தகங்கள் அத்தனையையும் கொளுத்தி விட்டாராம்.

கொடுத்து, பதிப்பு வேலையின் நிமித்தம் என்னை மடாலயத்திலேயே தங்கியிருக்கச் செய்தார்கள். கொங்கு நாடெங்கும் தேடித்திரிந்தும் தக்கையின் ஏடு எதுவும் கிடைக்கவில்லை. கவுண்டரவர்களின் ஏடு ஒன்றுதான் இந்த என் பதிப்புக்கு அடிப்படை.*

## பதிப்பு முறை

தக்கை ராமாயணம் ஆறு காண்டங்களும் மூன்று தொகுதியான இப்பதிப்பில் பாடல்களின் தொடர் எண்; பக்கங்களின் தலைப்பிலும், படலங்களின் பாடல் எண் அவ்வப் பாடலின் முடிவிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

கதைப் போக்கு பொருள் நோக்கைத் தழுவி, பாடல்களுக்குத் தலைப்புகள் தரப்பட்டுள்ளன. பாடலின் பொருளைத் தழுவிச் சொற்பிரிப்பு முறையில் சந்தி பிரித்து, இன்றியமையாத இடங்களில் மட்டும் நிறுத்தக்குறி இடப்பட்டு உள்ளன.

கம்பருடைய கருத்து, கற்பனைகளுக்குப் புது விளக்கமாகவும், அருஞ்சொல் தொடர்களுக்கு நுண் பொருளாயும் உள்ள தக்கையின் பாடல்களை இனங்காட்ட அவற்றின் அடிக்குறிப்பாகக் கம்பர் பாடல்கள் - பாடற் பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பதிப்புக்குக் கிடைத்தது ஒரே ஒரு ஏடுதான். இதை ஆதாரமாய்க் கொண்டே இப்பதிப்பின் மூலபாடம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. வேறு பிரதி கிடைக்காத நிலையில் ஆராய்ச்சியின் அடிப்படையில் பதிப்பாசிரியர், 'பிரதிகளின் ஆதாரம் இன்றியும் பொருத்தமான பாடத் திருத்தத்தைச் செய்தல் சாலும்' என்பதால் சிற்சில இடங்களில் மூலபாடம் கம்பரைத் துணை கொண்டு ஒரு வகையாக யூகிக்கப்பட்டிருப்பது அடைப்பில் காட்டப்பட்டிருக்கிறது. ஏடுகள் முற்றிலும் சிதைந்துவிட்ட சிற்சில இடங்களில் கதைத் தொடர்ச்சிக்காகக் கம்பர் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏடுகளில் படலங்

---

*தக்கை ராமாயணம் பூர்த்தியாய் உள்ள சுவடியின் மொத்த ஏடுகள் 157; குறைச் சுவடியின் மொத்த ஏடுகள் 39. ஏட்டின் ஒரு பக்கத்திலே - 9 வரிகள் அடக்கம்; வரிக்கு சுமார் 80 எழுத்துக்கள்.

களின் பாடல்களுக்குத் தொடர் எண் கொடுக்கப்பட்டிருப்பது சிதைந்துபோன பாடல்களின் எண்ணிக்கையை அறிதற்கு உதவியாய் இருந்தது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருவான்மியூர் உ. வே.சா. நூல் நிலையம், சென்னைக் கம்பன் கழகம், மர்ரே ராஜம் பதிப்புகள் எனக்குப் பயன்பட்டன.

கோவை வருமானவரி ஆணையரும் கவுண்டரவர்களின் பிரதம மாணவரும் ஆகிய ராஜம் என்பார் அவ்வப்போது ஓய்வு நேரங்களில் என்னுடன் இருந்து ஏடுகளைப் பிரதி செய்வதிலும், சரி பார்ப்பதிலும் உதவி வந்தார்கள். பரமத்தி - வேலூர் கம்பராமன் இராமராசன் என்னுடைய கையெழுத்துப் பிரதிகளைப் பரிசோதித்து உதவினார்கள். செம்மையாகவும் சிறப்பாகவும் அச்சிலே இந்நூல் உருவாகியிருக்கிறது என்றால் அதற்கு முழுப்பொறுப்பேற்று அயராது உழைத்து வருபவர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள்.

சுமார் 3250 பாடல்களை ஏட்டிலே இருந்து பெயர்த்து எழுதி, பரிசோதித்து நான்கு படிகள் வரைப் பிரதி செய்ததில் கழிந்த மூன்றாண்டுகளில் எத்தனையோ சிரமங்கள் செலவுகள்; இவற்றால் சிறிதும் சோர்வு தோன்றாது என்னைத் தூண்டியும் ஊக்கியும் வந்த ஜஸ்டிஸ் செங்கோட்டுவேல் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். இவர்கள் கவுண்டரவர்களிடம் கொண்டுள்ள குருபக்தி வியப்புக்கு உரியது.

கள்ளிப்பட்டி சீராம விண்ணக்ரம் க. கு. கோதண்டராம கவுண்டரவர்கள், மோரூர்க் கண்ணன் கிழான்பாடி கே. பி. முத்து அவர்கள் - இவர்கள் இப்பதிப்பு நல்லபடியாக அமைய வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர்கள். இவர்கள் என்பால் செலுத்திவரும் அன்பையும், என் புதல்விகள் மீனாட்சி - ஞானசம்பந்தன், சித்ரா - நீலகண்டன் இவர்கள் கண்ணும் கருத்துமாய் எனக்குச் செய்துவரும் இடையறா உபசரிப்பையும் நினைந்து நினைந்து பூரிக்கிறேன்; பல்லாண்டு இவர்களுக்கு.


| | |
|---|---|
| வேங்கடவன் பண்ணை<br>பங்களாப் புதூர்<br>638512<br>ஈரோடு-வழி | கு. அருணாசலக் கவுண்டர்<br>20-5-83 |

# பொருளடக்கம்

## கிட்கிந்தா காண்டம்


| வ. எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பம்பைப் படலம் | ... | 1 |
| 2. | அனுமப் படலம் | ... | 7 |
| 3. | நட்புறு படலம் | ... | 12 |
| 4. | மராமரப் படலம் | ... | 21 |
| 5. | துந்துபிப் படலம் | ... | 24 |
| 6. | கலன் காண் படலம் | ... | 27 |
| 7. | வாலிமோட்சப் படலம் | ... | 32 |
| 8. | தாரை புலம்பல் | ... | 48 |
| 9. | அரசியல் படலம் | ... | 51 |
| 10. | கார் காலப் படலம் | ... | 54 |
| 11. | கிட்கிந்தைப் படலம் | ... | 65 |
| 12. | தானை காண்படலம் | ... | 77 |
| 13. | நாட விட்ட படலம் | ... | 81 |
| 14. | பிலம் நீங்கு படலம் | ... | 87 |
| 15. | ஆற்றுப் படலம் | ... | 91 |
| 16. | சம்பாதிப் படலம் | ... | 96 |
| 17. | மகேந்திரப் படலம் | ... | 101 |


## சௌந்தரிய காண்டம்


| | | | |
|---|---|---|---|
| 1. | கடல் தாவு படலம் | ... | 107 |
| 2. | நிலாத் தோற்று படலம் | ... | 118 |
| 3. | இலங்கை மாதேவிப் படலம் | ... | 124 |
| 4. | ஊர்தேடு படலம் | ... | 128 |
| 5. | வந்தனைப் படலம் | ... | 139 |

| வ. எண். | | | பக்கம் |
|---|---|---|---|
| 6. | உருக் காட்டு படலம் | ... | 147 |
| 7. | சூடாமணிப் படலம் | ... | 160 |
| 8. | கிங்கரர் வதைப் படலம் | ... | 166 |
| 9. | சம்புமாலி வதைப் படலம் | ... | 175 |
| 10. | பஞ்சசேனாபதிப் படலம் | ... | 180 |
| 11. | அட்சயகுமாரன் வதைப் படலம் | ... | 186 |
| 12. | பாசப் படலம் | ... | 192 |
| 13. | பிணிவீட்டு படலம் | ... | 200 |
| 14. | ஊர்சுடு படலம் | ... | 211 |
| 15. | திருவடி தொழுத படலம் | ... | 218 |

## 1 பம்பைப் படலம்

—பம்பை என்னும் பொய்கையைப்பற்றியது

### வாழ்த்து

மூவுலகும் மூன்றுஎழுத்தும் முச்சுடரும் முப்பொழுதும்
மூவுருவும் முக்குணமும் முத்தொழிலும்—யாவும்
கடுநின்ற கண்டற்கும் கஞ்சற்கும் சான்றுஆய்
நடுநின்ற நாராய ணன். 1

அருள்வால காண்டம் அயோத்தியா காண்டம்
தெருள்கான காண்டம்உரை செய்தேன்—பொருள்ஆரும்
கிட்கிந்தா காண்டம் கிளக்கின்றேன், கேட்கின்றோர்
கட்கிந்தார் தண்ணார் கவி. 2

### பொய்கையின் தோற்றப் பொலிவு

குளிர்ந்த மலர்தாரா கணமாகக்
குடையும் வேழங்கள் முகிலாகத்
தெளிந்த செழுநீர்ஆ காசம்ஒக்கும்
தெய்வ வாவியைப் பம்பைதனை
மிளிர்ந்த மணிசுற்றும் நிழல்காட்ட
வெள்ளை அனமும்வெண் பளிங்கும்ஒப்பாம்;
நளிர்ந்த தீர்த்தத்தை நளினக்கண்ணால்
நாதன் இளையானும் தானும்கண்டான். 3

தெரிய அருநாக லோகம்என்கோ?
தெளிந்த புலவர்சொல் கவிதைஎன்கோ?
அரிய புனல்உள்ளும் படர்பாசம்
அறிஞ ரையும்சேர் பாசம்என்கோ?

1. கடு நின்ற கண்டன் - சிவன். கஞ்சன் – பிரமன்.

2. கேட்கின்றோர்கட்கு இந்து ஆர் தண்ணார் கவி.

3. தாராகணம் - நட்சத்திரக்கூட்டம். வேழம் - யானை. பளிங்கு போலத் தெளிந்த அப் பொய்கையின் நீர், கரையிலே பரவிக்கிடந்த நவரத்தினங்களைப் பிரதிபலிக்க.

கரிய திரிசங்கின் காரணத்தால்
காதி மகன்செய்த கடலதென்கோ?
உரிய பெடைசூழ் ராசஅன்னம்
உடுவோடு உடுபதி உதித்ததென்கோ? 4

ஈட்டம் செறிபுள்ளின் குரல்கள்எல்லாம்
எழில்வான் கார்ஆர வாரம்ஒக்கும்;
பாட்டம் பதினெண்பா டையும்கூடிப்
பலரும் வசனிக்கும் படிஒக்கும்;
காட்ட விதிஅற்றோம் திருவைஎன்று
கமலத் தழல்அன்னம் புகுவதொக்கும்;
நாட்டம் நினைத்துஐயன் மெலிவன்என்று
நடுங்கிக் கயல்ஓடி ஒளிவதொக்கும். 5

பொன்னும் மணியும்கொண்டு அருவிவெள்ளம்
பொலியக் குலமாதர் கோலத்தைப்போல்
துன்னும்; பலயானை குடைந்துஆடத்
துவளும் பொதுமாதர் மேனியைப்போல்;
பன்னும் தெளிதேனும் மதமும்துன்றிப்
பருகக் கனிநல்கும் அதரத்தைப்போல்
உன்னும்; வரைச்சாரல் அகிலும்சந்தும்
உரைக்க நறுஞ்சேறும் போலும்அன்றே. 6

4. கற்பகம் அனையஅக் கவிஞர் நாட்டிய
சொற்பொருள் ஆம்எனத் தோன்றல் சான்றது. —கம். 5.

பாசிபடு குட்டத்தில் கல்லினைவிட்டு எறியப்
படும்பொழுது நீங்கிஅது விடும்பொழுதில் பரக்கும்
மாசுபடு மலமாயை அருங்கன்மம் அனைத்தும்
அரன்அடியை உணரும்போது அகலும்பின் அணுகும்.
—சித்தியார், 8 : 39.

காதி மகன் - காதி என்ற அரசரின் புதல்வன் ஆன விசுவாமித்திர முனிவர். அரச அன்னங்கள் தம் பெடைகள் சூழத் தோன்றுவது, விண்மீன்களோடு பூர்ணசந்திரன் தோன்றுவது போலத்தானாம்.

5. ஆரியம் முதலிய பதினெண் பாடையில்
பூரியர் ஒருவழிப் புகுந்தது ஆம்என
ஓர்கில கிளவிகள் ஒன்றொடு ஒப்பில
சோர்வில விளம்புபுள் துவன்று கின்றது. —கம். 13.

கமலத்தழல் - செந்தாமரை ஆகிய செந்தீ. நாட்டம் - சீதையின் கண். ஐயன் - இராமன். கயல் - மீன்.

6. விண்தொடர் நெடுவரைத் தேனும் வேழத்தின்
வண்டுஉளர் நறுமத மழையும் மண்டலால்
உண்டவர் பெருங்களி உறலின், ஓதியர்
தொண்டைஅம் கனிஇதழ்த் துப்பின் சான்றது. —கம். 12.

வாயின் இதழ்உண்ணும் மாந்தரைப்போல்
மகிழும் குமுதத்தின் தேன்நுகர்மீன்;
தோயம் தோய்காகம் இரைஎடுத்துத்
தோன்றும், இறப்பதும் பிறப்பதும்போல்;
ஆயும் அரம்பையர்தம் சிலம்புஒலியை
அயிர்க்கும் பெடையின்குரல் என்றுஅன்னம்;
பாயும் சிலஅனம்பூங் கொம்பின்மேல்,
பாவை கயில்பயில் அன்னம்போல். 7

இறைவற்கு இனியாளைத் தரஇயலோம்
இயன்ற படிசெய்கை முறைமைஎன்று
நிறைபொற் கமலங்கள் முகம்காட்டும்;
நீரிற் குமுதங்கள் வாய்காட்டும்;
நறையிற் புதுநீலம் விழிகாட்டும்;
நல்ல மடஅன்னம் நடைகாட்டும்;
மறையப் படுசக்ர வாகப்புள்ளும்
மங்கை செழுங்கொங்கை காட்டும்அங்கே. 8

பகலும் இரவும்போல் ஒளிவீசும்
பத்ம ராகமும்நீ லக்கல்லும்;
இகலும் கயல்வாழ்முந் நீர்ஞாளி
இலகு கொளத்தேரை புகழும்எங்கும்;
புகலும் மரத்துற்ற குருகின்நீழல்
புனலுள் பட,மச்சம் அச்சம்எய்தும்;
அகலும் பெரும்பொய்கை வளங்கண்டுஐயன்
அன்ன மடமாதை நினைந்துநொந்தான். 9

**அவள் எங்கே இயம்புங்கள்**

வஞ்சி முகம்கைகால் வாய்கண்அன்றி
வடிவம் காட்டாயோ மலர்ப்பொய்கையே?
விஞ்சி அரக்கன்கொன்று எறிந்துசெல்ல
வெவ்வேறு அவயவம் சிதறிட்டதோ?

7. தோயம் - வெள்ளம். அன்னம்போல் தோன்றும் என்க.
எவ்வம் ஓங்கிய இறப்பொடு பிறப்புஇவை என்னக்
கவ்வு மீனொடு முழுகுவ எழுவன கரண்டம். —கம். 16.

9. கயலும் நீர் நாயும் இகலுவதைப் பார்த்து அதைத் தேரை புகழுமாப் போல ஆரவாரிக்குமாம்.

அஞ்சி ஒதுங்கும்வ ரால்இனங்காள்
அவள்தன் மணிக்கால் அதுகாட்டீர்!
மிஞ்சி மிகத்தோற்றீர் கண்டதுஉண்டோ
விழிஆ யிரம்உள்ள மயில்இனங்காள்! 10

வெல்லும் நடையாள்செல் இடங்காட்டீர்
மெலிவேன் பிழைஉண்டோ பிடிஇனங்காள்!
புல்லும் திருஉங்கள் இடத்துஇலையோ
புகலாது ஒழிகின்றீர் தாமரைகாள்!
சொல்லும் முறுவலும் தாரீரோ
துவர்வாய் தருகின்றீர் செங்கிடையே!
கொல்லும் சினம்என்னோ செவிகாட்டீர்
குழைகுண் டலத்தோடும் கொடிவள்ளாய்! 11

துவளல் எனைப்போலும் இளவஞ்சிகாள்!
தோன்றா இடைவஞ்சி தோன்றாளோ?
பவளம் அன்னகால் மடஅனங்காள்!
பகரீர் உமைப்போலும் நடையாளை;
குவளை மலர்காள் உமக்குஇனமாம்
கூர்வேல் விழியாளைக் கூறீரோ?
கவள மலைகாள்நும் கொம்பேபோல்
கதித்த தனத்தாளைக் காட்டீரோ? 12

பெரிது புலம்பவும் தயவிலையோ
பேசாது இருந்தீர்என்று இதயம்நொந்து
அரிது பெருந்தாபம் ஆற்றஎன்று
அணிநீர் மதவேழம் பிடிவாயில்

10. கண்ணும் முகமும் காட்டுவாய்; வடிவும் ஒருகால் காட்டாயோ?
—கம். 24.

மருந்தின் அனையாள் அவயவங்கள் அவைநிற் கண்டேன்; வல்அரக்கன்
அருந்தி அகல்வான் சிந்தினவோ? ஆவி! உரைத்தி ஆம்அன்றே.
—கம். 25.

ஓடா நின்ற களிமயிலே! சாயற்கு ஒதுங்கி உள்அழிந்து
கூடா தாரின் திரிகின்ற நீயும் ஆகம் குளிர்ந்தாயோ?
தேடா நின்ற என்உயிரைத் தெரியக் கண்டாய்; சிந்தைஉவந்து
ஆடா நின்றாய்; ஆயிரம்கண் உடையாய்க்கு ஒளிக்கு மாறுஉண்டோ ?
—கம். 26.

கருதி அளிக்கக்கண்டு அயர்வானைக்
கருணா கரனேமஞ் சனம்ஆடிப்
பருதி தாழ்வதன்முன் தாழாமல்
பரமன் அடிதாழ்என்று இளவல்சொன்னான். 13

## மாலைக் கடன் முடித்து ஒரு சோலையில் தங்கினர்

கடவுள் தீர்த்தம்செய் பாக்கியத்தால்
கடவா ரணம்நாணக் குடைந்துஆடி
உடலுள் தணியாத தாபம்தன்னால்
ஒண்ணீர் கொதிக்கதான் இனிஎய்யும்
கடலுள் கணைபோலப் பருகாமல்
கடுகிக் கரைஏறித் திருநாமம்
உடலிட்டு அரிதன்பொன் அடிசூடி
உயர்மா தவர்சோலை தனில்வைகினான். 14

## சந்திரோதயம்

தெரிய வருபாநு கடல்மூழ்கிச்
செந்தீ எனவந்த மாலைபொங்கக்
கரிய முகில்போல்வந்து இருள்மூடக்
கமலத் தடங்கண்ணன் இடர்மூழ்கி
அரிய திருமாதின் தனிமைஎண்ணி
ஆவி உலைவுஎய்த நிலவின்கற்றை
எரிய உலகுஎங்கும் குளிர்சோமன்
வெய்யோ னிலும்வெய்யோன் ஆகிவந்தான். 15

14. நீத்த நீரில் நெடியவன் மூழ்கலும்
தீத்த காமத் தெறுகதிர்த் தீயினால்
காய்த்து இரும்பைக் கருமகக் கம்மியன்
தோய்த்த தண்புனல் ஒத்ததுஅத் தோயமே. —கம். 36.

யுத்த காண்டத்திலே வருணனை வழிவேண்டியும் அவன் வாராதபோது. இராமன் வெகுண்டு கடலிலே அம்பு எய்த சம்பவத்தை—பின் நிகழ்வதை—முன் நினைந்து கூறினார் இந்நூலாசிரியர்,

### யாவும் உறங்கின; இராமன் உறங்கிலன்

வானம் உறங்கும்வை யகம்உறங்கும்
மலையும் உறங்கும்மா மரம்உறங்கும்
ஏனம் உறங்கும்வெங் கரிஉறங்கும்
இயலும் உறங்கும்ஏழ் இசைஉறங்கும்
மீனம் உறங்கும்புள் இனம்உறங்கும்
மேலோர் உறங்கும்யோ கியர்உறங்கும்
கானம் உறங்கும்முன் கழுதுஉறங்கும்
கண்ணன் ஒருவன்கண் உறங்காதே. 16

### பொழுது புலர்ந்ததும் சீதையைத் தேடிச் சென்றனர்

உள்ளக் கடல்ஞானம் உதயம்செய்தால்
ஓடும் வினைபோல் இருள்ஓட
வெள்ளக் கடல்ஞாயிறு உதயம்செய்தான்;
மிக்க பரஞ்சோதி துயரம்என்னும்
பள்ளக் கடலுள்நின்று எழுந்துசென்று
பாதம் பிரியாத இளவலொடும்
அள்ளப் புனல்ஆறும் வனமும்குன்றும்
அமுதம் அனையாளைத் தேடிச்சென்றான். 17

16. பூஒடுங் கின;விரவு புள்ஒடுங் கினபொழில்கள்;
மாஒடுங் கின;மரனும் இலைஒடுங் கின;கிளிகள்
நாஒடுங் கின;மயில்கள் நடம்ஒடுங் கின;குயில்கள்
கூஒடுங் கின;பிளிறு குரல்ஒடுங் கினகளிறு. —கம். 39.

மண்துயின் றன;நிலைய மலைதுயின் றன;மறுஇல்
பண்துயின் றன;விரவு பணிதுயின் றன;பகரும்
விண்துயின் றன;கழுதும் விழிதுயின் றன;பழுதுஇல்
கண்துயின் றில,நெடிய கடல்துயின் றனகளிறு. —கம். 40.

# 2 அனுமப் படலம்

*—அனுமன் இராமனிடம் வந்தது*

### யார்தாம் இவர்

*சவரிசொன்ன மலைஏறிச்*
*சரிந்தோடி வானரங்கள்*
*விவரிஐயா வாலிநம்மேல்*
*விடுக்கவந்தார் என;அனுமன்*
*உவரிநஞ்சை உண்டவன்போல்*
*உடைந்தவரை அஞ்சல்என்றே*
*எவர்இவர்தாம் என்றுமறைந்து*
*எண்ணலுற்றான் மாணுருவாய்.* 1

### தருமம் ஆவார் இவர்களே

*முத்தேவர் தமில்இருவோர்,*
*முரண்சிலையோர், அருட்கடலோர்,*
*புத்தேளோ? மானிடராம்;*
*போன்துஒரு பெரும்பொருள்மேல்*
*உத்தேசம்; எம்மருங்கும்*
*ஊடுருவ நாடுகின்றார்;*
*மெய்த்தேசும் நல்வடிவும்*
*வீரியமும் பெரிதுடையார்.* 2

1. உவரி - கடல்; நஞ்சுண்டவன் சிவன். மாணுரு - மாணி - பிரமசாரி வடிவம்.

2. தேவருக்கு ஒருதலைவர் ஆம்முதல் தேவர்எனின்
மூவர்;மற்று இவர்இருவர்; மூரிவில் கரர்;இவரை
யாவர்ஒப் பவர்உலகில்? யாதுஇவர்க்கு அரியபொருள்?
கேவலத்து இவர்நிலைமை தேர்வதுஎக் கிழமைகொடு? —கம். 5.

சிந்தையில் சிறிதுதுயர் சேர்வுற, தெருமரலின்
நொந்துஅயர்த் தவர்அனையர்; நோஉறச் சிறியர்அலர்;
அந்தரத்து அமரர்அலர்; மானிடப் படிவர்;மயர்
சிந்தனைக்கு உரியபொருள் தேடுதற்கு உறுநிலையர். —கம்., 6.

தருமமும் தகவும்இவர் தனம்எனும் தகையர்;வரு
கருமமும் பிறிதுஓர்பொருள் கருதிஅன்று; அதுகருதின்
அருமருந்து அனையதுஇடை அழிவுவந் துளது;அதனை
இருமருங் கினும்நெடிது துருவுகின் றனர்இவர்கள், —கம், 7.

கறவைகன்றைக் கண்டதுபோல்
கரிபுலிமான் மரைதொடரும்
பறவைபந்தர் சிறகிலிடும்
பரல்உறையா மலர்கள்ஒக்கும்
உறவெயிலோ நிலவுஎரிக்கும்
ஒளிமுகிலோ பனிதுளிக்கும்
அறவடிவோ இவர்வடிவம்
அடிவணங்கும் மரமுதலாய். 3

வன்பிறவிக் கரைஏற்றி
வாழ்வுதரும் வானவராம்;
என்பும்அன்பால் உருகுகின்றேன்
என்று,எதிர்சென்று இருவரையும்
முன்புபிறந்து அணுகினன்போல்
முடிவில்பெரும் குணம்உடையோன்
இன்புறநன் றாகஎன்றான்;
இறைவனும்,நீ யாவன்?என்றான். 4

## அனுமன் என் பெயர்

அங்கயற்கண் ணியர்க்குநஞ்சாய்
அடுபனியால் கருகாத
பங்கயக்கண் முகில்வடிவீர்!
பவனனுக்குஅஞ் சனைபயந்த

3. காய்எரி கனலும கற்கள் கள்ளுடை மலர்க ளேபோல
தூயசெங் கமல பாதம் தோய்தொறும் குழைந்து தோன்றும்;
போயின திசைகள் தோறும் புல்லொடு மரனும் எல்லாம்
சாய்வுறும் தொழுவ போல்;இங்கு இவர்களோ தருமம் ஆவார்?
—கம். 12.

4. துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கித்
தென்புலத்து அன்றி மீளா நெறிஉய்க்கும் தேவ ரோதாம்?
என்புநெக்கு உருகு கின்றது; இவர்கின்றது அளவில் காதல்;
அன்பினுக்கு அவதி இல்லை; அடைவுஎன்கொல்? அறிதல் தேற்றேன்.
—கம். 13.

துங்கன்;மெய்ப்பேர் அனுமன்என்பேன்;
சூரியன்சேய்க்கு ஏவல்செய்வேன்;
இங்குஅயர்த்தான் உங்களைக்கண்டு
எனைவிடுத்தான் அறியஎன்றான். 5

**சுக்கிரீவன் எங்கே**

திருக்கணவன் தம்பியுடன்,
சிறந்தவன்காண் சிவன்அயன்போல்;
இருக்குநன்னூல் பெரிதுகற்றோன்;
எமக்குஇவன்வேறு அல்லன்;இனி
உருக்குறள்என்று அறிந்திடினும்
உலகினுக்குஓர் ஆணி;என்றிட்டு,
அருக்கன்மகன் எங்கு?வந்தோம்;
அறிவுடையாய் காட்டிடுஎன்றான். 6

**நீயே கதி**

ஈங்குஇவன்பால் நீங்கள்வர
என்னபெரும் தவம்முயன்றான்;
ஓங்கியவா லிக்குஓதுங்கி
ஓங்கலில்எம் உடன்இருந்தான்;
ஏங்கியபேர்க்கு அரும்அமுதே!
யாகமும்தா னமும்தவமும்
ஆங்குஉலகுஏழ் காக்கும்உம்மை
அடைந்தஎங்கட்கு அரியதுஉண்டோ? 7

5. மஞ்செனத் திரண்ட கோல மேனிய! மகளிர்க்கு எல்லாம்
நஞ்சுஎனத் தகைய ஆகி நளிர்இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம்ஒத்து அலர்ந்த செய்ய கண்ண! யான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன்; நாமமும் அனுமன் என்பேன். —கம். 15.

6. இல்லாத உலகத்து எங்கும் இங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சிச்
சொல்லாலே தோன்றிற்று அன்றே? யார்கொல்இச் சொல்லின் செல்வன்?
வில்லார்தோள் இளய வீர! விரிஞ்சனோ? விடைவ லானோ? —கம். 18.

மாணிஆம் படிவம் அன்று மற்றிவன் வடிவம்; மைந்த!
ஆணிஇவ் உலகுக்கு எல்லாம் என்னலாம் ஆற்றற்கு ஏற்ற
சேண்உயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன்; பின்னர்க்
காணுதி மெய்ம்மை என்று தம்பிக்குக் கழறி, கண்ணன்; —கம். 19.

7. நடுங்கினர்க்கு அபயம் நல்கும் அதனினும் நல்லது உண்டோ? —கம். 23,

### தங்கள் வரலாறு கூறினான் இலக்குவன்

உங்களையார் என்றுசொல்கேன்,
ஓங்கலினும் பெரும்புயத்தீர்!
எங்கள்குல வேந்தனுடன்
என;இளைஞன் எடுத்துரைப்பான்:
செங்கதிரோன் குலத்துஉதித்துத்
தேவர்கட்காத் தானவரை
மங்கவென்று புவிஆண்ட
மன்னர்மன்னன் தசரதன்சேய். 8

நோற்கலுற்றான் அன்னைசொல்லால்;
நுவன்றுஇளையோற்கு அரசுஅளித்துச்
சேர்க்கைஉற்றான் வனவாசம்;
திருநாமம் இராமபிரான்;
ஏற்கலுற்றேன் இவற்குஅடியேன்
என்று,அவன்தோன்றி னமுதலாய்
சூர்க்கரக்கன் செயல்அளவும்
மொழிந்தனன்ஒன்று ஒழியாமல். 9

### அடியேன் வானரன் நான்

ஓதியபோது உவந்துஅனுமான்
உத்தமனை அடிதொழவே;
வேதிய,நீ தொழத்தகுமோ?
என்று,இறையோன் விளம்பிடவே;
ஆதிபரா! சிற்றடியேன்
அரிக்குலத்தில் ஒருவன்என்று,
நீதிவல்லோர் வியப்புறத்தன்
நீடுருவம் கொண்டுநின்றான். 10

8. மங்க - மறைய.

10. தன் உருக் கொண்டு நின்றான் தருமத்தின் தனிமை தீர்ப்பான்.
—கம். 31.

### ஒரே வியப்பு இராமனுக்கு

உகந்தனன்குண் டலமுகம்கண்டு
    உலகுஅளந்த திருநெடுமால்;
புகழ்ந்தருள்வான் இளவலுடன்
    புனிதநன்னீர் தாழ்ந்ததுபோல்
நிகழ்ந்தகுரங்கு ஆனது;அயன்
    நீள்மறைக்கும் எட்டாமல்
திகழ்ந்தபுயம் தனக்குஇணையோ
    செம்பொன்மக மேருஎன்றான். 11

நன்னிமித்தம் கண்டதுஇந்த
    நம்பியைநாம் காண்பதற்கே;
பன்னி,மெத்த இவர்க்குஅரசன்
    படிவம்இனி எப்படியோ?
என்னும்முத்தர் தமைஅனுமான்
    இருந்தருள்மின்; ஈண்டுஅவனை—
மின்இமைத்த சிலைவலியீர்,
    கொணர்வன்என்று விரைந்துசென்றான். 12

11. நாட்படா மறைக ளாலும் நவைபடா ஞானத் தாலும்
கோட்படாப் பதமே ஐய குரக்குஉருக் கொண்டது என்றான்.
—கம். 33.

12. காண்பதற்கே என்று பன்னி (சொல்லி).

# 3 நட்புறு படலம்

—இராமன் சுக்கிரீவனோடு நட்புச்செய்தது

**சுக்கிரீவனிடம் சென்று சொன்னான் அனுமான்**

மன்னன் பால்சென்று வாயுமைந்தன்
வலிய வாலிக்குஓர் காலன்வந்தான்;
இன்னல் எனும்வேலை இனிக்கடந்தோம்
என்று பரமன்போல் நடஞ்செய்து
பன்னும் உலகுஏழும் வாழவந்தார்
பகையால் மெலிந்தோர்கட்கு அமுதம்ஒப்பார்
அன்ன தசரதன் புதல்வர்என்றே
அவர்தம் குணம்வீரம் புகழ்உற்றான். 1

அரசு நினக்குத்தந்து அருள்புரிவார்;
அடித்தூள் ஆலிகைசா பம்கைத்தார்;
விரசு தாடகை உருளஎய்தார்;
மிகுத்த படைபெற்றார் கௌசிகன்பால்;
பரசு பாணிதன் சிலைபொடித்தார்;
பரசு ராமன்தன் வலிதொலைத்தார்;
உரைசெய் தந்தைசொல் மாற்றாமல்
உலகை ஒருதம்பிக்கு உதவிவந்தார். 2

அருளும் நெறியும்நல் அழகும்மிக்கார்;
அடல்வி ராதன்தன் வினைஅறுத்தார்;
மருளும் கரன்சேனை மடியக்கொன்றார்;
மாய மாரீசன் மாயஎய்தார்;
இருளும் பவம்நீக்கிக் கவந்தனுக்கு
எவர்க்கும் மேலான சுவர்க்கம்தந்தார்;
தெருளும் சவரிக்கு மோக்கம்தந்தார்;
திருமால் எனஆகும் பெருமைஉள்ளார். 3

குறிப்பு: இப் படலம் கம்பராமாயணப் புத்தகங்களிலே ''நட்புக்கோட் படலம்'' என்று காணப்படுகிறது.

1. இன்னல் - துன்பம். வேலை - கடல். பரமன் - சிவன்.
2. ஆலிகை - அகலிகை. கைத்தார் - போக்ினார். பரசுபாணி - சிவன்,
3. பவம் - பிறப்பு. மோக்கம் - மோட்சம்.

இவரால் வீடுபெற்று உயர்ந்தோரை
எண்ணற்கு அரிதாகும்; இரவிமைந்தா!
உவரால் இலங்கைக்கோன் மாயம்செய்தே
ஒளித்த மடமானைத் தேடுகின்றார்;
தவரா ரிலும்நீமா தவம்செய்கையால்
தவிரா உறவாகக் கருதிவந்தார்;
அவரால் வினைவெல்லும் நிலைமைஉண்டாம்;
அடைவாய் வருகஎன்றான் அறிவின்மிக்கான். 4

### இராம-சுக்கிரீவர் சந்திப்பு

எண்ணுற் றான்சொல்லை மனங்கொண்டான்
எனக்குஏது அருமைநீ இருக்கஎன்றான்;
நண்ணுற் றான்;பொற்குண் டலம்திர்ந்த
நாதன் வதனமும்கரு ணைக்கண்ணும்
கண்ணுற் றான்;சோமன் உதயம்செய்தான்;
கமலம் பூத்தஅஞ்சன வெற்பைப்போல்
தண்ணுற்று அறம்எல்லாம் இருவர்மெய்யாய்த்
தழைத்த வடிவுஎன்று மிகமகிழ்ந்தான். 5

ஆர்க்கும் பரமன்,மா னிடன்ஆனான்;
அமரர் தமைவென்றார் மனிதர்என்று,
பார்க்கும் இருகண்கள் களிகூரப்
பார்த்துஅத் தலைவனை அணுகுதலும்

4. வீடு - மோட்சம். உவர் - சுட்டு இடைச்சொல். தவம் - தவன்; தவர் ஆரிலும்.

5. கண்டனன் என்ப மன்னோ கதிரவன் சிறுவன் காமர்
குண்டலம் துறந்த கோல வதனமும் குளிர்க்கும் கண்ணும்
புண்டரி கங்கள் பூத்துப் புயல்தழீஇப் பொலிந்த திங்கள்
மண்டலம் உதயம் செய்த மரகதக் கிரிஅ னானை. —கம். 17.

நோக்கினான்; நெடிது நின்றான்; நொடிவுஅருங் கமலத்து அண்ணல்
ஆக்கிய உலகம் எல்லாம் அன்றுதொட்டு இன்று காறும்
பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்துஇரு படிவம் ஆகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீரர்ஆய் விளைந்த என்பான்.
—கம். 17.

சீர்க்கும் சுருதிக்கும் காணவொண்ணாத்
திருக்கை மலர்நீட்டி இருக்கஎன்னா;
கூர்க்கும் பொருள்செய்ய விதியோடும்
கூடும் முயற்சிபோல் இனிதுஇருந்தான். 6

## நீ என் இன்னுயிர்த் துணைவன்

இரவி குலத்தன்பால் இரவிமைந்தன்
இரவொன்று இரவிபால் இருந்ததுஒத்தான்;
பரவும் அரக்கராம் இருள்நீக்கப்
பரவு தவமும்ஞா னமும்போன்றார்;
திரவுந் தனைஎந்தன் பாக்கியத்தால்
சேர்ந்தேன் எனும்யூக வேந்தைஎங்கோன்
உரவுன் இருப்பிடம் சவரிசொன்னாள்
உற்றோம் உனைப்பெற்றோம் உதவிஎன்றான். 7

கொல்லப் புகுந்தான்என் தமயன்என்னைக்
குன்றுஇது அரணாக ஆவிபெற்றேன்;
அல்லற்கு ஆற்றாதுஉன் சரணம்புக்கேன்
ஆளிப்பு உற;என்னும் கவிவேந்தை,
நல்லற் புதவீரன் மனம்இரங்கி,
நலிவுஒன்று இனிவாரா வகைகாப்பேன்;
சொல்லற்கு உனதுஉற்றார் எனக்கும்உற்றார்;
துன்னார் எனக்குஒன்னார்; துணைவ!என்றான். 8

6\. தேறினன் அமரர்க் கெல்லாம் தேவராம் தேவர் அன்றே
மாறி,இப் பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ;
ஆறுகொள் சடிலத் தானும் அயனும்என்று இவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றது அன்றே! —கம். 19.

7\. இரவி - சூரியன். திரவுந்தனை - தீர உந்தனை. உரவுன் - உற உன். உற என்பது எதுகை நோக்கி உர என்றாயது.

8\. என்றஅக் குரக்கு வேந்தை இராமனும் இரங்கி நோக்கி,
உன்தனக்கு உரிய இன்ப துன்பங்கள் உள்ள முன்நாள்
சென்றன போக மேல்வந்து உறுவன தீர்ப்பல்; அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேர்என மொழியும் நேரா. —கம். 26.

மற்றுஇனி உரைப்பது என்னே? வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்; தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார்; உன்கிளை எனது;என் காதல்
சுற்றம் உன் சுற்றம்; நீஎன் இன்உயிர்த் துணைவன் என்றான்.
—கம். 27.

### வானர சேனையின் மகிழ்ச்சி

தனுமான் மொழிவேதம் எனவானோர்
    தந்தார் மலர்மாரி; கடல்ஓசை
எனுமாறு அரிசேனை ஆர்ப்பரிக்க
    எழுந்து தனதுஅங்கம் புளகம்உற்று
அனுமான் இறையோனை அடிவணங்கி
    அருள்நா யகவாழி சொலஉன்னுடன்
வினுமாறு உளதுஒன்று; உன்கோயில்எய்த
    வேணும்; என,ஐயன்மிக நன்றுஎன்றான். 9

### மலர்ச்சோலை சென்று சேர்ந்தனர்

வில்லோர் இருவோரும் அனுமானும்
    வேந்தும் கவிசேனை சூழச்சென்றார்;
நல்லோ ருடன்பின்னே தருமம்செல்ல—
    நரந்தை அகில்தாரம் சுரர்தாரு
கல்லோர் மணிப்பாறை பளிங்குஅறைகள்
    கமலச் சுனைதெய்வ மாதர்பண்ணை
எல்லோர் இனிதாடும் நிழல்ஊசல்
    இமையோர் உலகுஒக்கும் சோலைபுக்கார். 10

### நீயும் பிரிந்தாயோ மனைவியை

கற்றோர் சபைமுன்கல் லாதவர்போல்
    கதிரோன் விளங்காத மணிக்கோயில்
உற்றார் பலரும்தற் சூழநங்கோன்
    உகந்துஅங்கு இருந்தனன் மலர்அணைமேல்;
சற்றோர் கனியும்கந் தமும்காயும்
    தாம்மஞ் சனம்ஆடி அமுதுசெய்து
பெற்றோர் விருந்துஆகித் துணைவன்தன்னைப்
    பிரிவுற்ற னைபோலும் மனைவிஎன்றான். 11

9. தனுமான் - தன்மவான் - தருமவான். எ(ன்)னுமாறு. வினும் - இன்னும். இனும் வினும் என்னும் சொற்கள் அக்கால வட்டார வழக்குப் போலும்.

10. கல் ஓர் மணிப்பாறை பளிங்கு அறைகள் - கற்களாய் மணிப்பாறைகளும் இடைஇடையே விளங்குமாம். மாதர் எல்லோரும். பண்ணை - மகளிர் விளையாட்டு.

### வாலியின் பராக்கிரமம் கூறினான் அனுமான்

எழுந்துஅங்கு அனுமன்கை குவித்துக்கொண்டே
இறைவா அடியேன்தன் விண்ணப்பம்கேள்
செழுந்தண் நால்வேத வேலிஒப்பான்,
சிவனார் அருள்பெற்ற திறல்வாலி
சுழிந்து வரைதேய அரவம்கன்ற
சுரர்தா னவர்நாணக் கடல்கடைந்தான்;
அழுந்தும் வலிபூதம் நாலின்மிக்கான்
ஆழிக் கிரிநின்றுஇம் மலைபாய்வான். 12

வந்துஅங்கு எதிர்த்தவர் யார்எனினும்
வலியும் வரங்களும் பாதிகொள்வான்;
எந்த நாள்தொறும் சிவபூசை
எண்திக் கிலும்செய்து பகல்மீள்வான்;
கந்தன் வேல்செல்லாது அவன்மார்பில்;
கடுகும் கால்செல்லாது அவன்கால்முன்;
நொந்த ராவணன் கொடுங்கோலும்
நுவன்றோன் வால்சென்ற இடத்திற்செல்லா. 13

பாரும் இரணியன்மார் பும்விண்ட
பருவ ராகமும் நரசிங்கமும்
கூரும் மருப்பாலும் எயிற்றாலும்
கொடியோன் தனைஒன்றும் செயமாட்டா;

12. நாலு வேதமாம் நவைஇல் சாலியின்
வேலி அன்னவன். —கம். 37.

பூதம் நாலு - நிலம், நீர், நெருப்பு, காற்று.

13. கால்செ லாதுஅவன் முன்னர்; கந்தவேள்
வேல்செ லாதுஅவன் மார்பில்; வென்றியான்
வால்செ லாதவாய் அலதுஇ ராவணன்
கோல்செ லாது;அவன் குடைசெ லாதுஅரோ. —கம். 41.

நுவன்றோன் - இங்கே சொல்லப்பட்டவன் ஆகிய வாலி. இவன் சிவபூசை செய்திருந்தபோது மறைந்து பின்புறத்தே சென்று அவனைப் பிடிக்க முயன்ற இராவணனை, அவன் எளிதாகப் பிடித்து வாலிற் கட்டித் தூக்கி எங்கும் சஞ்சரித்த காலத்தில், அவன் வால் செல்லாத இடமும் இல்லை; இராவணன் ரத்தம் சிந்தாத இடமும் இல்லை.

மேரு முதற்பேரும் இவன்பேர்ந்தால்;
விண்ணும் இடப்புண்ணும் இவன்தோளால்;
சோரும் அனந்தனும் சுமைஆற்றான்;
சுடர்கால் முகில்ஏழும் சுழியாதே. 14

மறவாள் அரிஆளி இடிநாகம்
மறலி முதல்அஞ்சும் குரல்கேட்டால்;
உறவால் இடைப்பட்ட நாள்அரக்கன்
உதிரம் சொரியாத தேசம்இல்லை;
திறவா னரவெள்ளம் எழுபதுஉள்ளான்;
தேவேந் திரன்மைந்தன்; இவன்முன்னோன்
இறைவா! அவன்எங்கட்கு இறைஆகி,
இளங்கோ இவன்ஆகிப் புரக்கின்றநாள்; 15

## வாலி, சுக்கிரீவனைப் பகைத்தது ஏன்?

வாலிபழம் பகைஅசுரன்
மாயாவி வந்துஎதிர்த்துக்
கோலிஅமர்க்கு உலைந்துஓடிக்
குவலயத்துள் நிலைமைஅற்றுக்
கால்இயங்காப் பெரும்பிலத்துள்
கலந்துஒளிக்க, கடுங்கூற்றைப்
போல்இகலோன் தொடர்ந்துபுக்கான்,
புரஅரசைத் தம்பிஎன்றே. 16

வன்பிலத்தே தடவல்உற்றான்
வாலினாலே ஏழுதிங்கள்;
துன்பம்மிக்கார் நின்துணைவன்
சுற்றம்உற்றார் எமக்குஇனிநீ

14. பாரை (பூமியை) இடந்த வராகம். விண்ணும் இடப்பு உண்ணும். கடல், சந்திர சூரியர், காற்று முதலியன அவன் ஆணையின்றேல் தத்தம் தொழிலைச் செய்யா.

15. இவன் - சுக்கிரீவன். முன்னோன் - தமையன்.

16. கால் - காற்று. கூற்றைப்போல் இகலோன் - யமன் போன்ற பகைவன் வாலி. தம்பி, அரசைப் புரப்பாய்.

மன்புரப்பாய் அரசுஎனவும்;
மறுத்து,முன்னோன் தனைத்தேடி,
பின்புலத்தே புகதடுத்துப்
பெரியவர்ஆ ணையிற்கொடுத்தார். 17

மாயாவி வருவன்என்றே
வழிஅடைத்தோம் மலைகள்இட்டு;
வேயாரும் தடவரைமேல்
வெய்யவன்சேய் உடன்இருந்தோம்;
சாயாவா லியும்அவுணன்
தனைவதைத்து மீண்டுகண்டான்;
ஆயாமல் இருந்துஇளையோன்
அடைத்ததுநன்று எனவெகுண்டான். 18

மாலோங்கும் சேவடிபோல்
வன்பிலவா சலைவாலி
காலோங்கி உதைத்திடவே
கனவரைகள் அடைத்ததெல்லாம்
மேலோங்கி வேலைஉள்ளும்
விழுந்தனஎண் திசைதொறும்போய்;
வாலோங்கிப் பொருப்பைஉற்றான்;
வந்துஇவனும் அடிபணிந்தான். 19

அந்நாள்நீ வாராமல்
அழுதுநின்பால் வருவேனை,
கன்னாணும் புயக்கவிகள்
காவல்உந்தன் கடன்எனவே;
நின்ஆணை மீறாமல்
நேர்ந்தபிழை பொறுத்திடுஎன,
இன்னாதான் கொலப்புகுந்தான்;
இவன்விதியால் பிழைத்துஅகன்றான். 20

18, வேய் - மூங்கில். வரை - மலை. வெய்யவன் சேய் - சூரியபுத்திரன் ஆன சுக்கிரீவன். இளையோன் - தம்பி சுக்கிரீவன்.

19. மால் ஓங்கும் சேவடி - திருவிக்கிரமன் திருவடி.

20. கல் நாணும் புயம். பொறுத்திரு என்று சொல்லவும் அது கேளாது. இன்னாதான் - கொடிய வாலி.

மற்றவன்பல் அதுக்கிடினே
மனம்பதறும் கூற்றுவனும்;
கற்றமுனி சாபம்ஒன்று
காத்ததுஇந்தக் கார்வரைமேல்;
உற்றதுஇவன் மனையவள்ஆம்
உருமையையும் அவன்உகந்தான்;
கொற்றவில்லோய் என்றுமெய்யன்
கூற,எல்லாம் பிரான்அறிந்தான். 21

## வாலியை வதைப்பதாகச் சூளுரைத்தான் இராமன்

மன்இளையோற்கு அரசுஅளித்த
மன்னர்பிரான், மற்றுஒருவன்
தன்இளையோன் மனைவிகொண்டால்
தரிப்பவனோ? தாமரைக்கண்
முன்னிலும்தான் மிகச்சிவந்தான்;
மூர்க்கனுக்குஎன்று உலகம்எலாம்
துன்னிலும்கொன்று அரசும்உந்தன்
தோகையையும் தருவன்என்றான். 22

## ஆலோசனை கூறினான் அனுமான்

காட்டிடுநீ அவனைஎன்ன,
கதிரவன்சேய் துயர்க்கடலைத்
தாட்டிஇன்பக் கடலைஉற்றான்,
சமைவன்இனி வாலிஎன்றே;
மீட்டும்அவன் அமைச்சருடன்
விசாரம்இட; விறல்அனுமான்
மாட்டுவனோ எனநினைந்தாய்
மாயவன்காண் என்றுஉரைப்பான்: 23

21. உருமை - சுக்கிரீவனின் மனைவி.

23. சமைவன் - அழிவான். அவன் – சுக்கிரீவன்; அமைச்சருடன் விசாரம் இட்டு இராமன் அது மாட்டுவனோ என நினைந்தான், அனுமான் உரைக்கத் தொடங்கினான்.

உளங்கால்கை ஆழிசங்கம்
உளதுஇவர்க்கே; யார்க்கும்இல்லை;
களங்கறுத்தோன் சிலைஒடிக்கக்
கண்ணனுக்குஆம்; பிறர்க்குஆமோ?
இளங்காளை என்னாதே;
எல்லார்க்கும் அன்னைபிதா;
துளங்காமெய் உருகுகின்றேன்;
துயர்அறநீ அடிமைசெய்வாய். 24

செழுவிருக்கம் ஏழில்ஒன்று
செறும்கணைபார் என;அவனைத்
தழுவிஉற்றான்; இராகவன்முன்
சாற்றுவதுஉண்டு அவ்வரைவாய்
எழுகெனப்போய் மராமரங்கள்
ஏழில்ஒன்றை உருவஎய்தால்
பழுதுஒழிந்தேன் என;நகைத்துப்
பரன்சிலைநாண் ஏற்றினனே. 25

24. களங்கறுத்தோன் - நீலகண்டன் - சிவன்.
25. விருக்கம் - விருட்சம். செறும் - ஊடுருவிச் செல்லும். கணை - அம்பு.

# 4 மராமரப் படலம்

—இராமன் அம்பு எய்து துளைத்த ஏழு மராமரங்களைப் பற்றியது

### மராமரங்களின் வருணனை

இலகு குலக்குன்றம் இவைஏழும்
இவையோ எனநின்ற மரம்ஏழும்
உலகம் குலைந்தாலும் குலையாவாம்;
உகமும் முடிந்தாலும் முடியாவாம்;
தலைகண்டு அறியார்சந் திரபாநு;
தழைகண் டிலர்ஆரும் தருஎன்றுஎண்ணார்;
அலகில் மகமேரு தனிலும்முந்தி
அண்டம் கடந்திட்ட நெடுமால்போல். 1

மண்மீது உதிராமல் கனிகாய்பூ
வான்ஆறு இடைவீழ்ந்து கடல்சேர்ந்து
திண்மீன் இனம்தின்று களிகூரும்;
திங்கள் மறுஎங்கும் தேய்ந்ததுஒக்கும்;
விண்மீன் இனம்மொய்க்கும் மலர்போலும்;
வியன்நான் மறைஒக்கும் பலசாகை;
எண்மீது உலகம்செய் வேதன்அன்னம்
இருக்கும் பெடையோடும் ஒருபாலே. 2

இரவி புரவிகள் இளைப்போடும்
இவற்றுள் புகஅந்த இளைப்போடும்;
அரவின் படத்துக்கும் கீழ்ப்புகவேர்
அன்றி நாற்காதம் பருமன்என்று

1. உகம் - யுகம். தலை - உச்சி. பாநு - சூரியன். மகமேருவினும் உயர்ந்து, மூவுலகும் அளந்த திரிவிக்கிரமன் ஆன மகாவிட்டுணு போல் தோன்றுவன.

2. வேதங்கள் போன்றனவாம் சாகை - கிளைகள். இதன் ஒருபால் பிரமனது அன்னம் பெடையோடு தங்கியிருக்குமாம்.

விரவி, வாலிசுக்கி ரீவனைப்போல்
　　மிகுத்த வயிரங்கள் ஒன்றுக்குஒன்றாம்;
பரவி அளந்துஎட்டுத் திசையும்செல்லும்
　　பணைகள், அவைதோறும் இமையோரே. 3

## இராம பாணத்துக்கு இலக்கு ஏழோ?

அம்ம ராமரம் ஏழும்கண்டான்;
　　அழகன் சிலைதன்னால் நாண்எறிந்தான்;
வெம்மை வான்எங்கும் செவிடுபட்டு
　　விண்ணோர் பயந்துஓடி முடிவுஇன்றுஎன்றார்;
செம்மை இளவீரன் அன்றி,மற்றோர்
　　சிதறிட் டார்என்று சொலலாமோ?
தம்மை அரிதாகத் தாம்மீட்டார்;
　　தனுவை வளைத்துஐயன் சரம்ஒன்றுஎய்தான். 4

ஏழு மராமரம் உருவிமற்று
　　ஏழு பாதாலம் உருவிஅப்பால்
ஏழு காணாமல் மீண்டது;என்னே!
　　இராக வேசுரன் ஒருபாணம்—
ஏழு கடலும்மேல் உலகுஏழும்
　　ஏழு முனிவோரும் மலைஏழும்
ஏழு மடவாரும் பரிஏழும்
　　ஏழோ இலக்கம்என்று கலக்கம்உற்றார். 5

3. சூரியன் குதிரைகள் ஓரேவிதமாக ஓயாமல் அலைவன; அவற்றின் களைப்பு நீங்குமாம், களைப்போடு இவற்றுள் புகுந்து போவதால். வேர் பாதாலத்தின் அடிக்கும் கீழ்; பருமன் நாற்காதம். வாலி சுக்கிரீவர் பகைபோல ஒன்றுக்கொன்று தாழாத உள்வயிரம் வாய்ந்தவை. பணைகள் - கிளைகள். இமையோர் தங்குவர் என்க.

4. நாண் எறிந்த இடங்காரத் தொனியால். முடிவு இன்று - முடிவு காலம் வந்துவிட்டது இன்று. தம்மை அரிதாகத்தாம் மீட்டார் - சுக்கிரீவன் ஆதியர் பயந்தோடினர் என்றால் அவர்களைப் பழி சேரும். நிலைகுலைந்த அவர்கள் ஏதோ ஒரு வகையில் துணிந்து நின்றார்கள்,

# துந்துபிப் படலம்

*—துந்துபி என்ற அசுரனது எலும்புக் கூட்டை இலக்குமணன் கால் விரலால் நெடுந்தொலைவிற்போய் விழ எற்றி எறிந்தது*

## துந்துபியின் வரலாறு

துந்துபியாம் பேர்அவுணன்
சோமனையும் தொடும்எயிற்றான்;
பைந்துளவோய் அமர்செய்என்று
பாற்கடலைக் கலக்கிட;மால்,
ஐந்துமுகன் அன்றிஉன்னோடு
ஆர்பொருவார் எனவிடுக்க;
வந்துபெருங் கயிலைதன்னை
மருப்பில்இடந்து எடுக்கல்உற்றான். 1

தேவர்பிரான், உன்கருத்துஎன்?
செப்புஎனவே; செரு,கொடுஎன்றான்—
யாவர்வல்லார் வாலிஅல்லால்
எனவிடுக்க; வானரர்தம்
காவல!வா மலையஎன்று
கண்டதுண்டம் செயமலையைக்
கோவமுடன் வந்துஎதிர்த்தான்;
கொடியசமர் செய்தனரே. 2

கவனமுடன் பொருசினத்தால்
கலங்கினர்தே வாசுரரும்;
இவன்அவுணன் இவன்வாலி
எனத்தெரியா அருஞ்சமரில்
அவனம்எங்கும் தழல்கொளும்தீ
அலைகளும்குன் றமும்அழுங்கப்
புவனம்எங்கும் தொனிஎழுந்து
புகைபரந்த திசைகள்எல்லாம். 3

1. சோமன் - சந்திரன். ஐந்துமுகன் - சிவன்,

3. அ(வ்)வனம்,

**அடியேன் உன் அபயம்**

கலக்கம் தெளிந்தனர் உலகர்எல்லாம்
காக்கும் கருணாகரன் என்றுஎண்ணி;
நலக்கம் துறந்திட்ட சூரியன்சேய்
நாதன் மலர்ப்பாதம் தலையிற்கொண்டே
இலக்கம் நீ;பஞ்ச பூதங்கள்நீ;
இரண்டு சுடர்நீ;மும் மூர்த்தியும்நீ;
அலக்கண் தவிர்த்துஎன்னை ஆளவந்தாய்;
அடிகட்கு அடியேன்என்று அபயம்புக்கான். 6

பெற்றோம் வாலிக்குஓர் காலன்என்று
பிரிய மதுஉண்டுஆ டினர்சேனை
உற்றோர் அரணாக மாயன்கண்டான்
உலர்ந்து பசைஅற்ற உயர்மலைமேல்
மற்றோர் மலைபோல்துந் துபிகாயம்—
மறலி வாகனம்தான் மடிந்திட்டதோ?
இற்றோர் திசையானை இறந்திட்டதோ?
ஏதோ எனலும்சுக்கி ரீவன்சொல்வான்: 7

# 5 துந்துபிப் படலம்

—துந்துபி என்ற அசுரனது எலும்புக் கூட்டை இலக்குமணன் கால் விரலால் நெடுந்தொலைவிற்போய் விழ எற்றி எறிந்தது

## துந்துபியின் வரலாறு

துந்துபியாம் பேர்அவுணன்
சோமனையும் தொடும்எயிற்றான்;
பைந்துளவோய் அமர்செய்என்று
பாற்கடலைக் கலக்கிட;மால்,
ஐந்துமுகன் அன்றிஉன்னோடு
ஆர்பொருவார் எனவிடுக்க;
வந்துபெருங் கயிலைதன்னை
மருப்பில்இடந்து எடுக்கல்உற்றான். 1

தேவர்பிரான், உன்கருத்துஎன்?
செப்புஎனவே; செரு,கொடுஎன்றான்—
யாவர்வல்லார் வாலிஅல்லால்
எனவிடுக்க; வானரர்தம்
காவல!வா மலையஎன்று
கண்டதுண்டம் செயமலையைக்
கோவமுடன் வந்துஎதிர்த்தான்;
கொடியசமர் செய்தனரே. 2

கவனமுடன் பொருசினத்தால்
கலங்கினர்தே வாசுரரும்;
இவன்அவுணன் இவன்வாலி
எனத்தெரியா அரும்சமரில்
அவனம்எங்கும் தழல்கொளும்தீ
அலைகளும்குன் றமும்அழுங்கப்
புவனம்எங்கும் தொனிஎழுந்து
புகைபரந்த திசைகள்எல்லாம். 3

1. சோமன் - சந்திரன். ஐந்துமுகன் - சிவன்,
3. அ(வ்)வனம்,

மன்னவுணன் துந்துபியை
　　மருப்பிரண்டும் பிடுங்கி,எந்தன்
முன்னவன்மோ தினன்தலைமேல்;
　　மூழ்கியவாய் குருதிசிந்த
அன்னவனும் தடவரைமேல்
　　அசனிவிழுந்து அதிர்வதுபோல்
கொன்னவில்வான் செவிடுபடக்
　　குரக்குஅரசைக் குத்தினனே. 4

தானவன்தன் கால்கள்பற்றிச்
　　சாய்மரம்போ லேசுழற்றி
மானவெங்கண் யானைஎட்டும்
　　மாசுஇவர்ந்து சோரிபட்டு
மேனடுங்க வீசியிட்டான்;
　　மீறுகொண்டல் பானுவுக்கும்
வானதிங்கள் தாரகைக்கும்
　　ஆவிமுந்தி வானம்முட்ட. 5

வானம்முட்ட உடல்நிமிர்ந்த
　　மதங்ககிரி மீதில்விழ,
மோனம்உற்ற மதங்கமுனி
　　முனிவுடனே வாலிஇந்தத்
தானம்உற்றால் இறக்கஎன்று
　　சாபம்இட்டான், ஆதலினால்—
ஞானம்உற்றாய்! அரண்இதுவாய்
　　நான்பிழைத்தேன் எனஉரைத்தான். 6

4. அசனி - இடி. கொன்னவில்வான் - கொன் நவில் வான் - சூனியம் என்று சொல்லப்படும் ஆகாயம்.

5. மேனடுங்க - மேல் நடுங்க. தாரகை - நட்சத்திரம்.

### துந்துபியின் உடல்கூட்டைக் கட்டைவிரலால் எற்றி எறிந்தான் இலக்குவன்

*அறிந்தபிரான் இளையவனை*
*அகற்றிடுநீ இதனைஎனச்*
*சிறந்தபுகழ்ச் சுமித்திரைசேய்*
*சேவடியின் பெருவிரலால்*
*எறிந்தது,அயன் உலகளவாய்*
*எழுந்துமண்ணில் விழுந்ததுபோய்;*
*உறுந்தகைவா னரர்ஆர்த்தார்;*
*உற்றனர்சோ லையுள்இருந்தார்.* 7

# 6 கலன் காண் படலம்

—சீதையின் அணிகலன்களைச் சுக்கிரீவன் காட்ட
இராமன் கண்டது

### இந்த அணிகலன்களைப் பார்

அவையே புகலஎன்விண் ணப்பம்கேள்!
  அரக்கன் கொடுசெல்லும் போதுகண்டோம்;
கவைஏர் மனத்தாள்உன் தேவிகொல்லோ?
  கண்ணீ ருடன்கூட, கலன்கள்எல்லாம்
குவையே பொதிந்துஇட்டாள்; ஏற்றுக்கொண்டோம்;
  கொடுப்பார் அடியார்என்று அறிந்தேயோ?
இவையே ஆகில்கண் டருள்கஎன்றே
  இரவி மகன்வைத்தான் இறைவன்முன்னே. 1

### பார்த்த இராமன் மெய்ப்பாடுகள்

கண்டான் மடமங்கை அணிகள்எல்லாம்;
  கரைந்தான் எனவோகண் ணீர்ஆறாய்?
விண்டான் எனவோவெங் கனல்மெழுகாய்?
  வெயர்த்தான் எனவோஇவ் விரகம்தன்னால்?
உண்டான் எனவோமெய் புளகம்?பொங்க
  உயிர்த்தான் எனவோ?நெஞ் சுறுதாபம்
கொண்டான் எனவோ?நம் பெருமாளைக்
  குளிர்ந்தான் எனவோ?இங்கு யாதுசொல்வேம்? 2

போர்க்கத் துகிலும்செங் களபமும்ஆய்ப்
  பூணும் முத்தாரம் உத்தரீயம்ஆய்ப்
பார்க்கத் திருமங்கை அவயவமாய்ப்
  பழுத்த பூஆரும் பணிப்பூணால்

2. விட்டபேர் உணர்வினை விளித்த என்கெனோ?
அட்டன உயிரை அவ் அணிகள் என்கெனோ?
கொட்டின சாந்துஎனக் குளிர்ந்த என்கெனோ?
சுட்டன என்கெனோ? யாது சொல்லுகேன்? —கம். 7.

*தீர்க்கப் பொழுதுஆகம் தியக்கம்உற்றான்*
*திருமே னியைத்தன்மெய் சுருக்குஎனத்தான்*
*வேர்க்க; தாங்கிக்கொண்டு, இவைதந்துஉன்னை*
*மெலிவித் தேன்என்று துணைவன்சொன்னான்.* 3

### தேற்றினான் சுக்கிரீவன்

*பாவைக்கு இடர்செய்த அரக்கன்சென்னி*
*பத்தும் பலதோளும் உலகுஏழும்*
*காவற் படுமோநின் கணைஒன்றின்முன்?*
*கருணைப் படிஅன்றோ? பெருமைஎண்ணில்*
*மூவர்க்கு ஒருமேனி ஆகில்அன்றி*
*முதலோர் தனித்தனி உனைஒப்பரோ?*
*ஏவற்கு அடியோம்யாம்; இவன்தம்பியாம்;*
*இறைவன் நீஎன்னில் குறைஎன்?எந்தாய்!* 4

*பதினால் உலகும்அப் புறமும்சென்று*
*பதகன் தலைபத்தும் திருகியிட்டு*
*மதிநாள் முகமானைக் கொணருகின்றேன்;*
*வலிபார்; மெலியாதுஇங்கு இருந்தருள்நீ;*
*விதி—நா யகனே!என் கருமம்பின்னே;*
*மின்னாள் தனைமுன்னே மீட்பதுஎன்ன;*
*பொதிநாள் முளரிக்கண் விழித்திட்டுஅன்பால்*
*புவிமன் கவிமன்னோடு உரைக்கல்உற்றான்:* 5

### சாகாமல் இரேன், உன் குறை தீர்த்தன்றி உயிர்விடேன்

*கழியும் படியான கலன்கள்எல்லாம்*
*கணவன் இருக்கவும் துறந்தார்ஆர்?*
*மொழியும் குயில்என்னை வரப்பார்க்கும்;*
*முழுதும் துயர்வெள்ளத்து அழுந்துகின்றேன்;*

3. மோந்திட நறுமலர் ஆன; மொய்ம்பினில்
ஏந்திட உத்தரி யத்தை ஏய்ந்தன;
சாந்தமும் ஆய்ஒளி தழுவப் போர்த்தலால்
பூந்துகில் ஆயஅப் பூவை பூண்களே. —கம். 8.

5. மான் - சீதை, விதி - கட்டளை இடு. முளரி - தாமரை.

வழியின் உடன்வந்த மடவார்க்காய்
மடிவார்; மனையாளைச் சிறையில்வைத்தேன்;
பழியுண்டு எனஅஞ்சி முடிசூடேன்
பகைவன் மிகைசெய்யப் பழிபூண்டேன். 6

தந்தை மகவானுக்கு உதவிசெய்தான்;
தனுவோடு அபிமானம் சுமந்துஅலுத்தேன்;
முந்தை வரம்தந்தார் சலதிகங்கை;
முனைஇ லேன்அந்த மரபில்வந்தும்;
இந்த இடர்உன்னால் ஆற்றல்உற்றேன்;
இனிஎன் உயிர்மாய்வேன்; இரவிமைந்தா!
உந்தன் குறைமுன்னே முடித்துப்பின்என்று
உரவோன் அருள்செய்ய; அனுமன்சொல்வான்: 7

**ஆலோசனை கூறினான் அனுமான்**

முன்னம் வாலியை வதைத்துப்பின்னே
முழுதும் கவிமன்னன் இவன்ஆக்கி
அன்ன வானரப்படை கொண்டுஅன்றி
அரக்கர் இடந்தேட அருமைஉண்டாம்;
இன்ன வரை,இன்ன உலகுஎன்றுஇல்லை;
எங்கும் திரிவார்;வெங் கொடுமைசெய்வார்;
சொன்ன வாறுஎங்கும் தேடஎன்றால்
தொலையாது அளவற்ற காலம்செல்லும். 8

வெள்ளம் எழுபதுண்டு ஒருகாலே
விரையப் பரந்துஈரேழ் உலகும்வெற்றி
கொள்ள வலதுஎங்கள் குலச்சேனை
கூட்டிக் கொடுசெய்கை கருமம்என்ன;

6. கலன் - ஆபரணம். குயில் - சீதை. நாயகன் சாகும்முன் நகைகளை நீத்த நாயகி என் காலத்துக்குமுன் எவளேனும் இருந்தது உண்டா?

ஆறுடன் செல்பவர் அம்சொல் மாதரை
வேறுஉளார் துயர்செயின் விலக்கி வெஞ்சமத்து
ஊறுறத் தம்உயிர் உகுப்பர்; என்னையே
தேறினள் துயரம், நான் தீர்க்க கிற்றிலேன். —கம். 22.

7. மகவான் - இந்திரன். நானோ வெட்கம் இன்றி வில்லை வீணாகச் சுமந்து அலுத்தேன். முன்னோர் சலதி (கடலைத்) தோண்டினர்; கங்கையைக் கொணர்ந்தனர். நானோ நிர்ப்பாக்கியன்; அந்த மரபில் வந்தும் என் மனைவியின் வருத்தத்தை மாற்ற மாட்டாது உன்னால் என் துன்பம் தீரப்பெற்றேன்.

வள்ளல் மாருதிமொழி நன்றுஎன்று
வாலிபால் செல்வோம் வாரும்என்ன;
துள்ளல் புரிந்துஇரண்டு அரிஏற்றைச்
சூழப் புலியாளி போலச்சென்றார். 9

**மலை வழியில்**

திணிசந் தனச்சாரல் சாரல்அல்ல
தேவா தியர்ஊசல் ஊசல்அல்ல
கணிசண் பகச்சோலை சோலைஅல்ல
கவினாம் இதன்மேலும் கனகக்குன்றம்;
அணிசுந் தரவீரக் கழல்ஆர்க்க
அழுந்தும் துயில்மேகம் எழுந்துஓட
மணிசிந் திடவேவெண் தரளம்சிந்த
மலர்சிந் திடச்சிந்தும் அருவிவெள்ளம். 10

படநா கமும்ஓடும்; முகிலோடும்;
பருஆ னைகள்ஓடும் பயத்தோடும்;
கடநா கமும்யாளி யுடன்ஓடும்;
கவிகள் மகிழ்ந்தோடும் வேகம்தன்னால்
மடல்நா கமும்சந்தும் உருண்டோடும்
வழிந்து பொழிந்துஓடும் செழுந்தேனில்;
தடநா கமும்ஓடும் கதிரோடும்
சசிதா ரகைஓடும்; வழக்கம்அன்றே. 11

9. கம்ப ராமாயணப் புத்தகங்களில் 9ஆம் பாடலுடன் ''கலன் காண் படலம்'' முடிகிறது. பின் ''வாலி வதைப் படலம்''.

10. சந்தனச்சாரல்; இது அல்லாத இடங்கள் ஊசல்; இது அல்லாத இடங்கள் சண்பகச் சோலை; இது அல்லாத இடங்கள் குன்றங்கள். வீரக்கழல் ஆர்ப்பொலி கேட்டு உறங்கிக்கொண்டிருந்த மேகங்களும் விழிப்புற்று வானில் சஞ்சரிக்கும்.

11. பட நாகம் - நல்ல பாம்பு. கடம் நாகம் - மதயானை. மடல் நாகம் - சுரபுன்னை. சந்து - சந்தனமரம். தட நாகம் - பெரிய யானை. சசி - சந்திரன்

நீடு நாகம் ஊடு மேகம் ஓட நீரும் ஓடவே
ஆடு நாகம் ஓட மான யானை ஓட ஆளிபோம்
மாடு நாகம் நீடு சாரல் வாளை யோடும் வாவியூடு
ஓடு நாகம் ஓட வேங்கை ஓடும் யூகம் ஓடவே. —கம். 4.

நீடு நாகம் ஊடு - நெடிய மலைகளின் வழியாக. ஆடு நாகம் - படம் விரித்து ஆடும் நாகப் பாம்பு. மாடு நாகம் - வான் அளாவிய. ஓடும் நாகம் - ஓடும் யானை. யூகம் - கருங்குரங்கு.

### வாலிவாழ் மலையை அடைந்தனர்

அனற்போல் ஒளிபாயும் மணியும்பொன்னும்;
அவிப்போம் எனப்பாயும் அருவித்தண்ணீர்;
மனப்போல் இளமந்தி குதிபாயும்;
வானோர் எனப்புள்ளும் திரைபாயும்;
இனப்போர் வலிஓர மலைஏறி
ஈரைந்து யோசனை கடந்துஅப்பால்
வனப்போடு உயர்துர்க்கம் சுவர்க்கம்ஒக்கும்
வாலி பொருப்புஉற்றார்; வகைஎன்?என்றார். 12

# 7 வாலி மோட்சப் படலம்

—வாலி முத்தி எய்தியது

### ஆர்ப்பரித்து வாலியைப் போர்க்கு அழைத்தான் சுக்கிரீவன்

அடர்ந்துஅழைத்தால் மறைந்துஓர்அம்பால்
அடுவன்என்றே மால்அருள,
திடந்தழைத்தான் இரவிமைந்தன்;
திசைநடுங்கத் தோள்புடைத்துப்
படர்ந்துஇடித்தே ஆர்க்கும்ஒலி
பாற்கடல்போல் துயில்பவன்தோள்
இடந்துடித்தே அடல்வாலி
இருசெவிக்கண் உற்றதுவே. 1

### போர் ஏற்றுப் புறப்பட்டான் வாலி

குஞ்சரம்ஆர்ப் பதுகேட்பின்
கோபம்மிகும் கோள்அரிபோல்
துஞ்சுஅமர்தான் செயவருவோன்
சோதரன்ஆம் என்றுஅறிந்து
வெஞ்சமரோ குறித்ததுஎன்று
விண்டதுஅண்டம் எனச்சிரித்து
மஞ்சமர்ஊ ழியிற்கடல்போல்
மலைஅழுந்த எழுந்தனனே. 2

குறிப்பு: கம்பராமாயணப் பதிப்புகளிலே "வாலி வதைப் படலம்" என்ற தலைப்பே காணப்படுகிறது.

1. அடர்ந்து - வலிந்து. அடுவன் - கொல்வேன். மால் - இராமன். இரவி மைந்தன் - சுக்கிரீவன். ஒலி உலகை உண்டது.

ஆர்த்த ஓசை, ஈசன் உண்ட அண்டம் முற்றும் உண்டதே. —கம். 11.

2. குஞ்சரம் - யானை. கோளரி - சிங்கம். துஞ்சு அமர் - கொல்லும் போர். வெஞ்சமர் - கொடிய போர். மஞ்சு அமர் கடல், ஊழியிற்கடல். மஞ்சு - மேகம்.

......... ... ..... ......... அமளி மேல்ஒரு
பாற்கடல் கிடந்ததே அனைய பான்மையான்.

—கம். 13.

வடவையினும் எரிந்தனகண்;
வான்கடந்தது உயிர்த்தபுகை;
கடல்வரைகள் நடுங்கினவால்
கையொடுகை புடைத்திடலால்;
அடவருகின் றேன்எனும்சொல்
அட்டதிக்கின் புறத்தும்முட்ட,
திடவன்அவன் முடிதீண்டச்
சிந்தினதா ராகணமே. 3

கற்கடுத்த கைவீசக்
கனவரைகள் வேர்பறிய,
மற்கடுத்த வாகுதட்ட
வலயமணி மின்உதிரப்
பற்கடிக்க உரும்இடிபோல்
பலபலெனப் பொரிசிதற,
முற்கடல்தான் கடைவிடம்போல்,
கடையுகம்போல் முனிந்துஎழுந்தான். 4

## தாரை தடுத்து நிறுத்தவும் மறுத்து எழுந்தான் வாலி

தண்ணமுதம் தனில்உதித்த
தாரைவந்து விலக்கி,அவன்
கண்ணெரியால் குழல்எரிவாள்,
கனத்துணையால் அழைத்தனன்காண்;

3. வடவை - வடவாமுகாக்கினி. கடலும் வரைகளும். அட - கொல்ல; அடே எனலும் ஆம். திடவன் - பலசாலி - வாலி.

4. கற்கு அடுத்த - கல்லுக்கு நிகரான. மற்கு அடுத்த - மற்போருக்குத் தகுந்த. வாகு - தோள்.

...... ...... முடிவில் தீக்கும்அக்
காலமும் ஒத்தனன் கடலில் தான்கடை
ஆலமும் ஒத்தனன் எவரும் அஞ்சவே. —கம். 21.

எண்ணெனவே; வாலிசொல்வான்:
எவ்வுலகும் எனக்குஎதிரோ?
தண்ணலைமால் வாசுகிமந்
தரம்மதியம் சான்றுஅலவோ? 5

கடைந்தசுரா சுரர்இளைத்தார்;
கடைந்துஒருநான் அமுதுதந்தேன்;
இடைந்தனர்என்று அறியலையோ?
எதிர்த்தவலி பாதிகொள்வேன்;
மடந்தைநல்லாய்! கூற்றும்அஞ்சும்
வரும்துணையார் அவற்கு?எனவே,
நடந்துஉறவாய் இராமன்உற்றான்;
நான்கேட்டேன் எனஉரைத்தாள். 6

## இராமன் திறத்திலே அடாது சொல்லி அபசாரப்படாதே

சீரருளால் இளையவற்குச்
செல்வம்எல்லாம் கொடுத்தபிரான்
பேரருள்நீ புகழாமல்
பிழைஉரைத்தாய்! பெண்மதியால்;
ஆரருளும் அவன்அலவோ?
அகற்றுவனோ தனைத்தானே?
வீரருள்வில் ஆண்மையதோ?
மென்குரங்கோடு இணங்குவனோ? 7

5. ஆயிடைத். தாரைஎன்று அமிழ்தின் தோன்றிய
வேயிடைத் தோளினாள் இடைவி லக்கினாள்;
வாயிடைப் புகைவர, வாலி கண்வரும்
தீயிடைத் தன்நெடுங் கூந்தல் தீகின்றாள். —கம். 22.

கனத்துணை - பெரிய துணைவலி. எண் - ஆலோசிப்பாய். மந்தரம் மத்து, வாசுகி கடைகயிறு, திருமால் அடைகல், சந்திரன் தூண் ஆக, நான் அலைகடல் கடைந்ததற்கு அவை சான்றாகுமே.

6. கூற்றும்என் பெயர்சொலக் குலையும் ஆர்இனி
மாற்றவர்க்கு ஆகிவந்து எதிரும் மாண்பினோர்? —கம். 28.

7. உழைத்தவல் இருவினைக்கு ஊறு காண்கிலாது
அழைத்துஅயர் உலகினுக்கு அறத்தின் ஆறுஎலாம்
இழைத்தவற்கு இயல்புஅல இயம்பி என்செய்தாய்?
பிழைத்தனை பாவி!உன் பெண்மையால் என்றான். —கம். 31.

தருமமே தவிர்க்குமோ தன்னைத் தான்அரோ? —கம். 32.

தன் துணை ஒருவரும் தன்னில் வேறுஇலான்
புன்தொழில் குரங்கொடு புணரும் நட்பனோ? —கம். 34.

அம்புயத்தம் பியர்க்குஇனியான்,
அடாதயுத்தம் பொரநினையான்;
வம்பனைக்கொன்று ஆர்வரினும்
வருவேன்;நீ வருந்தல்!என,
நம்பொருப்பில் ஆதவன்போல்
நடுத்தூணில் ஆள்அரிபோல்
தம்பொருப்பின் இடைத்தோன்றித்
தம்பியைக்கண்டு ஆர்ப்பரித்தான். 8

## இராம - லக்குவர் சம்வாதம்

போர்க்கும்ஒலி விசும்புஅளக்கப்
பூமகள்கோன் இளவலுடன்
கார்க்கடல்கால் குவடுவெந்தீ
கலக்குவன்காண்; பார்எனவே,
யார்க்கும்நண்போ? தமையனுக்கும்
அடுங்கூற்றைக் கொணர்ந்தவனைச்
சேர்க்கைநன்றோ? எனும்துயரால்
தெரிந்ததில்லை என்றுஉரைத்தான். 9

8. தம்பியர் அல்லது தனக்கு வேறுஉயிர்
இம்பரின் இலதுஎன எண்ணி ஏய்ந்தவன்
எம்பியும் யானும்உற்று எதிர்ந்த போரினில்
அம்புஇடை தொடுக்குமோ அருளின் ஆழியான்? —கம். 35.

வம்பன் - அக்கிரமி. ஆதவன் - சூரியன். ஆள்அரி - நரசிங்கம்.

9. பூமகள் கோன் – இராமன்.
அவ்வேலை, இராமனும் அன்புடைத் தம்பிக்கு, ஐய!
செவ்வே செலநோக்குதி; தானவர் தேவர் நிற்க
எவ்வேலை எம்மேகம் எக்காலொடு எக்கால வெந்தீ
வெவ்வேறு உலகத்து இவர்மேனியை மானும்? என்றான். —கம். 40.

வள்ளற்கு இளையான் பகர்வான், இவன்தம்முன் வாழ்நாள்
கொள்ளக் கொடுங்கூற்றுவனைக் கொணர்ந்தான்; குரங்கின்
எள்ளற்குறு போர்செய எண்ணினன் என்னும் இன்னல்
உள்ளத்து இடைஊன்ற, உணர்ந்திலென் ஒன்றும் என்றான். —கம். 41.

ஆற்றாது பின்னும் பகர்வான், அறத்தாறு அழுங்கத்
தேற்றாது செய்வார்களைத் தேறுதல் செவ்விது அன்றால்;
மாற்றான் எனத்தம் முனைக்கொல்லிய வந்து நின்றான்
வேற்றார்கள் திறத்துஇவன் தஞ்சம்என்? வீர! என்றான். —கம். 42.

வீரியனே! குரங்குஇதன்றோ?
மிக்குஆரும் நலர்ஆனால்
சீரியர்ஆர் பரதன்போல்?
சிலர்பெரியோர்; பலர்சிறியோர்;
ஆரிய!பார்; எனும்போதில்,
அவ்இந்திரன்சூ ரியன்புதல்வர்
போரியல்பால் திசைஇரண்டின்
பூட்கைகள்போல் தாக்கினரே. 10

## விளைந்தது பெரும்போர்

மேருவும்பொன் அசலமும்போல்
வெஞ்சினமும் வெகுளியும்போல்
வாரிதியும் சலதியும்போல்
வாளரியும் மடங்கலும்போல்
சீர்உறுவாள் திலோத்தமைக்காய்
சினந்தசுந்தோ பசுந்தரர்போல்
போர்உடன்றார்; சாரிவந்தார்;
பொருகறங்கும் திகிரியும்போல். 11

சொரியும் பொறிமார்பும் மார்பும்கிட்ட
சுவறும் கடல்தூளும் சேறும்பட்ட;
விரியும் புகைவேதன் வானம்தொட்ட;
விழியின் தழல்காடும் காரும்சுட்ட;
நெரியும் கடகோடு காயம்முட்ட;
நெடுகுஞ் சுடர்வால்கொண்டு ஆகம்கட்ட;
சரியும் கிரிதோளும் தோளும்கொட்ட;
தகரும் புவிதாளும் தாளும்தட்ட. 12

10. அத்தா! இதுகேள்என, ஆரியன் கூறு வான்,இப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேசல் ஆமோ?
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிதுஉத்தமன் ஆதல் உண்டோ? —கம். 43.

வில்தாங்கு வெற்புஅன்ன விலங்குஎழில் தோள! மெய்ம்மை
உற்றார்சிலர்; அல்லவ ரேபலர் என்பது உண்மை;
பெற்றார் உழைப்பெற்ற பயன்பெறும் பெற்றி அல்லால்
அற்றார் நவைஎன்றலுக்கு ஆகுநர் ஆர்கொல்? என்றான். —கம். 44.

11. குன்றோடு குன்று, சிங்கத்தோடு சிங்கம், கடலோடு கடல் மோதின போன்றதாம் வாலி சுக்கிரீவர் மோதியது. சீர் உறுவாள் ஆன திலோத்தமை.

12. கடகோடு - உலகின் கடைகோடு. காயம் - சரீரம், ஆகாயம்.

வெடிமேல் வெடிவீழ்கை போலும்குத்த
　　வியன்மா கடல்ஏழும் மானும்சத்தம்;
கடிமேல் எதிர்பாயும் வாயில்ரத்தம்
　　கனலோடு உமிழ்தோறும் தோயும்மெத்த
படிமேல், உலகோசெவ் வானம்ஒத்த;
　　பலமீன் இனமோசெவ் வாய்எனத்தம்
முடிமேல் மலைமேல்விண் மேல்உயர்த்த
　　முனைவார் உயர்கோளும் கோளும்ஒத்தார். 13

கடிப்பார் ஒருவரை ஒருவர்பல்லால்;
　　காய்ந்த இரும்பினில் கூடங்கள்போல்
இடிப்பார் பொறிஎங்கும் தெறிக்கக்கையால்;
　　எறிவார் எதிர்கண்ட மரமும்குன்றும்;
ஒடிப்பார் பன்னகம்நேர் வாலாலே;
　　உதைப்பார்; துவைப்பார்;கட் டுவார்;வீழ்வார்;
அடிப்பார்; குதிப்பார்;சற்று அமர்தோலார்;
　　அகன்றார் அதுகண்ட அமரர்எல்லாம். 14

## இனம்தெரியப் பூச்சூடிப் போர்செய்தான் சுக்கிரீவன்

குழிப்பு: தந்ததன தானதன தத்ததன தத்தா

தந்தமத ஆனையைஅ டக்கும்அரி யைப்போல்
　　தம்பிதனை வாலியும்உ ழக்கிஅடல் உற்றான்;
நொந்தவன்இ ராமனைஅ டுத்துஅடிதொ ழுத்தான்,
　　நுங்கள்அடை யாளம்அறி வுற்றிலன்;இ னிப்போய்
அந்தமலை சூடுஇதுசி வப்புளகொ டிப்பூ,
　　அஞ்சல்என மீளவும்எ திர்த்தவன்அ ழைத்தான்;
உந்தனைவி டேன்எனஎ டுத்தவன்நெ ரித்தான்
　　ஒன்பதுது வாரம்உதி ரத்தொடுத ரத்தீ. 15

## வாலிமேல் அம்பு எய்தான் இராமன்

குழிப்பு: தனத்தன தனத்தனன தத்ததன தத்தா

இடர்ப்பட உயிர்க்குஇறுதி உற்றபரு வத்தே
　　தனக்குஒரு பிறப்புஎனும்ம னக்கருணை அற்றான்;
மிடக்கொடு நிலத்திடைஅ டித்துஉயிர்கு டிப்பான்
　　மிடற்றொடும் இடுப்பொடும்எ டுத்துஇருக ரத்தால்

மடக்கிஉ யரக்கடிதுள டுத்தளவில், வில்கால்
வளைத்துஒரு தனிக்கணை புரக்குஅரிவி டுத்தான்;
சுடர்ப்புவி மருத்தலைவ லத்தவன்உ ரத்தே
துளைத்தது கனிக்கதலி உட்புகுதும் முள்போல். 16

## மார்பிலே தைத்த அம்பை இறுகப் பற்றினான் வாலி

குழிப்பு: தனத்தன தனத்தன தனத்தன தனத்தா

அடல்கணை நிறத்திடை படக்கடை யுகக்கால்
அடிக்கஅ டிஅற்றுவி ழுபொற்கிரி யைஒத்தே
திடர்ப்படு தலத்தில்வி ழுவெற்பினை மறைத்தே
திரைக்கட லைஉற்றது உதிரக்கடல் பெருக்காய்
உடல்பிற விஅற்றிட உளத்துஎழு தவத்தால்
உழைத்துஅழு துசுக்கிரி வன்உற்றனன் நிலத்தே
சுடக்குறு சரத்தைஇ ருகைக்கொடு பிடித்தான்
கனத்தஅ மரர்க்குஇறை கொடுத்தருள் கவிக்கோன்.

## வீரரை வியவாதார் யார்?

ஏற்றிடுவேன் விண்ணைஎன்பான்;
எடுத்துஎறிவேன் பாரைஎன்பான்;
சுற்றுமுற்றும் தழல்விழிப்பான்;
தொடுத்தவன்ஆர் கணைஇது?என்பான்;
மற்றுஇதுஎய்யும் சத்திஉண்டோ
வானவர்தா னவர்க்கும்?என்பான்;
பற்றுகைகால் பல்வாலால்
பறிக்கஒண்ணா மல்புரள்வான். 18

ஐம்முகன்சூ லம்குலிசம்
ஆழிவராது என்முன்என்பான்;
மும்முதலும் தான்ஆன
முழுமுதல்வன் செயல்இதுஎன்பான்;
எம்முனிவர் விடுத்தனரோ?
எய்யவல்லார் அருமைஎன்பான்;
வெம்முனிவால் நகைத்திடுவான்;
விடைத்துஒருகை நிலத்துஅறைவான். 19

கைவலியோ? மனவலியால்
கடுங்கணையைக் கழற்ற,அவன்
மெய்வலிவா னவர்புகழ்ந்தார்;
வீரரையார் வியவாதார்?
மொய்வலிமே ருவைமுறிப்பான்
முறித்துஇளைத்தான்; முறிக்கஒண்ணாச்
செய்வலிஅம் பினிற்பொறித்த
திருநாமம் தெரிந்துகண்டான். 20

## இராம நாம மகிமை

ஈரெழுலோ கமும்பரவும்
இயல்மூல மந்திரத்தை,
பேரெழுவெம் பிறவிஎனும்
பிணிதீர்க்கும் மாமருந்தை,
ஓரெழுமா தவர்உணர்வை,
ஒப்பதுஇல்லாப் பெரும்பதத்தை,
சீரெழுசீ ராமன்என்னும்
திருநாமம் தனைஅறிந்தான். 21

## இராமனை இகழ்ந்து உரைத்தான் வாலி

செழுவிலின்போர் அறம்துறந்தான்
செனித்ததினால் இரவிகுலம்
வழுவல்உற்றது எனநகைத்து,
மனம்கொதித்து வாலிஅவன்
தொழுவில்உற்ற வாரணம்போல்
சோர்வான்முன், தோன்றிநின்ற
முழுவில்இட்ட முகில்மேனி
முகுந்தனைத்தான் முனிந்துஉரைப்பான். 22

21. மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களின் தெரியக் கண்டான்.
—கம். 77.

வி(ல்)லின் போர் அறம். தொழு - குழி. வாரணம் - யானை. வில் - ஒளி.

சரதவண்மை கல்விகுலம்
தகுதிகுன்றாத் தசரதன்பால்
பரதனுடன் பிறந்திலையோ?
பலர்க்குஉரைத்தும் தான்அடங்காய்;
நிரதன்என்ன அடாதுசெய்தாய்;
நீதிஎல்லாம் சீதைஎன்னும்
இரதமுதோடு ஒழிந்தனையோ?
எழுதஒண்ணா எழில்உடையாய்! 23

அன்னியன்ஓர் அழிவுசெய்ய,
அழிவுசெய்யாக் குரங்கைஎய்ய
மன்னியல்போ? கலிவழக்கோ?
வலியவற்கும் நெறிபழுதோ?
உன்னிளையோற்கு அரசுஅளித்தாய்
உன்நாட்டில், காட்டினிலும்
என்னிளையோற்கு அரசுஅளித்தாய்;
எனைக்கடிந்தாய்; இரக்கம்அன்றே. 24

23. வாய்மையும் மரபும் காத்து மன்உயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே! நீ பரதன்முன் தோன்றினாயே!
தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தால் தீங்குஅன்று·ஆமோ?
தாய்மையும் அன்றி நட்பும் தருமமும் தழுவி நின்றாய்! —கம். 82.

கோஇயல் தருமம் உங்கள் குலத்துஉதித் தோர்கட்கு எல்லாம்
ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்! உடைமை அன்றோ?
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னை திகைத்தனை போலும் செய்கை!
—கம். 84.

24. அரக்கர்ஓர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறுஓர்
குரக்குஇனத்து அரசைக் கொல்ல மனுநெறி கூறிற்று உண்டோ?
இரக்கம்எங்கு உகுத்தாய்? என்பால் எப்பிழை கண்டாய்? அப்பா!
பரக்கழி இதுநீ பூண்டால், புகழையார் பரிக்கற் பாலார்? —கம். 85.

மெலியவர் பால தேயோ ஒழுக்கமும் விழுப்பம் தானும்? —கம். 86.

கூட்டுஒரு வரையும் வேண்டாக் கொற்றவ! பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டுஒரு கருமம் செய்தாய்; எம்பிக்கு இவ்வரசை நல்கி,
காட்டுஒரு கருமம் செய்தாய்; கருமந்தான் இதன்மேல் உண்டோ?
—கம். 87.

ஈதுசெய்தாய் ஈங்குஎனை நீ;
    இராவணனை முனிவதுஎன்னோ?
வாதுசெய்போது ஒருவருக்காய்
    மறைந்துஒருவன் மார்பில்எய்தாய்;
தீதுசெய்தாய்; ஞாயம்அன்றே;
    தீரம்அன்றே; வீரம்அன்றே;
ஏதுசெய்தாய்? சிங்கம்நிற்க
    இளமுயலைத் துணைபிடித்தாய். 25

ஒருவனைவிட்டு அறைகூவி
    ஒளித்துநின்று நிராயுதன்மேல்
பொருகணைவிட் டதுவலியோ?
    புலிஅளவும் வாழ்பவர்போல்—
வருமதியைப் போல—வெய்யோன்
    மரபினுக்கும் மறுவிளைத்தாய்;
தருமம்வதைத் தனை;வாலி
    தனைவதைத்தது இல்லைஎன்றான். 26

**தான் செய்தது சரியே**
**என்றான் இராமன்**

வம்புரைக்கும் வாலிதன்னை
    வரராமன் பார்த்துஉரைப்பான்:
முன்பிலத்துள் நீபுகுந்தாய்;
    முசித்துஅழும் உன்இளையவற்கே
அன்பில்உற்ற அரசுதந்தும்
    அண்ணனுடன் முடிவன்என்று
பின்புலத்தே புகும்இவனைப்
    பிடித்துஅவர்ஆ ணையிற்கொடுத்தார். 27

26. மதி போன்ற மரபு.
வாலி யைப்படுத் தாய்அலை; மன்அற
வேலி யைப்பிரித் தாய்விறல் வீரனே! —கம். 95.

27. இவனைப் பிடித்து நிறுத்தி; அவர் - சான்றோர் அரசு கொடுத்தார்.

அடுத்தஉன்னை வணங்கி,நின்பால்
அடுத்தஎன்னை நமர்தடுத்துக்
கொடுத்தனர்உன் ஆணைதன்னால்
குலத்தரசுஎன்று உரைத்திடவும்,
எடுத்துஅறைந்தாய்; முறையிடவும்
இளையவன்என்று அன்பும்அற்றாய்;
படுத்தல்செய்வாய்; முனிமொழியால்
பருவரைசேர்ந்து அவன்பிழைத்தான். 28

பற்றும்மெய்யும் குலமும்அன்பும்
பரதாரம் விரும்பாமை;
நற்றுவதும் எளியவரை
நலிவதுவும் பெரும்பாவம்;
மற்றும்அன்றே; உனக்குஇளையான்
மனைவியைச்சேர்ந்து அறம்பிழைத்தாய்;
இற்றுநொந்தார்க்கு உதவிசெய்வேன்;
இடும்பரைஈ டழிப்பன்என்றான். 29

### இராமனுக்கு எதிர்மொழி இயம்பினான் வாலி

புனிதன்இவ்வாறு உரைத்தருளப்
புன்மதியால் வாலிசொல்வான்:
மனிதர்நெறி அன்றுஎமக்கு,
மணமும்இல்லை; வரையும்இல்லை;
இனியஉள்ளம் செல்லிடத்தே
இயற்கைஎன்றே அயன்வகுத்தான்;
முனியநன்றோ? விருகம்அன்றோ?
மொழி;என,மால் மொழிந்தருள்வான்: 30

### வாலி கூறியது சரி அன்று என்று சாதித்தான் இராமன்

வானவரின் மேலாகி
வரநெறியால் மேன்மைபெற்றார்,
ஞானமிகும் கருடன்என்றும்
நந்திஎன்றும் தெளிந்திலையோ?

சானகிபால் உதவியஎன்
தந்தையும் மாற்குஅபயம்என்ற
ஆனையும்தாம் புள்விலங்காம்
அறநெறியால் உயர்ந்தனவே. 31

நெறிஅறியா விடில்மிருகம்;
நீஅறியா நெறிகள்இல்லை;
பொறிஅறியாக் கையில்உளதோ?
புந்தியின்மேல் உளஞானம்;
அறிவரநீ தியில்நடந்தால்
அமரரிலும் விலங்குஅதிகம்;
செறிவுறுபேர் அறம்மறந்தால்
தேவரும்யா வரும்விலங்கே. 32

துறவியர்க்கும் இரவலர்க்கும்
சூழ்வினையால் வருவதுஎல்லாம்
பிறவிஒக்கும்; எவ்வுயிர்க்கும்
பெருமைஒவ்வா வினைவகையால்;
உறவியற்றும் சிவார்ச்சனையால்
உலகில்மிக்க வலிபடைத்தாய்;
அறவியற்கை தனைஅறிந்தும்
அழிவுசெய்தாய்; பிழைஅது;அன்றே. 33

## வாலிக்குப் பதில் இறுத்தான் இலக்குவன்

தன்நேர் இலான்சொன்ன பொருள்கேட்டு;
தகுவா வியும்,என்முன் எதிராமல்
மின்நேர் கணைஎன்னை ஒளிந்துஎய்தாய்,
விலங்காம் எனை,வேடன் போல்என்ன;
முன்னே சரண்என்ற இவனுக்குஎங்கோன்
முறைஇல் லாஉன்னைக் கொலைநேர்ந்தான்;
மன்னே! சரண்!என்பாய் நீஎன்றுஎண்ணி,
மறைந்துஎய் தான்என்றான் இளங்கோமான். 34

31. தந்தை - சடாயு. ஆனை - கஜேந்திரன்.

33. ............ எக்குலத்து யாவர்க்கும்
வினையி னால்வரும் மேன்மையும் கீழ்மையும். —கம்: 121,

### மன்னிப்பு வேண்டினான் வாலி

ஆய்போ தனைவாலி அகத்துள்கொண்டான்;
அறத்தை வளர்ப்பவன்தான் இவனேஆவான்;
சேய்போல் உயிர்எல்லாம் ஈன்றதந்தை;
திருமால் என,எண்ணி, அடிவணங்கித்
தாய்போல் இரட்சிப்பாய் உலகுஎங்கும்நீ;
தரும நெறிநாயேன் அறிதற்பாற்றோ?
பேய்போல் குரங்குஎன்று பொறுத்துஅருள்வாய்;
பிழைசெய் ததும்சொன்ன பிழையும்எல்லாம். 35

### இராமனைத் துதித்தான் வாலி

தாவம் கெடஎய்து ஞானம்தந்தாய்;
தனிவாழ் முதல்நீ;மும் மூர்த்தியும்நீ;
பாவம் தருமம்நீ; பகைபண்பும்நீ;
பயனும் நீ;இருதுவும் மதியாவும்நீ;
தேவன் வரமும்என் உயிரும்கொண்ட
திறல்உன் கணைவலியின் வேறுண்டோ?
ஆர்வம் தனில்உந்தன் பாதங்கண்டேன்;
அரிய நெறிஎய்தற்கு அரியதுஅன்றே. 36

### வரம் வேண்டினான் வாலி

நம்பும் வரராமன் அன்னைதந்த
நன்றிக்கு எதிர்செய்யும் நன்றிஉண்டோ?
வெம்பும் குரங்குஆளும் செல்வம்கொண்டு
வீடா கியசெல்வம் எனக்குத்தந்தாய்;

35. தாய்என உயிர்க்கு நல்கி, தருமமும் தகவும் சால்பும்
நீஎன நின்ற நம்பி! நெறியினின் நோக்கும் நேர்மை
நாய்என நின்ற எம்பால் நவைஅற உணர லாமே?
தீயன பொறுத்தி என்றான் சிறியன சிந்தி யாதான். —கம். 125.

36. தாவம் - தாபம் - அரந்தை வெம் பிறவி நோய். தேவன் வரம் - சிவன் முதலிய தேவர்கள் நல்கிய வரம்.

நின் சரம்அலால் பிறிதுவேறு உளதுஅரோ தருமமே. —கம். 128,

எம்பி நறவுண்டு பிழையேசெயினும்
எய்யாது அருள்என்மேல் எய்தஅம்பை;
தம்பி முடித்தான்முன் னவனைஎன்றுஉன்
தம்பி மார்சொல்லா வகையும்செய்வாய். 37

### அனும - சுக்கிரீவர் ஆற்றலைக் கூறினான் வாலி

அரக்கன் தனைவாலிற் பிணித்துந்தன்
அடிமைத் தொழில்செய்வேன் இனிஎன்சொல்லி?
திரக்குன் றனையான்இவ் அனுமன்செய்வான்
செய்தற்கு அரிதான செயல்கள்எல்லாம்;
புரக்கும் திறல்உன்கைச் சிலையும்அம்பும்
போல்என் இளையோனும் இவனும்என்ன,
வரக்கொண்டு, இவரால்நீ மங்கைதேடி
வளரும் புகழ்பூண்என்று உரைத்துப்பின்னை; 38

### இராமனிடம் சுக்கிரீவனை அடைக்கலம் தந்தான் வாலி

வாஎன்று இளையோனை அழைத்துப்பின்னே
வருந்தாது இனிஇந்த வரராமன்தான்
தேஎன்று அனைவோரும் தொழுதேஏத்தத்
தீமை அகற்றிநல்ல அறநெறிக்கண்
மேவுஎன்று அருள்செய்வான் உயிர்கட்குஎல்லாம்
மிகைஎன் தனைக்கொன்று வீடுதந்தான்
காஎன்று அடைந்தால்மூ வுலகின்மிக்க
கனமும் உரமும்நல் பரமும்பெற்றாய். 39

37. மற்றுஇனி உதவி உண்டோ? வானினும் உயர்ந்த மானக்
கொற்றவ! நின்னை என்னைக் கொல்லிய கொணர்ந்து, தொல்லைச்
சிற்றினக் குரங்கி னோடும் தெரிவுறச் செய்த செய்கை
வெற்றுஅரசு எய்தி எம்பி வீட்டுஅரசு எனக்கு விட்டான். —கம். 131.

38. இளையோன் - சுக்கிரீவன். இவன் - அனுமான்,

39. மிகை - வேண்டாத பழியான காரியங்களைச் செய்த எனக்குமே வீடு தந்தான்.

................. ................. இணைஅடி இறைஞ்சி ஏவல்
செய்தவர் பெறுவதுஐயா! செப்பல்ஆம் சீர்மைத்து ஆமோ? —கம். 139.

உற்ற செய்ந்நன்றி மறவாமல்
உரிய பணிசென்னி தனில்ஏந்தி,
கொற்ற வரும்தீயும் நிகர்என்றுஎண்ணிக்
குற்றம் பொறுப்பான் என்றுஇகழாமல்
பெற்ற அரசாலும் குலத்தாலும்
பிறக்கும் தவறோம்பி வாழிஎன்றே
சுற்றம் அனைவோரும் இவனும்உந்தன்
தொண்டுஎன்று இறையோனைத் தொழுதுஇரந்தான்.

### அழுது புலம்பினான் அங்கதன்

இளையாய்! அழைஎந்தன் மகனைஎன்ன,
ஏவி அழைக்கஅங்க தனும்வந்தான்;
வளையார் கடல்போலும் குருதிதன்னுள்
மலையாம் எனத்தந்தை கிடத்தல்கண்டான்;
விளையா அரும்துன்பம் விளைந்ததுஅந்தோ!
விழிநீர் அழலோடும் உதிரம்சிந்தத்
திளையா மதிபாரில் விழுந்துஅதன்மேல்
சேர்ந்த சுடர்வெள்ளி எனவீழ்ந்தான். 41

கூற்றம் நினைஅஞ்சாது எதிர்வந்ததோ?
குற்றம் நிலைநில்லாது எவர்க்கும்எந்தாய்;
நீற்றந் தவர்க்கன்றி வணக்கம்செய்யாய்!
நித்தா! இனி,வேலை கடைவார்ஆர்?
ஏற்ற திசையானை வைரிநின்வால்
எண்ணத் திடுக்கென்னும் பயம்அற்றதோ!
ஆற்றல் வரைஎட்டோடு ஆழிவெற்பும்
அடிபட்டு இனிஎன்றும் அழுந்தாதே! 42

41. ......... ........ ......... ......... ......... திங்கள்
மண்டலம் உலகில் வந்து கிடந்தது; அம்மதியின் மீதா
விண்தலம் தன்னின் நின்றுஓர் மீன்விழுந் தென்ன வீழ்ந்தான்.
—கம். 146.

நீற்றந்தவர் - திருநீறு பூசிய தேவர் - சிவன் அடியார். திசையானைவைரி- இராவணன்.

பஞ்சின்மெல் அடியாள் பங்கன் பதயுகம் அலாது யாதும்
அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய்! —கம். 150.

அலைகடல் கடைய வேண்டின் யார்இனிக் கடைவர்? ஐயா!
—கம். 149.

தீரா வகைஅண்டர்க்கு அமுதம்தந்தாய்!
 தீரா, நெறிபார்;என்று அழும்மைந்தனை,
சோரா தேநீஎன்று எடுத்துஅணைத்துச்
 சொல்மா தவத்தால்இம் மரணம்பெற்றேன்;
சீரார் உலகெங்கும் சான்றுஆனோான்
 சீரா மன்தானே பாதந்தந்தான்;
ஆரார் பிறப்பதுவும் முடிவதும்ஆம்
 ஆதிமுதலாகும் இவன்பாலே. 43

கொல்லும் பரன்என்னும் சிறுமைவிட்டுக்
 குற்றம் தவிர்த்தான்என்று உணர்;என்மைந்தா!
வில்லும் கொடு,கண்முன் காணநின்றான்
 மேல்ஓர் பொருள்இல்லா விமலன்;என்றும்
புல்லும் பிறப்பென்னும் பிணிதீர்ப்பான்
 புவனம் தாங்கும்பொன் அடிதாங்கி
ஒல்லும் பணிசெய்து வாழ்என்றும்,பின்
 உடையா னுடன்ஒன்று வாலிசொல்வான்: 44

**இராமனிடம் அங்கதனை ஒப்படைத்தான் வாலி**

துடைவாள் அரக்கர்க்கு நெருப்பாவான்;
 சுத்தன் உன்பாதம் சுமக்கவல்லான்;
அடைவால் இவன்உன்பால் அடைக்கலமே
 ஆம்;என்று அடிசேர;அருளாளன்,
உடைவாள் கொடுத்துஈது பொறுத்திடுஎன்றான்;
 உலகம் பதினாலும் புகழ்ந்துஏத்த,
விடைவான் தரமாயன், புகழ்வாலி
 விண்ணோர் பெறஒண்ணா வீடுபெற்றான். 45

44. ......... ......... ......... ......... ......... தன்னின்
மேல்ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள், வில்லும் தாங்கி,
கால்தரை தோய நின்று, கட்புலக்கு உற்றது அம்மா! —கம். 153.

# 8 தாரை புலம்பல் படலம்

*—இறந்த வாலியைக் கண்டு அவன் மனைவி தாரை புலம்புதல்*

### புரண்டு புலம்பினாள் தாரை

*துங்கபதம் வாலிபெற்றான்;*
*சுக்கிரீவன் செங்கைபற்றி*
*அங்கதனோடு ஐயன்நின்றான்;*
*அதுகேட்டுத் தாரைவந்தாள்;*
*கொங்கைகுழல் குருதிஉறக்*
*கொழுநன்உரம் தனிற்புரண்டு*
*பைங்குழையார் குழல்மொழியால்*
*பன்னிஇங்ஙன் புலம்பல்உற்றாள்:* 1

### யமன் நன்றி கெட்டவன்தான்

*உயிர்அகன்றால் உடல்உளதோ?*
*உனைப்பிரிந்தால் வாழ்வேனோ?*
*பயிர்அகன்றேன் என்அரசே!*
*பாவம்என்னோ? பலித்தவிதி;*
*செயிர்அகன்ற சிவபூசை*
*செய்யாமல் உறங்குவதோ?*
*வயிரம்உண்டோ? அமுதம்உண்டு*
*மறலிநன்றி மறந்தனனோ?* 2

*குறிப்பு: கம்ப ராமாயணப் பதிப்புகள் சிலவற்றிலே ''தாரை புலம்பல்'' தனி ஒரு படலமாக இல்லாது முந்திய வாலி வதைப் படலத்துள் அடக்கியிருக்கும்.*

*1. துங்கபதம் - விதேகமுத்தி. ஐயன் - இராமன்.*

*2. பயிர் - பயிர்ப்பு. செயிர் - குற்றம். மறலி - யமன். ''உயிர் போனால் உடலாரும் உய்வரோ'' என்பார் கம்பரும். இருந்த இடத்திலே இருந்து ஒரு காலமே பூசைபுரியும் பூசகர்போலாது, நீ எண் திசை முடிவுகளிலும் சென்று மூன்று காலமும் நாள் தவறாது சிவபூசை செய்வாயே.*

**உன் உயிர் அல்லவா நான்**

பொருப்பாரும் பொடிபடும்தோள்
புவியாரும் பொடிபடுமோ?
விருப்பாமோ அரம்பையர்மேல்?
மெய்நான்உன் சீவன்அன்றோ?
இருப்பாய்என் மனத்துஇருந்தால்;
இறப்பேன்உன் மனத்திருந்தால்;
மருப்பாயும் அமுதுபெற்றோர்
வணங்கவிண்நாடு அடைந்தமன்னா! 3

தடுத்துரைத்தேன்; மறுத்துரைத்தாய்
தகாதுசெய்யான் ராமன்என்றே;
படுத்துவிட்டான் மறைந்துஓர்அம்பால்;
பட்டதுஎன்ன மாயம்!ஐயோ!
விடுத்துவிட்டாய் வாணாளை;
வேறுஆரோ? நீதானோ?
கெடுத்துவிட்டாய் விதிஅதனால்;
கேள்வாஎன்! ஆருயிரே! 4

3. பொருப்பு ஆர். பொருப்பு - மலை. "நீறாம் மேருவும் நீ நெருக்கினால்" என்பார் கம்பரும். புவியில் நிறைந்த புழுதியில் உன் தோள் கிடப்பதோ. மரு பாயும் - வாசனை பெற்ற.

ஐயா! நீஎனது ஆவி என்பதும்
பொய்யோ? பொய்உரை யாத புண்ணியா! —கம். 9.

செருவார் தோளா!நின் சிந்தை உளேன்எனின்
மருவார் வெஞ்சரம் எனையும் வவ்வுமால்;
ஒருவேன் உள்உளை ஆகின் உய்தியால்;
இருவேம் உள்இரு வேம்இ ருந்திலேம். —கம். 10.

4. தகா(த)து செய்யான் இராமன் என்று நம்பி இருந்த உன்னை அவன் மறைந்துநின்று கொன்றுவிட்டான்.

### வாலிக்கு ஈமக்கடன் இயற்றுவித்தான் அனுமான்

சீதரன்தான் அடாதுசெய்யான்,
செயற்குஇதுவே கட்டளைதான்;
சோதரனால் முடிந்ததுபார்;
சொல்மகனே! எனப்புலம்பும்
மாதினை,மா ருதிதேற்றி,
வாலிகடன் முடித்தபின்னர்,
கோதறியாற்கு ஓதிடலும்,
குடகடல்மூழ் கினன்கதிரோன். 5

5. தருமம் பற்றிய தக்க வர்க்குஎலாம்
கருமம் கட்டளை என்றல் கட்டதோ? —கம். 16.

கோது அறியான் - குற்றம் அறியாதவனாகிய இராமன்.

# 9 அரசியல் படலம்

—சுக்கிரீவன் முடி சூடி அரசாண்டது

**சுக்கிரீவனுக்கு முடி சூட்டினான் இலக்குவன்**

மாயோன் இளையோனைக் கவிமன்னற்கு
மகுடம் கவிஎன்றுஅங்கு அருளிச்செய்ய;
ஆயோன் அதற்கான பொருள்கள்எல்லாம்
அனுமன் தனைநீயே கொணர்திஎன்ன;
தூயோன் அவனும்மங் கலதீர்த்தம்
சோதி முடியாதி பலசேர்க்கச்
சேயோர் அமரர்பொன் மலர்தூவத்
தெய்வ மறைவாணர் ஆசிசெப்ப; 1

**பாண்டியனுக்கு நல்லதம்பி முடி சூட்டியது போன்றதுதான்**

உரமன் எழுகரைநா டன்கண்ணன்
உபய குலசுத்த வேளாளன்
திரமன் புகழ்மோரூர் அத்தப்பன்சொல்
செஞ்சொல் நலதம்பிக் காங்கேயன்
வரமன் புவிஆளத் தென்னவர்க்கு
மகுடம் சூட்டுகைக்கு உவமைசொல்ல,
பரமன் திருமுன்னே பரதன்பின்னோன்
பருதி புதல்வற்கு மவுலிவைத்தான். 2

அருமா முடிசூடி அடிவணங்க
அணைத்துக் கொடுகண்ணன் அருளிச்செய்வான்:
பெருமா நகர்எய்தி அரசுசெய்வாய்;
பெரியோன் மகனோடு வாழ்திநன்றாய்;

1. மகுடம் கவி - முடி சூட்டுவாயாக.
2. உபய குலம் - தாய்வழி தந்தைவழி. தென்னவன் - பாண்டியன்.

வருமா படைவீரர் அமைச்சர்உற்றோர்
மதியா, அணுகாமல் அகன்றிடாமல்
தருமா தருமங்கள் தெரிந்துஅறிந்து
தக்க முறையால்நன் னெறியில்நிற்பாய். 3

பற்றும் புகைகாணில் நெருப்புஉளதாம்;
பகைக்கும் முகம்மலர்ந்து இனிமைசொல்வாய்;
பெற்றும் பெருஞ்செல்வம் கடுநஞ்சுஒக்கும்
பேறுஎன்று அருளாமல் ஈட்டிவைத்தால்;
நற்றும் துணைவர்க்குத் தாய்தந்தைபோல்
நலமே புரிஎன்றும் நலிவுஒன்றுஇன்றிச்
சற்றும் சிறியோரை இகழ்ந்திடாதே
சலித்தோம் இகழ்ந்துஒரு கூனிதன்னால். 4

மறமார் கொடியாரைக் கடிந்துதக்கோர்
வருத்தம் தவிர்ப்பதுதான் விளக்கம்கண்டாய்;
திறமே உணராமல் அருள்கைவிட்டால்
தேவர் ஆனாலும் வீழ்வர்கண்டாய்;
உறமேல் பெரும்சாவும் கேடும்பெண்ணால்
உவமை உன்பால்என் பாலும்கண்டாய்;
அறமே அதிலாபம்; கேடுஎன்என்றால்
அறத்தை விரும்பாமல் மறத்தல்கண்டாய். 5

### கிட்கிந்தையில் தன்னுடன் வசிக்குமாறு இராமனை வேண்டினான் சுக்கிரீவன்

நீடும் அரசுஎய்திக் கார்காலம்
நீங்கப் படையோடும் வருகஎன்பால்;
கூடுஉன் பதிஎன்ன; துணைவன்சொல்வான்:
குரங்கின் பதிஎன்றும் சுவர்க்கம்ஒக்கும்;
தேடும் கதிநீயே; உனைப்பிரிந்தால்
செல்வம் வறிதுஅன்றோ? திருமாதை
நாடும் தனையும்இங்கு இருந்துஅருள்வாய்
நங்கள் தவத்தால்என்று அடிபணிந்தான். 6

3. கண்ணன் - இராமன். மகன் – அங்கதன். தருமாதருமம் - தருமம் அதருமம்.
4. நற்றும் - விரும்பும்.
6. நங்கள் - எங்கள்.

### வேண்டுகோளை மறுத்தான் இராமன்

ஈரேழ் வருடம்காடு உறையவந்தேன்;
இருந்தால் நீளங்ஙன் அரசுசெய்வாய்?
வாரேய் முலைமங்கை துயர்உறநான்
வாழல் நகரின்கண் வசைஅன்றோ?
ஓரேன் நவைதீரத் தவம்செய்கின்றேன்;
உன்மா நகர்வைகி நால்திங்கள்மேல்
நேரே வருகஎன; தக்கோனும்
நீரே விழிசோரத் தொழுதுசென்றான். 7

### அங்கதனையும் அனுமனையும் சுக்கிரீவனுடன் அனுப்பினான் இராமன்

இவன்தந் தையைஒத்த அருள்தந்தைகாண்
ஏ,அங்கத! என்ன; இறைஞ் சிச்சென்றான்;
நுவன்றுஅங்கு அனுமானும் செல்கஎன்ன;
நுந்தன் பணிசெய்வேன் அடியன்என்ன;
அவன்தன் அரசும்என் செயலும்நின்போல்
அறிந்து செயத்தக்க மதிவலார்ஆர்?
சிவன்தன் நிகர்நீயே யான்வேண்டச்
செல்கென் றலும்அன்பன் வணங்கிச்சென்றான். 8

### செங்கோல் செலுத்தி இனிது இருந்தான் சுக்கிரீவன்

வானோர் பெருமானும் இளையோனும்
மற்றோர் பெருமான வரைசேர்ந்தார்;
ஆனோர் அருளத்தன் மனையில்உற்ற
அரசன் தாரையை வணங்கி,அன்னாள்
தானோது உரைகொண்டு, தலைவன்சொல்லே
தந்தை என்றுசுக்கி ரீவன்சொல்ல
ஏனோர் கவிவீர ருடன்அங்கதன்
இளங்கோ எனச்செங்கோல் இனிதுஆண்டான். 9

## 10 கார்காலப் படலம்

—மழைக்காலத்தை இராமன் கழித்த தன்மை

எண்ணரிய வாலியைவான் ஏற்றிஅவன் பின்னவற்கு
வண்ணமுடி சூட்டுஅவ் வகைஉரைத்தேன்—கண்ணபிரான்
நீடவிட்ட கார்கழித்து நேரிழையை வானரரால்
நாடவிட்ட வாறுஉரைப்பேன் நான். 1

### இருண்டது வானம்

வேதன் பிதாமலைமேல் மெல்லியலை நாடவிட்ட
தூதன்போன்று ஆழிஉற்றான் சூரியனும்—நாதன்
களம்போன்று எழுந்த கருமுகிலும் கல்லார்
உளம்போன்று இருண்டதுவா னும். 2

புரக்கும்அரா அரசுதண்டாய்,
புவிஅகலாய், புணரிநெய்யாய்,
வரக்கதிரோன் சுடர்விளக்காய்,
மைஎழுந்து பற்றினபோல்
திரைக்கடல்போல் மாதர்கண்போல்
செறிந்துஅவிழ்ந்த கூந்தலைப்போல்
அரக்கர்மெய்போல் அவர்மனம்போல்
அணிந்துமுகில் பரந்தனவே. 3

### வெட்டி வீசியது மின்னல்

திக்கயங்கள் அணிந்தபட்டம்
திகழ்வனபோல் மணிக்கொடிபோல்
மைக்கொள்வரை எரிவனபோல்
மாதிரங்கள் நகைப்பனபோல்

2. நாதன் - சிவபெருமான். களம் - கழுத்து.
3. அரா அரசு - ஆதிசேடன்.
"வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக" என்பார் ஆழ்வாரும்.
விளக்கு எரியும் கரும்புகையால் வானம் கறுத்தது போன்றது.

மெய்க்கனலோன் படைஅணிபோல்
விஞ்சைமன்னன் வாள்ஒளிபோல்
கைக்கதிர்வாள் படத்திறக்கும்
களிற்றுஉடல்போல் மின்னினவே. 4

**வந்தது வாடை**

கார்க்கரியால் திசைக்கருமான்
கனல்ஊதும் துருத்தியைப்போல்
பார்க்கரிதாம் நாக்குமின்னப்
பன்னாகம் உயிர்ப்பனபோல்
மூர்க்கர்யார் அவர்தொழில்போல்
முலைவிலைக்குஈ வார்மனம்போல்
தீர்க்கரிதாம் பேய்க்கணம்போல்
தீவாடை வீசியதே. 5

**இடித்தது இடி**

வாள்கள்மின்னும் வான்சமரில்
வாத்தியங்கள் அதிர்வனபோல்
நாள்கள்எண்ணும் பிரிந்தவரும்
நாகமும்ஏங் கிடும்நமன்போல்
நீள்கடல்நீர் உண்டுஎழுந்து
நீலவல்ஏறு ஆர்ப்பனபோல்
ஆள்கரியோன் வலம்புரிபோல்
அசனிஎங்கும் முழங்கியதே. 6

**பொழிந்தது மழை**

மயில்பிரிந்த ராகவன்மேல்
மதனன்எய்யும் வாளிகள்போல்
துயில்பிரிந்தான் பகைஅறும்என்று
உவந்தவிண்ணோர் சொரிமலர்போல்

4. கனலோன் - அக்கினி. வாளால் வெட்டப்பட்ட களிற்றின் புண் போலவும் வித்யாதர மன்னர் வாள்வீச்சுப்போலவும் மின்னியதாம்.

5. திசை ஆகிய கொல்லன், கார்மேகம் ஆகிய கரி பெய்து, வாடை ஆகிய துருத்திக் காற்றால் பெருக்கிய கனல் - தீச்சுவாலை, பல்நாகம் நாக்கை நீட்டுவது போல.

6. நீல வல்ஏறு - கரிய எருது! கரியோன் - திருமால். அசனி - இடி.

பயில்பெருந்திண் களிறுஅதன்மேல்
பகைஞர்விடும் வெள்வேல்போல்
வெயில்பொருந்தும் மணிவரைமேல்
மேகம்மழை பொழிந்தனவே. 7

கல்லரக்கர் மணிதெறிக்கக்
கனவில்வலார் விடுங்கணைபோல்
புல்லரக்கன் கொடுபோகப்
பூவைகண்ணீர் பொழிந்ததுபோல்
செல்லரக்கால் மாறிவரத்
திசைகள்தம்மில் பொருவனபோல்
மல்லரக்கார் மதகரிபோல்
முழங்கிமழை வழங்கியதே. 8

### பட்ட மரம் தளிர்த்தது

தெரிவைபங்கன் புரம்எரித்த
தீக்கணைபோல் மின்னி,அடும்
பருவமுன்னே பொருட்குஅகன்றார்
படைமணித்தேர் மிசைவரலால்
பிரிவுஎனும் நோய்அரவுகெடப்
பெருங்கருடன் போன்றதுகார்;
உருவமின்னார் வரும்உயிர்போல்
உலர்ந்தகொம்பு தழைத்தனவே. 9

### வேனிலை வென்றது கார்

பைத்தலைநா கம்புணரப்
பாம்பினம்போல் அரும்பியபின்
மெத்தலரும் காந்தள்எலாம்
வேனிலைக்கார் வென்றதுஎன்று,

8. புல் அரக்கன் - அற்பனாகிய இராவணன். செல் - மேகம். கால் மாறி - இடம் மாறி. கார்மேகம் மதகரிபோல் முழங்கியதாம்.

9. கார்காலத்திலே பொருட்கு அகன்றார் திரும்பி வருதலால் பிரிவுநோய் என்ற அரவு கெட வரும். "கருடனைப் பொருவின கால மாரியே" என்பார் கம்பரும்.

கைத்தலத்தால் கொண்டாடக்
　　களித்தமயில்; ஒலித்தகுயில்;
எத்தலமும் செம்மேனி
　　இந்திரகோ பம்பரந்தே. 10

**நாடக அரங்கோ இது**

கூந்தல்மை மலாரிகொட்டக்
　　கூதாளம் தாளம்மொத்த
ஆய்ந்தளிபண் பாடமயில்
　　ஆடிடவேங் கையும்கோங்கும்
ஈய்ந்தனபொன்; பூமிகையால்
　　ஈந்தனமாடை யும்பணியும்;
காந்தள்மலர் மீதுகொன்றை
　　கடிமலரும் கோபமுமே. 11

**பொலிந்தது கானம்**

வெற்பருவி தாய்முலைபோல்;
　　வேண்டினர்க்குத் தாதாபோல்,
கற்பகம்போல் கடுக்கை;முல்லை
　　கணவனைக்கண் டவர்நகைபோல்;
அற்பகலா நதிக்குள்அன்னம்
　　அகன்றவர்வந்து அணைந்ததுபோல்;
புற்பம்எலாம் விருந்துகண்டார்
　　பொன்முகம்போல் பொலிந்ததுவே. 12

**களித்தன மான்கள்**

கண்ணில்வெண் றாட்கு இடர்விளைத்தோம்
　　என்பதுபோல் களித்ததுமான்;
நண்ணினஊ டினகலையை
　　நாவிஒத்த மரத்துஉரிஞ்சி;

10. பைத்தலை - படமுடைய தலை. நாகம்போல நீண்ட தாளுடைய காந்தளைத் தன் இனம் என்று பாம்பு அணைந்தது. அதனால், அரும்பியது காந்தள். அது பூத்தது, வேனிலைக் கார் வென்றது என்று கை வீசிக் கொண்டாடியது போன்றதாம். காந்தள் கைக்கு உவமை.

ஒண்ணுதல்காந் தனைப்பிரிந்தால்
ஒடுங்குகண்போன் றனகுவளை;
பண்ணியபாவ லர்கவிபோல்
பலமணம்கூட் டியதேனே. 13

கொழிமணிமா முகிற்குஅருகாய்க்
குருகுஇனங்கள் பறக்கல்உற்ற
மொழிமறைநா யகன்மார்பில்
முத்தும்உத்த ரீயமும்போல்;
பொழிமழையால் குளிர்ந்தமண்பால்
புளகிதம்போன் றனபசும்புல்;
விழிமயில்ஆ யிரம்பரவி
விளிப்பதுஒக்கும் சனகியையே. 14

**தழைத்தன தாவரங்கள்**

மேம்படுவேல் குமரர்குஞ்சி
மிகச்சிவக்க, விழிசிவக்கும்
பாம்புடைபோல் அல்குல்மின்னார்
பஞ்சடிபோல் செங்கமலம்;
தேம்பிடைபோல் இளங்கொடிகள்;
செழும்பணைகள் தோள்இணைபோல்;
ஆம்புடைவெண் பால்நுரைபோல்;
ஆம்பி,தயிர் போன்றனவே. 15

**கூவின குயில்கள்**

குயிற்றியபூ மணம்நாறும்
கொடிச்சியர்தம் குழல்;வேங்கை
எயிற்றியர்கூந் தற்பால;
இடைச்சியர்கார் அளகம்முல்லை;
பயிர்க்குஉடையோர் மாதர்தம்பால்
பரிமளிக்கும் செங்கழுநீர்;
உயிர்க்குடையாள் தனைக்கூவி
ஓய்ந்ததுஒக்கும் குயிற்குரலே. 16

15. தேம்பு இடை - துவளும் இடைபோன்றன கொடிகள். ஆம்புடை - ஆ-புசு. ஆம்பி - காளான்,

**காரே என் ஆவி கலக்குதியோ**

சீதைதிரு முகம்காணான்;
  சிலைமதன்கைக் கணைபூத்து
மாதவரும் தளர்காலம்
  மாதவன்அங்கு ஆற்றுவனோ?
பாதகர்ஊர் காணாதே
  பார்க்கும்என்னை அருள்காரே
நீதகுமோ வருத்தஎன்று
  நீலவண்ணன் சாலநொந்தான். 17

மின்எயிற்றார் அரக்கரைப்போல்
  வெகுண்டெழுந்தாய் கார்முகிலே!
துன்அயிற்கண் ணாள்இடைபோல்
  துவளுகின்றேன் துவள்கொடியே!
பின்னைஎப்போ கூடல்செய்வாய்
  பிரிவுசெய்தாய் மடமானே!
பொன்னைஇப்போ கொணர்கிலையோ
  புலம்பல்உற்றேன் புனமயிலே! 18

குழலுடையாய் கூவாமல்
  கொன்றாய்நீ கொன்றாயே;
தழல்உமிழ்வாள் அரவுஎயிறோ
  தண்மலரும் குராஅரும்பும்?
அழலும்இரா வணன்கோபம்,
  அதிற்கொடிதுஇந் திரகோபம்;
உழலும்என் ஆருயிரே நீ,
  ஒண்ணுதலோடு அகன்றிலையே! 19

மாரிசன்பொன் உருமான்போல்
  மறலிவந்தான் வாடையைப்போல்;
நேரிசம்போல் மேகம்மின்னி
  நிறங்காட்டி மறைக்கும்மின்னை;

9. கொன்றாய் - கொன்றை மரமே.

கூரிசம்பால் எளியாரைக்
குறித்துஎயுமோ சிலைமதனன்?
பாரிசம்தான் உனக்குஇனிதோ?
பழுதுகண்டாய் எம்பிகண்டால். 20

## தேற்றினான் இலக்குவன்

தளர்மனத்தான் துயர்களைந்து
தாள்வணங்கித் தம்பிசொல்வான்:
வளர்மழைக்கோ? நிசிசரர்க்கோ?
வனிதையைத்தே டருமைஎன்றோ?
உளமயக்குஏன்? எம்பெருமான்!
ஊழிகள்பே ரினும்சலியாய்!
இளர்மதத்தார் குலம்அறுப்பாய்!
கிலேசம்உற்றால் வீரம்அன்றே. 21

மாருதிஅங் கதன்முதலோர்
வானரர்தே டுவர்திருவை;
சேருதி;மா தவர்க்குஉரைத்த
செயல்முடிப்பாய்; உனக்குஅரிதோ?
காருதிர்கா லமும்நீயே
கருதில்இன் றேபோம்; துயரம்
தீருதி;என்று ஆற்றியபின்
தீர்ந்தமழை நேர்ந்ததுவே. 22

## பின்மாரி பெய்தது

மறையத் திசைவானம், குளிரக்குன்றம்,
மாலை பகல்கங்குல் காலைஇன்றி
அறையத் தழல்வாடை பிரிந்தாரை,
அன்றில் உடன்ஒன்றப் பிரியாமல்,

20. மாரிசன் - மாரீசன். மறலி - யமன். கூரிசு அம்பு - கூர்மையான அம்பு. பாரிசம் - பாரிசாதம்.

21. நிசிசரர் - அரக்கர்.

குறையக் குயிலின்வாய், விரியச்செந்நெல்,
குலமுத்து அணிபுன்னை மலரப்பின்னை
நிறையக் குழல்,மறி திரைவேலை
நெருங்கிப் பெருங்கொண்டல் சொரிந்திட்டதே. 23

மழையிற் பெருநீரில் தவம்செய்கைபோல்
மலையோடு இயல்நின்ற மால்யானை;
முழையில் துயில்மந்திக்கு அருகுஇருந்த
முனிபோல் கடுவன்கண் உறங்காமல்;
தழையிற் குலஊசல் குலம்ஆடா;
தயலார் குழல்வாரும் சுனை நாறா;
இழையிற் பொலிதாழ மலர்சுற்றம்போல்
இருந்த குருகுஇனம்தம் சிறகுஒடுங்கி. 24

அருவி சொரிஆலிக்கு ஆற்றாமல்
அகிலின் புகைதோறும் கமலத்துஅன்னம்;
தருவின் அடிதோறும் கலைமான்கள்;
சந்தின் தொளைதோறும் ஞிமிறும்வண்டும்;
மருவும் குடில்தோறும் நிரைஆயர்;
மறவர் மறத்தியர்கள் பரண்தோறும்;
பொருவெங் கரியூகம் முழைதோறும்;
புகுதும் படிமாரி பொழிந்திட்டதே. 25

**மாற்றுவார் யார் இத் துயரை**

படிமின் மழைபெய்யத் திருவைஎண்ணிப்
பரமன் இளையோனைப் பார்த்துரைப்பான்:
மடமின் வடிவுஎன்முன் தோன்றும்;கண்ணீர்
வாரும்; அதற்குஉள்ளம் சோருகின்றேன்;
சுடர்மின் மினிக்கூட்டில் விளக்குஏற்றித்
துணைப்பேடு அகலாமல் துயிலும்புள்ளும்;
அடர்மின் கணைவில்லும் சுமந்துநைவேன்
அலர்வா ளியும்மாரன் வேலும்தைக்க. 26

23. வாடை பிரிந்தாரை வருத்தியது; அன்றில்கள் ஒன்றுபட்டுத் தழுவிக் கொண்டன.

24. தழை தாம்பாற் சமைந்த ஊசல். தயலார் - தையலார் - மகளிர்களின் கூந்தல் மணம் சுனைகளில் நாறா. தாழமலர் - தாழை மலர்.

25. ஆலி - நீர்த்துளி.

தேவி நலம்என்னும் அமுதுண்டநான்
தெறும் கார்இடிக்குஅஞ்சும் பாம்பானேன்;
பாவி அரக்கன்தன் பதிதேடப்
பலநாள் வேணும்அங்கு அதனைப்பற்ற;
ஆவி விடல்நன்றே; அடவிபுக்கும்
ஆரும் நகத்தக்க வினைமுடித்தேன்;
தாவில் சனகன்கை யடைகொடுத்த
தவத்தாள் தனைப்பேணாது அவத்தம்செய்தேன். 27

நீஉன் மொழியாலே தேற்றக்கொண்டு
நிலைநின் றேன்,மங்கை தனைக்காணேன்;
காயும் கணையாலே உலகைஎல்லாம்
கடிந்த போதுஅன்றிக் காணோம்நாம்!
ஆயும் தணிக்கின்றேன்; கமைநன்றுஎன்றே
அறவோர் துறவார்;சொல், இனிஎன்செய்வேன்
ஏயும் படி;என்னும் நெடியோனை
எந்தாய் வருந்தல்என்று இளவல்சொல்வான்: 28

**கார்காலம் கழிந்தது; இனி**
**வருத்தம் நீங்குவாய்**

தடக்குன்று அரவுஆமை மதிநாட்டித்
தலைவன் கடல்கடைந்து அமுதம்தந்தான்;
படைக்கும் அளிக்கும்தான் ஆனாலும்
பலஆ யுதத்தாலே பகையைவெல்வான்;
துடைக்கும் சிவனும்எத் தனைசூழ்ச்சி?
துணைஎத் தனைகூட்டிப் புரம்எரித்தான்?
கிடைக்கும் படைகொண்டு விசயம்கொள்வோம்;
கிளர்ந்த நெடுங்காரும் குறுகிற்றுஅன்றோ? 29

தருமம் இகழ்ந்தவல் அரக்கர்கெட்டார்;
சயம்பெற் றனம்;பெற்றுச் சலிப்பதுஎன்னாம்?
திருமங் கையும்சேரும்; மறைவாழும்;
சிறந்தார் சுரரும்மா தவரும்என்ன,

28. நீ (பேசிய) உன் மொழியால். கமை - பொறுமை. பொறுமை நன்று என்றே அறவோர் அதைத் துறவார்.

29. படைக்கும் அளிக்கும் - பலத்துக்கும் அருளுக்கும்.

கருமம் இதுவேஎன்று உணர்ந்தகண்ணன்,
காரக்கின் றளவுஎன்என, காலம்போய்
பெருமன் கொடைநல்கி இளைத்தவர்போல்
பெய்த கருங்கொண்டல் எழுந்திட்டதே 30

**வந்தது கூதிர்காலம்**

பொய்போய் அறிவுற்றால் அறுமாயம்
போலே செறிவுற்ற இருள்ஓட,
எய்போர் இடைச்சங்கும் வாளும்அம்பும்
எனவே இடிமின்னல் மழைஓய,
மெய்போர்த் தியதுகில் நழுவியபோல்
வெற்பில் பொழிசாரல் நிலம்சேர,
மைபோல் படர்மேகம் நீங்கித்திங்கள்
மடவார் முகம்போலே விளங்கிற்றுஅன்றே. 31

சூரப் புனல்ஆடி எழக்கொங்கைமேல்
தூவும் பொடிவாடை சுகந்தங்கள்போல்;
ஆரத் திசைதோறும் பறக்கும்அன்னம்,
அன்னந் தனைத்தேடிப் போதல்போல்;
காரைப் பிரிந்துஅஞ்சும் சிறைமஞ்ஞைதான்
கணவற் பிரிந்துஅஞ்சும் சிறைமஞ்ஞைபோல்;
போரற் றவர்நெஞ்சின் தெளிந்தநன்னீர்;
புதுமீன் மடவார்கண் போலும்அன்றே. 32

பிணக்கா கம்போலக் கரிந்தகஞ்சம்
பெண்ணார் இதழ்போலச் சிவந்த;வண்டு
கணக்கர் போன்ற;நாவல் அரிகள்எல்லாம்
கல்லா தவர்முன்கற் றவரைப்போன்ற;

30\. மன்கலில் பெருங்கொடை மருவி மண்ணுளோர்
உன்கிய பொருள்எலாம் உதவி, அற்றபோது
என்கலில் இரவலர்க்கு ஈவது இன்மையால்
வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே. —கம். 103.

கார்க்கு இன்று அளவு என் என.

32\. புனல் ஆடி எழும் மகளிர் கொங்கைமேல் வாடைபொடி - சுகந்தங்களைத் தூவும். அன்னம்தனை - சீதையை. கார் - மேகம். சிறை மஞ்ஞை - சிறகுகளுடைய மயில். கணவன் - இராமன். சிறை(ப்பட்ட)மஞ்ஞை - மயில் போல்வாளான சீதை. போர் அற்றவர் நெஞ்சனத் தெளிந்த நன்னீர்.

இணைக்கம் கடல்முத்தோடு ஆற்றின்முத்தும்
　　இறையோடு இளமாதர் நகையேபோன்ற;
மணக்க முகம்பாளை தரளம்பச்சை
　　மணிவாய் வளம்பெற்ற பவளங்கள்போல். 33

குழைவாய் இளவஞ்சி நதிதோறும்
　　குளிர்ந்த புனலாடும் மடவார்போல்;
முழைவாய் மடித்திட்டுஅங்கு இடைத்திட்டுஎங்கும்
　　முதலை இளவெய்யில் காயல்உற்ற;
புழைவாய் அடைத்துத்தம் பெடையோடும்
　　புதைந்த அலவன்கள் உலுத்தரைப்போல்;
இழைவாய் தாம்திறந்து ஒளித்தசங்கம்
　　ஈந்து வகைஅற்ற தாதாப்போல். 34

33. கஞ்சம் - தாமரை. கணக்கர் - பள்ளிப் பிள்ளைகள். அரி - தவளை.
　　கல்வியில் திகழ்கணக் காயர் கம்பலைப்
　　பல்விதச் சிறார்எனப் பகர்வ பல்லரி
　　செல்விடத்து அல்லதுஒன்று உரைத்தல் செய்கலா
　　நல்லறி வாளரின் அவிந்த நாளலாம். —கம். 114.

34. வஞ்சி - வஞ்சிக் கொடிகள்.

## 11 கிட்கிந்தைப் படலம்

—கிட்கிந்தை நகரிலே நிகழ்ந்த செய்திகளைத் தெரிவிப்பது

### இலக்குவனைக் கிட்கிந்தைக்கு அனுப்பினான் இராமன்

மைக்காலம் நீங்கியபின்
வரராமன் தம்பியுடன்,
இக்காலம் வராதுஒழிந்தான்
இரவிமைந்தன்; உதவிகொன்றான்
மிக்குஆய தன்செருக்கால்
மெய்மறந்தான்; நீஅவன்பால்
புக்குஆய்வாய்; புரட்டினரைப்
புரட்டல்மனு நீதிகண்டாய். 1

சிவற்கும்ஒத்த மதத்தவனைச்
செயித்தகணை இருக்குதுஎன்பாய்;
இவற்கும்மிக்கார் இன்னம்உண்டே?
என்னில், உந்தன் வலிஉரைப்பாய்;
சுவர்க்கம்ஒக்கும் தன்அரசும்
சுற்றமும்வா ராதுஇருந்தால்
குவர்க்கம்முற்றும் இறக்கும்என்பாய்;
குணம்வருமோ பயம்தவிர்ந்தால். 2

### கோபாவேசத்தோடு சென்றான் இலக்குவன்

செப்புறுபோ தனைமறுத்தால்
சீறு;இடும்புஓது; எனும்பரனை,
துப்புறுதாள் பணிந்து,இளையோன்
தூணியும்சா பமும்தரித்து,

1. மைக்காலம் - கார்காலம். இரவி மைந்தன் - சுக்கிரீவன். புரட்டினர் - புரட்டர். புரட்டல் - வதைத்தல்.

2. மதத்தவன் - பரசுராமன். குவர்க்கம் - குரங்கு இனம்.

வைப்புறுமால் வரைஅழுந்த
வனங்கள்கடந்து, ஒருமலைமேல்
குப்புறுவான் சூரியனும்
கோள்அரியும் போல்விரைந்தான். 3

ஒருதிசைநின்று ஒருதிசைமேல்
உறும்கரிபோல், எழுமரமும்
பொருதுஉருவும் பிரான்கணைபோல்,
போந்தனன்கிட் கிந்தைவெற்பில்;
கருதுஇளையோன் கடுமைகண்ட
கவிவீரர் பயந்துஓடி,
இருதுசென்றோ முனிந்துவந்தான்
என்றனர்போய் அங்கதன்பால். 4

### சுக்கிரீவனிடம் விரைந்தான் அங்கதன்

உளம்தெரியா அங்கதனும்
உற்றனன்தன் சிற்றையனை;
நளன்புரிகோ யில்அணைமேல்
நறும்குழலார் அடிவருட
வளம்பெரிதா நறவுஅருந்தி
மயக்கம்தான் அலைவீச
விளம்புஅரிதுஓர் பொன்மலைவாய்
வெண்மலைபோல் துயில்பவனை; 5

மாதர்செவ்வாய் ஊறல்உண்ட
மயக்கம்அதால் மதகரிபோல்
மீதணிகுண் டலம்மகுடம்
வெயில்எறிக்கும் வெயில்போலத்

3. குப்புறுவான் சூரியன். உதயகிரியினின்றும் சூரியன் அத்தமன கிரியை அடைந்தது போன்றது ருசியமுக மலையினின்றும் கிட்கிந்தை மலையை இலக்குவன் அடைந்தது.

4. ஏழு மராமரங்களையும் தைத்து ஊடுருவும் கணை. கடுமை - கோபம்; வேகம். இருது சென்றோ - கார்காலம் தீர்ந்தோ.

5. நறவு - மது.

தாதவிழ்பூ அணைகிடந்தோன்
 தனைவணங்கித் தாரைமைந்தன்,
ஏதறியேன்; வெகுண்டுவந்தான்
 இராமபிரான் தம்பிஎன்றான். 6

**தாயிடம் சென்றான் அங்கதன்**

துங்கமைந்தன் சொல்உணரான்
 துயிலல்உற்றான் களிமயக்கால்;
அங்கதன்போய் அனுமனையும்
 அமைச்சரையும் வரவழைத்துத்
தங்கள்பெரும் கோயில்எய்தித்
 தகவுஇனிஏது? என; தாரை,
உங்கள்மதம் இனும்தவறீர்;
 உதவிகொன்றீர்; எனஉரைப்பாள். 7

செல்பருவம் செலமறந்தீர்;
 சீர்பிழைத்தீர்; நீர்பிழையர்;
கொல்பகையைக் கொன்றுசெல்வம்
 கொடுத்தவரோ புறத்திருப்பார்;
சொல்பரிசு கேட்டுஅறியீர்;
 சூழ்ந்தவினை கேடு,அறிவீர்;
வெல்பவர்ஆர்? விதிமுடிநாள்
 விளைந்தது;என்றே விளம்பும்எல்லை; 8

**வாயிற்கதவை உதைத்துத் தள்ளி நகருள்
போனான் இலக்குவன்**

மொய்யினவா னரர்வாசல்
 மூடி,வரை அடுக்கி,அமர்
செய்யநின்றார்; நகைத்துஇளையோன்,
 சேவடியால் உதைத்திடவே,
வெய்யவினை விழுவனபோல்
 விழுந்தனவா யிலும்கதவும்
அய்யிரண்டுஓ சனைமதிலும்
 அடுக்கியஅம் மலைகளுமே. 9

6. வெயில் - ஒளி.

மலைதிரிநாள் கலங்குஅலைபோல்
வளநகர்வா னரர்கலங்கி,
நிலைதெரியார் திசைதிசையே
நெஞ்சுஉடைய இடைந்துஓட,
தலைதெரியாது அவர்அவர்தாய்
தாரகைநீங் கியவான்போல்
குலைதருபோது, அந்நகருள்
கொற்றவில்வீ ரனும்புகுந்தான். 10

## இலக்குவனை வழிமறித்தாள் தாரை

தாரைதனைச் சூழ்ந்துநின்றார்
தாம்,இனிஎன் செய்வது?என்றார்;
நீரயல்போம், யான்எதிர்போய்
நிமலன்உள்ளம் வினவஎன்றாள்;
ஆரையும்மா தரைநோக்கான்,
ஆறுவன்,என் றனன்அனுமான்;
ஊரைஇகந்து இளையபிரான்
உடன்புகும்முன் தாரைவந்தாள். 11

தோகைநல்லார் ஆயவெள்ளம்
சூழ்ந்துகொண்டது இளங்கோவை;
மோகனஅல் குல்தடந்தேர்,
முலையானை, கொடிமருங்குல்,
மேகலைநூ புரமுரசம்,
விற்புருவம், விழிக்கணையாம்,
பாகனசொல் பெண்படையைப்
பார்க்கவும்தான் பயந்தனனே. 12

10. மந்தரமலை சுழலுதலால் கலங்கிய கடல்போல். தாய் - தாவி - ஓட. வானரர் நீங்கிய நகரம் நட்சத்திரம் நீங்கிய வானம் போல் சீர்குலைந்து தோன்றியது.

11. என்று அனுமான் சொல்லும்போது.

12. ஆயம் - மகளிர் கூட்டம், வழிமறித்தது. மகளிர் சேனை எதிரே வர, பார்க்கவும் பயந்தவனாய் நின்றான் இலக்குவன். பாகு அன்ன சொல்.

வன்பாதச் சிலைஊன்றி,
மாமியர்முன் மருகனைப்போல்
நன்பாதம் கவிழ்ந்துநிற்க;
நடுங்கிஅவள், அயற்கும்எட்டா
நின்பாதம் கண்டுஉவந்தோம்;
நின்னடியார் பயந்துஒளித்தார்;
மன்பாதம் பிரியாய்!ஏன்
வந்தது?என்றாள் அமுதின்வந்தாள். 13

### தாரையைப் பார்த்துத் தன் தாயரை நினைந்து வருந்தினான் இலக்குவன்

சொன்னவள்ஆர்? எனப்பார்த்தான்;
சுகந்தம்இன்றித் தாலிஇன்றிக்
கன்னவில்பூண் ஆரம்இன்றிக்
கழுத்தோடும் போர்த்துநிற்க,
இன்னவள்போல் இருப்பர்அன்றோ
என்தாய்மார்; என்னவிம்மி,
அன்னவள்பால் இரக்கம்உற்றான்;
அடுசினம்போய் உரைக்கல்உற்றான்: 14

### வந்த காரணம் கூறினான்

சேனையும்யா னும்தேடித்
தேவியைத்தந் திடுவன்என்று
மானவன்பால் உரைத்தமாற்றம்
மறந்திட்டான் இரவிமைந்தன்;
ஆனவன்செய் தியைவல்லே
அறிதி!என, அனுப்பவந்தேன்;
மேல்நிலைநி கழ்ந்தஎல்லாம்
விளைந்தவா விளம்பிர்என்றான். 15

13. அயன் - பிரமனும் காணா உன் பாதம். மன்பாதம் - இராமன் திருவடிகளை.

14. கல் நவில் பூண் ஆரம் - நவரத்தினக் கற்கள் இழைத்த பூணுதற்கு உரிய மாலை.

### மறந்தான் அல்லன் சுக்கிரீவன்

தூதுவர்ஆ யிரம்கோடி
　　தொகைவிடுத்தார்; சேனைவரும்
போதுஉடனே வரஇருந்தான்;
　　புகல்இடம்ஏது உதவிகொன்றால்?
மீதுஉறவா லியைவிடுத்த
　　வெம்கணையே செய்யும்எல்லாம்;
மாதுவரா ளோ?இவர்ஏன்?
　　வாழஅன்றோ தாம்அடைந்தார். 16

### நீயுமா மறந்தாய்? என்ற இலக்குவனுக்கு அனுமன் கூறியது

எனுமான்சொல் கேட்டருளி
　　இரங்கிநின்ற இளையோனை,
அனுமான்வந்து அடிபணிந்தான்;
　　அயர்ந்தனையோ நீயும்?என்ன,
மனுமானே! இந்தநன்றி
　　மறந்தவர்க்குஓர் உய்திஉண்டோ?
தனுமான்நீ செய்தநன்றி
　　தவறினர்க்குஓர் உறுதிஉண்டோ? 17

வெய்யவன்சேய் உமைஅடைந்த
　　விநயம்என்னது; அதுதவிர்ந்தால்
உய்யஉண்டோ? அங்கம்அன்றி
　　உறவுதெய்வம் சகலமும்நீ;
வையம்எங்கும் தூதுஏவி
　　வரும்படையால் சிறுமைஉற்றான்;
செய்யஉண்டோ செய்யாமல்
　　செய்தநன்றிக் கைம்மாறே? 18

17. எனு(ம்)மான் - என்ற தாரை. மனுமானே - மனிதருள் சிறந்தோனே. தனுமான் - வில்லிலே வல்லவன்.

உதவிகொன் றார்க்குஎன் றேனும் ஒழிக்கலாம் உபாயம் உண்டோ?
—கம். 61.

18. படை வருவது தாமதித்ததால் இந்தச் சிறுமை (தவறு) நேர்ந்தது.

### கோபம் தணிந்து கூறினான் இலக்குவன்

உங்கள்முன்னே பகைவர்நெஞ்சில்
உதையானேல் பிறந்ததுஎன்னாம்?
அங்கவன்நின் முன்வர,நீர்
அளித்தசெல்வம் காண்என்ன;
வெங்கதம்ஆம் வெறுக்கைஇல்லை,
வெறுக்கையினால் விளைந்ததுஎன்றே;
எங்கள்பிரான் அனுமனை,நீ
இங்குஇதுகேள் எனஉரைப்பான்: 19

மன்துயர்கண்டு உளம்தளர்வேன்;
வசைபாரேன்; உலகைஎல்லாம்
கொன்றிடுவேன்; ஆகிலும்நான்
கோனையும்என் னையும்தேற்றிச்
சென்றதுநும் தாமதத்தால்;
திருவைஅன்றே தேடரிதோ?
நன்றலநீர் தாழ்த்தது;ஒன்னார்
நகைக்க,விண்ணோர் நலிய,என்றான். 20

### சுக்கிரீவனிடம் சென்று செய்தி தெரிவித்தான் அங்கதன்

நீதருமம்; நீசான்றாய்
நினைத்தவண்ணம் முடித்திலமேல்
சாதல்என்னும் அனுமனை,நீ
சாற்றியதே நமக்கும்என்ன;

19. அனுமன் கூறிய விநய மொழிகளைக் கேட்ட இலக்குவன், சுக்கிரீவன் இராமன் ஆணையை அலட்சியம் செய்தான் அல்லன்; நெடுங்காலம் வனமே கதியாய் வருந்தி இருந்தவன், திடீர் என அரசு எய்தி இராசபோகத்திலே அழுந்தி மயங்கியதால் வாக்கை மறந்தான் என்று ஊகித்துக் கோபம் தீர்ந்து அனுமனிடம் கூறுவான்.

20. கோன் – இராமன். என் கோபத்தை நானாகவே தணித்துக்கொண்டு இராமனையும் தேற்றிக்கொண்டிருந்தேன்.

தாழ்வித்தீர் அல்லீர்; பன்னாள் தருக்கிய அரக்கர் தம்மை
வாழ்வித்தீர்; இமையோர்க்கு இன்னல் வருவித்தீர்; மரபின் தீராக்
கேள்வித்தீ யாளர் துன்பம் கிளர்வித்தீர்; பாவம் தன்னை
மூள்வித்தீர்; முனியா தானை முனிவித்தீர்; முடிவின் என்றான்.
—கிழ். 73,

மாதருடன் தாரைசென்றாள்;
மற்றவள்சேய் அமைச்சருடன்
பாதம்அடைந் தவனை,உந்தை
பால்உரைஎன் வரவைஎன்றான். 21

சந்தார் மணிமார்பன் அங்கதன்போய்த்
தந்தை இருபாதம் பிடித்துக்கையால்,
வந்தான் இளவீரன் வெகுண்டேஎன்ன;
மைந்தா நாம்செய்த பிழைஎன்?என்றான்;
நந்தா வளம்பெற்று நன்றிகொன்றான்,
நம்பால் இசைத்திட்ட நாளும்பொய்த்தான்,
நிந்தா பரன்;என்றுஅங்கு எழுசினம்போய்
நின்றான், இரந்திட்ட அனுமன்தன்னால். 22

பகவான் வரும்முன்னே மலைஅனந்தம்
படைஞர் நகர்வாசல் பதனம்செய்யத்
தகவாம் எனப்பாதம் கொடுதீண்டச்
சரிந்த மதில்தெற்கும் வடக்கும்முட்ட;
மிகவா னரர்ஓட, எதிர்சென்றுஅன்னை
வினவ,இரங்கித்தன் வரவைச்சொன்னான்;
மகவான் மகன்தம்பி சேனையொடும்
வரநின் றனன்இன்று நாளைஎன்றாள். 23

என,அங் கதன்சொல்ல;உலகம்எல்லாம்
எதிர்அல் லவன்வந்தால்; எனக்குச்சொல்லா
நினைவுஎன்? என,முன்னே நினக்குச்சொன்னேன்;
நினைவுஅற் றிடச்சென்றேன் அனுமன்தன்பால்;
முனைவன் தனைக்காண வருக!என்ன;
முழுதும் நறவுஉண்டு மறதிஉற்றேன்;
அனகன் தனைக்காண நாணம்என்னும்
அருக்கன் புதல்வற்குஅங் கதனும்சொல்வான்: 24

21. செய்வதாக ஏற்றுக்கொண்டதைச் செய்யாது போனால் நீங்கள் எங்களைக் கொல்லவேண்டியது இல்லை. நாங்களே எங்களை மாய்த்துக்கொள் வோம். இது சத்தியம். இதற்குச் சாட்சி தருமதேவதையே. சேய் - அங்கதன்.

23. தம்பி - சுக்கிரீவன் இன்றோ நாளையோ வர இருந்தான் என்று தாரை சொல்ல,

### நஞ்சு கொல்லும்; நரகினை நல்காது

*ஆமா தாளன்றும் மனைவிளன்றும்*
*அருள்உற் றார்என்றும் பகைவர்என்றும்*
*தோமா னமும்வாழ்வும் துன்பும்இன்பும்*
*தூசும் மாசுஒன்றும் தோன்றாவாம்;*
*தீமா வினைஐந்திற் கொடியபாவம்*
*தேசார் மனத்தினையும் மயக்கம்செய்யும்*
*காமா திகள்எட்டில் கட்டவைக்கும்*
*கள்உண் பவர்கட்கும் கதிஒன்றுஉண்டோ?* 25

*விடுந்தீ வினைஉள்ளத் தெளிஞர்க்குஏனும்*
*வேத மொழிபாரார் மதுவைஉண்பார்;*
*அடுந்தீ தனில்எண்ணெய் சொரிந்தாற்போல்*
*அழுக்கின் மேல்வைத்து இழுக்குஎன்றுஎண்ணார்;*
*கடுந்தீ விடம்கொல்லும் அளவுஅன்றியே*
*கள்போல் அழுத்தாது நரகம்தன்னில்;*
*கெடுந்தீ அவர்உண்பார் எனும்மாற்றம்*
*கேட்ட கவிமன்னன் உணர்ந்துசொல்வான்:* 26

### இலக்குவனை எதிர்கொளற்கு வாசலில் வந்து நின்றான் சுக்கிரீவன்

*நந்தே வனுக்குஆகாது அழியப்புக்கேன்;*
*நறவை மனத்தாலும் இனித்தீண்டேன்;*
*வந்தேன் எனச்சொல்என்று அவனைவிட்டு*
*மலரும் புகையும்சுண் ணமும்சாந்தும்*

25. *ஏயின இதுஅ லால்மற்று ஏழைமைப் பாலது என்னோ?*
*தாய்இவள் மனைவி என்னும் தெளிவுஇன்றேல் தருமம் என் ஆம்?*
*தீவினை வேறும் ஒன்றுஈது அன்றியும் தெரிக்கல் ஆமோ?*
*மாயையின் மயங்கு கின்றாம்; மயக்கின்மேல் மயக்கும் வைத்தாம்!*
—*கம். 89.*

*வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் மரபில் கொட்பும்*
*தஞ்சம்என் றாரை நீக்கும் தன்மையும் களியும் தாக்கும்*
*கஞ்சமெல் அணங்கும் தீரும் கள்ளினால்; அருந்தி னாரை*
*நஞ்சமும் கொல்வது அல்லால் நரகினை நல்காது அன்றே?* —*கம். 94.*

மது உண் மடமையை நினைந்து, சுக்கிரீவன் வருந்துவதாகக் கம்பர் (89 - 94) ஆறு பாடல்கள் பாடுவார்; இதையே அங்கதன் சுக்கிரீவனுக்குச் சொல்லும் அறிவுரையாக எம்பெருமான் பாடுவது ஆய்வுக்கு உரியது.

செந்தேன் மொழியார்பொற் குடம்விளக்கும்
    தெருளங் கனும்சங்கும் முரசும்விம்ம,
தந்தேர் கொடிதோற்றக் கவரிசுற்ற,
    சசிவெண் குடைநீழல் தானும்வந்தான். 27

பளிங்கின் சுவரில்பன் மணித்தூணில்
    பலவில் லிகள்வந்தார் எனத்தோன்ற
விளங்கும் இளவீரன் தனைஅர்ச்சிக்க
    வேண்டும் அருக்கியம்ஆ கியவேகொண்டு
உளங்கொள் மறைவாணர் மறைகள்ஓத
    உதய கிரிநின்று வருதாதைபோல்
வளங்கொள் மடவார்கள் தாரகையா
    வானிற் பொலிசோமன் போலவந்தான். 28

**சுக்கிரிவன் உபசரிப்பு**

நங்கோன் வளர்கோபம் தன்னைஆற்றி
    நல்க இருவோரும் தழுவிக்கொண்டார்;
அங்கோர் புறத்துஇருந்த அரியணைமேல்
    ஐயா! இருக்க,என்றான் இரவிமைந்தன்;
எங்கோன் மருங்கில்புல் லணையில்சேர,
    இதுவோ எனக்குஎன்று நிலத்துஇருந்தான்;
செங்கோல் அரிமன்னோடு அனைவோரும்
    சிந்தா குலக்கண்ணீர் சோரநொந்தார். 29

இக்கண் புனல்ஆடி அமுதுசெய்தால்
    ஈடே றுவம்என்ன, இளவல்சொல்வான்:
துக்கம் பழிஉண்டோம் வயிறுஆரத்
    துய்க்கும் அமுதமும் கைக்கும்அன்றோ?
வெக்கை அறக்கங்கை நீராட்டி,
    வீகை அறவேலை அமுதைஊட்டி,
தக்க உயிர்வாழும் உதவிசெய்தாய்
    தலைவன் தேவியை நாடித்தந்தால். 30

28. வில்லிகள் - இலக்குவர்கள்.

29. அரிமன் - சுக்கிரீவன்.

30. வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள
இருத்தும்என் றால்எமக்கு இனியது யாவதோ?
அருத்திஉண்டு ஆயினும் அவலம் தான்தழீஇக்
கருத்துவேறு உற்றபின் அமிர்தும் கைக்குமால். —கம்., 111.

விஞ்சும் புகழ்எங்கோன் அமுதுசெய்து
மிஞ்சும் கனிகாய்அல் லாததுஉண்டால்
நஞ்சு நிகர்அன்றோ? அதுஅன்றியும்
நான்போய் இனித்தந்தால் அமுதுசெய்யும்;
துஞ்சு தனிநாதன் துயர்எய்தநான்
துவக்குண் டேன்,என்று பொருமிவிம்மி
நெஞ்சு கரைந்தவனாய் அனுமன்தன்னை
நீவா அரும்சேனை உடன்கொண்டுஎன்றான். 31

### இராமனிடம் சென்றான் சுக்கிரீவன்

பானு மகன்கண்ணன் பதம்காப்பப்
பதினா யிரம்கோடி அரிகளுடன்
மீனும் மதியும்போல் கிளைஞர்சுற்ற
வெண்முத்து அணிபொன்னின் சிவிகையின்மேல்
கூனும் வளைகொம்பு முரசம்ஆர்க்கக்
கொடியும் குடையும்தொங் கலும்சூழத்
தானும் இளையோனும் நடந்துசென்றார்
தகும்அங் கதன்கையும் தாங்காதே. 32

### சுக்கிரீவனைத் தழுவிச் சொன்னான் இராமன்

செல்லாது உளம்என்னச் செல்வம்விட்டுச்
சேர்ந்தான் பரதன்போல் அரிவேந்தன்;
எல்லாம் முடித்தபின் தானேதான்
இருக்கும் படிபோன்ற இறையோனைக்
கல்லார் புயத்துஆரம் படிதீண்டக்
கனக முடியில்பொன் அடிதீண்ட
நல்லான் அணைத்துக்கொண்டு இருத்திப்பண்பால்
நன்றோ பகர்உன்செங் கோன்மைஎன்றான். 33

---

மூட்டிய பழிஎனும் முருங்கு தீஅவித்து
ஆட்டினை கங்கைநீர்; அரசன் தேவியைக்
காட்டினை எனின்,எமைக் கடவின் ஆர்அமிர்து
ஊட்டினை யால்;பிறிது உயவும் இல்லையால். —கம். 112.

வீகை - வீதல் - சாதல்.

31. பானுமகன் - சுக்கிரீவன். அரிகள் - குரங்குகள்.

33. நண்ணிய கவிக்குலத்து அரசன், நாள்தொறும்
புண்ணியன் தொழுகழல் பரதன் போன்றனன். —கம். 124.
பிறிவுஅருந் தம்பியும் பிரிய, பேர்உலகு
இறுதியில் தான்என இருந்த ஏந்தலை, —கம். 125.

### தன் பிழை நினைந்து வருந்தினான் சுக்கிரீவன்

ஆழ்வார் நயினார்தம் மொழிகேட்டு,
அருள்பெற்ற அடியேனுக்கு அரியதுஉண்டோ?
வாழ்வால் மதத்தேன்;உன் வருத்தம்கண்டும்
மடமங் கையைத்தேட வரச்சொன்னநாள்
தாழ்வால் மறந்தேன்;நன் றியையும்கொன்றேன்;
சாதிக் குணம்தன்னைப் புதுக்கிவிட்டேன்;
சூழ்வாய் இனிமுன்னே செய்யும்ஆண்மை
சொலலா மோஎன்று துணைவன்சொன்னான். 34

புரியும் அரசுகட்டு ஆகும்மட்டும்
பொழுது தாழ்ந்ததால் பழுதுஎன்?என்றான்;
பரியும் பரன்,எங்கே அனுமன்?என்ன,
பறந்து ஆயிரங்கோடி தூதர்சென்றார்;
விரியும் பெரும்சேனை கொணர்வர்இன்று;
விறல்மா ருதிகொண்டு வரும்நாளை;
அரியோ பதினாறுஆ யிரங்கோடி
அடியேன் உடன்இப்போ நடந்ததுஎன்றான். 35

### விடைபெற்றுச் சென்றான் சுக்கிரீவன்

அன்பா, உனக்குஈதுஓர் அரும்பொருளே?
அடையும் படைஎல்லாம் கூட்டிக்கொண்டு
நன்பால் வருகஎன்று விடுக்க;அவன்
நல்தாள் தொழுதுதன் நகரில்சென்றான்;
தன்பால் வணக்கம்செய் அங்கதற்கும்
தந்தை உடன்செல்கென்று உரைத்து,நெஞ்சில்
மன்பா வையும்தானும் இளையோனும்
வைகி னார்அங்கே வரராமன். 36

34. என் புல்நிலைக் குரக்கியல் புதுக்கினேன் என்றான். —கம். 129.

36. செங்கணான், தம்பியும் தானும் சிந்தையின்
மங்கையும் அவ்வழி அன்று வைகினான். —கம். 137.

# 12 தானை காண் படலம்

*—இராம இலக்குமணர் வானர சேனையைப்
பார்வையிட்டது*

**வந்தது வானர சேனை**

ஆயிரம்ஆ னையின்வலியோர்
ஐயிரண்டுஆ யிரம்கோடி
மேயிரவா னரர்சூழ
விளங்கிவந்தான் சதவலியான்;
மாயிருமே ருவைஎடுக்கும்
வலியுடையோர் ஐம்பதுநூறு
ஆயிரகோ டியருடனே
அண்ணல்சுசே டணன்நடந்தான். 1

இடலியவே லையைக்குடிப்போர்
ஏழ்ஏழ்ஆ யிரங்கோடி
உடன்அமர்வா னரப்படையோடு
உருமைபிதா உகந்துவந்தான்;
அடல்அரியோர் ஐம்பதுநூறு
ஆயிரங்கோ டியும்தானும்
திடமிகுமா ருதிதாதை
செறிபுகழ்க்கே சரிசேர்ந்தான். 2

வையகம்ஓர் நாழிகையில்
வலம்வருவா னரவீரர்
துய்யஆ யிரங்கோடி
தொடரவந்தான் கவையாட்சன்;
வெய்யவரா கம்தனைப்போல்
வெண்மருப்பால் உலகுஎடுக்கும்
கையவர்ஆ யிரம்கோடி
கரடியுடன் துமிந்தன்உற்றான். 3

பன்னிரண்டா யிரம்கோடி
கவிகளுடன் பனசன்உற்றான்;
உன்னியஐம் பதுகோடி
ஊகமொடுஎய் தினன்நீலன்;
துன்னியமுப் பதுகோடி
சூழவந்தான் சதுமுகன்தான்;
மன்னிவந்தான் ஏழ்நூறுஆ
யிரகோடி வானரத்தான். 4

முப்பதினா யிரம்கோடி
முரண்கவையன் தன்னுடனே;
இப்படிதுன் முகனுடனே
இருபதினா யிரம்கோடி;
மெய்ப்பதும முகனுடனே
மேவிவரும் பதின்ஆயம்;
செப்பவரும் சதகோடி
சேனையும்வந்து அடைந்தனவே. 5

உறுகரடிப் பெருஞ்சேனை
உளஆயிரத்து அறுநூற்று
அறுபதுகோ டியர்சூழ
அங்குவந்தான் சாம்பவன்தான்;
எறும்வலிவா னரப்படைதான்
இருபதுஐயா யிரம்கோடி
மறுஅறுவீ ரர்களுடன்
வந்தடைந்தான் வாள்அனுமான். 6

கும்பனும்சாம் பனும்முதலோர்
கொணர்ந்தனர்ஓர் ஒருபதுமம்;
வெம்படைகூ டியது,இறையோன்
வியன்கணைபோல் கணக்குஇலையால்;
கம்பவில்மே ருவைஒடிக்கும்
காற்றையும்கூற் றையும்குடிக்கும்
அம்பரம்ஆ கிலும்இடிக்கும்
அலைஏழும் குடிக்கும்அன்றே. 7

5. பதின் ஆயம் - பதினாயிரம்.
7. அம்பரம் - வான். அலை - கடல்.

### மலைச்சிகரம் ஏறிச் சேனையைப் பார்த்தான் இராமன்

பகலவன்சேய் இராகவன்பால்
படையொடும்போய் அடிபணிந்து,
நிகரதுஇலாய்! பார்த்துஅருள்வாய்
நிறைசேனை என;மகிழ்ந்து
சிகரம்ஒன்றின் மீதிருக்கத்
தெற்கில்எய்த வடக்கினின்றும்
அகல்அமைமூன்று ஓசனையால்
அனிகவெள்ளம் பரந்தனவே. 8

படைத்தலைவர் தொழ,முறையால்
பருதிமைந்தன் காட்டியபின்,
கிடைத்தபதா தியின்தூளி
கிளர்ந்திடலால், புழுதிகட்டி
அடைத்தகுடம் போன்றதுஅண்டம்;
அடியவர்தம் இருவினையும்
துடைத்துஅருளும் இராமபிரான்
சுமத்திரைதோன் றலுக்குஉரைப்பான்: 9

### யார்தான் இதன் அளவு அறிவார்

இப்படையும் பூதம்ஐந்தும்
இறைவடிவும் திசைகள்பத்தும்
செப்பறிவும் சமயம்இடும்
சிலுகையும்ஆர் அளவுஅறிவார்?
ஒப்பரியாய்! அளவிடுங்கால்
ஒருப்படுகா ரியம்தாழ்க்கும்;
அப்படிதா ளாதுசெய்கை
அடைவுஎனலும்; தம்பிசொல்வான்: 10

8. அனிகம் - சேனை.

10. கடல்கண் டோம்என்பர்; யாவரே முடிவுஉறக் கண்டார்? —கம். 35.
சமயம் இடு சிலுகை - சமயங்கள் பிணக்குறும் பிணக்கு (சமயங்களின் கொள்கைப் போராட்டம்).

**தருமமே வென்றது**

மிகுத்துஅரிதுஏது இப்படைக்கு?
மேதினிமேல் உயிர்கள்எலாம்
வகுத்தஅயன் உறைஇடலாம்;
மாதினைக்காண் பதுசுலபம்;
செகுத்ததுதீ மறத்தைஅறம்;
தேடவல்லார் களைத்திசைமேல்
பகுத்துஅருள்வாய் எனப்பரமன்
பருதிமகன் தனுக்குஉரைப்பான். 11

11. பாவம் தோற்றது, தருமமே வென்றது, இப் படையால். —கம். 38.

## 13 நாட விட்ட படலம்

*—சுக்கிரீவன் சீதையைத் தேடும்படி வானர வீரரைப் பல திசைகளுக்கும் அனுப்பியது*

**வந்த சேனை எழுபது வெள்ளம்**

*வெருவா வகைமானம் தோற்றம்வெற்றி*
*மிகும்இப் படைக்குஉண்டோ இலக்கம்?என்ன;*
*பெருவா னரவெள்ளம் எழுபதுஎன்று*
*பேசும் அளவன்றி அளவுஒன்றுஇல்லை;*
*திருவாழ் புய!என்னும் கவிவேந்தை,*
*தேடத் திசைதோறும் செலுத்துகென்றே*
*அருள்வா னவர்ஈசன் அருளிச்செய்ய,*
*அவனும் அனுமானை நோக்கிச்சொல்வான்;* 1

**அனுமனைத் தென்திசை போகப் பணித்தான் சுக்கிரீவன்**

*எல்லா உலகும்நின் உயிர்த்தந்தைபோல்*
*எழுவாய், வலிஎண்ணாது இருப்பதுஎன்நீ?*
*பொல்லா அரக்கன்தன் இலங்கைதெற்கே*
*போன குறிகண்டேன்; பொருள்உண்டுஎன்றே;*
*வில்லார் மணிப்பூண்அங் கதன்சாம்பன்*
*வெள்ளம் இரண்டுஉன்னால் மேன்மைஎய்த,*
*நல்லாய்! உடன்கொண்டு மீளவல்லாய்;*
*நளின மடமானை நாடிச்செல்வாய்.* 2

**தென்திசை செல்லும் வழி விவரம்**

*சிகரம் ஆயிரம்தோன் றுகையால்*
*திகிரி நிகர்விந்த மலைதேடி,*
*அகரம் சூழ்ந்துஅண்டர் புனல்ஆடும்*
*அணிநர் மதைஆறும் ஆராய்ந்து,*

1. என்ன - என்று இராமன் கேட்க.

2. உன் தந்தை வாயு பகவான் போல நீயும் உலகு எங்கும் புகுந்து உலாவ வல்லாய். தந்தை - வாயு பகவான். வில் ஆர் மணி,

சுகரம் பையர்ஊசல் மலிசோலை
ஏம கூடமும் துருவி,அப்பால்
பகரம் புயப்பொய்கைக் கரையும்கண்டு,
பண்ணை நதியையும் பரவிச்செல்வீர். 3

**தண்டகவனம் கடந்தால் கோதாவரி**

துறவோர் உறையும்தண் டகவனத்தைச்
சோதித்து, எழுவேள்விப் புகைமாறா
அறவோர் பொருள்போல வேண்டிற்றுஎல்லாம்
அருள்முண் டகம்என்னும் துறைதோய்ந்து,
பறவோ விலங்கும்வெண் நிறம்ஆகும்
பாண்டு கிரியும்எங் கணும்பார்த்து,
நறவோ மணிப்பொன்கொண்டு ஒழுகும்நன்னீர்க்
கோதா வரியையும் நாடிச்செல்வீர். 4

**கோதாவரியைக் கடந்தால் வேங்கடம்**

ஆம்பொற் குகன்வந்த சரவணமும்
ஆர்ந்த பொழில்சந்த்ர காந்தவெற்பும்
தேம்புற்று அரவம்புள் இரைக்குஒதுங்கித்
திரிகொங் கணம்ஏழும் குலிந்தவெற்பும்
மேம்பிற் பரன்நித்தர்க்கு அருள்முத்திபோல்
வீடா அருந்ததி உறையும்வெற்பும்
பாம்புக்கு அமுதுஆவி கருடன்தந்த
பச்சை மணிக்குன்றும் பரவிச்செல்வீர். 5

மைஇல் மறைகட்கும் பலகலைக்கும்
மாசில் அறிவுக்கும் வரம்புஆகி,
பொய்யில் மறைமெய்யே போலநின்ற
புனிதன் திருவேங் கடச்சயிலம்

3. ஆயிரம் கொடுமுடி உடைமையால், ஆயிரம் திருமுடி உடைய ஆதி நாராயணன் போன்றது விந்தம். சுகரம்மையர் - சுக ரம்பையர். பகரம் புயம் - பகர் அம்புயம்.

5. புள் - கருடனுக்கு அஞ்சி, பாம்பு ஒதுங்கித் திரியும். பச்சைமணிக் குன்று - மரகதப் பொருப்பு.

தொய்யும் மறைவாணர் உறையுள்எங்கும்,
சுரர்மா தவரோடும் தீர்த்தம்எங்கும்,
வெய்யில் மறைமேகச் சோலைஎங்கும்,
வேழம் புலிதுஞ்சும் சிகரம்எங்கும்; 6

**வேங்கடம் கடந்தால் தமிழ்நாடு**

அம்மா மலைதேடி இருவினையும்
அவர்வெம் பிறவிக்குக் கடுஎன்றுஎண்ணி
எம்மான் அடிசேரும் அடியாரை
இறைஞ்சி வரும்முத்தி விலக்கி;அப்பால்
செம்மால் புகழ்தொண்டை வளநாடும்,
திருக்கா விரியாறும் சோணாடும்,
மெய்ம்மா மொழிக்கொங்கு வளநாடும்
விளங்கும் தமிழ்நாடும் விலகிச்செல்வீர். 7

மன்னார் தமிழ்க்குன்றம் அரண்பொருந்த
மகேந்த்ர மலைவேலை மற்றும்முற்றும்
மின்னாள் தனைத்தேடி மாதம்ஒன்றில்
மீளும்; விடைகொள்ளும் எனும்போதில்;
பொன்னார் சிலைவீரன், அனுமன்தன்னைப்
பூண்பாய் புகழ்நீயே, காண்பாய்,ஆவி
அன்னாள் அடையாளம் கேட்பாய்!என்று
அறியத் தனியேகொண்டு அருளிச்செய்வான். 8

**சீதையின் அங்க அடையாளம் கூறினான் இராமன்**

பஞ்சிகொண்டு மதிபதித்தும்
பதவிரற்குஒவ் வாபவளம்;
வஞ்சிஅன்னாள் புறஅடிக்கு
வாய்மைகண்டாய் ஆமைஒவ்வா;

6. வடசொற்கும் தென்சொற்கும் வரம்பாகி
நான்மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்குஎல்லாம் எல்லைஆய்
நல்அறிவுக்கு ஈறுஆய் வேறு
புடைசுற்றும் துணைஇன்றி, புகழ்பொதிந்த
மெய்யேபோல் பூத்து நின்ற
உடைசுற்றும் தண்சாரல் ஓங்கிய
வேங்கடத்தில்சென்று உறுதிர் மாதோ. —கம். 26.

8. தமிழ்க்குன்றம் - பொதிய மலை,

துஞ்சுகண்ணாள் கணைக்காற்குத்
தூணிவரால் தோற்றொழியும்;
நெஞ்சினுள்ளும் அவட்குஉவமை
நினைக்கஒண்ணாள் அரம்பைஎன்றே. 9

சுடர்க்கதிர்ஆ ழியும்பணியும்
சொலற்குஅரிதாம் கடிதடத்தே;
மடக்கொடியாள் திருவயிறு
வடஇலையும் சரிஅலவே;
இடக்கொடிசேர் மயிர்ஒழுக்கம்
இதன்கொழுகொம் பாம்எனவோ?
நடக்குநன்னீர் கழித்ததுஅன்றி
நந்தியின்பூ உந்திஎன்கோ? 10

பைம்பொன்னாள் வயிற்றுவரை
பசுநறுநெய் கடல்திரையோ?
அம்பரமோ, இடைகண்டேன்
அங்கையினால்; கணிற்காணேன்;
வம்புஎனவோ? கனகமகா
வரைஎனவோ? மதகரியின்
கொம்புஎனவோ? குடம்எனவோ?
கோங்குஎனவோ? கொங்கையையே. 11

ஒண்கழையோ தோள்இரண்டும்;
ஒண்ணுதல்சீர் அடிக்கும்ஒவ்வா
வண்கமலம் கைக்குஇணையோ?
வள்ளுகிர்பைங் கிளிவாயோ?
பண்கமுகோ, மிடறுசங்கோ?
பவளமும்கோ வையும்இலவும்
தண்கனியும் இதழ்என்கோ?
தகும்உவமை காணேனே. 12

11. கையால் தொட்டுணர்ந்த எனக்கன்றி, கண்களால் பார்த்து இடையை அறிதல் இயலாது.

கட்டுரைத்து உவமை காட்ட, கண்பொறி கதுவா: கையில்
தொட்டஎற்கு உணரலாம்; மற்று உண்டுஎனும் சொல்லும் இல்லை.
—கம். 38.

மாசில்நகை முத்துஎனவும்,
　　மதுரமொழி அமுதுஎனவும்,
நாசிஎள்ளின் பூஎனவும்,
　　நல்லவள்ளை செவிஎனவும்,
காய்சினவேல் கயல்அணிமான்
　　கண்எனவும், கற்றறிந்தோர்
பேசியதே பேசுகின்றேன்;
　　பெறும்உவமை காணேனே. 13

புரந்தரன்வில் இரண்டுஇலையே
　　புருவஇணைக்கு இணைஇலையே;
இரந்தபிறை நிறைந்துகுறைந்து
　　இறைப்பொழுதே நுதற்குஇணையாம்;
வரந்தருமோ? சரம்தனுவால்
　　முகமதிபோல் மறுமதிதான்;
பரந்தகுழல் இயற்கையைப்போல்
　　புயற்குஉளதோ? பரிமளமே. 14

மின்னணிபொன் மாந்தளிர்பூ
　　விளக்கும்ஒவ்வா நிறம்உடையாள்;
நன்னடைஅன் னமும்பிடியும்
　　நற்றவம்செய் யினும்வருமோ?
கின்னரியாழ் வீணைகுழல்
　　கிளிசொலுமோ? திருமொழிபோல்;
இன்னமுதம் பாலொடுதேன்
　　இருசெவிக்குஇன் பமும்தருமோ? 15

## அடையாளச் செய்திகள் தெரிவித்தான் இராமன்

நல்லழகும் விலட்சணமும்
　　நாரியர்க்குள் குறையும்உண்டு;
இல்லைஇவட்கு ஒருகுறையும்
　　இங்குஇதுவே அடையாளம்;
சொல்லஇணை யாரும்ஒவ்வாத்
　　தோகையைக்கண் டால்அணுகி,
வல்லவன்நீ யான்விளம்பும்
　　வாசகம்சொல் என்றுஅருள்வான், 16

கன்னிநன்மா டத்துமுன்னே
    கண்டுநெஞ்சுள் கலந்ததுவும்,
பின்னையும்தன் பிதாஇருந்த
    பேரவைக்கண் வந்ததுவும்,
என்னைஅல்லார் சிலைமுறித்தால்
    இறந்திடுவேன் என்றதுவும்,
அன்னதுஎன்னோடு உணர்த்தியதும்
    அடையாளம் எனஉரைப்பாய். 17

வனத்துஉறைந்தால் எனக்குநின்னால்
    வரும்துயர்தான் என்றுசொல்ல,
எனைத்துறந்தால் உமக்குஉனிதோ?
    என்றுகண்ணீர் சொரிந்ததுவும்,
கனத்திருவா சலைக்கடந்து
    கானகம்ஏது? என்றதுவும்,
அனைத்தும்எல்லாம் மாருதியே
    அவட்குஉறைநீ என்றுஇறையோன்; 18

**கணையாழி தந்து அனுமனுக்கு விடை கொடுத்தான் இராமன்**

சீரியதன் மோதிரமாம்
    திருவாழி கொடுத்துஅருளி,
காரியம்நன் றாகஎன்ன;
    கழல்பணிந்தான்; விடைகொடுத்தான்;
சூரியன்சேய் சொல்வழியே
    தொடர்ந்திடஅங் கதன்முதலோர்
வீரியனை அடிவணங்கி,
    வேந்தனையும் தொழுதுசென்றார். 19

# 14 பிலம் நீங்கு படலம்

—அனுமனாதியோர் வழிச்செல்கையிலே
ஒரு பிலத்துள் புகுந்து வெளிவந்தது

**விந்தமலையில்**

வெய்யோன் மகன்சொன்ன நெறியில் சென்றார்
மின்னை நாடித் தென்திசை நோக்கி;
பையோடு அரவும் மந்தி களும்உறப்
படர்மா மணிஆறு எங்க ணும்பாய,
பொய்யோர் உளம்சே ராஅரன் சென்னிபோல்,
பொலியும் புகழ்விந்த மலையை உற்றார்
செய்யோர்; சிகரமும் முழைஞ்சும் முற்றும்
தெரியா வான்எங்கும் தேடிச் சென்றார். 1

**நருமதை நதிக்கரையில்**

பூவில் பதினாலுஓ சனைபோந்தார்
புணரி இரண்டும்தம் புடைஆக;
மேவித் திருமாதை நாடிஎங்கும்
விரைந்து நருமதை ஆறுகண்டார்;
ஆவிக்கு இனியாரோடு அமரஅன்னம்
ஆனை முதல்ஆடும் துறைகள்எல்லாம்
காவிக் கயல்கண்ணும் முறுவல்முத்தும்
கமல முகமும்அல் லதுகாணார். 2

**ஏமகூட மலையில்**

எடுத்த கவிவீரர் நதியைநீங்கி
ஏம கூடம்ஆம் மலையைஉற்றார்;
அடுத்த வரைகளும் மரமும்புள்ளும்
அனைத்து விருகமும் பலவும்சொன்ன
கடுத்த சயிலமோ? நிலமங்கைதன்
கனக மகுடமோ? மேருவெற்போ?
உடுத்த அருவிகள் உருகும்பொன்நீர்
ஒழுக்க மோ?என்ன உயர்ந்ததுஅம்மா! 3

விஞ்சை மறமன்னர் பாட்டின்ஓசை,
வேள்வித் தொனி,மேகத் தொனிஉள்ளிட்ட
பஞ்சின் மெல்அடியினார் பாணிகேட்டு,
பாவி அரக்கன்தன் அரண்ஈதுஎன்றே
தஞ்சம் ஆனவன் துயரின்நீங்கித்
தையல் தனைக்காணல் ஆகும்என்னும்
செஞ்சொல் அவர்தந்து வரைஏறித்
திரிந்தார் அரிஆளி இரிந்துஓட. 4

**பாலைவனத்தை அடைந்தனர்**

நூறு யோசனை அகன்றகுன்றம்
நோக்கி ஒருநாளில் தேடிச்சென்றார்;
வீறும் புகழ்மின்னைக் காணாதார்
வெள்ளம் இரண்டுஆன சேனைதன்னை
மாறி உலகுஎங்கும் பரவிக்கொண்டு
மயேந்த்ர வரைதன்னில் கூடும்வண்ணம்
கூறி அனுமன்முத லானோர்கள்
கொடிய பெரும்பாலை வனத்தைஉற்றார். 5

**இருண்ட குகையில்**

ஆரும் ஒருவரும்வி லங்குபுள்ளும்
அசையும் காற்றும்செல் வழிஏதும்
நீரும் நீழல்ஒன்றும் காணாதார்
நெருப்பில் புழுப்போலத் துடித்துத்துள்ளி,
சோரும் உடலோடும் கரங்கள்நீட்டிச்
சுடருள் படும்அற்பப் பிராணிகள்போல்
பாரும் விசும்பும்சொல்ல அருமைஎன்றே
பதைக்கின் றவர்அங்குஓர் பிலத்துள்புக்கார். 6

மென்மேல் இருட்குஎல்லாம் அரண்ஆகி,
வெய்யோன் அறியாத புரைஉள்புக்கார்;
முன்மேல் வழிகாணார்; மூச்சும்அற்றார்;
முடிவோம் இனிஎன்பார்; அனைவோரும்
என்மே னியைப்பற்றும்; விடல்வேண்டா
என்று பனிரண்டுயோ சனைநீண்ட
பொன்மே னியன்கையால் தடவிச்சென்றான்
பொலிகுண் டலம்மின்னப் புகழ்அனுமான். 7

**இராவணன் நகரோ இது**

விரையப் போந்துஅங்குஓர் நகரம்கண்டார்;
வேதன் உலகம்போல் மிகவிளங்கி
நிரைகற் பகச்சோலை கமலப்பொய்கை
நெடும்கோ புரம்மாடம் கூடம்எங்கும்;
வரைமல் புயநல்ல தம்பிதன்னை
வாழ்த்தும் புலவோர்ம னைச்செல்வம்போல்
கரைஅற் றனசொன்னம் கனிபூநற்றேன்
களபம் துகில்ஆரம் பலவும்கண்டார். 8

தீய இராவணன் நகர்இதுஎன்றே
தேடி ஒருபூதர் தம்மைக்காணார்;
தூய சுவர்க்கமோ எனநினைந்தார்;
தூலம் விடில்அன்றோ சுவர்க்கம்என்பார்;
மாயம் நமக்குஇட்ட பொறிஇதுஎன்று
மலரோன் மகன்சொல்ல, வாயுமைந்தன்
ஆயது எனில்பாரை இடந்துசெல்வோம்;
அடையார் வரில்கொல்வோம்; அஞ்சல்என்றான். 9

இந்தத் திறம்நன்றுஎன்று அரிவீரர்
எங்கும், நகர்முற்றும் ஆராய்ந்து,
அந்தப் புரம்தன்னில் புகுந்துகண்டார்
அரும்மா தவம்செய்யும் ஒருமாதை;
சந்தத் தனிநீறும் மரவுரியும்
தரித்துச் சடைபாரில் வேர்ஓடிச்
சிந்தை தெளிஞானக் கருணைதன்னால்
திருவோ இவள்?என்ன; அனுமன்சொல்வான். 10

**தோன்றினாள் சுயம்பிரபை**

மெய்க்கும் முதல்வன்சொல் பாராதே
மின்னாள் இறைவிக்கு நேர்ஆனால்
அக்கு மணிமுத்து மணிநேர்என்று
அனுமன் விளம்பத்தாம் ஐயம்அற்றார்;
இக்குமொழி, யாவர்நீங் கள்?என்றாள்;
இராமன் பெரும்தூதர்; சீதைதன்னைப்
பொய்க்கும் அரக்கன்தான் ஒளித்தஇடம்
தேடிப் போந்திட்டோம்; பொருள்இதுஎன்றார். 11

இருந்த தவத்தாளும் எழுந்துகண்ணீர்
இரங்கிப் பொழிந்தாள்; இராமபிரான்
இருந்த இடம்எங்கே? எனக்கேட்டாள்;
எல்லா வரலாறும் அனுமன்சொன்னான்;
இருந்த துயர்அற்று வீடுபெற்றேன்
என்று, நீராட்டி, அமுதுஊட்டி,
இருந்த படிஏது?என்று அரிவீரர்
இறைஞ்சிக் கேட்கத்தான் இயம்பல்உற்றாள்: 12

**தன் வரலாறு கூறினாள் சுயம்பிரபை**

அயனால் வரம்பெற்று, இந்நகர்பெற்று,
அரம்பை தனைஎன்னால் மணம்புணர்ந்த
மயனாம் அவுணனை,வ தைத்தஅமரர்கோன்,
வாழும் நகர்க்குஎன்னைக் காவல்வைத்தான்;
வியன்ஆர் வரராமன் தூதர்வந்தால்
விடும்இத் துயர்என்று விசும்பில்சென்றான்;
பயன்ஆர் பொருள்பெற்றும் தவசுசெய்தேன்;
பலித்தது உமைக்கண்டேன் பவம்தீர்ந்தேன். 13

**அனுமனாதியர் பிலத்தினின்று வெளியேறித் தம்வழிச் சென்றனர்**

கையால் விழிமூடி, இராகவன்பேர்
கருதித் துதிசெய்மின் கவிகாள்!என்றாள்;
மெய்யார் அதுசெய்து விழிக்கும்முன்னே
விரிந்த பிலம்நூறுயோ சனையும்நீங்கி,
அய்யா எனவேலை உலகம்கண்டார்;
ஆர்த்திட்டு அவர்தென்பால் நெறியில்சென்றார்;
பொய்யா மொழியாள்தன் விசும்பைஉற்றாள்;
பொங்கு கதிரோனும் கடலுள்புக்கான். 14

# 15 ஆற்றுப் படலம்

*—சுக்கிரீவன் சொன்ன வழியிலேயே அனுமனாதியர் சீதையைத் தேடிச் சென்றது*

### தோன்றினான் துன்முகன்

*வண்டுஅமர்பூம் பொய்கைஒன்றில்*
*வைகினர்வா னரவீரர்;*
*உண்டனர்காய் கனிசெழுந்தேன்;*
*உறக்கம்உற்றார்; அவர்வரவைக்*
*கண்டனன்ஓர் வல்அசுரன்;*
*கடல்விடம்போல் காலனைப்போல்*
*அண்டஒண்ணாக் கொடும்கொலையான்;*
*அயில்எயிற்றான்; அழல்விழியான்.* 1

### துன்முகனைக் கொன்றான் அங்கதன்

*எனதுபொய்கைக் கரையில்அஞ்சாது*
*எய்தினர்ஆர்? எனவெகுண்டு,*
*தனதுகையால் உறப்புடைத்தான்*
*தாரைமைந்தன் மார்புதன்னில்;*
*கனதுயில்தீர்ந்து அவன்இவனைக்*
*கடல்இலங்கை வேந்தன்என்றே*
*மனதில்உன்னி, உடன்றுஅடிக்க,*
*மறிந்துவிழுந் தனன்மலைபோல்.* 2

*எல்லோரும் துயில்நீங்கி,*
*இவன்ஆர்? என்றுஅங்கதனை*
*நல்லோன்மா ருதிகேட்க,*
*நான்அறியேன் என;சாம்பன்,*
*தொல்லோன்,இப் பொய்கைஉள்ளோன்,*
*துன்முகன்ஆம் அவுணன்என;*
*வல்லோர்தாம் எழுந்துசென்றார்*
*மார்த்தாண்டன் உதிக்கும்முன்னே.* 3

குறிப்பு: கம்பராமாயணப் பதிப்புகளில் சிலவற்றிலே இப் படலம் ''ஆறு செல் படலம்'' என்று காணப்பெறும்.

**பெண்ணை ஆற்றைக் கடந்தனர்**

புளினமுலைத் தரளநகைப்
பொருகயல்கண் அன்னநடை
நளினமுகப் பெண்ணைஎண்ணி,
நதிஆகும் பெண்ணைஉற்றார்;
தெளிநவமா மணிக்கரையும்,
சிறைபலவும், துறைபலவும்,
அளிநவில்சோ லையும்தேடி,
அவ்ஆறும் கடந்துசென்றார். 4

**தண்டகவனம் - முண்டகத்துறை கடந்தனர்**

ஆன்றபெரும் தபோதனர்வாழ்
அகணிதசண் பகச்சோலை
தேன்தலைசேர் தமிழ்க்கவிஞர்
சேர்விதர்ப்ப மண்டலமும்
சான்றவரே மிகஉடைய
தண்டகதே சமும்தேடி,
போன்றவே தியர்வடிவப்
புண்டரிகத் துறைபுகுந்தார். 5

**பாண்டுமலையில்**

கானவர்விஞ் சையர்பாட,
கமனிகள்ஊ சலில்ஆட,
வானமின்னார் புனல்ஆட,
மணக்கும்மச்சம் குருகுஅருந்தாத்
தேன்அமர்பூந் துறைதேடித்
திசைமுகனும் கயிலையும்போல்
ஆனஇருள் கீழ்ப்படமேல்
அமர்பாண்டு கிரியைஉற்றார். 6

**கோதாவரி தீரத்தில்**

மருவுகங்கை நதிபெருகும்
மலர்அடிபோல் மேல்ஓங்கி,
அருவிபொங்கும் பாண்டுவெற்பை
அரிவீரர் ஆராய்ந்து,

திருவைஎங்கும் காணாமல்,
திருமகட்குஆய் நிலம்எனும்தாய்
உருகிடும்கண் ணீர்போலும்
உயர்கோதா வரியைஉற்றார். 7

நலிந்துஅரக்கன் கவர்ந்துசெல்ல
நறும்குழல்மா லையைப்புவிமேல்
மெலிந்துஅழுவாள் எறிந்ததுபோல்
விழுந்ததுகோ தாவரியும்;
பொலிந்தசுவர்க் கத்துறையும்
பூம்பொழில்சூழ் மருதவைப்பும்
குவிந்தமும்கொங் கணம்ஏழும்
குறைவுஅறவுஆ ராய்ந்துசென்றார். 8

### வேங்கடத்தில்

வானஅருந் ததிவரையும்
மரகதக்குன் றமும்தேடி
வானரவே தியர்அடைந்தார்;
வன்பிறவிஆ ழியைக்கடக்க
வானவரும் ஞானியரும்
மாதவரும் வந்துநித்தம்
வான்அருவி நீராடும்
வடதிருவேங் கடமலையே. 9

சக்கரமால் இருபதமும்
தாங்கியவேங் கடத்துஉற்றே
மிக்கபதம் பெறாதவர்ஆர்?
விலங்குமுதல் வீடுபெறும்;
அக்கனமால் வரைஏறி,
அற்புதரின் அடிசூடி,
இக்குஅனசொல் லியைநாடி,
எய்தினர்தண் டகநாடே. 10

### தொண்டைநாட்டிலே

வாச்சியங்கள் இடிமுழங்க
மழைஇதுஎன்றே மயில்ஆடும்,
ஆய்ச்சியர்போல் குயில்கூவும்,
அவர்துடைபோல் வாழைகள்மேல்;
பாய்ச்சிநன்னீர் வயல்உழுவார்
படர்ஆமை மேல்,குருகின்
மாச்சினைஆம் எனஉடைப்பார்
வலம்புரிசங்கு ஈன்றமுத்தே. 11

மேம்படுதெங்கு இளம்பாளை
மீன்கள்அஞ்சும் நாரைஎன்றே;
ஆம்பல்முகை பாம்புஎனவே
அச்சம்உறும் தேரை;கவி
தேம்பலவின் கனிகளிக்கத்
தேன்கள்மொய்க்கும் தேனேபோல்;
தாம்பயில்வார் கல்வியினால்
தகுதிகுன்றார் சான்றவரே. 12

### சோழநாட்டில்

அன்னதொண்டை மண்டலத்தை
ஆய்ந்துபொன்னி நாடுபுக்கார்;
செந்நெலும்பூ கமும்பரந்து
செங்கழுநீர் சேறுஆட,
கன்னல்அம்சாற்று இடைநீந்தி,
கனிதரும்தேன் தனில்வழுக்கி,
வன்னதென்னம் பழத்துஇடறி,
வருந்திஎங்கும் தேடினரே. 13

### கொங்குநாட்டிலே

கூர்ந்தகொங்குஏழ் கரைநாட்டில்
கொல்லிமலை, சேரன்மலை,
சேர்ந்தகஞ்ச மலை,அலைவாய்,
திருவாரை, செங்கோடு,

வார்ந்தசங்க கிரி,பாலை
மலை,வேத கிரிமுதலாய்
ஆர்ந்தனகா வேரிநன்னீர்
ஆடிமின்னைத் தேடினரே. 14

சேல்கயல்பாய் வயல்மோரூர்
திருமலைஅத் தப்பன்அன்புஆம்
பால்கனிபோல் நல்லதம்பி
படைத்தகொங்கு மண்டலம்தான்
மால்கவிரா மாயணம்போல்
வடகலைபோல் தென்கலைபோல்
மேல்கரையும் கீழ்க்கரையும்
விளங்களங்கும் நாடினரே. 15

**மகேந்திரமலை சேர்ந்தனர்**

போதவன்வெய் யில்இலங்காப்
பூஞ்சோலை வளநாடும்,
ஓதமுத்தால் முத்தமிழால்
உயர்பாண்டி நன்னாடும்,
கோதுஅகன்ற மிகவலியோர்
கூடிமகேந் திரவரைப்பால்
சீதையைக்கா ணார்தவித்தார்
தென்பரவை கண்டனரே. 16

## 16 சம்பாதிப் படலம்

—சடாயுவின் தமையனான சம்பாதியைப் பற்றியது

**சீதையை எங்கும் காணாது வருந்தினர் வானரர்**

ஆர்க்கும் திரைவேலை அளவும்வந்தும்,
அவதி நாள்இன்றோடு அவதிசென்றும்,
சீர்க்கும் புகழ்வீரன் உயிர்ஆகும்
சீதே வியைக்காணும் செயம்பெற்றிலேம்;
ஏற்கும் அரும்தவம் புரிவோமோ?
இறப்போ மோ?இனிஎன் செய்வது?என்றார்;
கூர்க்கும் மனவன்னக் கவிகட்குஎல்லாம்
கோஆ கியவாலி குமரன்சொல்வான்: 1

ஐயம் உறுவர்;நம் பெருமாளும்
ஆவி தளர்வான்;இங்கு இனிநாம்போய்
வெய்ய உரைசெய்து துயர்செய்வதில்
விடுவோம் உயிர்;என்றுஅங் கதன்சொலவே,
செய்ய அரசுஉங்கள் குலத்துக்கெல்லாம்
சிறுவன் ஒருநீயே; மீளச்சென்று
தையல் தனைக்காணா வாறும்,எங்கள்
சாவும் கூறுஎன்று சாம்பன்சொன்னான். 2

வைப்புஆம் உலகுஏழும் பார்க்கவில்லை;
மாட்டா தவர்போல மாள்வதுஎன்ஆம்?
செப்புஆர் தனமானைத் தேடிக்கண்டால்
சென்றது அவதிஎன்று அவர்சொல்வரோ?
எப்பா லினும்இன்னம் நாடில்நன்றே;
எய்தாது எனில்பின்னை இறப்போம்நாம்;
தப்பாது இறைவிக்காய் உயிரைஈந்த
சடாயு வைப்போல்என்று அனுமன்சொன்னான். 3

**வந்து சேர்ந்தான் சம்பாதி**

எனவே கேட்டுச்சம் பாதிஎன்போன்,
இளையோன் இறந்தான்என்று இளைத்துஏங்கி,
மனவே தனைதானும் பெருகிக்கண்ணீர்
வாரி தனில்செல்லக் குலிசம்என்னும்
சினவேல் எறியாவெள் வரைபோலச்
செம்பொன் மணிஆரம் திகழும்மெய்யான்
கனவேர் மரம்குன்றம் பொடியாகக்
கடிதாய் நடந்துவந்து அவரைக்கண்டான். 4

கள்ள அரக்கர்கள் வேடம்என்பார்
கலங்க, மாருதியும் கனன்றுபொங்கி,
வெள்ளை மலிவண்ணன்; இரங்குநெஞ்சன்;
விருத்தம் இலன்என்று கருத்தில்எண்ணி,
வள்ளல் மொழியால்ஒன்று இசைக்கும்முன்னே,
வன்ச டாயுவைவ தைத்திட்டோர்ஆர்?
உள்ளது உரையும்என்று உறுத்துக்கேட்க,
உனைநீ சொலில்பின்னை உரைப்பன்என்றான். 5

தக்க திறலாய்!என் னுடன்பிறந்த
தம்பி ஆகும்ச டாயுஎன்னத்
துக்கம் மிகஎய்தி அனுமன்சொல்வான்:
தூர்த்த ராவணன் வாளில்பட்டான்
அக்கண்; எனக்கேட்ட எருவைமன்னன்
அசனி படவிழும் அருவரைபோல்
ஒக்க உடல்என்னும் படிவீழ்ந்தான்;
ஒருவா ருயிர்வந்து புலம்பல்உற்றான்: 6

**சடாயுவின் மரணம் கேட்டுப்**
**புலம்பினான் சம்பாதி**

சண்டைச் சிறைஅற்றுத் திரியும்என்னைத்
தனியே நீவிட்டுப் போகைநன்றோ?
அண்டத்து அளவும்வந்து அகலாதாய்!நீ
அருள்அற்று அகன்றாயே இளையோனாயும்!

பண்டைச் சுரர்பொன்றி னாலும்பொன்றாய்!
படிமேல் இறப்பதுஎப் படிஎன்அத்தா?
துண்டத்து இறவாமல் அரக்கன்உன்னைத்
துணித்த திறம்என்ன மாயம்ஐயோ! 7

## சம்பாதியின் வினாவும் அனுமன் விடையும்

என்றுஎன்று இளையோனுக்கு இரங்கித்துன்பால்
இறக்கும் செயல்உற்ற எருவைமன்னன்
அன்றுஎன்று இகழாத அமுதச்சொல்லால்
ஆற்றி அனுமானும் தேற்றத்தேறி,
குன்றுஎன்று உயர்திண்டோள் அரக்கன்தன்பால்
குறித்த சமர்க்குஏது நிமித்தம்?என்ன;
ஒன்றுஎன்று அதனைஅஞ் சனையின்தோன்றல்
உயர்சம் பாதிக்குஅங்கு உணர்த்தல்உற்றான்: 8

சீரா கவன்எம்கோன் உயிர்ஆம்தேவி
திருவைக் களவில்கொண்டு ஏகல்உற்ற
போர்ரா வணனைஉன் தம்பிகண்டு
பூமா தினைவிட்டுப் போஎன்றேதான்
கூர்ஆ யுதம்திண்தேர் கவசம்சிந்திக்
கொத்திக் கிழித்துஆகம் குலையச்செய்தான்;
வாரா மயக்கம்வந்து அவனேதேறி
வதைத்தான் அரன்தந்த வாள்கொண்டுஎன்றான். 9

## சடாயுவைப் பாராட்டினான் சம்பாதி

ஈரும் துயர்விட்டு மனம்மகிழ்ந்தான்;
இறந்தான் அவன்எம்மில் சிறந்திட்டானே!
சீரும் உறவும்நல் பதமும்பெற்றான்;
தீர்த்தன் திருத்தேவி பொருட்டால்ஆகம்
கூரும் கணைகொண்டுஇன் உயிரும்ஈந்தான்;
குமரர் நீர்வந்து வாழ்வுதந்தீர்;
யாரும் வரராமன் நல்பேர்ஓதி
யானும் பெறும்பேறு காண்மின்என்றான். 10

கண்ண பெருமான்தன் திருநாமம்
கவிகள் உரைசெயக் கழுகின்மன்னன்
வண்ண உறைபெற்ற வடிவாள்போல
வளர்ந்து தழைத்திட்டான் சிறகுஇரண்டும்;
அண்ணல் அனுமானே முதலானோர்
அழகன் அருள்வண்மை தனைவாழ்த்தி,
திண்ணம் வியந்துசம் பாதிதன்னைச்
செங்கை குவித்து,என்ன நிகழ்ந்தது?என்றார். 11

அன்னைக்கு இணைஒக்கும் கருணைஉள்ளாய்!
அருணர்க்கு அருமந்த இருமைந்தர்யாம்;
என்னைப் பகர்வர்சம் பாதிஎன்றே;
இளையோன் ஆகும்ச டாயுஎன்பான்;
பொன்னில் பொலிசொர்க்கம் காணச்சென்றோம்;
போம்போது அருக்கன்மண் டலத்தைஉற்றோம்;
சின்னத் துடன்எம்பி பிழைத்துச்சென்றான்;
சிறகுஒர் இரண்டும்வெந்து யான்விழுந்தேன். 12

எந்தை! அருள்என்ன; இரங்கி,வெய்யோன்,
இராமன் திருநாமம் அவன்தூதுஆய்
வந்த வானரரால் சொல்லக்கேட்டால்
வளரும் சிறகுஎன்ற வரம்பெற்றேன்;
நும்தம் செயல்ஏது? நுவலும்;என்ன,
நுண்ஏர் இடைமாதைக் களவில்கொண்டு
நிந்தை அரக்கன்தென் திசையில்சென்றான்;
தேடிப் போந்தோம்என்று அனுமன்சொன்னான். 13

அனுமான் இயம்பச்சம் பாதிசொல்வான்:
அரக்கன் கொடுசெல்லும் போதுகண்டேன்;
தனுமா நுதலாளை இலங்கைதன்னில்
தண்ஆர் மலர்க்காவில் சிறையில்வைத்தான்;
நனிமா நகர்மூவா யிரம்காதம்;
நமனும் புகஅஞ்சும் அவுணன்கோபம்;
தனிமா முதல்மூவர் தவிர,வாயு
தானும் செலஅஞ்சும் கடலைத்தாவி. 14

எல்லீர் உடன்சேரல் இயன்றிடாதால்
இலங்கை மூதூர்க்குள்; நீர்தாம்மிக்க
வல்லீர் எனில்ஒருவர் மறைந்துசென்றே,
மங்கை நல்லாளைத் தேடிக்கண்டு,
சொல்லீர் வாய்மைஎலாம்; துயரம்தீரத்
தோகை மனம்கொளுமாறு உணர்த்திமீள்வீர்;
அல்லீர் எனில்இராமர்க்கு அறிவிப்பீர்என்று
அன்பால் கூறி;சம் பாதிசென்றான்.

## 17 மகேந்திரப் படலம்

*—அனுமனாதியர் மகேந்திரமலையிலிருந்து கடல் கடத்தலைப்பற்றிப் பேசியது*

### சாம்பன் மாருதிக்கு உரைத்தல்

*சம்பாதி ஏகியபின்,*
*சாம்பவன்மா ருதிக்குஉரைப்பான்:*
*மொய்ம்புஆடு புள்அரசன்*
*மொழியாலே எப்பொருளும்*
*செம்பாணி உற்றநெல்லிச்*
*செழும்கனிபோல் தெரிந்துஉவந்தோம்;*
*நம்பாடு தீர்ந்ததுஇனி;*
*நன்றுசெய்வீர்; செய்யவல்லீர்!* 1

### அனுமனின் ஆற்றலைப் புகழ்தல்

*மலர்அயன்மா ளினும்,மாளா*
*வாழ்நாளின் வரம்உடையீர்;*
*பலகலைநூல் கற்றுஅறிந்தீர்;*
*பகரவல்லீர் பரமனைப்போல்;*
*கொலைகள்செய்யும் கூற்றுவனும்*
*குலைந்துஒடுங்கும் கொடும்திறலீர்;*
*உலகொடுஅண்டம் கடக்கஎன்னில்*
*ஒருகுதியால் குதித்திடுவீர்.* 2

*எப்பொருளும் சொல்லவல்லீர்;*
*எப்பகையும் வெல்லவல்லீர்;*
*மெய்ப்புவனம் எடுக்கவல்லீர்;*
*மேருஎனக் கதித்தமெய்யீர்;*
*அப்பு,வெம்தீ, காற்றும்,நஞ்சும்*
*அடல்படையால் அழிவறியீர்*
*ஒப்பிடும்கால் உம்மைஅல்லால்*
*ஒருவரும்நேர் இல்லாதீர்;* 3

உதித்துஎழுந்த சூரியன்மேல்
உறப்பாய்ந்த உரம்உடையீர்;
எதிர்த்து,அவன்முன் பின்நடந்தே
எல்லாவே தமும்தெளிந்தீர்;
மதித்துஅனந்த வடிவுகொள்வீர்;
மழைத்துளிக்கும் நடுவில்செல்வீர்;
கதித்துஅடர்ந்தால் உலகைஎல்லாம்
கலக்கிவெல்லும் புயம்உடையீர். 4

புரந்தரன்வச் சிரம்படஓர்
புன்மயிரும் இழவாதீர்;
திரம்தருவா சகம்பயின்றீர்;
தீரஎவ்ஆ சையும்துறந்தீர்;
நிறைந்தபல்ஊ ழியும்கடந்தீர்;
நீதிகுன்றா நெறியில்நின்றீர்;
வரைந்ததன்மம் தவிர்வாலி
மரிக்கநல்ல வகைமுடித்தீர். 5

நெறியில்நின்றே தேவர்எல்லாம்
நினைத்தவண்ணம் முடித்திடுவார்;
நெறியில்நில்லாது இந்திரனும்
நேரலர்க்குஆற் றாதுஉடைந்தான்;
நெறியில்நின்றீர்; உமக்குஅரிதுஎன்?
நீர்முடிப்பீர் நினைத்தஎல்லாம்;
அறியவல்லீர் காலம்இடம்;
அனைத்துஇடையூ றும்கடிவீர். 6

ஆண்டவல்லோன் அருள்சுமந்தீர்;
அவர்க்குஅடிமை செய்யவல்லீர்;
பூண்டசெயல் இனிமுடிப்பீர்;
புண்ணியரே புகழ்படைப்பீர்;
ஈண்டும்எம்மான் உயிர்கொடுப்பீர்;
இறைவிதுஞ்சா தேதடுப்பீர்;
தாண்டல்செய்வீர் கடலைஎன்று
தாமரையோன் மகன்இசைத்தான். 7

யாழ்க்கும்இன்புஆம் சாம்பவன்தான்
இசைத்தசெஞ்சொல் செவிக்குஅமுதாய்
தாள்குமுதம் புகழ்அனுமான்,
தாமரையின் பூவில்இரு
நாள்குமுதம் மலர்ந்ததுபோல்
நகைவிளங்கக் கைகுவித்துக்
கேட்கும்அன்பால் தமர்கள்எல்லாம்
கெலிபெறவே கிளத்தல்உற்றான்: 8

முழுநீறுஆம் மதிவலியீர்,
மொழிக்குஉகந்தேன்; உம்பணியும்
செழுநூல்தோய் புயன்அருளும்
சிறகுஇணையாக் கடல்தாவி,
எழுநூறுஓ சனைஇலங்கை
என்அடிக்குள் அடங்க,ஒன்னார்
குழுநூறித் திருஅருளும்
கொணர்வன்;இங்கே இனிதுஇரும்நீர். 9

கடல்விண்மேல் உயர்ந்துஎனினும்
கருடனைப்போல் மால்அடிபோல்
மிடல்கொடுயா வையும்கடப்பேன்;
விண்ணவர்க்கும் வெலற்குஅரியேன்;
மடல்கெழுதா ரீர்!தாரீர்
மகிழ்ந்துவிடை என்றுஅனுமன்
அடல்கொடுமா மகேந்திரம்ஆம்
அருவரைமேல் ஏறினனே. 10

பூசுரர்மா தவர்மகிழப்
பூமாரி விண்சொரியத்
தேசுடன்வான் உறவளர்ந்தான்;
திருவடிஎன் பதுதகுமே!
ஆசுஇல்வரை கடல்கடைநாள்
அடியில்வைத்த ஆமைஅதுஆய்
வாசுகியே தன்வால்ஆய்
மந்தரமா மலைபோன்றான். 11

தன்இறைவன் கீர்த்தியைப்போல்
தகும்அனுமான் தாவும்முன்னே
நல்நிழல்போய் கடல்கடந்து
நண்ணியதே இலங்கைதன்னை;
மன்உலகில் பாதசிலை
மகேந்திரமால் வரைஆகப்
பொன்உலகைத் தாங்கும்ஒரு
புனைமணித்தூண் எனப்பொலிந்தான். 12

# சௌந்தரிய காண்டம்

1

# கடல் தாவு படலம்

—இலங்கை சேருமாறு அனுமன் கடலைத் தாவியது

காண்டுஅரிய சீர்வால காண்டம்முதல் கிட்கிந்தா
காண்டம்அள வும்பகர்ந்தேன் கட்டுரைப்பேன்—ஈண்டே
கவுந்தரியாள் சாயல்மின்னைக் கண்டுஅனுமன் மீண்ட
சவுந்தரிய காண்டம் தனை. 1

### கடவுள் வாழ்த்து

ஆடல்கொ ளும்படி ஆசைஇ டும்பையில்
ஆழ்ந்திட வேண்டிடினும்
நாடரு நன்பதம் ஈயினும் நின்பரம்
நான்பெற அறியேனே;
மாடநெ டும்கொடி ஆடந டம்பயில்
மாண்குரு கூர்உடையாய்!
பாடருள் என்றுஇமை யோர்பணி யும்திரு
வேங்கட நாயகனே. 2

பொய்அர வம்தனை மெய்என் மாலைபு
கும்பொழுது அஞ்சிடுவார்
ஐயம்அ றும்தெளி வாரைஉ ணர்ந்திடில்;
அவன்இவன்; எம்பெருமான்;
எய்யல்உ றும்கணை யும்சிலை யும்கொடுஇ
லங்கையில் முன்பொருதோன்;
மெய்யன்;இ ராமபி ரான்;மறை யின்பொருள்;
வீரஇ ராகவனே. 3

### மகேந்திர மலைமீது நின்று இலங்கையைக் கண்டான் அனுமன்

மகேந்திரமேல் நின்றுஅனுமான் வாவல்உற்றான் விண்மேல்
மிகேந்திரனார் நாடுஇதுஎன்றே மீண்டான்—புகேந்தும்
இலங்கைகண்டான் தோள்புடைத்தான் ஈர்ஏழு உலகும்
கலங்கல்கண்டான் ஆர்த்தான் கடந்து. 4

## அனுமன் கால் ஊன்றி நின்றதால் மகேந்திர மலையில் நேர்ந்த குழப்பம்

நீங்கினவாள் அரவம்மலை
நெளிந்துகுடல் சரிந்தனபோல்;
தூங்குசிங்கம் மடிந்துஉதிரம்
சொரியநிறைந் தனபரவை;
ஓங்கும்மரம் சூழ்ந்துகையால்
உயர்வேழம் பிளிறல்உற்ற;
வேங்கைகள்தம் பறழ்வாயால்
விரைந்துகவ்வி இரிந்தனவே. 5

வாளொடுகே டகம்ஏந்தி
வரையைவிட்டார் விஞ்சைமன்னர்;
நாளொடுதன் தபசுமுற்றி
நல்தவரும் வானம்உற்றார்;
தாளொடுரா வணன்கயிலை
தாங்கியநாள் கவுரிபுல்லும்
தோளொடுதோன்று ஈசன்ஒத்தார்
தோகையர்சேர் தேவர்எல்லாம். 6

எடுகிளியை மறந்துவிண்ணின்
ஏழையர்நா தற்புல்ல;
நெடுகினமை இலங்கைமட்டோ?
நினைவுஏது?என்று அமரர்எண்ண;
உடுவினையும் கடந்து,குன்றம்
உயர்ந்து,அனுமான் உதைந்திடலால்,
கடுகுஎனவே, பூதலத்துஉள்
கடல்கலம்போல் அழுந்தியதே. 7

5. கையுற மரங்கள் பற்றிப் பிளிறின களிநல் யானை. —கம். 5.
பறழ் - குட்டி.

6. வித்யாதரர் தமது கையிலே வாளொடு கேடகம் ஏந்தித் தாம் வசித்திருந்த மலையை விட்டு விரைந்து மேலெழுந்தார். தவசிகள் இவ்வுடலோடே மேல் உலகம் சென்றார்கள்.

7. வளர்த்துவந்த கிளியை மறந்துவிட்டு, தேவமகளிர் தம் கணவரைத் தழுவி வானிலே சென்றனர். நெடுகினமை - விரைந்து செல்கிற வேகம்,

### கடலைக் கடக்க விசைத்தெழுந்தான் அனுமன்

ஏந்திஉண்டான் குறுமுனிஎன்று
இகழாதே எனத்துணைவர்
போந்திடுஎன்றே ஏழுஉலகோர்
பொன்மணிபூ மழைபொழிய,
வாய்ந்திடும்கை முன்நீட்டி
வால்விசித்து மார்புஒடுக்கிப்
பாய்ந்தனன்கால் உதைந்துவிண்மேல்
பங்கயன்நாடு உரிஞ்சவீரன். 8

### எழுந்த வேகத்திலே மலையிலும் கடலிலும் நிகழ்ந்த குழப்பம்

ஆங்குஅனுமான் கடுவிசையால்
அயல்உளகுன் றமும்,மரமும்,
வேங்கையும்,யா ளியும்,களிறும்
வேந்தர்பிரான் பணிஇதுஎன்றே
தாங்களும்கூ டிப்பறந்து
சக்திஇன்றி வீழ்வனவாய்த்
தேங்குஅலைநீர் காத்தனவே
திருஅணைக்குஓர் அடிஇடல்போல். 9

கடல்கிழிந்து, நாகர்பதம்
கண்டு,உகந்த அனுமனைக்கண்டு,
அடல்கிளர்ந்த கருடன்என்றே
அவர்நடுங்கிப் படம்ஒடுங்க,
உடல்கிழிந்து சுறாமகரம்
ஊழிவன்காற்று என்ன,ஒன்னார்
குடல்குழம்ப, இலங்கையின்மேல்
கொளும்திரைபோய்ப் பரந்தனவே. 10

---

இலங்கையின் அளவன்று என்னா இம்பர்நாடு இரிந்தது இப்பால்.
—கம். 36.

உடு - நட்சத்திரம். கடலிலே அழுந்தி மூழ்கும் மரக்கலம் போன்றதாம் பூமியில் அழுந்திய மகேந்திரமலை.

9. மரங்கள் முதலியன விழுந்து கடலைத் தூர்த்தது, இராமன் இனிக் கட்டப் போகும் சேதுவுக்கு அத்திவாரம் இட்டது போலாம்.

### வான வீதியில் செல்லும் அனுமனின் தோற்றம்

திடக்கனல்வேல் அரக்கன்முன் நாள்
செய்ததவம் குலைந்திடலால்,
வடக்குநின்றே இலங்கையின்மேல்
வரும்கதிர்போல்; மாமதிபோல்;
அடல்கரியோன் தடக்கரம்போல்;
அமுக்களய்தும் கயிலையைப்போல்;
கடக்கலொண்ணா மனத்தில்முந்தும்
கடுவிசையால் புட்பகம்போல். 11

திரிகூடத் திசைநடுங்கக்
கிளர்ந்துஎழுந்த தந்தையைப்போல்,
திரிகூடப் பருவதம்போல்,
தேடிவரும் மேருவைப்போல்,
எரிசுடரால் கலங்கிவிண்ணோர்
இறைஞ்சவரும் கருடனைப்போல்,
சரிகூடாது ஏதும்என்னத்
தாண்டினனே நீண்டனுமான். 12

### வானவர் பாராட்டுதல்

மேருவுடன் கூடிவிண்ணின்
மீதுசெல்லும் வாசுகியோ?
போர்உளதுஎன்று அறிந்துபின்னே
போகுநமன் பாசமதோ?
பார்உடையோன் அண்டரண்டம்
பண்டுஅளந்த சேவடியோ?
மாருதிதன் வால்எனவே
வானவர்கொண் டாடினரே. 13

கைவலியால் முந்துஇரண்டு
காரணனும் தம்பியும்போல்;
மெய்வடிவுஒ சனையனந்தம்;
வேகம்இலங் கையில்அடங்கான்;

12. சரி கூடாது - உவமை பொருந்தாது.

எவ்வளவோ பாய்வது?என்றே
இமையவரும் பதறல்உற்றார்;
தெய்வவிமா னங்கள்விண்டு
சிந்துஎங்கும் சிந்தினவே. 14

**கடலிடை எழுந்தது மைநாகமலை**

இவ்வேலை தனில்விண்மேல்
எழுந்ததுமைந் நாகமலை
மைவேலை அழுந்திமுன்நாள்
மால்எடுத்த மந்தரம்போல்
பைவேலை அமுதுகொண்டு
பாய்ந்தபட்சி ராஜனைப்போல்
துய்வேலை துயில்எழுந்த
சுடர்முடிஆ யிரத்துஅரிபோல். 15

சந்திரன்தான் உதித்ததுபோல்
தவம்முடிந்து முளைத்தவன்போல்
இந்திரைகோ னும்துயில
எழும்பிரமாண் டம்தனைப்போல்
முந்துஇரணம் பொன்பவளம்
முழுகிமுகந்து எழுவதுபோல்
வந்துஇரண்டு சிறகுஅருவி
மாலையும்பூண் ஆரமும்போல். 16

பொருமலைநீங் கினஅரவம்
புலன்கள்வென்று சுகிப்பவர்போல்;
அருமலைமின் கரிந்துசிந்தி
ஆடிவிழுந்து உருளும்முன்னே,

14. அனுமனது நீண்டு நிமிர்ந்த கைகள் இராமலக்குவர் அவனுக்கு முன்னதாக அவன் இருமருங்கும் செல்வது போன்றனவாம். விமானங்கள் ஒன்றோடு ஒன்று உடையத் தாக்கிச் சிந்துவில் (கடலிலே) வீழ்ந்தன என்பார் கம்பரும்.

15. பாற்கடலைக் கடைந்தபோது, கடலிலே மூழ்கிப்போன மந்தர மலையைத் திருமால் கூர்மாவதாரம் எடுத்துத் தாங்க, அது மீண்டும் மேலே எழுந்ததுபோல. பாதாள லோகத்திலே சென்று அமுதத்துடன் கடலைக் கிழித்துக்கொண்டு மேல்எழுந்த கருடபகவான் போல. ஆயிரம் முடிகளையுடைய திருமால், கடலினின்றும் மேலே கிளம்பிவந்தது போல.

16. கடலிலே மூழ்கியிருந்து தவஞ்செய்து முடித்துப் பின் வெளிவந்த பிரம தேவன்போல. பிரமனைப் பெற்ற பிரமாண்டம் போல,

வருமலைஏது என்று,அதனை
வன்தலைகீழ் ஆய்விழவே
கரும்அலையுள் நூக்கிஅயன்
ககனமும்கீழ்ப் படஉயர்ந்தான். 17

**மானிட வடிவிலே தோன்றி உபசரித்தது மைநாகம்**

நந்துஆர் கடல்உள்புக்கு அழுந்திப்பின்னே
நல்லோன் எனும்அன்பால் நரரூபம்ஆய்
வந்தான் மைநாகம்; வேறில்லைநான்;
வச்ரா யுதன்வெற்பின் சிறகைவெட்ட,
உந்துஆர் பெருநீரில் சேரஎன்னை
உய்வித் தான்வாத ராசன்உந்தை;
எந்தாய் இதற்கும்கை மாறுஒன்றுஉண்டோ?
என்பால் இருந்துஆறிச் சிறந்துசெல்வாய். 18

வியந்த புகழ்மாயோன் பணிபூண்டு
மின்பால் வருகின்றான் வாயுமைந்தன்;
இயைந்த உபகாரம் நீசெய்என்றே
என்னோடு உரைத்தான்இக் கடல்வேந்தன்;
உயர்ந்த உலகுஆளும் அரசன்வந்தால்
உற்றார் செயல்என்னே? எனக்கேட்டான்;
நயந்த மைந்நாக மலையைக்கண்டான்
நகைவாள் முகவீரன் நவிலல்உற்றான்: 19

**மீண்டு வரும்போது விருந்துண்பேன் என்று விரைந்தான் அனுமன்**

எய்யேன்; இளையேன்;இன் துணைவன்அன்புஆம்
இறைவி அருள்பெற்று மீளுமட்டும்
துய்யேன் இனிஏதும்; இனிதுஉரைத்தாய்;
துய்த்தேன்; இருந்துஆறித் துயரம்அற்றேன்;
செய்யோய்! பரிவுஒன்று கோடிஅன்றோ?
தேவர் கோன்ஏவல் திருத்திப்பின்னே
மெய்யே நுகர்கின்றேன் விருந்துஎன்றுஐயன்
வேண்டி விழிசெல்லா விசையில்சென்றான். 20

17. நூக்கி - தள்ளிவிட்டு. அயன் ககனமும் - பிரமலோகமும்.
19. தம் வீட்டுக்கு ஒருவர் வந்தால் நண்பர் செயல் இஃதன்றி வேறுண்டோ?
20. அன்பிற் சிறந்தாய்தொர் பூசனை யார்கண் உண்டே. —கம். 60.

### தோன்றினாள் சுரசை

கார்மேல் கதிரும்,திங் களும்,தாரா
 கணமும், கலங்காவி மானங்களும்
ஆர்மேற் செலவுஎன்ன எயிறுமின்ன,
 அண்டம் நிறைந்து,ஊழிக் காற்றில்செல்வான்;
சீர்மேல் புவனங்கட்கு உதவிசெய்வான்
 திடமா வலிசோதித்து அறிய,அங்குஓர்
சூர்மேல் திறலாளைச் சுரர்வேண்டத்
 தோன்றி, எதிர்நின்றாள் சுரசைஎன்பாள். 21

### சுரசையை வென்று விரைந்தான் அனுமன்

அரக்கி வடிவம்கொண்டு, அடைத்துவிண்ணை,
 அரிவீ ரா!எந்தன் பசிதீராய்;
பரக்கும் என்பெரிய வாய்க்குள்அன்றிப்
 பாயும் வழிஇல்லை வானில்என்றாள்;
புரக்கும் பரன்ஏவல் தொழில்செய்து,நான்
 போந்தால் விழுங்குஎன்று முறுவல்செய்தான்;
வரக்கண்டு இனிஉண்டோ விடுகை?என்றாள்;
 வல்லாய் எனில்என்னை விழுங்கென்றான். 22

புவனம் பதினாலும் மேலும்கொள்ளும்
 புகைவாய் அரக்கியும் விழுங்கநின்றாள்;
அவன்அங்கு அதில்பற்றா மேலேஓங்கும்
 அணுவாய் அவள்வாயில் புகுமாப்போல்
கவனம் கொடுமென்மேல் வளரலுற்றான்;
 கண்ட சுரசையும்தன் உருக்காட்டிப்
பவனன் மகன்தன்னைப் புகழ்ந்துஅன்னைபோல்
 பரிந்தாள்; மலர்வானோர் சொரிந்தனரே. 23

23. அதில் பற்றா - அவள் வாய் கொள்ளாதபடி. அது அணுவாம்படி ஓங்கி வளர்ந்தான் அனுமன். பின் தன் உடம்பைச் சுருக்கி அவள் வாயினுள் புகுந்து மூச்சுவிடுவதற்கு முன்னே வெளியில் வந்தான் என்பார் கம்பர்.

ஓதம் முழங்க,அந் தரபேரி
உருமின் முழங்க,அந் தணர்ஓதும்
வேதம் முழங்க,மங் கலவீணை
விசயம் முழங்க,சங் கொடுதாரை
நாதம் முழங்க,அரம் பையர்ஆடும்
நடனம் முழங்க,தும் புருபாடும்
கீதம் முழங்க,சென் றனனேதன்
கீர்த்தி முழங்கக்கண் டனுமானே. 24

குழிப்பு: தனத்தனன தனத்தனன தந்தான தான

மலர்க்கமல முகத்துஉலவும் மந்தாநில ஓதம்
மணக்க,வெயர்வு அகற்றவரும் மந்தார வாடை;
திலக்கம்வெயில் எறிக்க,வளர் சங்கீத லோலம்
செவிக்குஅமுது படைக்கஅனு மன்போது போதின்
அலைக்கடலில் உதித்து,அமரர் அங்குஓட, வானோடு
அடைத்தனள் ஓர்அரக்கி;அவள் அங்கார தாரை;
கலைக்கொள்பிறை எயிற்றள்;விழி ஐங்காத நீளம்;
கருத்தகரி உரித்துஉடையள்; சங்கார ரூபை. 25

குழிப்பு: தனனதன தனனதன தனனதன தானா

கடலில்எழு கடியகொடு விடம்அனைய தீயாள்;
கறைஅரவம் அனையள்;உலகு உறைஅனைய வாயாள்;
கடலில்எழும் மதுகயிட வரையும்நிகர் ஆயாள்;
ககனநதி பருகிடினும் முடுகியவி டாயாள்;
கடலில்எழும் அடிஒலிசெய் பரிபுரம்அது ஓயாள்;
கடவுளர்கள் கடவுபடை வரினும்நிலை சாயாள்;
கடலில்எழும் வடவைஅனல் சுடினும்உடல் வீயாள்:
கடையில்எழு கனல்அனையள்; கடையுகமும் ஆயாள். 26

26. பரஞ்சோதி ஆகிய திருமாலை எதிர்ப்பதற்குப் பிரளய கடலிற் சென்ற மதுகைடபர்களை ஒத்தாள்.

**போவது எங்கே`நில் என்றவள் வாயூடு புகுந்து குடர்கொண்டு வெளிப்பட்டான் அனுமன்**

குழிப்பு: தனத்தா தனத்தா தனத்தா தனத்தா

எயில்தாள் இதழ்ப்பா ழிபுக்குஏ கல்விட்டுஏ
கல்எப்பால் என;கார் வணற்குஓர் அணுக்கோன்,
எயிற்றால் இடத்தே அடைத்தாய்; உனக்குஆம்
மிடுக்குஏ துசெப்பாய் எனக்கோ பம்மிக்கான்,
அயில்கா லனுக்கே செலுத்தா துவிட்டால்
அழிப்பாள் சகத்தோடு அறத்தான் எனத்தான்
வயிற்றுஊடு உறத்தே வர்எய்த்தார்; உதித்தான்
மறத்தாள் குடல்தார் மணித்தோ ளில்இட்டே. 27

வரைக்குள்முழை அரவுஎடுத்து
வான்இயங்கும் கருடனைப்போல்,
தரைக்குள்நின்றும் காலிபடம்
தாவிவிண்மேல் எழுவதுபோல்
அரக்கிகுடல் கணத்தினில்கொண்டு
ஆகாசம் தனில்எழுந்தான்
உரைக்கில்என்றும் இறப்புஅதுஇல்லா
உத்தமர்க்குள் உத்தமனே. 28

நீண்டவிண்ணோர் ஆர்த்துஎழுந்தார்;
நீள்தவத்தோர் வாழ்த்தலுற்றார்;
தாண்டவனும் மனம்உகந்தான்;
சதமகனும் மலர்சொரிந்தான்;

27. என் பேழ்வாய் புக்கு ஏகல்விட்டு, நீபோதல் எங்கே?

28. காலி படம் - காற்றாடி.

சாகா மிருகத்தலைவ ரில்திலகம் அன்னான்
ஏகா அரக்கிகுடர் கொண்டுஉடன் எழுந்தான். —கம். 84.

சாகா மிருகம் - சாகம் மிருகம் - மரக்கிளையிலே சஞ்சரிக்கும் மிருகம் - வானரம் என்பர். சாகா மிருகம் என்பதற்குச் 'சாகா வரம்' என்ற பாட பேதம் உண்டு. இதைப் பாடமாகக் கொண்டு, சாகா வரத் தலைவர் - சிரஞ்சீவியருள் தலைவர் என்று கொண்டு, இறப்பதில்லா உத்தமர்க்குள் உத்தமன் என்றார், எம் பெருமானார்.

29. தாண்டவன் - கூத்தப்பிரான்.

வேண்டுவினை இடையூறாய்
விலகாமல் இவள்உடலைக்
கீண்டதுநன்று எனஅனுமான்
கிளர்ந்துவிண்மேல் விரைந்துசென்றான். 29

## மாருதி கடல் கடந்தது, நல்லதம்பி கலி கடந்ததுபோல

வலிக்கடல்ஆர் சரராமன்
வரதன்என்றால் பிறவிஎனும்
ஒலிக்கடலைக் கடப்பதுபோல்,
உண்மைவல்ல நல்லதம்பி
பொலிக்கடல்ஆ கவராமன்
புகழ்மோரூர்க் கண்ணன்என்பான்
கலிக்கடலைக் கடப்பதுபோல்,
கரும்கடல்மா ருதிகடந்தான். 30

## பவள மலைமீது பாய்ந்தான் அனுமன்

எவ்இடையூ றும்கெடுமே
இராமன்என்றால் என்றுஅனுமான்
இவ்விடையொன் றையும்பாரான்;
இமையவர்நாட் டினைஅணுகி,
அவ்விடம்மீண்டு உறப்பாய்ந்தான்
அணிஇலங்கைப் பவளவெற்பில்;
தவ்விட,வன் காற்றுஅடிக்கத்
தாழ்கலம்போல் ஆடியதே. 31

## கண்டான் இலங்கை மாநகரை

மெய்ச்சுவர்க்கம் எனும்மடந்தை
மெய்அழகைப் பார்க்கஎன்று
வைச்சுவைக்கும் கண்ணடிபோல்
மகிழ்ந்துஇலங்கும் இலங்கைகண்டான்;
அச்சுவர்க்கம் இதில்சிறந்தால்
அதனைவிட்டுஇங்கு இருப்பானோ?
எச்சுவர்க்கங் களும்ஆளும்
இவன்தானோ? எனவியந்தான். 32

கேழ்உறவேண் டினகொடுக்கும்
    கிளர்தவப்பேறு அனுபவித்து
வாழும்அதே சொர்க்கம்அன்றோ?
    மறைமொழியும் அப்படியே;
ஏழ்உலகில் அரும்பொருளும்
    ஏழ்நூறுஓ சனைஅகன்றால்;
சூழுறஆர் காணவல்லார்?
    தொலையாத காட்சி;என்றான். 33

## 2 நிலாத் தோற்று படலம்

*—நிலவொளியிலே அனுமன் இலங்கையைக் கண்டது*

**இலங்கை மாநகரின் மாண்பு**

*பொன்னில் மணியில்செய்து ஒளிவீசும்*
*புயற்கும் மதிக்கும்மேல் உயர்மாடம்*
*பன்னில் விசும்பில்பன் னகநாட்டில்*
*பார்எங் கிலும்இப்ர காரம்இல்லை;*
*உன்னி மகமேரு அசையஎற்றும்*
*ஊழிக் காற்றுக்குத் தென்றல்ஒக்கும்;*
*மின்னின் கொடிகொண்டு விளக்கிமின்னார்*
*விண்ணின் நதிமொண்டு தெளிப்பர்மன்னோ.* 1

*செம்பஞ்சு அணிபாத விரல்வண்ணத்தால்*
*சிவப்புஆர் அரக்கியர்குழல் வண்ணம்போல்*
*தம்பைங் கிளிக்கும்சொல் பயிற்றுமின்னார்*
*சாயல் காட்டும்தம் மனைதோறும்;*
*அம்பொன் மாடங்கள் தெய்வத்தச்சன்*
*அண்டர் கோனுக்கும் அரிதுஎனத்தான்*
*நம்பன் மணிஅல்லா மணிகள்தந்து*
*நாடிச் சமைத்திட்ட பணிதிளங்கும்.* 2

*தங்கப் பசும்பொன்னே மனையாவும்;*
*தண்கற் பகமேஅவ் வனம்தோறும்;*
*துங்கத் தவம்என்றோ அயனோடும்*
*சுரரும் மடவாரும் ஏவல்செய்வார்?*

**குறிப்பு :** நிலாத் தோற்று படலம், இலங்கைமாதேவிப் படலம் — இவ் விரண்டும் இராமாயணப் பதிப்புகள் சிலவற்றிலே ஊர்தேடு படலத்துள் அடங்கியிருக்கும்.

ஐங்கைக் களிறும்,சூ ரியன்தேரும்,
அவன்மா ஏழும்அல் லாதஎல்லாம்
இங்கு;அற் புதமோதிக் கயம்தோற்றால்?
இறைவன் வயிறுஒக்கும் இலங்கைஅம்மா! 3

அலையில் பெரிதுஆன முரசுஆர்க்கும்;
அதிலும் அரக்கியர்சி லம்புஆர்க்கும்;
மலையில் பொலிதேர்,மா ளிகை,மாடம்
மாற்றும் இருள்ஓட; இரவிவெட்கித்
தலையிட்டு எதிர்நில்லான்; எதிர்நிற்கினும்
தன்முன் தோன்றும்மின் மினிபோல்வான்;
புலையில் கொடியாரும் கருநிறம்போய்ப்
பொருமுன் னீர்ப்பொன்னி போல்வரன்றே. 4

மொய்வார் கடல்நீரும் மணம்நாறும்
மூதூ ரிடைச்சேரும் பரிமளத்தால்;
மெய்வான் உயர்பொற்கோ புரங்கள்கண்டால்
மேரு கிரிநாணி ஒளிக்கும்அன்றே;
தெய்வா சாரிகைத் தொழில்சொல்லவோ?
தேவ தேவன்தன் வரம்சொல்லவோ?
இவ்வாறு அரக்கன்செய் தவம்சொல்லவோ?
ஏது பெரிதுஎன்று புகழ்வேன்நான்? 5

அடல்கைக் கரியவன்உந் திச்செம்பொன்
அண்டம் போன்றதுஇக் கடல்இலங்கை;
படர்கற் பகமடவார் இசைபாடப்
பலர்இன் னியம்கொட்டப் பலர்ரசிப்பார்;

3. பிரபஞ்சத்திலே உள்ள யானை தேர் குதிரைகளில், கணபதி ஆகிய ஐங்கரக் களிறும், சூரியன் தேரும், அதன் குதிரைகளும் அல்லாத, மற்ற யானை குதிரைகள் யாவும் இங்கே உள்ளன. இராவணன் செய்த போரிலே திசை யானைகள் தோற்றது அற்புதம் இல்லை; அவை எட்டுத் திசை எல்லைகளிலே ஒதுங்கிநின்றன.

வாழும் மன்னுயிர் யாவையும் ஒருவழி வாழும்
ஊழி நாயகன் திருவயிறு ஒத்துளது இவ்ஊர், —கம். 12.

திடக்கைக் கொடியன்செம் மதில்உயர்ச்சி
சேரா இமையோர்வா ராமல்அன்றே
கடக்கைக்கு அரிதுஎன்று விலங்கும்என்றார்
கதிர்கள் அரக்கனுக்கு ஒதுங்கும்என்பார். 6

**இலங்கை மாந்தரின் பெருமித வாழ்வு**

வானா டியர்ஓடும் விஞ்சைமின்னார்
வாதா டுவர்;சித்த மாதருடன்
ஆ!நா கியர்தங்கி நடம்புரிவார்;
அரக்கர் மடவாரோடு இயக்கமின்னார்
மாநா டகம்கண்டோர் மாலை,கந்தம்
மற்றும் அணிபொன்னும் தியாகம்செய்வார்;
நானா கீதத்தால் அலைஅடங்கும்;
நாறும் தூபத்தில் முகில்அடங்கும். 7

போத நவரத்னம் கனகக்குன்றில்
பொதிந்தது எனமாட கூடம்எல்லாம்
வேத நெறிசொல்ல விசுவகன்மா
விதித்த இலங்கையையார் புகழவல்லார்?
மாதண் தடமும்,கற் பகப்பூங்காவும்,
மற்றும் பளிங்குமண் டபங்கள்தோறும்
சீத நறவுஉண்டு, மாதர்செவ்வாய்
தேறல் உண்பவர்க்குஓர் அளவுஇல்லையே! 8

கலவி மடவார்கொங் கையில்குங்குமம்
காட்டும் அரக்கர்தம் கருத்தமெய்யில்;
புலவி மடவார்சீ றடிச்செம்பஞ்சு
பொலியும் வணக்கம்செய் தவர்குஞ்சிமேல்;
பலவின் மொழியார்தம் கனிவாயால்
பவளக் காடோ?பங் கயக்காடோ
குலவு முகத்தால்?அங்கு அவர்கண்களால்
குவளை வனமோதான் இலங்கைஎங்கும்? 9

இருள்ஆம் உடலும்,செந் தலையும்வெள்ளை
எயிறும் தம்பட்ட யானைக்குஒப்பார்;
அருளா வேற்கையும் கழல்காலும்,
அழற்கண் களும்ஆனை அரக்கர்க்குஒவ்வா;

பொருளால் ஒருதேசக்கு ஒருதேசம்
போலும் ஒருவீதிக்கு ஒருவீதி;
வெருளா நிசிசரர்க்கு உறைஇடவும்
மிக்க உயிர்எல்லாம் போதாவே. 10

தழுவும் கலவியும் வெறுத்துஎறிந்த
தாரும், பணியும்,மே கலையும்,தந்திக்
குழுவின் மதமும்,மா நுரையும்,மற்றும்
கொள்ளும் கடல்ஆழம் கூறும்மட்டோ?
மழுவின் படையோ?சக் கரம்சூலம்
வாளின் படையோ?முட் கரம்பாசம்
எழுவின் படையோ?விற் படைதானோ?
ஏதோ பெரிதுஎன்பேன்? இறைவன்முன்னே. 11

**பவளக்குன்றிலே வடிவம் குறுகித் தங்கினான் அனுமன்; பரவியது இருள்**

என்று மனத்துஎண்ணி வியந்திருந்தான்
எவர்க்கும் தோன்றாதுஅஞ் சனைதோன்றல்;
என்றும் குடபாலைக் கடல்உற்றபின்,
ஈசன் கரிப்போர்வைக்கு இணைஎன்னவோ?
என்றும் பலநாகம் கான்றநஞ்சும்
எங்கும் பரந்திட்ட இயல்புஎன்னவோ?
என்றும் இருளுக்குஓர் உவமைசொல்வேம்
எண்ணா அரக்கன்தீ வினைஒக்குமே. 12

**இருளிலும் அரக்கர் நடமாட்டம்**

உன்னில் அருள்வேதன் குலத்தில்வந்தோன்
உயர்கற்பு உடையாளைச் சிறையில்வைத்தான்
என்னும் பழிபோலப் பரந்திட்டுஎங்கும்
இருண்ட இருள்தன்னில், இகல்அரக்கர்
பொன்னின் உலகம்சந் திரலோகம்
பூமன் உலகுஎங்கும் போதப்புக்கார்;
மின்னும் சுடர்வானோர் முதலோரும்
விரைந்தார் இலங்கேசற்கு ஏவல்செய்வான். 13

12. அஞ்சனை - அனுமனின் தாய். என்று - சூரியன். ஈசன், கரிப் போர்வை - தாருகாவனத்து முனிவர் ஏவிய யானையை உரித்தெடுத்த தோலைச் சிவபிரான் போர்த்துக்கொண்டார். உலகம் முழுவதையும் போர்த்ததுபோல இருள்-பரவியது.

### தோன்றிப் பரவியது வெண்ணிலா

பெண்ணார் அவன்ஏவல் முறையில்செய்வார்
பெருநா கியர்,வித்யா தரர்தம்மாதர்,
விண்ணா டியர்,சித்தர், இயக்கமின்னார்
மின்போல் விசும்புஊடே நிறைந்துவந்தார்;
நண்ணார் கொடுமைக்குள் தீய்ந்துபட்டு,
நன்மா ருதிமேகம் பொழியப்பெற்றுத்
தண்ஆர் செழும்தன்மம் முளைத்தாற்போல்
சந்த்ரன் உததிக்குள் உதயம்செய்தான். 14

மாலார் பெரும்தூதன் வரவும்அன்பாய்
மதிவா சவன்தேவி வாள்முகம்போல்
மேல்ஆர் திரைவெண்சா மறையைப்போல்
விளங்கும் அவன்கொற்றக் குடையையும்போல்
பால்ஆ ழியைவெள்ளிக் குடத்தில்மொண்டு
பலமீ னுடன்வானம் பொழிவதுபோல்
தோலா அருள்காம தேனுவின்பால்
சொரிகின் றதுபோலும் நிலவின்வெள்ளம். 15

மேலோர் அனுமற்கு மலர்மாரி
மிகுதி சொரிந்திட்டுப் பரிதிவெண்பூ
நீலோர் அரக்கர்க்குப் பயந்திட்டுஅங்ஙண்
நிற்கும் வாறுஒக்கும் வான்மீன்கள்;
மாலோர் மனத்தீயோன் நகரம்காப்பார்
மாசுஆ காவகைதூசு உறைஇட்டதோ?
பாலோ? வரராமன் புகழேதானோ?
பரவும் உலகுஎங்கும் படர்நிலவே. 16

16. தூசு உறை இட்டது - வெண்ணிலவு இலங்கை எங்கும் நிறைந்தது, வெள்ளைத் துணியால் உறைசெய்து அந் நகரைப் போர்த்தது போன்றது, இராமனது புகழ்.

அகழ்புகுந்து அரண்புகுந்து இலங்கை அன்னவன்
புகழ்புகுந்து உலாவியதோர் பொலிவும் போன்றதே. —கம். 58.

நீங்கிப் போனவல் இருளின் துண்டம்
நிலவின் முறியோடும் பொருவனபோல்
பாங்கில் படிந்திட்ட சுரும்பினங்கள்
படர்மல் லிகைவாச மலர்தோறும்
தாங்கிச் சகம்காவல் புரிராமன்
தரியார் மேல்எய்த தனிக்கணைபோல்
ஓங்கித் திறல்கொள்ளும் வாயுமைந்தன்
உற்றது இனிச்செய்தது உரைக்கலுற்றாம். 17

# 3 இலங்கைமாதேவிப் படலம்

—அனுமன் இலங்கையின் காவல் தெய்வத்தை எதிர்த்தது

### இலங்கையின் மாமதில்

விமலோகச் சிங்கம்அன்னான்,
    வியன்சுடர்கள் விளங்க,விண்ணோர்
தமலோகங் களைக்கடந்த
    தமனியம்ஆம் மதிலைநண்ணி,
எமலோக வாசலினும்
    எழுமடங்குஆம் வாசல்கண்டான்;
சமலோகம் வேறுஉளதோ?
    சலதிஉண்டோ? அகழி;என்றான். 1

நிறைக்கடலே ஏழுஉலகும்
    நெருக்கம்இன்றி உடன்புகல்ஆய்
வரக்கனமே ருவைநிறுத்தி
    வாசல்இட்டால் போலும்என்பான்;
அரக்கர்இரு நூறுவெள்ளம்
    அயில்,கணை,வில், மழு,சூலம்,
கறைக்கண்தோ மரம்,பாசம்,
    கசைபிடித்தோர் காவல்கண்டான். 2

### வாயிலைக் கடத்தல் அரிதுதான்

விளக்கொடுவாள் எயிறுமின்னும்
    மிக்கஇக்கா வலில்பிழைத்து,
கொளக்கடவார் சுராசுரரோ?
    கொற்றவனும் யானும்உற்றால்,
அளக்கஅரிதுஆம் இதைக்கடக்க
    அநேகதினம் செல்லும்என்பான்
உளக்கதியால் மதில்ஏறி
    ஊர்புகுவேன் என்றுசென்றான். 3

1. விமல ஓகச் சிங்கம் - விமலனும்யோகனுமாகிய சிங்கம் - அனுமன். விண்ணோர்தம் அ லோகங்கள் - விண்ணோரது அந்த உலகங்கள். சமலோகம் - சமமான உலகம். சலதி - கடல்.

### அனுமனைத் தடுத்தாள் இலங்காதேவி

ஏகும்போது எதிர்புகுந்தாள்
இலங்கைமா தேவிஎன்பாள்;
வாகுஎட்டாள்; நான்முகத்தாள்;
வகைவகைஆ யுதம்பிடித்தாள்;
சேகுஉளத்தாள்; பிறைஎயிற்றாள்;
திசைதொறும்பார்த்து எரிவிழிப்பாள்;
மாகுரல்சேர் பரிபுரத்தாள்;
மகுடம்மந்தா ரத்தொடையாள். 4

### போய்விடு என்று அதட்டினாள்

முன்னிடில்மூ உலகினையும்
முனிந்துகட்டும் காவலினாள்;
மின்னிடுமெய் அணிகலத்தாள்;
மிருகமத சந்தனத்தாள்;
மன்னிடும்பீத அம்பரத்தாள்
வனசரத்தோடு எனச்சினந்து
பொன்இடும்மா மதில்தாவிப்
பொன்றல்;அடா! போய்விடுஎன்றாள். 5

### நகரைப் பார்த்தன்றி நகரேன் என்றான்

பராரி,இவ்ஊர் ஆசையினால்
பார்க்கவந்தேன் பழுதுஎன்?என்றான்;
புராரிஅண்டா நகரம்உன்னால்
புகப்படுமோ? எனநகைத்தாள்;
இராகவன்தூ தனும்நகைத்தான்;
ஈடுபட்டோ போவது?என்றாள்;
விராவிஇவ்வூர் உலாவிஅல்லால்
மீளேன்;உன் ஆணை;என்றான். 6

4. வாகு - தோள். சேகு - வயிரம் - வட்டார வழக்கு. தொடை - மாலை.

5. மிருகமதம் - கஸ்தூரி. பொன்றல் - வீணாகச் செத்து மடியாதே.

6. பராரி - பஞ்சை பராரி - வட்டார வழக்கு. புராரி - சிவன். ஈடு பட்டோ - அடிபட்டோ - வட்டார வழக்கு.

### எதிர்த்துப் பொருதனர் இருவரும்

எல்லாரும் அஞ்சும்என்னை
இகழ்கின்றான்; குரங்குஅலவே;
கல்ஆன நெஞ்சன்இவன்;
கட்டழிப்பான் ஊரை;என்று
கொல்லாய்என்று ஒருசூலம்
குறித்துஎறிந்தாள்; வரும்அதனைப்
பல்லாலே கடித்துஒடித்தான்
பணிதுணிக்கும் கருடனைப்போல். 7

வரும்அலைபோல் கொதித்துஎழுந்தாள்;
மற்றுஉளஆ யுதங்களினால்
செருமலைவாள், விடுகணைவாள்
திகிரிமுதல் பரசுதண்டம்
பருமலைவேல் பாசம்எல்லாம்
பறித்துஎறிந்தான்; எறிந்தவனைக்
கருமலைகள் பந்தாடும்
கைஇருநா லினும்பிடித்தாள். 8

அடிக்கும்முன்னே கைகள்எட்டும்
அம்கைஒன்றால் பிடித்துஅனுமான்
முடிக்கஎன்னாப் பெண்உயிரை
முறைமைஅன்றுஎன்று ஒருகையினால்
இடிக்குநெஞ்சில் இடிக்க, அவள்
இடிவிழுபாம்பு எனவிழுந்தாள்;
வடிக்குருதி சொரிந்துஅழுந்தி
மலர்அயன்சொல் உணர்ந்துஎழுந்தாள். 9

### பொறுத்தருளப் பிரார்த்தித்தாள்

சிறியோரும் தெளிவுஉறல்ஆம்
சீராமன் தூதன்என்னும்
நெறியோன்முன் நின்றுசொல்வாள்:
நீள்மலரோன் மொழிப்படி,யான்

7. கட்டு - காவல். பணி - பாம்பு.

பிரியேன்இந் நகர்காப்பேன்;
    பேர்இலங்கை தேவிஎன்பார்;
அறியேன்நின் எதிர்மலைந்தேன்;
    அபசாரம் பொறுத்தருள்வாய். 10

### வாழ்த்தி வழி அனுப்பினாள்

எத்தனைகா லம்காப்பேன்
    இவ்இலங்கை? என்ன,அயன்,
முத்துஅனுமான் உனைத்தீண்டில்
    முற்றும்அரண் அழியும்என்றான்;
உத்தமனே முடிந்ததுஅவ்வாறு;
    உன்கையிலா காததுஉண்டோ?
சித்தம்மகிழ்ந்து ஊர்புகுவாய்;
    என்றுஇறைஞ்சிச் சேணில்உற்றாள். 11

## ஊர் தேடு படலம்

—அனுமன் சீதையை இலங்கை எங்கும் தேடியது

கடல்கடந்த வாறும் கடிஇலங்கை காப்பாள்
உடல்கடந்த வாறும் உரைத்தேன்—அடல்அனுமான்
பார்தேடிக் காணாத பங்கயத்தா ளைப்பரவி
ஊர்தேடும் வாறுஉரைப்பேன் உற்று. 1

### இலங்கையில் புகுந்தான் அனுமன்

காவல் முடிந்தாள்சொல் கருத்துஉள்கொண்டான்
கண்ணன் பதம்உன்னி வணக்கம்செய்தான்;
மேவ மதில்ஏறி இலங்கைபுக்கான்
வெய்யோன் எழுந்தான்என்று ஐயம்உற்றான்;
மாஅந் நகர்தானே இருளைநீக்கி
மாறாது ஒளிரும்பிர காசம்கண்டான்;
தாவம் ஒழிந்தான்,இங்கு அருக்கன்வந்தால்
தன்முன் தோன்றும்மின் மினிஎன்றுஎண்ணி. 2

### வடிவம் குறுகிப் புறநகரிலே சென்றான்

நிருதர் நிசிசரராய் ஆனதுஎன்னே?
நிசிவேறு இலைஇந்த நகரிக்குஎன்பான்;
வருதல் ஒழியாதுஇத் தெருவில்என்று
மாயன் புகழ்போல வளர்ந்தஅனுமன்
ஒருதன் பெருவடிவம் சிற்றுருஆக்கி
உயர்யா னையின்கூடம் பரிகள்வாய்ந்த
தருதண் தனிச்சோலை மனைமாடங்கள்
தாவி மலர்மேல்வண்டு எனச்செல்கின்றான். 3

### புறநகரிலே அவன் கண்ட காட்சிகள்

தன்நெஞ்சு அகலாத சவுந்தரன்போல்
சகல மணிவண்ணன் தானேஆனான்,
இன்அம் குழல்வீணை யாழ்கேட்போர்தாம்
இடிக்கும் முகில்வாயை மூடக்கண்டான்;

ன்னம் போல்தெய்வ மாதர்கையால்
அரக்கர் மடவார்நீர் ஆடக்கண்டான்;
முன்னம் தான்செய்த தவமேஅன்றோ?
முயலும் தவமேதம் கருமம்அம்மா! 4

கந்த மடமாதர் நடனம்செய்யக்
கண்டு களிகூரும் பேரைக்கண்டான்;
புந்தி மகிழ்காமப் பயிர்க்குநன்னீர்
போல நறவும்உண் பாரைக்கண்டான்;
இந்து நுதல்பொட்டும் இருகண்அம்பும்
எழுதிக் களபகுங்கு குமத்தைப்பூசி,
உந்தி தெரியக்கற் பகஆடை
உடுத்தி, உலவுமங் கையரைக்கண்டான். 5

சிவந்தார் கருங்கண்ணும் கணவர்கண்போல்
செருக்கும் தெரிவையர்கள் கலவிகண்டான்;
துவந்தஆர் அமுதுஊறும் பவளச்செவ்வாய்
துடிக்கச் சிலர்ஊடும் புலவிகண்டான்;
உவந்தார் உடல்எங்கும் புளகம்செய்ய
உதைக்கும் காற்சிலம்பு ஒலிக்கக்கண்டான்;
கவந்தார் பிரியக்கை கதுப்பில்வைத்தார்
கமல மலர்மேலும் மலர்கள்கண்டான். 6

வரைத்தேன் அல,வாரி அமுதம்அல்ல,
வாய்த்தேன் அமுதுஉண்பார் மகிழக்கண்டான்;
விரைத்தேன் மலர்பாயக் கலவிவெம்போர்
விளைப்போர் விழிவாள்கள் உருவக்கண்டான்;
அரைத்தேர் ஊர்வானை வரக்காணாதார்
அழன்றார் மனைவாசல் அடைக்கக்கண்டான்;
துரைத்தே வழிபார்த்து விழிகள்பூத்தார்
தூதுஆள் வரல்கண்டு தெளியக்கண்டான். 7

இல்வாழ் தம்தெய்வப் பலியைஊட்டி
எழுமங் கலம்பாடி ஆடக்கண்டான்;
வெல்வா ரணம்ஏறி முரசம்ஆர்க்க
விழவுஆர் வீதிகளில் போதக்கண்டான்;

நல்வா னவரோடுஅந் தணர்கள்வாழ்த்த
நனிமா மணம்செய்கின் றவரைக்கண்டான்;
கல்வா வியும்சுற்றும் புதுமனையும்
கட்டிக் குடிபோதும் பலரைக்கண்டான். 8

### கும்பகருணன் மாளிகையில்

மின்னும் இயக்கியர்கள் அரக்கியர்கள்
வித்யா தரமாதர் நாகமின்னார்
என்னும் அனைவோரை நாடிச்சென்றார்;
ஏழு யோசனைஅ கன்றுஅதன்மேல்
மன்னும் புரந்தரன்தன் முடிபதித்த
மணிமண் டபத்துஅங்குஓர் மாளிகைமேல்
துன்னும் இருட்பாவப் பெரும்கடல்போல்
துயிலும் திறல்கும்ப கர்ணற்கண்டான். 9

### உறங்கும் கும்பகருணனைக் கண்டான்

அலைவாய் முழுகிக்கற் பகக்காவில்
அளைந்து வரும்தென்றல் வியர்வைஆற்ற,
துலையா அரம்பையர்கள் கால்பிடிக்க,
சோம காந்தத்துஇன் துளிகள்தூவ,
கலைஆர் மதியத்தைக் கடித்துஉண்கைபோல்
கடைவாய் எயிற்றானைக் கடைஆம்நாளில்
கொலைவா யுவைப்போலும் மூச்சைக்கண்டு
குதித்திட்டு அனுமன்கை குலைந்துநின்றான். 10

சத்தித் தசகண்டன் இவன்என்றுஎண்ணித்
தழல்போல் மிகச்சீறி அருகில்சென்று,
பத்துத் தலையும்திண் தோள்கள்பத்தும்
பத்தும் இலன்என்று சினத்தின்மாறி,
ஒத்திக் கடந்தப்பால் மணிமஞ்சத்தும்
உருவிப் புகைபோகா இடம்எங்கும்போய்,
தெத்து மாடங்கள் மனைகள்கூடம்
தேவா லயம்எங்கும் தேடிச்சென்றான். 11

### வீடணன் மாளிகையில்

நறவுஆர் குழல்மாதர் பலரைக்கண்டான்
நல்வீ டணன்செம்பொற் கோவில்எய்தித்
துறவோர் இறையோர்நல் மறைவாணர்கள்
துதிக்கும் புகழோனை அனுமன்கண்டான்;
மறவோர் அரக்கர்போல் உருக்கொண்டேதான்
மறைந்து வாழ்கின்ற குணசீலன்ஆம்
அறவோன் இவன்என்று கருதிஅப்பால்
அனந்த மணிமாடம் நொடியில்புக்கான். 12

### இந்திரசித்தன் மாளிகையில்

தேவேந் திரன்முன்னர் சிறைகிடந்த
சிறைச்சா லையைக்கண்டான்; அதனைக்காப்போர்
நாவேர் கதையும்கா ரணமும்சொல்வார்
நகுவாள் அரக்கர்கள் பலரைக்கண்டான்;
மாவேல் அறுமுகவன் ஒருமுகமாய்
வளர்பன் னிருதோளும் இரண்டாய்ஆன
கோவே இவன்ஆம்என்று இந்த்ரசித்தைக்
குறித்துஅங்கு அனுமன்கொண் டாடி;தன்னில், 13

இவனே முனிந்துவன் சிலைகைக்கொண்டால்
யாவர் எதிர்நிற்பார் மூவர்அன்றி?
இவனே மகன்ஆனால் இராவணன்தான்
எல்லா உலகமும்ஆ ளச்செல்லாவோ?
இவன்நேர் இளவீரன் தன்போர்மூண்டால்
ஏதாய் முடியும்என்று அறியேன்யானே;
இவனே புணர்மின்னார் அளவுஅற்றார்என்று
எல்லா ரையும்கண்டான் இமைப்பில்சென்றான். 14

### இடைநகர் அகழியைக் கடந்தான்

எண்ணத் தொலையாத படைத்தலைவர்
எழில்மா ளிகைகோடி கோடிபுக்கான்;
நண்ணற்கு அரிதுஆன மதில்கள்மூன்றில்
நடுவுஆம் மதில்சுற்றும் அகழிகண்டான்;

திண்ணத்து இவன்பாய்வது காண்போம்என்று
திரைஏ ழும்செறிந் திட்டதோதான்?
வண்ணத்து இலங்கேசன் ஆணைக்குஉள்ளாய்
வளைந்த தோ?என்று வியப்பும்உற்றான். 15

சாற்ற அரிதாகும் வாக்காலும்;
தாட்ட அரிதாகும் மனத்தாலும்;
போற்றல் குருகுஅன்றில் சிரல்வாகம்
போத வண்டானத்து ஆரவாரம்;
ஆற்ற அதில்நாவி மதுநாற
ஆடும் களிறுஉறப் பிடிஊடும்;
ஏற்ற கமலங்கள் குவிந்ததுஎன்னே
இறைவிக்கு உறவுஆனோர் எண்ணாரோ? 16

**இடைநகருள் போனான்**

மின்னும் பளிங்கின்உத் திரம்நீர்போல்
மேலோர் கயவர்க்குஉள் ளடங்கல்போல்
கன்னி பலரத்னத்து ஒளிபாயக்
கடல்ஏழ் கலந்ததுபோ லும்என்பான்
உன்னி அகழோடு மதில்தாவி
உள்ளூர் புகுந்துஅரை நாழிகைக்குள்
முன்னில் பனிரண்டுஒ சனைவீதி
முன்னூறு ஆயிரம் தேடிச்சென்றான். 17

**நடுநிசியில்**

பேரி அடங்கிமும் முரசுஅடங்கிப்
பெரிய வானமும் ஒலிஅடங்கிப்
பாரி அடங்கிப்பல் லிசைஅடங்கிப்
பயிலும் கலவியின் போர்அடங்கிச்
சேரி அடங்கவும் கதவுஅடைத்துச்
சேர எவரும்கண் ணிமைஅடைத்து
ஊரில் உறங்காதார் ஒருவர்இல்லை;
ஊடிப் பிரிந்தோர்கள் இருவர்அல்லால். 18

16. தாட்ட - தாண்ட - கடக்க.

ஒக்க உணரும்மெஞ் ஞானியரும்
　　யோக புருடரும் முதல்ஆக
மிக்க மதம்பட்ட வாரணமும்
　　வெறிகொண் டவர்தாமும் உறக்கம்செய்தார்;
திக்குளண் மரும்அன்னர் உறைமாடம்
　　தெருவோர் இருகோடி தேடிச்சென்றான்;
அக்கண் இலங்கேசன் மனையைச்சுற்றும்
　　அகழி மதிலையும்கடந்து உள்புக்கான். 19

## அக நகரில் இராவணனுக்கு உரிய இயக்கியர் நிலை

தன்மனையே சந்திரன்போல்
　　தசக்ரீவன் மனைவியர்கள்
பன்மனைதா ராகணம்போல்
　　பயிலும்இடம் கண்டுஅனுமான்
பின்மனையார் இயக்கியரைப்
　　பெரும்தெருவைத் தேடல்உற்றான்;
கன்மனையார் தரித்துஉறங்கார்
　　காரிகையார் தனிமைகண்டான். 20

ஓவியம்போல் வியந்திருப்பார்;
　　உயிர்த்துஇருகண் நீர்சொரிவார்;
பாவிஇரா வணன்அழகைப்
　　படத்துஎழுதிப் பார்த்துஉறைவார்;
மேவிடலாம் கனவில்என்று
　　மெய்யேபோல் விழிதுயில்வார்;
கூவுகிலாய் அவனைஎன்று
　　குலக்கிளியோடு இரங்கிடுவார். 21

எண்களிற்றை வென்றமெய்யும்,
　　எழில்கயிலை எடுத்ததுவும்
பண்பணிப்பா டிப்பயில்வார்;
　　படைமதன்அம்பு உறப்பதைப்பார்;
புண்கள்உற்ற கொங்கைமுத்தம்
　　புதுமதியால் பொரிந்துஉழல்வார்;
பெண்கள்உற்ற விரகம்எல்லாம்
　　பெரும்திறலோன் கண்டுசென்றான். 22

### அரக்கியர் நிலை

நலமனைஆர் இயக்கியரை
நாலுலட்சம் தேடியபின்,
குலமனையார் அரக்கியரைக்
குறித்துஅனுமான் தேடல்உற்றான்;
சிலமனையார் பளிக்குஅறைக்குள்
சிந்தைவெந்து தேம்புகின்றார்;
பலமனையார் பாயலின்மேல்
பாம்புஎனவே புரளுகின்றார். 23

மின்இடையாய் மழைவிழியாய்
விரைந்தசெக்கர் விரைகுழலாய்
அந்நிலவுஆர் மதிமுகமாய்
அந்திவிண்போல் பார்ப்பர்சிலர்;
கன்னியர்ஆம் அரம்பைதமைக்
களிநடம்கண்டு இருப்பர்சிலர்;
மன்னியதா ரகைவாரி
மணிக்கழங்குஆ டுவர்சிலரே. 24

ஆ!கணவன் தனைக்கொணராய்
அனமேநீ கொடியைஎன்பார்;
வேகநல்வான் ஆறுசுட
மேகநல்நீர் தனில்குளிப்பார்;
பாகுஅனபண் பாடிநைவார்;
பாணிகொட்டி வயங்கிடுவார்;
மோகனம்ஆம் குரவைபற்றி
முளைத்ததுஎன்மேல் தெய்வம்என்பார். 25

இத்திறம்ஆம் இராக்கதிமார்
ஈர்இரண்டு கோடிமனை
சித்திரம்ஆம் எனத்தேடி,
சித்தியர்வாழ் பொன்மாடம்
அத்திரம்ஆம் அவைபலவும்
ஆராய்ந்தே அஞ்சனைதன்
புத்திரன்தான் விஞ்சைமின்னார்
புகும்இடங்கள் நாடல்உற்றான். 26

**விஞ்சை மகளிர் நிலை**

இராவணனை வரக்காணார்
ஏழிசையும் இருசெவிக்குள்
அராஎனவே புகப்பதைப்பார்;
அம்புலித்தீ சுடத்துடிப்பார்;
விராவும்அவன் நகக்குறிதன்
மேனியில்பார்த்து உளம்கொதிப்பார்;
பராவும்மின்னார் மாளிகைகள்
பன்னிருகோ டியும்கடந்தான். 27

**கண்டான் மண்டோதரியை**

இன்னம்அயன் தனக்கும்எட்டா
இராவணன்கோ யிலைஅடுத்தான்;
வன்னமயன் பெற்றமண்டோ
தரிவாழும் மனையைஉற்றான்;
என்அமையை ஒளித்தஇடம்
இங்குஇதுவே; மனைக்குள்எல்லாம்
மின்அமையும் மால்மணிபோல்
விளங்கியதே எனவியந்தான். 28

அரம்பையரே இசைவழங்க,
அடிவருட, கவரிஇட,
திரம்பயில்கற் பகவாசம்
தென்றல்கொண்டு வந்துஉலவ,
வரம்பெறுதீ பமும்மணியும்
மறையவிளங்கு எழிலாளை
உரம்பயில்வான் சீதைஎன்றே
உளமயக்கால் ஐயம்உற்றான். 29

சானகியார் இவர்ஆனால்
சகம்முழுதும் அழியாதோ?
தேன்அமர்தார் இராமபிரான்
திருஅழகைக் கண்டுஉவந்த
மான்அனையார் சிந்தனைதான்
மன்மதன்மே லும்செலுமோ?
ஆனதினால் இவள்வேறுஆம்;
அடாதுஉணர்ந்தோம் என்றுநொந்தான். 30

வாய்வெருவி உறங்குகின்றாள்,
மகிழ்நனும்தான் மடிந்திடுவான்;
ஆய்வுஅரிதுஆம் இந்நகர்க்கும்
அழிவுஉளது;என்று அறிந்து,அனுமன்
சாய்வுஅரிதுஆம் இராவணன்தன்
தனிநெடுமா ளிகைபுகுந்தான்;
ஓய்வுஅருமங் கலகலசம்
உடைந்துநிலம் கிடந்ததுவே. 31

**இராவணன் மாளிகையில்**

இக்குறிகள் விதிவலியால்
இந்நகரம் அழியும்என்றே
கைக்குஉறுநெல் லியங்கனிபோல்
கண்டு,அனுமான் கண்டுநின்றான்
பைக்குறிவாள் பன்னகம்போல்
பாற்கடல்மேல் கார்க்கடல்போல்
சொக்குறுவான் கோளரிபோல்
துஞ்சும்இரா வணன்தனையே. 32

சேகரமும் பூஷணமும்
செங்கதிர்போல் வெயில்எறிக்க
மாகரமும் வாள்முகமும்
வந்துசிந்தும் கற்பகத்தோன்
சீகரமும் ஆயிரம்பேர்
தெய்வமின்னார் ஆலவட்டம்
மோகரமும் புகுந்துஅளவில்
முருக்கிமெய்யை உருக்கிடவே. 33

வம்புபட்ட நாசிஎல்லாம்
வன்துருத்தி போன்றுஉயிர்க்க,
வம்புபட்டு மதன்போரில்,
வான்கயிலை எடுத்தபுயம்
கொம்புபட்ட தழும்புஒசிய,
கொடுமனப்பாம்பு அழிநெறிபோய்
வெம்புபட்ட நெஞ்சம்எனும்
விரிந்தபுற்றும் பாழ்படவே. 34

தேவர்பெரும் புகழைஉண்டு
தெவிட்டியது கடைவாயில்
போவதுபோல் எயிறுமின்ன,
பொங்குஅணியும் வெம்கணையாய்
வேவதினால் மேனிஎங்கும்
வேர்வைஎனும் குமிழிஎழ,
மாஅலர்உண் வண்டினமும்
மாலைகளும் கரிந்திடவே. 35

உயிர்ப்பதுஎன்னும் சாகசத்தால்
உயிர்தனைத்தான் ஈவானை,
வயிர்ப்படைவா னவர்படையை
வாய்மடுத்த மார்பானை,
செயிர்ப்பகைவர் முடிவணங்கச்
சிவந்தபுறத் தாளானை
அயிர்ப்பதுஇல்லாக் குறள்வடிவோன்
அனுமன்கண்டு உளம்கொதித்தான். 36

பொன்இயல்கோ தையைஒளித்த
புல்லன்என்முன் பிழைப்பானோ?
சென்னிபத்தும் திருகேனேல்
தேவனுக்குஎன் அடிமைஎன்ஆம்?
என்னும்மிக்க கொடும்சினத்தால்
எற்றஎன்றே கைஓங்கி,
உன்னி,மற்றும் நம்பெருமான்
உரைப்படிஅன்று எனத்தவிர்ந்தான். 37

ஆழியும்ஈ சனும்முதலாய்
ஆம்காலம் அறிந்துசெய்வார்;
ஊழிநம்கோன் கணைக்குஇலக்கை
ஒருகவிநான் வெலத்தகுமோ?
தாழில்நன்றே கோபம்என்பான்
தாழ்வுஅறத்தே டினன்காணான்;
வாழில்நம்தாய் தனைச்சினத்தால்
வதைத்தனனோ? எனக்கரைந்தான். 38

**இலங்கையை அழித்துத் தானும் மாள எண்ணினான்**

கண்டுஅனுமான் வருவன்எனும்
காவலர்முன் போவதுஎங்ஙன்?
எண்தவம்தான் பலித்திலதால்;
எழுநூறுஒ சனைபார்த்தும்
தொண்டுஅவமாய் முடிந்ததுவோ?
தூர்த்தனைவாய் கலங்கஎற்றி,
ஒண்டொடியைக் காட்டுஎனவோ?
ஊர்எரியத் தீஇடவோ? 39

ஆனவிண்ணோர் தமைக்கேட்டால்
அரக்கனுக்குப் பயந்துசொல்லார்;
சானகியார் இதனில்என்ற
சம்பாதி சொல்இதுவோ?
கோநகரோடு இராவணனைக்
கொன்றுஇறப்பேன் என்றுஅனுமான்
மானம்இரண் டையும்நோக்கி
மணிமலர்க்கா ஒன்றுகண்டான். 40

40. மானம் இரண்டையும் - மானம் (பெருமை), விமானம் இரண்டையும்.

# 5 வந்தனைப் படலம்

—அனுமன் சீதையைக் கண்டு வணங்கியது

ஈதுஅனுமான் ஊர்தே டியதுஉரைத்தேன்; ஈங்குஇனிமேல்
சீதைதனைப் பூங்காவில் தெண்டன்இட்டு—போதமனம்
தேய்ந்த மெலிவால் திருஆழி மோதிரத்தை
ஈந்தசெயல் கூறுகின்றேன் யான். 1

**அசோக வனத்துள் புகுந்தான் அனுமன்**

இந்த மலர்க்காவில் திருவைக் கண்டால்
இறவேன் நானும்நல் அறமும் என்பான்;
அந்த மலர்க்காவில் அனுமன் புக்கான்;
அமரர் மலர்தூவி அகம்ம கிழ்ந்தார்;
நிந்தை அரக்கியர்கள் நெருங்கச் சுற்றி
நிருதன் சிறைவைக்க, நீரைக்கா ணாது
எந்த மருந்துபோல் உலர்ந்த மெய்யாள்
இருந்த பெரும்துன்பம் சொல்லல் ஆமோ. 2

**சீதையின் துயரம்**

இடையைப் போல்ஆகம் மெலிந்துநொந்தாள்;
இமைப்பும் விழிப்பும்மற்று உறக்கம்இல்லாள்;
மிடையப் புலிசுற்றும் மான்ஆனாள்;
வெயிலில் பொலிவுஅற்ற விளக்கானாள்;
உடையப் புவிமீதில் விழுதல்,விம்மல்,
உடையோன் அருள்எண்ணி வணக்கம்செய்தல்,
அடையத் திகைப்புஎய்தல், மழைகண்பெய்ய
அழுதல், இரங்கிடுதல் அலதுஒன்றுஇன்றே. 3

திங்கள் தனைப்பற்றி விடும்பணிபோல்
திரண்டு குழல்ஒரு சடையானாள்;
தங்கள் குலத்துஉற்ற பழிபார்ப்பாள்;
தலைவன் வரும்என்று வழிபார்ப்பாள்;

2. நீரைக் காணாது எ(ழு)ந்த மருந்து (மருந்தாக உதவும் செடி) போல்.

அம்கண் முகிலுமஞ் சனமும்கண்டால்
அதிக மணிவண்ணம் நினைந்துநைவாள்;
வெம்கண் விழிநீரால் நனைந்துசிந்தை
விரகஅக் கினிக்குஆரும் பரிவடத்தாள். 4

**பழைய நினைவுகளால் உயிர் பதைத்தாள்**

அல்லா ளனைத்தம்பி காணானோ?
அலைக்குள் இலங்கைஎன்று அறியாரோ?
பொல்லான் கொடுவந்தது அறியாரோ?
புகல்வார் ஆர்?புள்ளின் வேந்தன்பட்டான்;
சொல்லா மொழிசொன்னாள் இளையோனைத்
துன்மா மதிஎன்று துறந்தானோ?
இல்லாள் இறந்தாள்என்று இருந்தாரோ?
என்று பலசொல்லி நிலைசோர்வாள். 5

நிறைத்த விருந்துஉற்றால் அடியேனை
நெடியோன் நினைக்குமோ? மறக்கும்கொல்லோ?
குறைத்த கரன்சேனை எதிர்த்தாற்போல்
கொடிய அரக்கர்கள் வளைந்தாரோ?
இறைத்த தமரோடும் பரதன்வந்தே
எழில்மா நகரில்கொண்டு அடைந்தானோ?
உரைத்த அவதிக்குஅல் லாதுசெல்லாது;
உற்றது அறியேன்;என்று உயிர்சோர்வாள். 6

அரசுஎய் தியபோதும் வனத்தில்வந்தும்
அலர்ந்த தாமரைத் திருமுகமும்,
உரைசெயற்கு அளவுஇல்சங் கரன்சாபம்
ஒல்லை ஒடித்திட்ட புயவலியும்,
கரைசெய் திடவொண்ணா கரன்சேனை
கடிகை ஒருமூன்றில் வதைத்திட்டதும்,
பரசு ராமன்தன் தவமும்வில்லும்
பறித்த வீரமும் நினைந்துநைவாள். 7

அம்பி தனில்கங்கை கடக்கவிட்ட
அவனைப் பார்த்து,உனக்கு இவள்கொழுந்தி;
நம்பி நின்தம்பி; நீஎன்தம்பி
என்று கூறியதோர் கருணைச்சொல்லும்,

தம்பி பரதன்பொன் முடிதுறந்து
    தரித்த சடையைக்கண்டு இரங்கியதும்,
வெம்பு சயந்தற்கும் காகங்கட்கும்
    விழிஒன்று அளித்ததுவும் வியந்துகொள்வாள். 8

**இடம் துடித்தன; நேர்வது யாதோ?**

ஆய துயர்ஆர் அருட்சீதை
    அசோக வனத்துஇவ் வாறுஇருந்தாள்;
தீய அரக்கியர் அனைவோரும்
    சேரத் துயின்றிட்டார் அதுபோதில்,
தாயை அனையதுஓர் அன்புஉடையாள்
    தக்க திரிசடை தனைநோக்கி,
தூய புருவம்கண் எனக்குஇடமே
    துடிக்கின் றனஎன்று சொல்லல்உற்றாள்: 9

இறைவன் மிதிலைக்கு வருநாளில்
    இடமே துடித்தன தோளும்கணும்;
நிறைவுஅந் நகர்விட்டு வனம்எய்துநாள்
    நேரே வலப்பக்கம் துடித்திட்டதால்;
மறைவஞ் சகன்கேடு சூழ்கின்றநாள்
    வலமே துடித்தது; மாதுநல்லாய்!
சிறைவந் திடத்துஇடம் துடிப்பதென்னே?
    எனலும், திரிசடை தெரியச்சொல்வாள்: 10

**நல்லதுதான் என்ற திரிசடை**
**தான் கண்ட கனவைக் கூறினாள்**

நன்று; சோபனம்;மிக நன்று,அன்னே!
    நண்ணு வாய்உந்தன் கணவன்தன்னை;
ஒன்றும் கனவுஇல்லை, துயில்இல்லையால்;
    உன்முன் பொன்தும்பி ஊதக்கண்டேன்,
இன்றுஉன் மணவாளன் தூதுஇங்குஎய்தும்;
    என்சொப் பனம்தன்னில் இலங்கைமன்னன்
கன்றும் தலைக்குஎண்ணெய் சாத்தித்தெற்கே
    கழுதை புனைதேரில் போகக்கண்டேன். 11

போய ராவணன் துணைவரொடும்
புதல்வ ரொடும்மீள வரக்காணேன்;
தூய பூரணகுடங் கள்பொங்கி,
தும்பி மருப்பும்தோ ரணமும்இற்று,
தீயன் வளர்க்கும்செந் தீயும்கெட்டு,
செஞ்சொல் புறத்துஇல்லத்து இடிவிழுந்து,
மேய பிடியானை மதம்பொழிந்து,
மீனம் உதிர,வான் அதிரக்கண்டேன். 12

இலங்கை நகர்வேக, இழிக்கும்மங்குல்
இரத்த மழைபெய்ய, மகரமுந்நீர்
கலங்க, மயன்மகள் முதல்எல்லாரும்
கலங்க ளுடனேமங் கலங்கள்சிந்த,
அலங்கல் குழல்கண்ணீர் சோரக்கண்டேன்;
அரிகள் திரண்டுவந்து, அடல்வேங்கைக்
குலங்க ளுடன்கூடி, மதயானைக்
குலங்கள் அனைத்தையும் கொல்லக்கண்டேன். 13

பேர்ஆ யிரம்கொண்ட திரிவிளக்கம்
பிடித்து ராவணனின் மனையில்நின்றும்
ஓர்ஆ யிழைஎந்தை கோயில்புக்காள்;
உணர்ந்தே முடியும்முன் உணர்த்தினைநீ;
ஏரார் இறப்பார்என் றதனைக்கேட்டாள்,
இன்னம் துயில்அன்னே என்னும்போதில்,
சேரா அரக்கியர் துயிலின்நீங்கிச்
சீறி எழுந்தாரை அனுமன்கண்டான். 14

**கண்டுகொண்டான் சீதையை**

நிறைந்தே மழுச்சூலம் அயில்வேலார்
நெருங்கி, உறங்காத செயல்என்?என்று
விரைந்தே மரம்ஒன்றின் மேல்மறைந்து,
வீர ராகவன்தன் பெருந்தூதன்
இரைந்தே அரக்கியர்கள் பலர்சூழ
இனமா மேகத்துஉள் இலங்கும்மின்போல்
கரைந்தே வாவியுள் அனம்போலே
கண்ணன் மருவும்கண் ணாளைக்கண்டான். 15

**நல்லதம்பிதான்**

விக்ர மாதித்தன் தீத்தான்சொல்
விழியன் பிறவிக்கு நல்லார்க்கும்
சக்ர மாலுக்கு வேலவன்போல்
தருமா மருகனாம் வரராமன்
அக்ர கண்யமோ ரூரன்கண்ணன்
அர்த்த நாரிநல் லானைக்கண்ட
வக்ர காலத்தில் இரவலர்போல்
வாழ்ந்தான் அனுமந்தன் திருவைக்கண்டே. 16

**அனுமனின் குதூகலமும் வியப்பும்**

தாய்இவள்என்று உளத்துஇறைஞ்சித்
தருமமும்,வே தமும்,யானும்,
மாயிருஞா லமும்,சுரரும்
வாழிஎன்றுஆ டிப்பாடி,
ஆயிரநா மனும்திருவும்
அவதரித்தார்; அரக்கர்என்னும்
தீஇனமும் தீவினையும்
தீர்க்கஎன்றே மனம்மகிழ்ந்தான். 17

கொலைக்கணையால் உகம்முடிப்பான்
கொற்றவன்என்று அச்சம்உற்றேன்;
அலக்கண்இலை உலகில்இனி;
அருள்அடையா ளத்துஅடைவே
இலக்கணமும், கற்பும்நன்றே;
எத்தவமும் இதற்குஇணையோ?
நலக்கணவன் கண்டிலனே
நன்மலர்க்கண் ஆரஎன்றான். 18

சனகமன்னன் குலம்தனையோ,
தையல்நல்லாள் மனம்தனையோ,
அனகன்எம்கோன் நலம்தனையோ,
அறம்தனையோ புகழ்வேன்யான்?
தினகரன்பால் சுருதிகற்றோன்
செழுமலர்க்கா மீதுஇருந்தான்;
கனகமலர்க் காவில்அப்போ
கார்அரக்கன் தோன்றினனே. 19

### ஆடம்பரமாய் வந்தான் இராவணன்

பொருப்புஎடுத்த தோள்வளையும்
பூடணமும் வெயில்எறிக்க,
மருப்புஒடித்த மார்பினில்நூல்
மழைக்கார்மின் போல்விளங்க,
செருப்புஎடுக்க வாள்பிடிக்க
திலோத்தமையும் ஊர்வசியும்,
விருப்புஅடப்பம் கவரிஇட
மேனகையும் அரம்பையுமே. 20

பத்துஇரவி போல்மகுடம்
பத்தும்மின்னப் பல்கதம்பம்
எத்திசையும் வீச,மின்னார்
எண்கோடி விளக்குஏந்த,
முத்தின்அணி தாரகைபோல்
முறுவல்நிலா இருள்அகற்ற,
சித்திரவீ ரக்கழல்கள்
சிலம்பினொடும் கலகலென்ன; 21

வன்னமுலை மாதர்கண்கள்
மார்பிலும்தோ ளிலும்அழுந்த,
கின்னரர்கிம் புருபாட,
கெழுமியரம் பையர்ஆட,
அன்னவன்ஆ யுதம்அனைத்தும்
அரக்கர்சென் னியில்சுமக்க,
இன்னவன்போக்கு எவ்வளவோ?
என்றுவிண்ணோர் ஏங்கிடவே. 22

திசாமுகவா ரணத்தைவென்றான்
செயிப்பதுஇனி யாரைஎன்று
கசாமுகசூ ரனும்நடுங்கக்
கலாமதிவெண் குடைவிளங்க,
நிசாமுகவேள் சரம்துளைக்க,
நிலாவும்மந்தா நிலம்வருத்த,
புசாமுகசே டனும்பதைக்க,
பூங்காவும் கரியவந்தான். 23

### பதறினாள் சீதை

தானைமின்னார் தனைநிறுத்தித்
தார்அரக்கன் தனித்துவந்தான்;
தேன்அனையாள் வேங்கைகண்ட
சிறுமான்போல் நடுக்கம்உற்றாள்;
ஆனதன்மை கண்டுஅனுமான்
அறியஎன்றே மறைந்துஇருந்தான்;
சானகியும் இராகவனும்
தண்அறமும் வாழிஎன்றே. 24

### தலைமீது கைகுவித்துச் சாட்டாங்கமாய் வீழ்ந்தான் இராவணன்

அக்கண்உற்றே இராவணன்தான்
அமுதுஎனஓர் நஞ்சைஎண்ணி,
முக்கணற்கும் வாசிகுன்றான்
மோகமும்நா ணமும்வருத்த,
இக்கணத்துஎன் உயிரைநல்காய்;
இறந்தபின்னோ கருணைசெய்வாய்?
செய்க்கணைக்கா மனைவிலக்காய்;
திருவேஎன்று இரக்கல்உற்றான். 25

கதறிவிழுந் ததும்கேட்டு;
கணவனைநீ காணஎன்றோ
சிதறுகின்றாய் பாக்கியத்தை?
செய்தவத்தால் ஆவதுஎன்னே?
குதறிமா னிடவாழ்வைக்
குறித்துஇருந்தால் இளமைநில்லா,
இதுஅறியாய்; மனத்துஅருளும்
இடையும்அயன் வகுத்திலனோ? 26

25. ஈசற்கு ஆயினும் ஈடுஅழி வுற்றுஇறை
வாசிப் பாடுஅழி யாத மனத்தினான்
ஆசைப் பாடும்அந் நாணும் அடர்த்திட,
கூசிக் கூசி இனையன கூறினான். —கம். 98.

சீர்உறவாழ் வானவர்தம்
தேவியர்நின் அடிவணங்கப்
பேர்உறவாழ் அரசுபெற்றுஎன்
பிராணனைக்காத்து அருள்களன்றே,
தார்உறுகை ஐந்நான்கும்
தலைகள்பத்தின் மிசைகுவித்துப்
பார்உறவீழ்ந்து இறைஞ்சினனே
பழிபாவம் பாராதான். 27

27.—குடிமை மூன்றுல கும்செயும் கொற்றத்துஎன்
அடிமை கோடி; அருளுதி யால்எனா,
முடியின் மீது முகிழ்த்துஉயர் கையினன்
படியின் மேல்விழுந் தான்பழி பார்க்கலான். —கம். 110.

## 6 உருக் காட்டு படலம்

*—அனுமன் சீதையிடம் இராமனின் செய்தியைத் தெரிவித்துத் தன் வடிவத்தைக் காட்டியது*

*அரக்கர்க்கு இறைதொழவே அம்கயல்கண் செந்நீர்*
*வரக்கற்பு உடையாள் மருகி—இரக்கம்அற்ற*
*புன்துரும்பா! தீமதியாய்! பொன்றுதியோ? என்றுஅங்குஓர்*
*துன்துரும்பைப் பார்த்தே சொலும்.* 1

**பதரே என்ன சொன்னாய், தூரப் போ**

*எம்கோன் கணைக்குஆரும் இலக்குஅன்றுஎன்றே*
*எண்ணி, மாயம்செய்து, எதிர்க்கஅஞ்சி,*
*வெம்கோள் புரிந்தாயே? பறவைக்குஅன்று*
*வீழ்ந்தாய்; அரன்வாளால் உயிரும்பெற்றாய்;*
*அங்குஓர் பகழிக்கும் இறைபோதா;*
*அநேக வரமும்உன் உரமும்வெய்யோன்*
*பொங்குஉ தயம்கண்ட இருளேபோல்*
*போகும்; பனிபோல ஏகும்;புல்லா!* 2

*ஒருதாள் விரலால்உன் வலிஅழித்தோன்*
*உரத்துக்கு ஏற்றவில்லை ஒடித்தசத்தம்*
*கருதா யோ?எந்தன் இறையோன்தன்னைக்*
*கண்ணன் சிவன்வேதன் போலக்கண்டாய்;*
*பொருதுஆ னையைவென்றாய்! இளையோனின்முன்*
*பொராதே இழைத்துஅன்றோ பிழைத்துவந்தாய்?*
*இருதாள் அரிகண்டால் இலங்கைமட்டோ?*
*இறக்கும் உலகுஅன்றே இரங்குகின்றேன்.* 3

*பார்த்த நரர்என்பாய்; இருவர்என்பாய்;*
*பாவம் பலவும்நல் அறத்தின்முன்னோ?*
*கார்த்த வீரியனும் மனிதன்அன்றோ?*
*கடைநாள் உலகுஉண்பான் ஒருவன்அன்றோ?*

ஆர்த்த இரணியன்தான் தருமம்அற்றே
அழிந்தான்; அரன்இன்றும் தவம்விட்டில்லான்;
போர்த்த பிறப்புஅற்று வீடுபெற்றார்
புலன்வென் றவர்அன்றிப் பிறர்யாரோ? 4

கோமான் உமைஎல்லாம் அரும்தவர்க்காய்க்
கொல்லக் குறித்தற்கே இசையச்செய்தாய்;
காமாள் உன்தங்கை செவியும்மூக்கும்
கரனைப் படையோடும் அறுத்ததுஎண்ணாய்;
தோமா உனைக்கட்டிச் சிறையில்வைத்தோன்
தோள்ஆ யிரம்துண்டித் தவனும்தோற்றான்;
ஆமா தரவும்மந் திரத்தைக் கேட்கும்;
அழியா நெறிகேளாய்; அகல்,போ;என்றாள். 5

## இராவணனது நிலைமை கண்டு அனுமன் சிந்தித்தது

கேட்டான் அரக்கன்கண் நெருப்புப்பொங்கிக்
கிளியை விழுங்குவன்என்று எழுந்து,பின்னும்
மீட்டான் கோபத்தை விரகம்தன்னால்;
வெகுண்டுஅங் கதுகண்ட அனுமன்தானும்,
தீட்டா அரக்கன்கை தீண்டும்முன்னே
திருகித் தலைபத்தும், இலங்கைதன்னைத்
தோட்டா ழிஉள்சிந்தி, மயிலைமன்பால்
சுமந்து கொடுபோகத் துணிந்துஇருந்தான். 6

## வஞ்சம் செய்ததற்குக் காரணம் சொன்னான் இராவணன்

நின்று முனிவுஆறி அரக்கன்சொல்வான்:
நேர்ந்தால் யாரும்என் எதிர்நிற்பரோ?
வென்று தோற்றதுவும் விளையாட்டேஆம்;
வேணும் எனில்எனக்கு அரியதுஉண்டோ?

5. கோமான் - இராமன். காமாள் - காமி (புதுச்சொல்). தோமா - தோம் ஆக. இராவணனைச் சிறையில் வைத்தவன் கார்த்தவீரியன். அவனுடைய தோள்களைத் துண்டித்தவன் பரசுராமன். ஆமாதரவு: ஆம், ஆது, அரவு. அது, ஆது என நீண்டது.

6. தீட்டா - தீட்டு. அ - அந்த - சுட்டு நீண்டது. தோட்டாழி - தொடு - தோண்டு, ஆழி - கடல்;

அன்று மனிதரைப் பொருதுகொன்றால்
ஆவி விடுவாய்;நீ ஆவிவிட்டால்
ஒன்றும் தரியேன்,இன் உயிர்வாழேன்;
ஓர்ந்து, பிரித்து,ஓர்உ பாயம்செய்தேன். 7

## இரண்டு மாதம் தவணைவைத்துப் போனான்

இருவர் இனிவாரார், இருந்தாலும்
என்ஆள் இமையோரும் அவர்க்குஆகார்;
ஒருவர் மூவர்க்கும் ஏவல்செய்யார்;
உம்பர் கோனும்என் ஏவல்செய்வான்;
மருவ உனைத்தந்த செய்நன்றியால்
வதையேன், பிடித்துவந்து ஏவல்கொள்வேன்;
அரிவை இரங்காயேல் மிதிலைமுற்றும்
அயோத்தி யவர்வேர் அறுப்பன்என்றான். 8

எண்மாதம் இரண்டில் இசையாயேல்
இறந்தாய் இனிநீ,ஓர்; இலங்கைமன்னன்
கொண்மா பயத்தாலும் நயத்தாலும்
கூட்டா விடில்கொல்வேன் உமையும்என்று,
திண்மாது அரக்கியர் தமக்கும்சொல்லிச்
சென்றான்; கருநாகம் விழுங்கிவிட்ட
வெண்மா மதிஒத்த சனகன்மின்னை
வெகுண்டுஅங்கு அரக்கியர்வி ளம்பல்உற்றார்: 9

## சீதையை அதட்டி அச்சுறுத்தினர் அரக்கியர்

எற்றும் பிடித்துஎன்பார்; விழுங்கும்என்பார்;
எறியும் சிலைவாளால் அரியும்என்பார்;
பற்றும் மறைஒராயி ரமும்வல்லோன்
பணிய அவன்செய்த பழுதுஎன்?என்பார்;

7. வெல்வதும் தோற்றல்தானும் விளையாட்டின் விளைந்த மேல்நாள்.
—கம். 138.

8. ஒருவரும் ஏவல் செய்யார்.
பதவிய மனித ரேனும் பைந்தொடி நின்னைத் தந்த
உதவியை உணர நோக்கின் உயிர்க்கொலைக்கு உரியர் அல்லர்.
—கம். 144.

9. நீ ஓர்வாயாக என்று சீதையிடம் சொல்லி,

நற்றும் மனம்உன்னை நயந்ததுஅன்றி,
நடக்கும் நெறிக்குஎன்ன கறைஉண்டுஎன்பார்;
உற்றுஉன் இருபாலும் வினைசூழ்ந்தது
உரைத்தோம் உணராய்இது உண்மைஎன்பார். 10

## அனுமன் விஞ்சையால் உறங்கினர் அரக்கியர்

காயும் அவர்தன்னைத்- திரிசடைதான்
கனவின் நிலைசொல்லிச் சினம்தீர்த்தாள்;
ஆயும் மனத்தோர்அடங்கிப்பின்னை
அனுமன் செபத்தாலும் மயக்கம்உற்றார்;
தாயும் திருஉள்ளத்து இடர்ஆற்றாள்,
தலைவன் எனைஆள வருவதுஎந்நாள்?
ஏயும் சிலைஓசை கேட்பதுஎந்நாள்?
என்று பலபன்னி ஏங்கல்உற்றாள். 11

## துயர் ஆற்றாது புலம்பினாள் சீதை

இரவே! நிறைமதியே! கொடும்தென்றலே!
இறைவன் பால்சென்றும் காய்வீரோ?
வரவே பார்க்கின்றேன் நெடுமாலே!
வந்துஎன் இடர்தீராய் மணவாளா!
அரவே! வணங்கார் முறைஊரில்
அடைவேன், விரைந்துவந்து அருள்வானோ?
உரைவே தனைக்கும்வன் பழிக்கும்ஐயோ!
உலகாய் இருந்தேன்;என் உயிர்சுமந்தேன். 12

தந்தை முடிவிலும் வனத்தில்வந்த
தறுகண் அவன்இங்கே வருவதுஉண்டோ?
சிந்தை நலம்இல்லா அரக்கன்வைத்த
சிறையில் இருந்தேனை இனித்தீண்டான்;

10. வையம் தந்த நான்முகன் மைந்தன் மகன்மைந்தன்
ஐயன் வேதம் ஆயிரம் வல்லோன் அறிவாளன்
மெய்யன்பு உன்பால் வைத்துளது அல்லால், வினைவென்றோன்
செய்யும் புன்மை யாதுகொல்? என்றார், சிலர் எல்லாம்.

—கம், 149,

நிந்தை சுமந்துமா ளாதுஇருந்தேன்;
நீச அரக்கியர் எனைப்போல்ஆர்?
எந்தன் உயர்கற்பும் நானும்நன்றே
என்றும் கதையாக முடிந்தேனே. 13

மான்பின் இறையோனைச் செலவிடுத்தேன்;
வைதுஅங்கு இளையோனைப் போகவிட்டேன்;
யான்பின் அரக்கர்தம் இடத்திருந்தேன்;
இறவாது இருந்தக்கால் உலகுஎன்சொலும்?
தான்பின் நிருதரை வேர்அறுத்துத்
தமியேன் சிறைமீட்டு ஊரில்சென்றால்,
கோன்பின் புகாதே,நீ கோயில்!என்றால்
குலமா மடவார்முன் யான்என்செய்வேன்? 14

## உயிர்விடத் துணிந்த சீதைமுன் இராமதூதன் என்று தோன்றினான் அனுமன்

வெய்ய துயர்போகாது உயிர்இருந்தால்,
வீழ்ந்தால் அறமும்நற் புகழும்எய்தும்;
துய்ய உயிர்விடா வகைகாப்போர்
துயின்றார், இடம்காலம் இதுவேஎன்று,
செய்ய மாதவிப் பொதும்பில்சென்ற
திருவின் செயலைக்கண்டு அனுமன்அஞ்சி
அய்யன் வரராமன் தூதன்என்றான்,
அடைந்தேன் அடியேன்என்று, அஞ்சிநின்றான். 15

13. முடியா முடிமன் னன்முடிந் திடவும்
படிஏ ழும்நெடுந் துயர்பா விடவும்
மடியா நெறிவந் துவனம் புகுதும்
கொடியார் வரும்என் றுகுலா வுவதோ? —கம். 9.
சிறைஇருந் தேனைஅப் புனிதன் தீண்டுமோ? —கம். 11.
என்னின்வேறு அரக்கியர் யாண்டை யார்கொலோ? —கம். 12.
14. வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கிஎன்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாய்எனா
நஞ்சனை யான்அகம் புகுந்த நங்கையான்
உய்஑்சனென் இருத்தலும் உலகம் கொள்ளுமோ? —கம். 17.

**என்னை ஐயுறல் வேண்டா என்றான் அனுமன்**

*அனகன் அறியான்இங்கு இருந்ததன்மை;*
*அறிந்தால் இருப்பரோ அரக்கர்பின்னை;*
*சனகன் தவமேஐ யுறல்வேண்டா;*
*தலைவன் அடையாளம் உளதேஎன்றான்;*
*பனகம் மறைமாய வேடம்அல்ல,*
*பண்டுபோல் என்கோன்நா மம்சொல்லி,*
*என்அகம் கரைத்துஆவி தரிக்கச்செய்தான்*
*என்றே தெளிந்து,யார் நீ?என்றாள்.* 16

**தான் வந்த வரலாறு கூறினான் அனுமன்**

விருத்தம்

*ஆயசொல் தலைமேல் கொண்ட*
*அங்கையன், அன்னை! நின்னைத்*
*தூயவன் பிரிந்த பின்பு*
*தேடிய துணைவன், தொல்லைக்*
*காய்கதிர்ச் செல்வன் மைந்தன்,*
*கவிக்குலம் அவற்றுக்கு எல்லாம்*
*நாயகன், சுக்கி ரீவன்*
*என்றுளன், நவையின் தீர்ந்தான்.* 17

*மற்றுஅவன் முன்னோன் வாலி;*
*இராவணன் வலிதன் வாலின்*
*இற்றுஉகக் கட்டி, எட்டுத்*
*திசையினும் எழுந்து பாய்ந்த*
*வெற்றியன்; தேவர் வேண்ட,*
*வேலையை விலங்கல் மத்தில்*
*சுற்றிய நாகம் தேய,*
*அமுதுஎழக் கடைந்த தோளான்.* 18

16. பனகம் மறை மாய வேடம் - பாம்புபோன்று கரந்துறையும் மாய வேடம்.

குறிப்பு: இப் படலத்தின் 17 முதல் 22 வரையுள்ள 6 பாடல்கள் ஏட்டிலே சிதைவுற்றன; இவற்றுக்குப் பதிலாகக் கம்பருடைய விருத்தங்கள் 6 இங்கு இடம் பெறுகின்றன.

அன்னவன் தன்னை உம்கோன்
அம்புஒன்றால் ஆவி வாங்கி,
பின்னவற்கு அரசு நல்கித்
துணைஎனப் பிடித்தான்; எங்கள்
மன்னவன் தனக்கு, நாயேன்
மந்திரத்து உள்ளேன்; வானின்
நல்நெடும் காலின் மைந்தன்;
நாமமும் அனுமன் என்பேன். 19

புன்தொழில் அரக்கன் கொண்டு
போந்தநாள், பொதிந்து தூசில்
குன்றின்எம் மருங்கின் இட்ட
அணிகலக் குறியி னாலே,
வென்றியான் அடியேன் தன்னை
வேறுகொண்டு இருந்து கூறி,
தென்திசைச் சேறி என்றான்;
அவன்அருள் சிதைவது ஆமோ? 20

**ஐயன் மேனி எத்தகையது?**

எய்துஅவன் உரைத்த லோடும்,
எழுந்துபேர் உவகை ஏற,
வெய்துஉற ஒடுங்கும் மேனி
வான்உற விம்மி ஓங்க,
உய்தல்வந்து உற்றதோ? என்று
அருவிநீர் ஒழுகு கண்ணாள்,
ஐய,சொல்! ஐயன் மேனி
எப்படிக்கு அறிதி? என்றாள். 21

படிஎடுத்து உரைத்துக் காட்டும்
படித்துஅன்று படிவம்; பண்பின்
முடிவுஉள உவமம் எல்லாம்
இலக்கணம் ஒழியும், முன்னர்;
துடிஇடை! அடையா ளத்தின்
தொடர்வையே தொடர்தி என்னா,
அடிமுதல் முடியின் காறும்
அறிவுற அனுமன் சொல்வான்; 22

**அங்க அடையாளம்**

ஆல்இலையோ திருவயிறோ
அடங்கும்மின்னே புவனம்எல்லாம்;
ஆல்இலைமேல் அவன்தனைப்போல்
அமர்ந்ததுரோ மாவலிதான்;
மால்உறவே பிரிந்தனையோ
மார்பில்என்றும் மகிழ்ந்துஉறைவாய்!
மாலுறுதோள் இணைக்குஇலையே
மாநிலத்தில் உளமலையே. 23

வெங்கயக்கை, முன்கையைப்போல்
வேலைகடைந்து அமுதுகொண்டான்
பங்கயப்பூச் செங்கயம்போல்
படர்சடையோன் தடக்கைகள்
துங்கவிரல் பொன்பவழம்
துட்டர்பட ஆழிதொடா
அங்கைநகம் பொற்கிளிவாய்
அங்கனகன் மார்பைஅடா. 24

தனதுசங்கம் அன்றிமற்றோர்
சங்கம்அவன் மிடற்றைஒவ்வா;
நினதுகண்ணன் திருமுகம்போல்
நிலாமதியில் கருணைஉண்டோ?
கனதுவர்வாய் கனிஎனவோ?
கவிரெனவே பகர்வதற்கு
மனதுவரா; முளரிமுத்தும்
வாள்நகையோடு ஒப்பிடவோ. 25

வெண்மனத்தால் கருப்புவில்லோ
மீசைஎன்றால் வாசிகுன்றா
எண்மயக்கார் கண்ணாடி
எனப்படுமோ கபாலம்அம்மா!
திண்குண்ட லம்நிறைந்தும்
செவிக்குஇணையோ காவனைப்பூ
ஒண்மைஎட்பூ நாசிஒப்போ
ஓதிஎன்றால் நீதிஅன்றே. 26

கண்மலர்க்குஇன்று இணையிடவோ
காா்களிசெந் தாமரைதான்
வன்மைஅற்றார் படக்குனிக்கும்
வரிசிலையோ இருபுருவம்;
உண்மைஒப்பா கருமுகில்கீழ்
உற்றபிறை நெற்றிஎன்றால்
தன்மழைக்கார் அனையகுஞ்சி
சடைமுடித்தால் உவமைஉண்டோ? 27

மருவுடையான் அரசுவிட்டும்
வனத்துஉறைந்தும் தளராத
கருவிடைபோல் நடக்கைஎன்றால்
கடகரிதான் இடர்உறுமே?
திருவுடையாய்! என்றசொல்லால்,
தியங்கிஉள்ளம் சோர்வாளை;
பரிவுடையான் சொல்குறிகேள்,
என்றுஅனுமன் பணிந்துஉரைப்பான்: 28

## கணையாழியைக் காட்டினான் அனுமன்

மூண்ட வனம்வாரா திங்கிருஎன்ன,
முனிந்து வரத்தானும் ஒருப்பட்டதும்;
ஆண்ட நகர்வாசல் கடக்கும்முன்னே
அரிய கடுங்கானம் ஏதோஎன்றதும்;
மீண்ட தேர்வல்ல சுமந்திரனை
வேண்டி வளர்க்கச்சொல் கிளிஎன்றதும்;
ஈண்டன் பன்பகர்என்று, திருவாழி
இறைவன் தந்தது, இறைவிஎன்றான். 29

கண்டாள் திருவாழி கமலச்செல்வி,
காணாது இருகண்பெற் றவர்ஆனாள்;
அண்டா உயிர்பெற்ற உடல்ஆனாள்;
அகன்ற மணிபெற்ற பணிஆனாள்;
வெண்டா மழைபெற்ற பயிர்ஆனாள்;
விரைந்து வாங்கித்தன் நயனத்துஒற்றிக்
கொண்டாள் முலைமீதும் தலைமீதும்
குளிர்ந்தாள் தெளிந்துஉள்ளம் களிகூர்ந்தாள். 30

### அனுமனை வாழ்த்தினாள் சீதை

வீழி உயிர்நல்கும் மருந்துநல்லோர்
விருந்தும் பசித்தவர்க்கு அமுதும்ஆயது;
ஆழி கொடுத்துஎன்னைத் தாய்தந்தைபோல்
அச்சம் தவிர்த்தாய்; நீஅனுமானே!
வாழி உயிர்என்று ஒன்றும்தந்தாய்,
மாறு ஒன்றுஉளதோ?என் மனம்நன்றானால்;
ஏழிவ் வுலகேழும் இறந்தாலும்
இன்று போல்என்றும் இனிதுஇருப்பாய்! 31

### இராமலக்குவர் செய்தி கூறினான் அனுமன்

சங்கே தருவேஎன்று உறுதிக்கண்ணீர்
தயமே பொழிந்திட சனகன்தையல்,
எங்கே அருளாளன் உன்னைக்கண்டான்?
எந்தன் நிலைசொன்னார் ஆர்,என்னவே?
பொங்கேள் புகழ்அன்பன் புகலலுற்றான்:
பொன்மான் ஆனவன் மாரீசன்
அங்கே முனிந்துஐயன் சரம்தொளைக்க
அரற்றி இளையோனே எனவீழ்ந்தான். 32

அரக்கன் கொடுமாயக் குரல்கேட்டால்
அயர்வாய் நீஎன்று, மீண்டுஎம்பிரான்,
வரக்கண்ட இளையோனைச் செயல்கேட்டான்;
வந்தான் மலர்க்காவில் உனைக்காணான்;
கரக்க உயிர்போயும் பரக்கநின்றான்;
கண்ணன் உயிர்இங்கு நீஇருந்தாய்;
இரக்க மனத்துள்ளும் பிரியாதாய்,
இனிமேல் உயிர்உண்டோ இழப்பதற்கே? 33

31. இருந்துபசி யால்இடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்தும்அமு தாகியது; அறத்தவரை அண்மும்
விருந்தும்எனல் ஆகியது; வீயும்உயிர் மீளும்
மருந்தும்எனல் ஆகியது வாழிமணி ஆழி.

—கம். 69.

33. ஆண்தகை நெஞ்சில் நின்றும் அகன்றிலை; அழிவுண் டாமோ?
ஈண்டுநீ இருந்தாய்; ஆண்டுஅங்கு எவ்வுயிர் விடும்இ ராமன்.

—கம். 77.

உயிரில் படிவம்போல் நடந்துகண்டான்
    உயிர்தற் கீந்தசடா யுதன்னை;
துயரில் வீழ்ந்தான்; அரக்கன்செய்த
    சூழ்ச்சி கேட்டான்; முனிந்துஓர்அம்பால்
பெயரில் வகைசெய்வேன் உலகைஎன்றான்;
    பெருவன் பிழைஒரு சிறியன்செய்தால்
செயிரில் உலகங்கள் தான்என்செய்யும்?
    சீர்அல; எனத்தம்பி தேற்றிநின்றான். 34

தூர்த்தன் போனதுஎத் திசையென்று
    சொலும்முன் வீடுற்றாய் எந்தாய்என்று
தார்த்தண் புயவீரர் அழுதுஇரங்கித்
    தந்தைக்கு உரித்தான கடன்கள்செய்து,
பார்த்த அரக்கனைத் தொடர்ந்துகொல்லப்
    பலயோ சனைதேடிக் காணாமல்,
போர்த்த விழியால்மோ கப்பித்தால்
    புரத்தை எரித்தவன் போல்ஆனான். 35

கோதா விரியே, சீதையைநீ
    கொணரா விடிலுன்குல வேர்அறுப்பேன்;
போதாய் மலையேநீ தாராயேல்
    பொறுப்பால் அவைஎல்லாம் பொடிபடுப்பேன்;
தீதானது பொன்மான் உருவம்தன்னால்
    செயிப்பேன் மானினத் திரளைஎன்னும்
தாதா மனம்தன்னைத் தெளிந்துசொல்லால்
    சாற்றி இளையவன் தேற்றியபின், 36

அன்னே! கதிர்மைந்தன் இடத்தில்வந்தான்;
    அவனோடு உறவாய்உன் அணிகள்எல்லாம்
முன்னே கொடுவைத்தோம்; அவற்றைக்கண்ட
    முதல்வன் பரிதாபம் ஒழிவார்ஆர்?

34. ஊறுஒரு சிறியோன் செய்ய முனிதியோ உலகை? உள்ளம்
    ஆறுதி என்று, தாதை ஆற்றலின் சீற்றம் ஆறி, —கம். 80.

35. உன்மத்தன் ஆனான் தனைஒன்றும் உணர்ந்திலாதான். —கம். 84.

36. பொறுப்பால் - அம்பால்.

கன்னேர் புயரா வணனைவாலால்
கட்டித் திசைஎட்டும் தாவிவந்த
வன்னேர் வாலியை ஒருசரத்தால்
வாட்டி, இளையோனை முடிசூட்ட; 37

வளர்ந்த மழைக்காலம் ஆறுதிங்கள்
வருந்தி ஒருவெற்பில் இருந்தபின்னை,
சேர்ந்த படைநின்னைத் தேடஎங்கும்
செலுத்தி, எனைத்தெற்கே விடுத்திட்டார்
சோர்ந்த துயராளன் இறைவன்என்ன;
சோதித்து அனுமானை முகம்நோக்கி,
நேர்ந்த உடலாலே கடலைஎங்கண்
நீந்தியது என்ன,அனு மனும்சொல்வான்: 38

**தன் விசுவரூபம் காட்டினான் அனுமன்**

சடைவார் குழலாய்உன் மகிழ்நன்பொற்றாள்
சார்வார் அவனையே பற்றாக
அடைவார், பிறவாழி கடப்பார்என்றால்
அரிதே பிறவாழி கடப்பதென்று,
திடவான் பூதம்அஞ் சையுந்தான்
இதுஎன் வடிவுஎன்று, தொழுதகையன்
மடவாள் பதம்உன்னி வணங்கிச்சென்னி
வானில் படும்என்று வளைந்துநின்றான். 39

**நல்லதம்பியின் புகழ்**

மேரு தனில்மிக்க தாருதன்னில்
மின்மினித் திரள்போல் மயிர்கள்எங்கும்
நேருற் றேநட்சத் திரங்கள்சுற்ற
நிலவுக்கு உயர்குண் டலங்கள்மின்ன

37. ஒழிவார் - ஒழிப்பார், தீர்ப்பார்.

39. பிறவாழி – பிறவு - பிறப்பு ஆகிய ஆழி - கடல். பிற ஆழி - மற்றைக் கடல்கள் எனலும் ஆம்.

செவ்வழிப் பெருமைஎன்று உரைக்கும் செம்மைதான்
வெவ்வழிப் பூதம்ஓர் ஐந்தின் மேலதோ?
அவ்வழித்து அன்றுஎனின் அனுமன் பாலதோ?
ஏவ்வழித்து ஆகும்?என்று எண்ணும் ஈட்டதே. —கம். 100.

காருக்கு இணையாம்ஆ கவராமன்
கண்ண குலன்அர்த்த நாரிமைந்தன்
சீருத் தமன்மோரூர் நல்லதம்பிதன்
சிறந்த புகழ்போல வளர்ந்துநின்றான். 40

**மனம் கனிந்த பாராட்டு**

தம்பி துணைஅன்றி ஒருவர்இல்லை;
தரியார் மிகுதிநம் தலைவர்க்குஎன்று
வெம்பி மெலிந்தேநின் உதவிகண்டேன்;
மெலிவுஅற் றேன்;இன்றே சிறைமீண்டேன்;
வம்பின் அரக்கரை வேர்அறுத்தேன்;
வசைஅற் றேன்என்று மனம்மகிழ்ந்தேன்;
எம்பி ரான்பாதம் இனிச்சேர்ந்தேன்
என்றாள் திருவுக்கும் திருவானாள். 41

**வானரச் சேனையின் வல்லமை**

கற்புஆர் அமுதேஎன்று அனுமன்சொல்வான்:
கற்பார் எழுபதுவெள் ளம்என்பார்,
வெற்பார் புயவெற்றி வாள்அரக்கன்
வேலை மணலினும் பலராகும்;
வற்பார் அளக்கரும் இறைக்கப்பற்ரு;
வற்பூர் அரக்கரும் உறைக்கும்பற்ரு;
பொற்பாம் அவர்காணா ததினாலே
பொன்றாது இருந்தது இலங்கைஅன்றே. 42

தாயே அளவுஅற்ற படைத்தலைவர்;
தலைவன் கதிர்மைந்தன்; வாலிமைந்தன்
தூய நளன்நீலன் சாம்பன்தம்பன்
தூமன் சதவலி துமிந்தன்மதனன்
ஏயோன் குமுதன் குமுதாக்கன்
இடவன் பனசன்என்று இவர்உள்ளிட்டோர்
ஆயோர் தமக்குஏவல் அடியன்செய்வேன்
என்றே அனுமானும் அருளிச்செய்தான். 43

41. மின்நேர் எயிற்று வல்அரக்கர் வீக்கம் நோக்கி, வீரற்குப்
பின்னே பிறந்தான் அல்லதுஓர் துணைஇலாத பிழைநோக்கி,
உன்னா நின்றே உடைகின்றேன் ஒழிந்தேன் ஐயம்;உயிர் உயிர்த்தேன்:
என்னே? நிருதர் என்ஆவர், நீயே எம்கோன் துணைஎன்றால்?

## 7 சூடாமணிப் படலம்

*—சீதை தான் வைத்திருந்த சூடாமணியை இராமனிடம் கொண்டுபோய்க் கொடுக்கும்படி அனுமனிடம் தந்தது*

### வேண்டினான் அனுமன்

*கேட்டிஅடி யேன்உரை முனிந்தருளல் கேளான்*
*வீட்டியிடு மேல்அவனை வேறல்வினை அன்றால்*
*ஈட்டிஇனி என்பல இராமன்எதிர் நின்னைக்*
*காட்டிஅடி தாழ்வன்இது காண்டிஇது காலம்.* 1

### மறுத்துப் பேசினாள் சீதை

*அரியது அன்றுநின் ஆற்றலுக்கு ஏற்றதே*
*தெரிய எண்ணினை செய்வதும் செய்தியே*
*உரியது அன்றுஎன ஓர்கின்றது உண்டுஅதுஎன்*
*பெரிய பேதைமைச் சில்மதிப் பெண்மையால்.* 2

*வேலை யின்னிடை யேவந்து வெய்யவர்*
*கோலி நின்னொடும் வெஞ்சரம் கோத்தபோது*
*ஆலம் அன்னவர்க்கு அல்லைஎற்கு அல்லையால்*
*சால வும்தடு மாறும் தனிமையோய்.* 3

*வேறும் உண்டுஉரை கேள்அது மெய்ம்மையோய்*
*ஏறு சேவகன் மேனிஅல் லால்இடை*
*ஆறும் ஐம்பொறி நின்னையும் ஆண்எனக்*
*கூறும் இவ்வுருத் தீண்டுதல் கூடுமோ.* 4

*ஆத லான்அது காரியம் அன்றுஐய*
*வேத நாயகன் பால்இனி மீண்டனை*
*போதல் காரியம் என்றனள் பூவைஅக்*
*கோதி லானும் இனையன கூறினான்:* 5

*குறிப்பு: இப் படலத்தைச் சூளாமணிப் படலம் என்றும் கூறுவர். இப் படலத்தின் 1 முதல் 6 ஆறு பாடல்கள் ஏட்டிலே சிதைவுற்றன; இவ்விடத்தைக் கம்பருடைய விருத்தங்கள் 6 நிறைவுசெய்கின்றன.*

### இராமனுக்குச் சொல்வது யாது?

இருளும் ஞாலம் இராவண னால்இது
தெருளும் நீஇனிச் சில்பகல் தங்குறின்
மருளும் மன்னவற்கு யான்சொலும் வாசகம்
அருளுவாய் என்று அடியின் இறைஞ்சினான். 6

### அனுமனிடம் சீதை சொன்ன செய்திகள்

மன்னவற்குயான் சொலும்வாசகம்
மாதாஅருளுவாய் எனக்கேட்க;
இன்னம்உளதுஅன் னவர்க்குஉரைப்பாய்;
இனம்ஒருமாதம் இருப்பேன்நான்;
பின்னேஇரேன்; உண்மை;என்பால்
பிராணன்நில்லாது; உயிர்விடினும்
கன்னவில்தோள் சிலைவீரம்
காட்டஎன்றே கட்டுரைப்பாய். 7

மங்கையர்ஆ ரையும்தீண்டேன்
மனத்திலும்நீ அன்றிஎன்றுன்;
திங்கள்ஒன்றில் வராதிருந்தால்
செங்கையினால் கடன்செய்என்பாய்;
இங்கண்தனியேன் இறந்தாலும்
இனம்பிறந்து தம்திருத்தாள்
அங்கையினால் பிடிக்கவரம்
ஆதரித்தாள் என்றுஉரைப்பாய். 8

இச்சிறையை மீட்பதுதான்
இளவலுக்கே பாரம்என்பாய்;
வச்சிறையை முடிசூட்ட
வானரர்கோன் கடனதுஎன்பாய்;
மெச்சிறையில் பறவையைப்போல்
மிகஇருந்து வருந்துகின்றேன்;
எச்சிறையும் இன்பம்அன்றி
இரங்கும்என்மா மியர்க்குஉரைப்பாய். 9

9. வச்சிறையை - இறையை வச்சு - இறையை வைத்து - வட்டார வழக்கு. மெச்சு + சிறை - மெச்சிறை; திக்குகயம் - திக்கயம் என்பதுபோல. மெய்ச்சிறை-மெச்சிறை எனலுமாம்.

அண்ணல்முனி அன்னைபிதா
அனைத்துஉறவை வணங்கியதும்,
ஒண்ணகரை வினவியதும்
ஓதிடுநீ; ஓதி,ஐயா,
கண்ணார்முடி புனைகோலம்
காணவிதி இல்லேன்நான்
எண்ணம்இனிச் சொல்லிஎன்னே
என;அனுமான் இயம்பலுற்றான். 10

## சீதையைத் தேற்றினான் அனுமன்

சிறையில் உனைவைத்தோன் பிழைப்பானாம்!
திறக்கற் புடையாய்நீ இறப்பாயாம்!
பொறையின் சிலையோடும் நகர்புக்கு
எங்கோன் மணிமுடி புனைவானாம்!
முறையில் அரக்கரை அருந்தவர்க்காய்
முடிப்பேன் என்றசொல் முடியானாம்!
மறையின் மொழிவீரம் பழுதாமாம்!
மருந்தே! இதுபோல் வசையுமுண்டோ? 11

நீயே இறந்தக்கால் உலகம்எல்லாம்
நெடியோன் கணைஒன்றில் முடியாவோ?
தாயே பெருநன்றி செய்தவர்க்காய்
தாரோ மோளங்கள் உயிரும்மெய்யும்?
தீயோர் அரக்கர்தம் குலம்மடிந்து,
தேவர் அனைவோரும் வாழ்ந்து,நின்னால்
தூயோர் அறநெறி தழைத்ததுஎன்று
சொல்லும் பெரும்புகழ் விரும்பாயோ? 12

எம்மான் சரத்தால்இவ் அரக்கர்பட்டு
இரத்தம் பரந்துஎழு கடலும்ஒன்றாய்
வெம்மா பூதங்கள் குளித்துஆட
விண்ணோர் களித்துஆட வினைகாண்பாய்!
தம்மா வயிறுஅடித்து அரக்கியர்கள்
தாலி அறத்தாலி மலைகாண்பாய்!
அம்மா அரம்பையர் நிறைந்துஆடும்
அரங்கில் குரங்குஆடும் களம்காண்பாய்! 13

கழுகும் காகமும் படிந்துசெந்நீர்,
கடல்போல் அரக்கியர் கண்ணீரில்
முழுக; உனைக்கண்ட அரக்கன்கண்ணை
மூக்கில் தோண்டித்தின் பதும்காண்பாய்!
ஒழுகும் பிணக்குன்றாம் உதிரத்துள்போய்
உவரி தூர்ப்புண்ணும் படிகாண்பாய்!
தழுவும் கணைஅண்டம் கடந்தும்அப்பால்
சாரும் அரக்கர்சா வதும்காண்பாய்! 14

மோதா வருபாணம் காற்றாக
மூடும் அரக்கர்கள் கரியாக
நீதான் நெருப்பாகப் பொன்இலங்கை
நீறாய் உருகிச்செல் வதும்காண்பாய்!
தீதாம் நிருதர்கள் திண்டாடும்
செழும்சந் தனச்சோலை வாவிஎல்லாம்
பேய்தான் விளையாட வானம்எங்கும்
பெரிதாம் கழுகுஆடும் செயல்காண்பாய்! 15

கொடியேன் ஒருமாதம் குறிஎன்றுபோய்க்
கோனைக் காண்பது தாமதமே,
கடியே மச்சோலை தீயும்வண்ணம்
காய்வான் இனிஒரு பொழுதும்நில்லான்;
இடியே விழுநாகம் கடிக்கஅன்னான்
இமைப்பில் இறப்பதும் பிறப்பதும்தான்;
அடியேன் விண்ணப்பம் செய்ததுஎல்லாம்
அங்கைக் கனிநெல்லி எனக்காண்பாய். 16

15. வினையுடை அரக்கராம் இருந்தை வெந்துகச்
சனகிஎன்று ஒருதழல் நடுவண் தங்கலால்
அனகன்கை அம்புஎனும் அளவில் ஊதையால்
கனகம்நீடு இலங்கைநின்று உருகக் காண்டியால். —கம். 59.

16. கடிஏமம் சோலை - காவல் அமைந்த சோலை. இராமனுக்கு ஏதோ உயிர் உள்ளது என்றுதான் சொல்லவேண்டும். இடி இடித்தாலும் பாம்பு தீண்டினாலும் அவனுக்கு உணர்வு உண்டாவதில்லை. விழித்த கண் விழித்த படியே இருக்கிறான். இத்தன்மையன் தாமதிப்பானா?

வெள்ளேற்று ஈசன்போல் அங்கதன்தன்
மீதுஏ றியதம்பி ஒருபாலாய்,
புள்ளே றியமாயன் போல்எந்தன்மேல்
பொலியும் வரராமன் தனைக்காண்பாய்;
துள்ளேறு அரக்கரை ஒருதிங்களில்
துணிந்துஉன் சிறைதன்னை மீளானேல்
எள்ளே றுகையால் இராவணன்தான்
அவனே;இவனேதான் இராமன்என்றான். 17

விருத்தம்

ஆக இம்மொழி ஆசில கேட்டு,அறி வுற்றாள்;
ஓகை கொண்டு களிக்கும் மனத்தள் உயர்ந்தாள்;
போகை நன்றுஇவன் என்பது புந்தியின் வைத்தாள்;
தோகை யும்சில வாசகம் இன்னன சொன்னாள்: 18

என்ஓர் இன்உயிர் மென்கிளிக்கு யார்பெயர் ஈகேன்?
மன்ன! என்றலும், மாசறு கைகயன் மாதுஎன்
அன்னை தன்பெயர் ஆகஎன அன்பினொடு அந்நாள்
சொன்ன மெய்ம்மொழி சொல்லுதி மெய்ம்மை தொடர்ந்தோய்!

என்று உரைத்து,இனிது இத்தனை பேர்அடை யாளம்;
ஒன்று உணர்த்துவது இல்என எண்ணி உணர்ந்தாள்,
தன்தி ருத்துகி லில்பொதி வுற்றது, தானே
வென்றது அச்சுடர், மேலொடு கீழ்உற மெய்யால். 20

வாங்கி னாள்,தன் மலர்க்கையில்; மன்னனை முன்னா,
ஏங்கி னாள்;அவ் அனுமனும் என்கொல்இது? என்னா,
வீங்கி னான்;வியந் தான்;உலகு ஏழும் விழுங்கித்
தூங்கு கார்இருள் முற்றும் இரிந்தது சுற்றும். 21

17. எள்ளேறுகையால் - எள்ளுதல் ஏறுகையால்.

குராவரும் குழலி!இக் குறித்த நாளினே
விராவரு நெடுஞ்சிறை மீட்கி லான்எனின்,
பராவரும் பழியொடும் பாவம் பற்றுதற்கு,
இராவணன் அவன்;இவன் இராமன் என்றனன். —கம். 74.

குறிப்பு: இப்படலத்தின் 18 முதல் 23 வரையுள்ள ஆறு பாடல்கள் ஏட்டிலே சிதைவுற்றன. இவ்விடத்தைக் கம்பனார் விருத்தங்கள் நிறைவு செய்கின்றன.

சூடை யின்மணி கண்மணி ஒப்பது, தொல்நாள்
ஆடை யின்கண் இருந்தது, பேர்அடை யாளம்;
நாடி வந்துஎனது இன்உயிர் நல்கினை, நல்லோய்!
கோடி என்றுகொ டுத்தனள், மெய்ப்புகழ் கொண்டாள். 22

தொழுது வாங்கினன்; சுற்றிய தூசினன், முற்றப்
பழுது உறாவகை பந்தனை செய்தனன்; வந்தித்து
அழுது மும்மை வலம்கொடு இறைஞ்சினன்; அன்போடு
எழுது பாவையும் ஏத்தினள்; ஏகினான் இப்பால். 23

## 8 கிங்கரர் வதைப் படலம்

*—அனுமன் அசோகவனத்தை அழித்தபோது எதிர்த்த கிங்கரரை வதைத்தது*

### அனுமனின் நிலை

*நெறிக்கொடு வடக்குஉறும் நினைப்பினில் நிமிர்ந்தான்*
*பொறிக்குலம் எழப்பொழில் இடைக்கடிது போவான்*
*சிறுத்தொழில் முடித்துஅகல்தல் தீதுஎனல் தெரிந்தான்;*
*மறித்தும்ஓர் செயற்குஉரிய காரியம் மதித்தான்.* 1

*இப்பொழி லினைக்கடிது இறுக்குவென்; இறுத்தால்*
*அப்பெரிய பூசல்செவி சார்தலும் அரக்கர்*
*வெப்புறு சினத்தர்எதிர் மேல்வருவர்; வந்தால்*
*துப்புஉற முருக்கிஉயிர் உண்பல்இது சூதால்.* 2

### அழித்தான் அசோகவனத்தை

*என்றுநினை யாஇரவி சந்திரன் இயங்கும்*
*குன்றம்இரு தோள்அனைய தன்உருவு கொண்டான்;*
*அன்றுஉலகு எயிற்றிடைகொள் ஏனம்எனல் ஆனான்;*
*துன்றுகடி காவினை அடிக்கொடு துகைத்தான்.* 3

### அசோகவனத்தின் அழிபாடு

.................. ..................

.................. ..................

*வேர்உதிரக் கொம்புஉதிர*
*விரைந்ததிக்கை அளந்தசில;*
*வாருதிவாய் விழுந்தசில;*
*மால்வரைமேல் பொழிந்தசில;*
*கார்உதிர மீன்உதிரக்*
*கடந்துவிண்மேல் நடந்தசில;* 4

*குறிப்பு: இப் படலம், கம்பராமாயண அச்சுப் புத்தகங்கள் சிலவற்றிலே ''பொழில் இறுத்த படலம்'' என்று காணப்படுகிறது.*

*இப் படலத்தின் முதல் மூன்று பாடல்கள் ஏட்டிலே சிதைந்துவிட்டன; இவ் விடத்தைக் கம்பனார் விருத்தங்கள் நிறைவு செய்கின்றன.*

இடவியவே லையைக்கலக்கி
இலங்கையையும் இடித்தசில;
கடவுள்ரதம் கற்பகப்பூங்
காவினையும் ஒடித்தசில;
சுடர்விடும்பொன் அணிந்தமரம்
சூரியர்போல் நடந்தசில;
தடவிஒன்றோடு ஒன்றுபட்டுத்
தாரகைபோல் உதிர்ந்தசில; 5

எவ்வரும் மலர்பறிக்க
எவ்வுலகும் புக்கசில;
கவ்வரும் திசைக்கரிக்கும்
கடிக்கரும்பும் ஆனசில;
பவ்வமுனீர் புகுந்துபெய்யும்
படிமுகில்போல் படிந்தசில;
அவ்அலைமீன் உணத்தளிர்காய்
அருங்கனிதேன் சொரிந்தசில; 6

வேலையின்மீன் நெரிந்துபட,
விரைந்துபடு மரங்கள்பல;
சாலையும்தான் வரமதிலும்
சரிந்துவிழும் தருக்கள்பல;
காலிலும்மா நடந்துசெல்லக்
கருங்கடல்மேல் சொரிந்தபல;
மேலினும்கா உண்டுஎனவே
விண்ணில்எங்கும் நிறைந்தபல; 7

மீன்நாற்றம் கெடக்கடலில்
விரைகமழ்பூ மரங்கள்பல;
வான்ஆற்றில் விமானம்ஒக்கும்
மணிதிகழ்மா மரங்கள்பல;
தான்ஆற்றும் சாபம்அற்றுத்
தமதுஉலகம் சுவர்க்கம்உற்ற;
கோன்ஆற்றும் கற்பகமாம்
குலவிருக்கம் பலபலவே; 8

பாங்குளமண் டபம்இடித்தும்
பங்கயம்வாழ் கயம்தூர்த்தும்
ஓங்குபொன்மே டையைத்தகர்த்தும்
உயர்ந்தசெய்குன்று எடுத்துஎறிந்தும்
கோங்குபுன்னை சந்தனமாய்க்
குராமரம்செண் பகம்பலவும்
வாங்கியும்வீ சியும்துகைத்தும்
வாட்டல்உற்றான் வாள்அனுமான். 9

கன்மலைவீழ் பொன்மரங்கள்
கடக்களிற்றின் பட்டம்உக்கும்
மன்மதனும் மனம்தவிக்க
மயில்குயில்வண் டினம்முதலாய்
சொன்மலியுள் ஆற்றொலியும்
தொலைக்கும்அவன் ஆர்ப்புஒலியும்
பன்மரங்கள் இடும்ஒலியும்
படர்ந்துவிண்ணும் கடந்ததுவே. 10

கரித்தானம் பரித்தானம்
கதிர்மணித்தேர் மதில்மாடம்
நெரித்தார மரங்கள்விழ
நீடிலங்கை எரித்துஓட,
தரித்தார்பொன் மணிச்சோலை
தருக்களைம்மா ருதிபறித்து,
திரித்தார வீசுகையால்
தேசம்எங்கும் விளங்கியதே. 11

கோதில்புகழ் மாருதியால்
கூட்டொடும்புள் சுவர்க்கம்உற்ற;
மாதிருக்கும் தாருஒன்றே
மாலுறைஆல் போலநிற்க;
ஓதும்அக்கா வினைமுடித்தே
உலகுஅளந்தான் போல்அனுமான்
சோதிநக்கன் செகத்தைஎல்லாம்
தொலைத்துநின்றாற் போலநின்றான். 12

### சூரியோதயம்

பலதிகள்சோ லையைஅழிக்கப்
பார்த்துநின்ருய் என்றுஅரக்கன்
வலதிருக்கான் முனிவன்என்று,
மறைவதுபோல் மதிஒளிக்க;
நலதொருசூ டாமணியை
நாயகர்க்குஎன்று அளித்தவட்காய்
சலதிஒருசி ரோமணியைத்
தருவதுபோல் பரிதிவந்தான். 13

### அரக்கர் செய் மாயம் அறிவார் யார் ?

அனுமனைக்கண்டு உளம்கலங்கி
அரக்கியர்,சீ தையைநோக்கி,
மனிதன்அல்லா இங்குஇவன்ஆர்?
வல்லாயோ சொல்!என்ருர்;
இனிதுஅலவே வந்தபொன்மான்
என்றுஇளையோன் சொலத்தெளிந்து
துனிதருநீர் செயும்மாயம்
துணிந்துஅறிவார் யாவர்?என்ருள். 14

### சயித்தியம் ஒன்று பிடுங்கி வீசினான் அனுமன்

ஏங்கினவாள் அரக்கியர்கள்
எழுந்துவிழுந்து ஓடல்உற்ருர்;
தீங்குசிலை இராவணர்க்குச்
செய்ததவம் குறைந்திடலால்
போங்கயல்ஓர் சயித்தியம்தான்
பொன்மலைஎ டுப்பவன்போல்
வாங்கிஇலங் காபுரிமேல்
வாயுமைந்தன் விட்டெறிந்தான். 15

விருத்தம்

விட்டனன் இலங்கை தன்மேல்;
விண்உற விரிந்த மாடம்
பட்டன பொடிகள் ஆன;
பகுத்தன பாங்கு நின்ற;

சுட்டன பொறிகள் வீழத்
துளங்கினர் அரக்கர் தாமும்;
கெட்டனர், வீரர் அம்மா!
பிழைப்பரோ கேடு சூழ்ந்தார்? 16

### இராவணனுக்குச் செய்தி தெரிவித்தனர்

சொல்லிட எளியது அன்றால்;
சோலையைக் காலின் கையின்
புல்லொடு துகளும் இன்றிப்
பொடிபட நூறிப் பொன்னால்
வில்லிடு வேரம் தன்னை
வேரொடும் வாங்கி வீசச்
சில்லிடம் ஒழியத் தெய்வ
இலங்கையும் சிதைந்தது என்றார். 17

### அனுமனின் ஆரவாரம்

மண்தலம் கிழிந்த வாயில்
மறிகடல் மோழை மண்ட,
எண்திசை சுமந்த மாவும்
தேவரும் இரியல் போகத்
தொண்டை வாய்அரக்கி மார்கள்
சூல்வயிறு உடைந்து சோர,
அண்டமும் பிளந்து விண்டது
ஆம்என, அனுமன் ஆர்த்தான். 18

### அனுமனைப் பிடித்துவர வீரரை ஏவினான்

புல்லிய முறுவல் தோன்ற,
பொறாமையும் சிறிது பொங்க,
எல்லைஇல் ஆற்றல் மாக்கள்
எண்இறந் தாரை ஏவி,

குறிப்பு: இப் படலத்தில் 16 முதல் 20 வரை உள்ள ஐந்து பாடல்கள் சிதைவுற்றன. இவ்விடத்தைக் கம்பருடைய ஐந்து விருத்தங்கள் ஈடுசெய்கின்றன.

16. பொறிகள் - தீப்பொறிகள்.

17. புல்லும் தூசியும் இல்லாமல். நூறி - அழித்து. வேரம் - சயித்தியம்.

18. கடல் மோழை மண்ட - கடல் கீழாகப் பாய்ந்து நகர வாயிலில் நெருங்க. மா - திசை யானை,

வல்லையின் அகலா வண்ணம்
வானையும் வழியை மாற்றி,
கொல்லலிர் குரங்கை, நொய்தின்
பற்றுதிர், கொணர்திர் என்றான். 19

### அனுமனை வளைந்தனர் கிங்கரர்

பொறிதர விழி,உயிர் ஒன்றோ?
புகைஉக, அயில்ஒளி மின்போல்
செறிதர, உரும்அதிர் கின்றார்;
திசைதொறும் விசைகொடு சென்றார்
எறிதரு கடையுக வன்கால்
இடறிட, உருமின் இனம்போய்
மறிதர, மழைஅகல் விண்போல்
வடிவுஅழி பொழிலை வளைந்தார். 20

### கிங்கரரை வதைத்தான் அனுமன்

நிகழ்ந்தவர் வரும்பரிசு அறிந்தஅனு மந்தன்
நினைந்தது முடிந்ததுஎன, நின்றுஉளம் மகிழ்ந்தான்;
மகிழ்ந்தவனை வந்தவர் அவன்பிடியும் என்றார்;
வழங்கினர் கொடும்படை பொழிவர்ஷ மதுபோல்;
உகந்தவன் விசும்புஉற வளர்ந்தருளப் பொழிலின்
உயர்ந்திடு கரம்கொடுஅனு மந்தனும் அறைந்தான்;
முகம்தலை உடைந்தனர்; உரம்கரம் ஒடிந்தனர்;
முனைந்தவர் மலைந்தவர் முறிந்தனர் மறிந்தார். 21

ஒருங்குடன் நடந்தனர் உடன்அமர் புரிந்தனர்
உரம்கொடு மிடைந்தனர் உடைந்தவர் இடைந்தார்;
மருங்குடை துணிந்தனர் வருந்துடை முகந்தனர்
வான்கொழு முனிந்தனர் மடிந்தனர் படிந்தனர்;
நெருங்குஉடல் பிளந்தனர் நெடுந்தலை விழுந்தன
நிணம்குருதி சிந்தினர் நிலந்தனில் உருண்டார்;
இருங்குடல் சரிந்தனர் இலங்கையும் இறந்தனர்
எலும்புகள் ஒடிந்தனர் இடும்புகழ் அளிந்தார். 22

20. விழி பொறி தர - கண்கள் நெருப்புப் பொறிகளை வெளிப்படுத்த. அயில் - வேல். உரும் - இடி. வன்கால் - ஊழிக்காற்று. உடு - நட்சத்திரம். வடிவு அழி பொழில் - பண்டைய உருவம் அழிந்து வெட்டவெளியான பொழில்.

பலதிசை எட்டும் கடலும் வெற்பும்
படர்வா னகம்மேலும் செலவிடுத்தான்;
பலரைத் தலைகால் பறித்து எறிந்து
பகழி அழிசித்திரம் போலச்செய்தான்;
பலரைக் கவச குண்டலம் பட்டம்
பொடியா கப்பட உறுத்துஅரைத்தான்;
பலரைச் சிலைச்சூ லம்மழு சக்ரவேல்
பரிசை வாளொடும் துவைத்துக்கொன்றான். 23

சிலரைப் பொருப்பாலும் மரத்தாலும்
சிதறப் புவிமீதில் வீழ்த்திக்கொன்றான்;
சிலரைத் தழுவிக்கொண் டவர்வாழச்
செங்கை தனில்அபயம் காட்டிச்சென்றான்;
சிலரைத் திகழ்வாலால் இறுகச்சுற்றித்
திரிபம் பரம்போல வாட்டிக்கொன்றான்;
சிலரைக் கடல்ஏழும் தாட்டிச்சென்றே
திகிரி உரம்ஏற ஓட்டிக்கொன்றான். 24

சிலரை இருகாலால் மிதித்துக்கொன்றான்;
சிலரை முடிவெட்டித் துகைத்துக்கொன்றான்;
சிலரை ஒருதோளால் இடித்துக்கொன்றான்;
சிலரை நழுவாதே பிடித்துக்கொன்றான்;
சிலரை விரலாலே கிழித்துக்கொன்றான்;
சிலரை மொழியாலே தெளித்துக்கொன்றான்;
சிலரை விழியாலே விழித்துக்கொன்றான்;
தீப நாயகன்தன் திருத்தூதன். 25

வாலைக் கொடுசுற்றி அரக்கர்தம்மை
வலிய மரத்தாலும் நெறுக்க,அவர்
ஆலைக் கரும்புபோல் நெறிந்துஉதிரம்
சாறு எனப்பாயும் கடற்கூனில்
மாலைக் கொடிமாடம் கரிமாதேர்
மடிய இலங்கைக்குள் சிலரைவிட்டான்;
நீலத் துயர்வானில் பறந்தாலும்
நீங்காது அழுத்துவான் நிணச்சேற்றில், 26

சாலு மனைதந்த மாதர்மக்கள்
தந்த வடிவாளில் சிலரைக்கொன்றான்;
நாலு வாயிலும் இரத்தம்கக்க
நசிக்கும் படிஒக்கும் நகர்இலங்கை;
காலும் உலைந்தனர் எமதூதர்
கார்விண் உயிர்எங்கும் உடல்மண்எங்கும்;
சேலும் விழிமாதர்க்கு இரங்கிஅவன்
செல்லு மெனநல்கச் சிலவர்சென்றார். 27

கறுத்த அரக்கர்கள் கடலைஒத்தார்;
கலக்கும் அனுமன்மந் தரத்தைஒத்தான்;
ஒறுத்த நிருதர்கள் மேகம்ஒத்தார்;
உருத்திர கவிவீர பானுஒத்தான்;
வெறுத்தார் அரக்கதர் பணிகள்ஒத்தார்;
வென்ற மாருதி கருடன்ஒத்தான்;
செறித்த நிசிசரர் ஆனைஒத்தார்;
செயித்த திருவடிசிங் கம்ஒத்தான். 28

**வானவர் ஆரவாரம்**

எய்த எறிந்தன குத்தினவெட்டின
எண்ணில காயம் அனுமன்தன்மேல்
பெய்த பூமாரி முனிவர்விண்ணோர்
பேசில் அவற்றினும் பெரிதாகும்;
செய்த சமரில்அத் தனைபேர்பட்டும்
செயித்த வீரன்வெயர்த் திலன்சிறிதும்;
வய்த அரக்கர்தம் பூசல்அடங்கி
வானோர் ஆர்ப்பு வளர்ந்திட்டதே. 29

**கிங்கரர் மடிந்ததை அறிந்தான் இராவணன்**

பட்டார் கிங்கரரும் அன்றிப்
பயந்து எஞ்சினார் யாரும்இல்லை;
கெட்டார் வனம்காவல் செயும்தேவர்
கிலேசத் துடனே ராவணன்பால்
ஒட்டார் களைக்கொன்ற அனுமன்வெற்றி
உரைக்க நடுங்கிக்கை கட்டுகின்றார்;
கட்டாது ஒழிந்தாரோ குரங்கைஅஞ்சிக்
களித்தாரோ சொல்லும் எனக்கேட்டான். 30

பொய்த்த சான்றவர் குலம்போலே
பொன்றினர் அரக்கர்எல் லாரும்என்றார்!
கய்த்த மனத்தானும் கேட்டீரோ?
கண்டீரோ கண்ணால்?எனக் கேட்டான்;
எய்த்த உளத்தோரும் புறத்தில்நின்று
யாம்கண் டோம்;அந்தக் குரங்கின்கையால்
மொய்த்த கடல்ஒத்த படையைஎல்லாம்
முடித்தும் இனம்போகாது எனமொழிந்தார். 31

31. புலம்தெரி பொய்க்கரி புகலும் புன்கணார்
குலங்களின் அவிந்தனர் குரங்கினால் என்றார். —கம். 58.

# 9 சம்புமாலி வதைப் படலம்

*—தன்னைப் பற்றிக்கொண்டு போகவந்த சம்புமாலியை அனுமன் வதைத்தது*

சங்கரனைப் போல்அனுமான் சங்கரிக்கத் தான்மடிந்த
கிங்கரர்தம் பாடு கிளத்தினேன்—வெங்காவில்
வட்டமிடும் சேனையொடும் வந்துசம்பு மாலிஎன்பான்
பட்டதும் சொல்வேன்இப் பால். 1

**புறப்பட்டான் சம்புமாலி**

சேனையுடன் போய்வளைந்து
சினக்குரங்கைப் பிடித்துஇனிதா,
ஆனசம்பு மாரிஎன்ன;
அடற்புயம் பூரித்துஅவனும்
ஏனையர்முன் தொழுதுசென்றான்,
இலங்கையன் கூட்டிவிட்ட
தானையுடன் தன்படையும்
தந்தைதந்த படையொடுமே. 2

மிக்கதாம் வடவனல்போல்
வெங்கரவா ரணம்மலைபோல்
பக்கரைமா உரும்இடிபோல்
பதாதிசங்கம் பாய்புலிபோல்
உக்கரம்வேல் கேடகம்வாள்
உயர்சூலம் பாசம்தண்டம்
சக்கரம்தோ மரம்இலங்க
சாகரம்போல் நடந்தனவே. 3

பொரப்பதினா யிரம்மணித்தேர்;
பொழிமதமா அதற்குஇரட்டி;
குரப்பரிமா அதற்குஇரட்டி;
கொலைக்காலாள் அதற்குஇரட்டி;
உரப்பொழிவில் முரசுசங்கம்
உம்பர்சொல்ஓ சையைஅடக்க,
வரப்புயல்போல் கொடிகள்மின்ன
வான்அளவும் தூள்எழவே; 4

தேரின்மிசை அதிரதரும்
சினக்களிற்றின் பாகர்களும்
சாரிபதி னெட்டும்வரும்
சமர்கெழுப டையும்சூழக்
காரியசே னையின்நடுவே
கவசமும்தா ணியும்விளங்க
மூரிவில்லான் முரண்தோளான்
முனிந்துசம்பு மாலிசென்றான். 5

### ஆரவாரித்து நின்றான் அனுமன்

வந்திலர்வாள் அரக்கர்என்னும்
வாள்அனுமான் கண்டுஉகந்தான்;
சந்திரன்போல் உதயகிரி
தனிவிளங்கும் சூரியன்போல்
இந்திரவில் எனவிளங்கும்
தேர்அதன் மீதுஏறிநின்றான்,
அந்தரவா னவரும்அஞ்ச
தோள்கள்கொட்டி ஆர்ப்பரித்தே. 6

### விளைந்தது கடும்போர்

ஆர்த்துஎழுந்தார் இராக்கதரும்;
அரும்பிணமாம் மலைஇடறிக்
கூர்த்தசெம்பு மாரியும்தன்
கொடும்படையை அணிவகுத்தான்;
தீர்த்தனுமான் ரோமம்என்னும்
சேனைஅணி வகுக்க,ஒன்னார்
போர்த்தசங்கம் முரசுஅதிரப்
பொறிகள்சிந்தப் படைசொரிந்தார். 7

6. தேர் - இங்கே தோரணவாயில்.

7. செம்புமாரி - சம்புமாலி. திருமண்காப்பு விளங்குகிற தனது நெற்றியே முன்னணிப்படையாக, நகங்களே வாளாயுதங்களாக, இரு கைகளே பக்கச் சேனை ஆக, வால் பின்னணிச்சேனையாக, ரோமம் சிலிர்க்க நின்றான் அனுமான்.

எரிந்துமோதும் சொரிந்தபடை
இடக்கையினால் துணித்துஅகற்றிச்
செரிந்துஒருதண் டாயுதத்தைத்
தெரிந்துஎடுத்து வலக்கையினால்
பிரிந்தவரும் எதிர்ந்தவரும்
பேர்ந்தவரும் வளைந்தவரும்
முரிந்துபொன்ற விசும்பில்நின்றும்
முனிந்துஅனுமான் மோதலுற்றான். 8

**நாற்படைகளும் நாசமாயின**

கீல்கள் கழிந்தன ஆணி இழந்தன
மேனி இழந்தன சூரும்
சீல்கள் கழிந்தன பூணி இழந்தன
வீணை இழந்தன தேர்கள்;
வால்கள் இழந்தன கோடும் இழந்தன
மாய்கை இழந்தன மாறா
மால்கள் இழந்தன வாழ்க்கை இழந்தன
கதமும் இழந்தன ஆனை;
கால்கள் இழந்தன மார்பம் இழந்தன
காதும் இழந்தன காதும்
காதல் இழந்தன பார்வை இழந்தன
காயம் இழந்தன மாவும்;
வேல்கள் இழந்தனர் வாள்கள் இழந்தனர்
தோள்கள் இழந்தனர் காலின்
வேகம் இழந்தனர் ஆகம் இழந்தனர்
மேல்எழும் வன்கணர் தாமே. 9

9. இழந்தன நெடுங்கொடி; இழந்தன இருங்கோடு;
இழந்தன நெடுங்கரம்; இழந்தன வியன்தாள்;
இழந்தன முழங்குஒலி; இழந்தன மதம்பாடு;
இழந்தன பெருங்கதம் இருங்கவுள் யானை. —கம். 26.

நெரிந்தன தடஞ்சுவர்; நெரிந்தன பெரும்பார்;
நெரிந்தன நுகம்புடை; நெரிந்தன அதன்கால்;
நெரிந்தன கொடிஞ்சிகள்; நெரிந்தன வியன்தார்;
நெரிந்தன கடும்பரி; நெரிந்தன நெடுந்தேர். —கம். 27.

எரிந்துமோதும் சொரிந்தபடை
இடக்கையினால் துணித்துஅகற்றிச்
செரிந்துஒருதண் டாயுதத்தைத்
தெரிந்துஎடுத்து வலக்கையினால்
பிரிந்தவரும் எதிர்ந்தவரும்
பேர்ந்தவரும் வளைந்தவரும்
முரிந்துபொன்ற விசும்பில்நின்றும்
முனிந்துஅனுமான் மோதலுற்றான். 8

**நாற்படைகளும் நாசமாயின**

சீல்கள் கழிந்தன ஆணி இழந்தன
மேனி இழந்தன சூரும்
சீல்கள் கழிந்தன பூணி இழந்தன்
வீணை இழந்தன தேர்கள்;
வால்கள் இழந்தன கோடும் இழந்தன
மாய்கை இழந்தன மாறா
மால்கள் இழந்தன வாழ்க்கை இழந்தன
கதமும் இழந்தன ஆனை;
கால்கள் இழந்தன மார்பம் இழந்தன
காதும் இழந்தன காதும்
காதல் இழந்தன பார்வை இழந்தன
காயம் இழந்தன மாவும்;
வேல்கள் இழந்தனர் வாள்கள் இழந்தனர்
தோள்கள் இழந்தனர் காலின்
வேகம் இழந்தனர் ஆகம் இழந்தனர்
மேல்எழும் வன்கணர் தாமே. 9

9. இழந்தன நெடுங்கொடி; இழந்தன இருங்கோடு;
இழந்தன நெடுங்கரம்; இழந்தன வியன்தாள்;
இழந்தன மூழ்ங்குஒலி; இழந்தன மதம்பாடு;
இழந்தன பெருங்கதம் இருங்கவுள் யானை. —கம். 26.

நெரிந்தன தடஞ்சுவர்; நெரிந்தன பெரும்பார்;
நெரிந்தன நுகம்புடை; நெரிந்தன அதன்கால்;
நெரிந்தன கொடிஞ்சிகள்; நெரிந்தன வியன்தார்;
நெரிந்தன கடும்பரி; நெரிந்தன நெடுந்தேர். —கம். 27.

### சாகிறாயா? போகிறாயா?

ஏதி ஒன்றால்; தேரும் அஃதால்;
எளியோர் உயிர்கோடல்
நீதி அன்றால்; உடன்வந் தாரைக்
காக்கும் நிலைஇல்லாய்!
சாதி; அன்றேல், பிறிதுஎன் செய்தி?
அவர்பின் தனிநின்றாய்!
போதி என்றான் பூத்த மரம்போல்
புண்ணால் பொலிகின்றான். 10

முற்ற முனிந்தான் நிருதன்; முனியா,
முன்னும் பின்னும்சென்று,
உற்ற பகழி உறாது, முறியா
உதிர்கின் றதைஉன்னா,
சுற்று நெடுந்தேர் ஓட்டித் தொடர்ந்தான்;
தொடரும் துறைகாணான்;
வெற்றி எழுவை மழுவாய் அம்பால்
அறுத்து வீழ்த்தினான். 11

### சம்புமாலியை வதைத்தான்

சலித்தான் ஐயன்; கையால், எய்யும்
சரத்தை உகச்சாடி,
ஒலித்தார் அமரர் கண்டார் ஆர்ப்ப,
தேரி னுள்புக்குக்
கலித்தான் சிலையைக் கையால் வாங்கிக்
கழுத்தின் இடைஇட்டு
வலித்தான், பகுவாய் மடித்து மலைபோல்
தலைமண் ணிடைவீழ. 12

---

ஒடிந்தன; உருண்டன; உலந்தன; புலந்த;
இடிந்தன; எரிந்தன; நெரிந்தன; எழுந்த;
மடிந்தன; மறிந்தன; முறிந்தன; மலைபோல்
படிந்தன; முடிந்தன; கிடந்தன பரிமா. —கம். 28.

குறிப்பு: இப் படலத்தில் 10 முதல் 15 வரையுள்ள ஆறு பாடல்கள் ஏட்டிலே சிதைவுற்றன. இவ்விடத்தைக் கம்பருடைய விருத்தங்கள் நிறைவு செய்கின்றன.

பரிந்து புலம்பும் மகளிர் காண,
கணவர் பிணம்பற்றி,
விரிந்த குருதிப் பேராறு ஈர்த்து
மனைகள் தொறும்வீச,
இரிந்தது இலங்கை; எழுந்தது அழுகை;
இன்றுஇங்கு இவனாலே
சரிந்தது அரக்கர் வலிஎன்று எண்ணி,
அறமும் தளிர்த்ததால். 13

**சம்புமாலி இறந்ததைத் தெரிந்தான் இராவணன்**

புக்கார் அமரர், பொலந்தார் அரக்கன்
பொருவில் பெருங்கோயில்
விக்கா நின்றார்; விளம்பல் ஆற்றார்;
வெருவி விம்முவார்;
நக்கான் அரக்கன்; நடுங்கல் என்றான்;
ஐய! நமர் எல்லாம்
உக்கார்; சம்பு மாலி உலந்தான்;
ஒன்றே குரங்குஎன்றார். 14

**தங்களை ஏவுமாறு வேண்டினர் தலைவர்கள்**

என்னும் அளவின், எரிந்து வீங்கி
எழுந்த வெகுளியான்,
உன்ன உன்ன உதிரக் குமிழி
விழியூடு உமிழ்கின்றான்,
சொன்ன குரங்கை யானே பிடிப்பென்
கடிதுதொடர்ந்து என்றான்;
அன்னது உணர்ந்த சேனைத் தலைவர்
ஐவர் அறிவித்தார். 15

# 10 பஞ்ச சேனாபதிப் படலம்

—சேனாதிபதிகள் ஐவரையும் அனுமன் கொன்றது

தஞ்சமான படையொடும்போய்
சம்புமாரி சமர்புரிந்து
வெஞ்சமரில் அனுமானால்
மடிந்தவாறும் உரைசெய்தேன்;
நஞ்சமாரும் கருங்கடல்போல்
நடந்துசேனை உடன்வளைந்து
பஞ்சசேனா பதிஎன்பார்
பட்டவாறும் பகர்கின்றேன். 1

## புறப்பட்டனர் பஞ்ச சேனாபதிகள்

கொஞ்சக் குரங்கின்மேல் நீநடந்தால்
குலையும் கயிலையும் தைரியமாய்;
நஞ்சத் திசையானை மதம்பொழியும்;
நகைசெய் வார்கள்மும் மூர்த்திகளும்;
தொஞ்சச் சிறியோரை நீவிடுத்தாய்,
தொலையா வலிஎம்மைச் செலவிடுஎன்று
பஞ்ச சேனா பதிகள்சொல்லப்
பாரில் அரக்கனும் போமின்என்றான். 2

கோனை வணங்கிக்கொண்டு அனிகம்பெற்றார்;
கொடுவெஞ் சேனையை எழுகஎன்றார்;
தானை வருகஎன்று ஆனையின்மேல்
தகுவர் அவர்ஏறி முரசுஅறைந்தார்;
வான வில்ஒத்த படைக்கலங்கள்
வரம்பில் பொறிபட்டும் ஏகலுறச்
சோனை இடிஒத்த வாச்சியங்கள்
சூரர்ஆற் றலைஒக்கும் துவசங்களே. 3

அம்ப தாயிரம் தேர்ஆனை,
ஐம்ப தாயிரம் பரிஇரட்டி,
வெம்பா தியப்பரிக்கு இரட்டி;
வேழம் மதம்பொழிந் தார்ஆகி,

செம்பொன் மணித்தேரால் அல்லுப்பட்டுத்
திரியும் பரிக்காலால் நீராகி
மொய்ம்பார் அடிபட்டுத் தூளாகி
முன்னீர் ஒலிஅஞ்ச முழங்கிச்சென்றார். 4

**பஞ்சவர் பராக்கிரமம்**

வாழக் கடவிரோ கவிமுன்நின்று
மக்கள் தாய்தந்தை அழும்ஓசை;
வேழத் திருபாலும் மணியோசை;
மேகத் திடிபோல் வரும்சேனை;
சூழத் தலைவர்ஐ வரும்தேர்மேல்
சுடர்வெம் கதிர்போலச் சிலைஏந்தி
ஆழற் கடற்புட்டி கவசம்மின்ன
அப்பூ தம்ஐந்தும் புலனும்ஒத்தார். 5

குபேரன் அழகா புரியைவென்று
கொள்ளை வாரிய பூடணத்தார்;
சபரா யமன்தண்டம் சிவன்சூலம்
சலவன் கயிற்றாலும் சலம்இல்லார்;
சுபான கடஅன்னத் தின்கந்தன்
தோகை பீலியும் தொடுத்தவில்லார்;
கபாலம் தனிற்குத்தி வாசவன்தான்
களிற்றை வால்பற்றி இழுத்தகையார். 6

அரக்கன் செயித்தன்று களிறுஎட்டின்
அவிழ்த்துத் தான்கட்டும் முதற்பட்டத்தார்;
வரக்கண் டிலதென்று காலன்தன்னை
வரிந்து கொடுவந்த வலியாளர்;

4. வெம்பாதி - செம்பாதி. அல்லுப்பட்டு - அல்லலப்பட்டு (வட்டார வழக்கு).

5. பெரும்பூதம் ஐந்தும் பஞ்சேந்திரியங்கள் ஐந்தும் ஒத்தார்.

6. சலவன் - வருணன். சலம் - அசைவு - வருத்தம். தெய்வப்படை எதுவும் அவர்களை வருத்தா. பிரமனையும் கந்தனையும் வென்று அவர்கள் வாகனமாகிய அன்னம் மயில்களினின்றும் பறித்த இறகுகளைத் தங்கள் வில்லிலே சூட்டியிருந்தனர். வாசவன் - இந்திரன்.

இரைக்கும் முகில்எழும் மலைஏழும்
இசைக்கும் தளம்எழும் உலகுஏழும்
கரைக்கும் கடல்எழு காற்றுஏழும்
கனலும் கிளர்ந்தாலும் கடக்கவல்லார். 7

**படையைப் பார்த்தான் அனுமான்**

ஒட்டார் அனைவோரும் தோரணத்தை
உற்று வளைத்துக்கொண்டு அணிவகுத்தார்;
மட்டார் தொடைவீரன் தனிமைகண்டு
வானத்து இமையோரும் மறுக்கம்உற்றார்;
பட்டார் இவர்என்று மகிழ்ந்துஅனுமான்
படையைப் பார்த்துத்தன் புயம்பார்த்தான்;
எட்டா அரக்கரை வதைத்ததுதான்
இந்தக் குரங்கோஎன்று உரைத்துப்புக்கார். 8

**விளைந்தது கடும் போர்**

மகவான் காநின்று வாங்கி அங்கண்
வைத்த தோரணம் தனில்ஏறி,
தகவான் அனுமந்தன் இருக்க; ஒன்னார்
சங்கம் முழக்கி வெம்படை சொரிந்தார்;
சுகவான் உடலில் படைகள் விட்டுச்
சொரியும் படிபோலத் தூங்கக் கண்டார்;
மிகவாம் பலரும்வந்து அடுத்துக் கொண்டார்;
வீரன்ஒரு தண்டம் எடுத்துக் கொண்டான். 9

மொய்த்த விற்கணை சத்தி சக்கரம்
முற்கரத் தொகை வச்சிரம்
மூவி லைத்திரி சூலம் மற்றும்
முரிந்து போய்விழ மோதுவான்;
குத்து மத்தி மருப்பு ஒடித்து
உதிரப் பரப்பினை ஏற்றுவான்;
கோல நேமி உருட்டி வீரரை
நீலமேனி புரட்டுவான்;

8. புன்தலைக் குரங்கிது போலு மால்அமர்
வென்றது! விண்ணவர் புகழை வேரொடும்
தின்றவல் அரக்கரைத் திருகித் தின்றதால்!
என்றனர், அயிர்த்தனர், நிருதர் எண்ணிலார். —கம். 27.

கைத்த லத்தில் அரக்கர் வாள்கொடு
வாசி நாள்அற வீசுவான்;
கரம்இ ரண்டில்இ ரண்டு தேர்கொடு
கரிஇ ரண்டை நொறுக்குவான்;
மத்த யானை இரண்டு கோடுஇரு
பாலும் மாவினை நூறுவான்
மலைகள் கொண்டு நிலத்து அரைப்பன்
மரங்கள் கொண்டும் அடிப்பனாம். 10

ஞான மாருதி ஏறிய வானில்
நடந்து வாரியில் வந்துவீழ்
நவம ணிப்பல தேர்கள் சூரிய
நாய கன்பொலி தேர்கள்போல்,
மான யானைகள் புனல்மு கந்திட
மாக மாமுகில் படிவபோல்,
வாசி வாயிடை குருதி பொங்கிட
வடவை வெங்கனல் போலுமால்,
ஆன வாலில் வரிந்து வீசிட
அம்ப ரத்திடை சுழலுவார்
அரவு சுற்றிமுன் னீர்க டைந்திடும்
மந்த ரம்எனல் ஆயினார்;
தானை மாள உதைத்து நூக்கிட
மகர தோரணம் மறையவே
தரையில் உற்றது உதிர ஆறுஒரு
சாக ரித்திடை உற்றதால். 11

### எதிர்த்துப் பொருதனர் ஐவரும்

தரைக்கண் மலைஉண்டாம் மரம்கல்உண்டாம்
சடையோன் மழுவைப்போல் எழுஎன்றுஉண்டாம்;
அரக்கர் அனுமன்முன் பிழைப்பதுஉண்டோ?
அற்றங் கவிந்தனர் அனைவோரும்;
பரக்க அழலுற்றது இலங்கைஎங்கும்;
பஞ்ச சேனாபதி கள்பொங்கி
நிரக்க நெடுந்தண்டே கடவிவந்தார்
நிரைத்தார் சரமாரி அனுமன்தன்மேல். 12

### ஐவருள் ஒருவன் தொலைந்தான்

*அரங்கக் கணைஎல்லாம் துணித்துஅகற்றி*
*அழித்தான் ஒருதேரை; அழிப்புண்டவன்*
*சரங்கள் வானின்றும் சொரிய,ஐயன்*
*தண்டால் அடிக்க,வில் லால்ஏற்றான்;*
*திரங்கொள் சிலைதானும் முறியவந்த*
*சிலையால் எரிந்துஒரு மலைஎடுத்தான்;*
*வரங்கள் நமக்குஈவான் நெரியத்தண்டால்*
*மலையும் தலையும்அற்று அரக்கன்பட்டான்.* 13

### நால்வருள் ஒருவன் மாய்ந்தான்

*எரிமேல் எரிபோல் அனுமன்தன்மேல்*
*இரத்தம் சொரிய நால்வர்தம்மேல்*
*கிரிமேல் வலிதான கிரிவீசக்*
*கிரியை அறஎய்த ஒருவன்தன்னை*
*மரிமேல் எனத்தேரோடு எடுத்துஏறிய*
*வானிற் போய்மண்ணில் மீண்டவன்மேல்*
*கரிமேல் அரிபோலப் பாய்ந்துஉலக்கிக்*
*காலால் வதைத்தனன் காலின்மைந்தன்.* 14

### இருவரை வாலினால் வரிந்து இறுக்கி வதைத்தான்

*சீறிச் சரம்சிந்தும் மூவர்தம்மில்*
*தேரோடு இருவரைத் தேடிஅவர்மேல்*
*பாறிப் பரியும்பா கரும்மாளப்*
*பகைஞர் அகலஅனு மான்விண்மேல்*
*ஏறிச் சிலையும்தூ ணியும்வாளும்*
*ஏற்றுஅங்கு எறியமற் றவர்வாளால்;*
*கூறிப் பொருதார்கொல் அரவம்ஒத்தார்;*
*கொற்ற மாருதி கருடன்ஒத்தான்.* 15

*துய்ய வாலால் இருவரையும்*
*சுற்றி இறுக்கப்பட்டு அவர்வீழ்ந்தார்;*
*அய்யன் இரவிபோல் விசும்பின்நின்று*
*அவனி தனில்நிசா சரன்தன்*

செய்ய தலைமேல் குதிக்கஅவன்
தேரோடே மண்ணில் புதைந்துபுக்கான்;
வெய்யர் அவிந்தார் புலன்ஐந்தும்போல்;
வென்ற வீரன்மெய்ஞ் ஞானம்ஒத்தான். 16

## நிகழ்ந்தது தெரிந்தான் இராவணன்

படத்தான் நடந்தார் எல்லாரும்என்றே
பாய்ந்தார் அதுகண்டு சிலர்ஓடி
மடித்தான் அழுகின்ற அரக்கியரை
வைது மறுகும்இரா வணன்முன்
திடத்தா னையோடுஐவர் தலையினையும்
செயித்து அங்குஇருந்தது குரங்குஎனவே
அடத்தா னேஎன்று வெகுண்டுஎழுந்தான்;
அட்சயன் எனும்மைந்தன் வணங்கிச்சொல்வான்: 17

16. வெஞ்சின அரக்கர் ஐவர்; ஒருவனே! வெல்லப் பட்டார்
அஞ்செனும் புலன்கள் ஒத்தார்; அவனும்நல் அறிவை ஒத்தான்.
—கம். 63.

17. தானே அட - தானே கொல்ல.

# 11 அட்சயகுமாரன் வதைப் படலம்

*—இராவணனது புதல்வனான அட்சயன் என்பான்*
*அனுமனால் கொல்லப்பட்டது*

*மட்டவிழ்தார் அரக்கர்தார் உடனேஐவர்*
*வன்சேனைத் தலைவர்பட வதைத்துமற்றும்*
*எட்டரிய தோரணமேல் ஆறுபார்க்கும்*
*இராமபிரான் திருத்தூதன் ஏற்றம்சொன்னேன்;*
*அட்டகச மருப்புஒடித்தோன் இளையமைந்தன்*
*அட்சயகு மாரன்தரு அனீகவெள்ளம்*
*பட்டதுவும் அனுமன்கையில் அவனுமேதான்*
*பட்டதுவும் இங்குஇனிமேல் பகர்கின்றேனே.* 1

## போருக்கு அனுமதி பெற்றான் அக்கன்

*செந்திருமா லோ?சிவனோ?*
*செலத்தகுமோ நீகவிமேல்?*
*இந்திரனைப் பிடிக்கஎன்னை*
*ஏவாதுஅண் ணனைவிடுத்தாய்;*
*ஐந்துமுகன் ஒருகுரங்காய்*
*அமர்செயுமேல் பற்றிநின்பால்*
*தந்திடுவேன் எனும்மகனைத்*
*தசக்கிரீவன் போதிஎன்றான்.* 2

1. *தார் - மாலை, சேனை. தோரணவாயில்மேல் நின்று. அனீகம் - சேனை.*

2. *முக்கணான் ஊர்தி அன்றேல், மூன்றுலகு அடியின் தாயோன்*
*ஒக்கஊர் பறவை அன்றேல், அவன்துயில் உரகம் அன்றேல்,*
*திக்கயம் அல்ல தேல்,புன் குரங்கின்மேல் சேறி போலாம்!*
*இக்கடன் அடியேற்கு ஈதி; இருத்திஈண்டு இனிதின் எந்தாய்!*
—கம். 2.

*அண்டர்கோன் தன்னைப் பற்றித் தருக்என்றா; அடியேன் நிற்க,*
*கொண்டனை என்முன் தன்னைப் பணிஎன், நெஞ்சம் கோடல்*
*உண்டு;அது தீரும் அன்றே? உரன்இலாக் குரங்குஒன் றேனும்,*
*எண்திசை வென்ற நீயே, ஏவுதி என்னை என்றான்;* —கம். 3.

**படைப் பெருக்கம்**

இந்திரனை வென்றுகொண்ட
இருநூறு பேய்பூண்ட
முந்திரதம் தனில்பொலிந்தான்
முரசுசங்கம் பணைமுழங்க;
சிந்துவின்மீன் அத்தனைதேர்;
திரிமகரம் அத்தனைதோல்;
பைந்திரைகள் அத்தனைமா;
பதாதிமணல் அத்தனையே. 3

ஆறிரண்டா யிரம்தோழர்
அமைச்சர்மைந்தர் நாலுலட்சம்
கூறிரண்டா யிரர்குமரர்
கொடித்தேர்மேல் சூழ்ந்துவர,
வேல்திரண்ட தண்டுவில்வாள்
வெண்மழுச்சூ லங்கள்மின்ன,
மாறிரண்ட மாதர்நெஞ்சும்
மறலியும்பேய் களும்தொடர, 4

**தோன்றியது துன்நிமித்தம்**

மிடைந்தபொற்பூண் வெயில்எறிக்க,
வெள்எயிற்றால் நிலவுஎறிக்க,
அடர்ந்தார்த்த முழக்கோடு
அரக்கியர்ஏங்கு ஒலிமுழங்க,
படர்ந்தொடுந்தேர் நிலம்அதிரப்
பரிதூங்கக் குருதிபெய்ய,
இடந்துடிக்க வருபவனை
இகல்அனுமான் கண்டனனே. 5

**கொன்றது இந்தக் குரங்குதானா?**

இராவணனோ இராவணியோ
இருவர்இங்கு ஒருவர்உற்றால்
இராவணன்கொன்று உள்மகிழ்வேன்
இராமசெயம் எனவாழ்த்தி,

3. சிந்து - கடல். தோல் - யானை. மா - குதிரை.
4. மால் + திரண்ட - மாறிரண்ட. மால் - காதல்.
5. படர்ந்தோடும் தேர்.

இராவணன்அன்று இராவணிஅன்று
இவன்ஆரோ என;அவனும்
இராவணன்வீ ரரைவதைத்தது
இக்குரங்கோ? எனப்பதைத்தான். 6

கூறினகேட்டு, அவன்பாகன்
குரங்குஅலவோ வாலிஎன்ன;
வேறினிஎன்? குரங்கைஎல்லாம்
வேரோடும் களைவன்என்றான்;
சீறினராக் கதர்வளைந்தார்
சினப்படைகள் சொரிந்துஆர்த்தார்;
ஏறினன்தேர் என அனுமான்
எடுத்ததண்டால் புடைக்கலுற்றான். 7

## விளைந்தது போர்

சொரிந்த சொரிந்த மழுவும் வாளும்
வேலும் கோலும் துணியவே
தொடர்ந்த பொறிகள் கொழுந்து மணலில்
சுடரில் அழியும் மடலிபோல்

6. இந்திர சித்தோ? மற்றுஅவ் இராவண னேயோ? என்னா,
சிந்தையின் உவகை கொண்டு முனிவுற்ற குரக்குச் சீயம்,
வந்தனன்; முடிந்தது அன்றோ மனக்கருத்து? என்ன வாழ்த்தி,
சுந்தரத் தோளை நோக்கி, இராமனைத் தொழுது சொன்னான்.
—கம். 18.

எண்ணிய இருவர் தம்முள் ஒருவனேல், யான்முன் நோற்ற
புண்ணியம் உளதாம்; எம்கோன் தவத்தொடும் பொருந்தி னானே;
நண்ணிய நானும் நின்றேன்: காலனும் நணுகி நின்றான்;
கண்ணிய கருமம் இன்றே முடிக்குவென், கடிதின் என்றான். —கம். 19.

பழியிலது உருஎன் றாலும், பல்தலை அரக்கன் அல்லன்;
விழிகள் ஆயிரமும் கொண்ட வேந்தைவென் றானும் அல்லன்;
மொழியின்,மற்று அவர்க்கு மேலான்; முரண்தொழில் முருகன் அல்லன்;
அழிவுஇல்ஒண் குமரன் யாரோ, அஞ்சனக் குன்றம் அன்னான்?
—கம். 20.

7. அன்னதாம் நகுசொல் கேட்ட சாரதி, ஐய! கேண்மோ!
இன்னதாம் என்னல் ஆமோ உலகியல்? இகழல் அம்மா;
மன்னனோடு எதிர்ந்த வாலி குரங்குஎன்றால், மற்றும் உண்டோ?
சொன்னது துணிவில் கொண்டு சேறிஎன்று, உணரச் சொன்னான்.
—கம். 22.

எரிந்த பருதி முதிர்ந்த வெயிலில்
எலும்பி லாத உயிர்கள்போல்
இரதம் கொடிகள் துரகம் கரிகள்
எறியும் படைஞர் மடியவே;
சுரிந்த உடல்கள் பொழிந்த குருதி
கலந்தது இலங்கை கலங்கவே
கழிந்த உயிர்கொ டேகும் காகம்
தூய கால்கள் ஆகவே
விரிந்த நிருதர் பறந்த பறவை
வீரன் பெருமந் தரமதாய்
விரைந்து கடைய எழுந்த படவை
ஈக்கும் கடலும் மொய்க்குமால். 8

ஆழி அம்மை சேனை மாதா
அடல்இ ராவ ணன்மகன்
அசனி அனைய தேரைக் கடவி
அமரர் கணமும் அஞ்சவே
ஏழி ரண்டு கொடிய பாணம்
எய்த காலை அனுமனும்
எழுவி னாலே அகற்ற வந்த
எழுவை உதிர எய்யவே
வாழி வீரன் இறுக நின்ற
தேரின் மீது குதிகொடே
வாசி யோடு யானை தாக்க
வந்த வான அரக்கனும்
......... ......... ......... .........
......... ......... .........
......... ......... .........
......... ......... ......... 9

**அக்ககுமாரனின் தேர் வில் அழிந்தன**

தேரில் சென்று,எதிர் கோல்கொள் வான்உயிர்
தின்றான்; அப்பொரு செறிதிண்தேர்,
பாரில் சென்றது; பரிபட் டன;அவன்
வரிவில் சிந்திய பகழிக்கோல்,

மார்பில் சென்றன சில;பொன் தோளிடை
    மறைவுற் றனசில; அறவோனும்
நேரில் சென்று,அவன் வயிரக் குனிசிலை
    பற்றிக் கொண்டு,எதிர் உறநின்றான். 10

## மற்போர் புரிந்து மடிந்தான் அக்கன்

வாளா லேபொரல் உற்றான், இற்றுஅது
    மண்சே ராமுனம், வயிரத்திண்
தோளா லேபொர முடுகிப் புக்கு,இடை
    தழுவிக் கோடலும், உடல்முற்றும்,
நீள்ஆர் அயில்என மயிர்தைத் திட,மணி
    நெடுவால் அவன்உடல் நிமிர்வுற்று
மீளா வகை,புடை சுற்றிக் கொண்டது;
    பற்றிக் கொண்டனன் மேலானான். 11

நீத்தாய் ஓடின உதிரப் பெருநதி
    நீரா கச்சிலை பாராக,
போய்த்தாழ் செறிதசை அரிசிந் தினபடி
    பொங்க, பொரும்உயிர் போகாமுன்,
மீத்தாம் நிமிர்சுடர் வயிரக் கைகொடு
    பிடியா, விண்ணொடு மண்காணத்
தேய்த்தான்; ஊழியின் உலகுஏழ் தேயினும்
    ஒருதன் புகழ்இறை தேயாதான். 12

குறிப்பு : இப் படலத்தின் 10 முதல் 15 வரையுள்ள 6 பாடல்கள் ஏட்டிலே வீடுற்றன; இவ்விடத்தைக் கம்பனார் விருத்தங்கள் நிறைவுசெய்கின்றன.

10. கோல் கொள்வான் - சாரதி; தேர் தரையில் விழுந்தது.

11. மேலானான் - அக்கனைக் கீழே தள்ளி அவன்மேலே உட்கார்ந்து கொண்டான் அனுமான்.

12. உதிரம் - இரத்தம் நீராக, பார் - பூமியே, சிலை - அம்மியாக, தசைகள் அரி - அரிசியாக, (தசை நீங்கிய அவன், உடற்பகுதியே குழவியாக), மீத்துஆ - கை - மேலாக எழுந்து ஓங்கிய தன் கைகளைக் கொண்டு அக்கனைத் தேய்த்தான் - அரைத்தான்.

## எஞ்சிய படைகள் அஞ்சி ஓடின

மீன்ஆய் வேலையை உற்றார் சிலர்;சிலர்
பசுஆய் வழிதொறும் மேய்வுற்றார்;
ஊன்ஆர் பறவையின் வடிவுஆ னார்சிலர்;
சிலர்நான் மறையவர் உருஆனார்;
மான்ஆர் கண்இள மடவார் ஆயினர்
முன்னே, தம்குழல் வகிர்வுற்றார்
ஆனார்சிலர்; சிலர்,ஐயா! நின்சரண்
என்றார்; நின்றவர் அரிஎன்றார். 13

## அரக்கியரின் அவலம்

குண்டலக் குழைமுகக் குங்குமக் கொங்கையார்,
வண்டுஅலைத்து எழுகுழல் கற்றைகால் வருடவே,
விண்டு,அலத் தகவிரைக் குமுதவாய் விரிதலால்,
அண்டம்உற் றுளது,அவ்ஊர் அழுதபேர் அமலையே! 14

தாஅரும் திருநகர்த் தைய லார்முதல்
ஏவரும், இடைவிழுந்து இரங்கி ஏங்கினார்;
காவலன் கால்மிசை விழுந்து, காவல்மாத்
தேவரும் அழுதனர், களிக்கும் சிந்தையார். 15

13. அரி என்றார் - ஹரி என்ற திருமால் நாமம் கூறினார்.

14. அலத்தகம் - செம்பஞ்சு, விரை - வாசனை. அதரத்துக்கும் மகளிர் அலத்தகம் - செம்பஞ்சுக் குழம்பு பூசுதல் உண்டு.

# 12 பாசப் படலம்

—இந்திரசித்து, அனுமனைப் பாசத்தால் கட்டியது

### போருக்கு எழுந்தான் இந்திரசித்தன்

அவ்வழி, அவ்வுரை கேட்ட ஆண்தகை,
வெவ்விழி எரிஉக, வெகுளி வீங்கினான்;
எவ்வழி உலகமும் குலைய இந்திரத்
தெவ்அழி தரஉயர் விசயச் சீர்த்தியான். 1

தம்பியை உன்னும் தோறும்
தாரைநீர் ததும்பும் கண்ணான்,
வம்பியல் சிலையை நோக்கி
வாய்மடித்து உருத்து நக்கான்;
கொம்பியல் மாய வாழ்க்கைக்
குரங்கினால், குரங்கா ஆற்றல்
எம்பியோ தேய்ந்தான்? எந்தை
புகழ்அன்றோ தேய்ந்தது? என்றான். 2

கம்பக் களிமாவின் கொடிஆடை
கவினப் பரிமேல்வெண் சாமரங்கள்
இன்பத் தலத்தோடும் வானைவென்றோன்
இந்திர செயித்துவந் தான்என்றுஎன்றே
செம்பொன் செழும்சின்னம் காளங்கள்
செரிகொம் பொடுசங்கு திரண்டுஊத
............ ............ ............
............ ............ ............ 3

உரைசங் கொடுதாரை துடிகோடி;
உறுமை திமிலிமத் தளம்கோடி;
சரசம் தருநாக சரம்கோடி;
தப்பு குழல்வீணை சதகோடி;

குறிப்பு : இப் படலத்தில் 1 முதல் 2 வரையுள்ள இரண்டு பாடல்கள் ஏட்டிலே சிதைவுற்றன; அவ்விடத்தைக் கம்பர் விருத்தங்கள் நிறைவுசெய்கின்றன.
3. இன்பத்தலம் - போகபூமி - உத்தரகுரு.

முரசம் கடைபேரி கைகோடி;
முத்தின் சிவிகைகள் பலகோடி;
நிரைசெங் கொடைவெள்ளக் குடைகோடி;
நீலக் குடைபச்சைக் குடைகோடி. 4

திரிகற் காடும்சக் கரக்காடும்
தெண்டா யுதக்காடும் வேற்காடும்
பொருகைக் கணைக்காடும் சிலைக்காடும்
புலித்தோல் பரிசையும் வாள்காடும்
பரிகப் பணக்காடும் மழுக்காடும்
பாசம் தோமரம் சூலம்குந்தம்
சுரிகைக் காடும்தோ கையின்காடும்
தூங்கற் காடுஎன்றும் சூழச்சென்றார். 5

பார்க்கும் திசைஎங்கும் தேரின்வெள்ளம்
பார்க்கும் தலம்எங்கும் யானைவெள்ளம்
பார்க்கும் இடமெங்கும் புரவிவெள்ளம்
பார்க்கில் எங்கும்ப தாதிவெள்ளம்
ஆர்க்கும் அரக்கர்கு மாரர்களும்
அமைச்சர் குமாரரும் நூறுவெள்ளம்
ஏர்க்க உடன்மாய் மெய்காப்பார்
இறைந்து அகம்படி வீரர்வெள்ளம். 9

ஓரா யிரம்வெள்ளம் சேனைசுற்றி
உகாந்த காலத்தின் கடலைஒப்ப,
தோரா மதிஎன்னக் குடைநிழற்ற,
தோகை யர்கள்சா மரம்இரட்ட,
பாரா பெருந்தூளி விசும்பைமுட்ட,
பணைத்த கரிபேர் இடிமுழங்க,
ஏரார் திசையானை இரிந்துஓட,
இமையோர் இடைந்தோட அரக்கன்சென்றான். 7

5. தூங்கல் - யானை.

## இந்திரசித்தனைப் பார்த்தான் அனுமன்

மிடல்வெம் படைகண்டு நகைத்துஅனுமான்
விமலன் இருபாதம் மனத்துட்கொண்டான்
உடலும் கடைநாளில் பரவைதன்னில்
உயர்மேருவைஒக்கும் வீரன்தன்னை
அடல்இங்கு இவனோடே போர்நன்றுஎன்றான்
அவனும் குருதியும் பிணமும்தெற்றிக்
கடலும் மலையும்பொ லிவும்மற்றோர்
உலகோ எனத்தக்க களத்தைக்கண்டான். 8

பொருமா வலியோர்எல் லாரும்பட்டார்
போர்வெம் படைஎய்தில் ராமன்வந்தால்
கருமா குழலிமாமி மூக்குஅற்றதும்
கரன்பட் டதும்எம்பி இறந்திட்டதும்
இருமா னிடராலும் குரங்குஒன்றாலும்
என்றால் இனிதேஎன் வீரம்என்பான்
செருமாண் தம்பிதேய்ப் புண்டமெய்
தீகாய் செஞ்செம்பே போலக்கண்டான். 9

## சோகமும் கோபமும் கொண்டான்

புயமன் சிலைசோர நிலைசோரப்
பொடிகண் ணீர்சோரப் பொருமிவிம்மி
இயமன் கொடுபோக உனைஅஞ்சுவான்
எவ்வா னகம்உற்றாய் எம்பிஎன்று,
கயமன் னவன்சோகத்து எதிர்ஆணிபோல்
கதம்பொங் கிக்கதறிடத் தேர்மேல்
செயமன் சிலைகொண்ட வீரன்தன்னைத்
திரிபுர வான்என்ன அனுமன்கண்டான். 10

9. இராமன் வந்தால் என்ன நடக்குமோ. நெருப்பிலே பழுக்கக் காய்ந்த சிவந்த செம்பே போலத் தம்பியின் தேய்ப்புண்ட உடலைக் கண்டான்.

10. திரிபுரவான் - திரிபுராதியரை எரித்த சிவன்.

சீற்றம்என்று ஒன்று தானே மேல்நிமிர் செலவிற்று ஆகி,
தோற்றிய துன்ப நோயை உள்ளுறத் துரந்தது அம்மா!
ஏற்றம்சால் ஆணிக்கு ஆணி எதிர்செலக் கடாயது என்ன.

—கம். 22.

வென்றேன் அரக்கர்கள் பலரைஎன்பது
 மிகையே அழித்ததில் வீரன்இல்லை
இன்றே செயித்தாலும் தோற்றாலும்மேல்
 இந்திர சித்தன்இ வனைக்கொன்றால்
வன்றேன் இலங்கேசன் மாண்டதுஒக்கும்;
 மகவான் இடர்தீரும்; திருமீளும்;
என்றே மகிழ்வான்மேல் அரக்கர்படை
 எறிந்தார்; அனுமன்ஓர் மரம்கைக்கொண்டான். 11

## மூண்டது போர்

குடகம்

ஆணிஅற்றன சுவர்கள்அற்றன
 உருளைஅற்றன உறுதிசேர்
அச்சும்அற்றன தட்டும்அற்றன
 கலசம்அற்றன ஆயிரம்
பூணிஅற்றன துவசம்அற்றன
 பாகர்அற்றனர் மேல்வரும்
பொருபடைத்தலை வீரர்அற்றனர்
 பொலிவும்அற்றன தேர்எலாம்;
பாணிஅற்றன வால்கள்அற்றன
 பாதம்அற்றன பிறைகள்போல்
பனைகள்அற்றன தலைகள்அற்றன
 உடல்கள்அற்றன பதவியின்
காணிஅற்றன விழிகள்அற்றன
 மணிகணின் கணின்எனவரும்
கலியும்அற்றன மதமும்அற்றன
 கரமும்அற்றன கரிகளே. 12

தலைஇழந்தன செவிஇழந்தன
 கலகலென்கலின் எனவரும்
தார்இழந்தன வால்இழந்தன
 தார்இழந்தன தாவிடும்

12. பாணி - கை. பனை - கொம்பு.

அலைஇழந்தன படைஎனும்படி
உரம்இழந்தன நடமிடும்
அழகுஇழந்தன ஒலிஇழந்தன
ஆள்இழந்தன பரிஎலாம்;
மலைஇழந்தனர் மரம்இழந்தனர்
மழுவிழந்தனர் வேலொடும்
மரம்இழந்தனர் தேர்இழந்தனர்
வாள்இழந்தனர் தோளொடும்
சிலைஇழந்தனர் கணைஇழந்தனர்
கவசகுண்டலம் மார்பொடும்
சிரம்இழந்தனர் எயிறிழந்தனர்
செயல்இழந்தனர் தீரரே. 13

முடிதுணிந்தன இடைதுணிந்தன
கொடிதுணிந்தன வயிரவாள்
முனைமுறிந்தன சிலைமுறிந்தன
சரம்முறிந்தன முகம்தனில்
தடிஒடிந்தன கரம்ஒடிந்தன
மழுவொடிந்தன கதைகள்போல்
ரதமுருண்டன பரசுருண்டன
முரசுருண்டன முகில்கள்போல்
கொடிசொரிந்தன பொரிசொரிந்தன
குடல்சொரிந்தன குருதிமேல்
குடைமிதந்தன பிணம்மிதந்தன
நிணம்மிதந்தன கொடிறுகோள்
கடியொடிந்தன படையொடிந்தன
தடையொடிந்தன கடவுதேர்
கரிபுரண்டன பரிபுரண்டன
கரைபுரண்டன கடலும்மேல். 14

சுட்டஇரும் படைக்கலனைச்
சுடர்அதன்போல் மாருதிமேல்
விட்டனன்போய்; தன்கணைபோய்
வியன்படைபோய் அறத்தனித்தான்;

மட்டருபோ கச்சிரிப்பால்
வில்லிடிபோ லும்புவியும்
நட்டரவும் வாசவனும்
நடுங்கவில்நாண் எறிந்தனனே. 15

**முடிவுகாலம் வந்ததோ**

வில்லில்நாண் தெறிக்க அண்டம்
வெடிக்கஜயன் தோள்புடைக்க
வல்லவன்நீ ஆகிலும்உன்
வாணாட்குஇன்று எல்லைஎன்றான்;
இல்லைஎன்பார் உனக்குஇறுதி
இன்றேவந் ததுஎன்றவன்
சொல்ல,அம்பால் மாருதியைச்
சிரத்திலும்மார் பிலும்துளைத்தான். 16

ஓங்கினன்வான் சிறிதுஎன்னவே
உயர்ந்தனன்நா யகன்புகழ்போல்;
பூங்கமழ்தாள் மேல்காணான்
புகன்றுஅரக்கன் விடுசரங்கள்
பாங்கறநூ றினன்கரத்தால்
பாகனைப்போய் உடன்வதைத்தான்;
ஆங்கொருதேர் ஏறிஅவன்
அனுமன்வாள் இயல்மறைத்தான். 17

பட்டசரங் களைஉதறிப்
படர்மணித்தேர் தனில்பாய்ந்து
வட்டவில்லைப் பறித்துஒடித்தான்;
மற்றவனும் வாசவன்முன்
இட்டசிலை வாங்கிஎய்தான்;
எரிசரத்தால் ஊறுபட்டுச்
சிட்டன்உடல் மயக்கம்உற்றான்;
தெளிந்தவிண்ணோர் தியக்கம்உற்றார். 18

சுரர்குலைய அரக்கனையைத்
துணித்துஅகற்றி மராமரத்தால்
அரக்கனைமோ தினன்தலைமேல்;
அருவிகள்போல் குருதிவெள்ளம்

பரக்கஉடல் சோர்ந்து,அவனும்
பற்கடித்துஆ யிரம்பகழி
துரக்க,நன்மா ருதிஅவனைச்
சுடர்த்தேரோடு எடுத்துஎறிந்தான். 19

விழுந்து பார்அடை யாமுனம், மின்எனும் எயிற்றான்,
எழுந்து, மாவிசும்பு எய்தினன்; இடை,அவன் படையில்,
செழுந்திண் மாமணித் தேர்க்குலம் யாவையும் சிதைய
உழுந்து பேர்வதன் முன்,நெடு மாருதி உதைத்தான். 20

## பிரமாத்திரம் பிரயோகித்தான் இந்திரசித்தன்

ஏறு தேர்இலன்; எதிர்நிற்கும் உரன்இலன்; எரியின்
சீறு வெஞ்சினம் திருகினன், அந்தரம் திரிவான்,
வேறு செய்வதுஓர் வினைபிறிது இன்மையின், விரிஞ்சன்
மாறுஇ லாப்பெரும் படைக்கலம் தடக்கையில் கண்டான். 21

கொண்டு, கொற்றவெஞ் சிலைநெடு நாணொடும் கூட்டி,
சண்ட வேகத்த மாருதி தோளொடும் சாத்தி,
மண்து ளங்கிட, மாதிரம் துளங்கிட, மதிதோய்
விண்து ளங்கிட, மேருவும் துளங்கிட விட்டான். 22

த்ணிப்ப ரும்பெரும் படைக்கலம், தழல்உமிழ் தறுகண்
பணிக்கு லங்களுக்கு அரசினது உருவினைப் பற்றி'
துணிக்க உற்று,உயர் கலுழனும் துணுக்குற, சுற்றிப்
பிணித்தது, அப்பெரு மாருதி தோள்களைப் பிறங்க. 23

சாய்ந்த மாருதி, சதுமுகன் படைஎனும் தன்மை
ஆய்ந்து, மற்றுஇதன் ஆணையை அவமதித்து அகறல்
ஏய்ந்தது அன்றுஎன எண்ணினன், கண்முகிழ்த்து இருந்தான்;
ஓய்ந்தது ஆம்இவன் வலிஎன, அரக்கன்வந் துற்றான். 24

குறிப்பு : இப் படலத்தின் 20 முதல் 26 வரையுள்ள ஏழு பாடல்கள் ஏட்டிலே வீடுற்றன. அவ்விடத்தைக் கம்பனார் விருத்தங்கள் நிறைவு செய்கின்றன.

**அரக்கர் ஆரவாரம்**

உற்ற காலையின், உயிர்கொடு திசைதொறும் ஒதுங்கி
அற்றம் நோக்கினர் நிற்கின்ற வாள்எயிற்று அரக்கர்
சுற்றும் வந்துஉடல் சுற்றிய தொளைஎயிற்று அரவைப்
பற்றி ஈர்த்தனர்; ஆர்த்தனர்; தெழித்தனர் பலரால். 25

வந்துஇ ரைத்தனர் மைந்தரும் மகளிரும்; மழைபோல்
அந்த ரத்தினும் விசும்பினும் திசைதொறும் ஆர்ப்பார்;
முந்தி உற்றபேர் உவகைக்குஓர் கரைஇலை; மொழியின்
இந்தி ரன்பிணிப் புண்டநாள் ஒத்ததுஅவ் இலங்கை. 26

## 13 பிணி வீட்டு படலம்

*—அனுமனைக் கட்டிய கட்டு விடுவித்ததைக் கூறுவது*

### கட்டுண்ட அனுமனைக் கண்ட அரக்கர்களின் ஆரவாரப் பேச்சு

*கூடி அரக்கரும் அரக்கியரும்*
*கொடிய குரங்கினைக்கொல்லும்என்பார்;*
*வீடி விழஅம்பால் எய்யும்என்பார்;*
*வெட்டுஎன் பார்;கல்லால் எறிஎன்பார்;*
*சாடி நெடும்தண்டால் வதையும்என்பார்;*
*சாகான் இவன்உடல் வயிரம்என்பார்;*
*ஆடி எரிதீயில் தள்ளும்என்பார்;*
*ஆழக் கடற்குள்ளே அமிழ்த்தும்என்பார்.* 1

*அடித்தும் உதைத்தும்எம் உறவைக்கொன்றாய்,*
*அந்தப் பழிதந்துபோ திஎன்பார்;*
*மடித்தும் இவன்தலை மீதில்அன்றி*
*வாங்கோம் எங்கள்மங் கிலியம்என்பார்;*
*படித்து வருவதுஉபாயம் என்பார்;*
*பாதம் இறைவற்குக் காட்டில்என்பார்;*
*பிடித்து நிலத்தோடே தேயும்என்பார்;*
*பிழைத்தால் பிழைப்பில்லை நமக்குஇங்குஎன்பார்.* 2

*கூட நமனும்மும் மூர்த்திகளும்*
*குரங்குஆ னார்நம்மைக் கொல்லஎன்பார்;*
*ஓட லுறுவார்;மெய் வணக்கம்செய்வார்;*
*உம்பர் விடுத்தார் அழிக்கஎன்பார்;*
*மேடை மேலும்சா ளரம்தோறும்*
*விடரும் மடவாரும் விரைந்துமொய்த்தார்;*
*சேடர் இயக்கர்விஞ் சையர்கள்சித்தர்*
*தெய்வ மடவார்கண்டு இரக்கம்உற்றார்.* 3

### அழிபாடுகளைப் பார்த்துக்கொண்டே நடந்தான் அனுமன்

*சுற்றுண்டு ஒருநூறா யிரவர்பற்ற,*
*தூர்த்த அரக்கர்கள் ஆர்த்துச்செல்ல,*
*பற்றுண்டு அனுமானும் பொய்யைமெய்போல்*
*பாசத்து அகப்பட்ட ஞானியைப்போல்*
*தெற்றுண்டு அரியானை களும்மானும்*
*தேரும் பரியும்தான் எறியும்முன்னே*
*எற்றுண்டு உயர்மாட கூடம்எங்கும்*
*இடித்த இலங்கையைப் பார்த்துச்சென்றான்.* 4

*நிறுத்தி வரராமன் பாதம்நெஞ்சில்*
*நீங்கா வலியால்,இப் பாசம்தன்னை*
*அறுத்து விடுவேன்,இங்கு அதனைப்பற்றி:*
*அறமே இனிதுஎன்று, தூதர்பண்பாய்,*
*வெறுத்த வாலியை மரத்தைஎய்த*
*மேன்மை பலசொல்லி, நீதிசொல்லி,*
*கறுத்த அவன்சொல்லும் மனமும்மாற்றார்*
*கருத்தும் சேனையும் காண்கைநன்றே.* 5

*நன்று என்றுஉணராமல் சீற்றம்செய்தால்*
*நண்ணார் தமைஇன்னும் பாதிக்கும்மேல்*
*கொன்று போடுவோம்பின் எனநினைந்து,*
*கூடி அவரோடு அனுமன்சென்றான்;*
*வென்று மகவானைச் சிறையில்வைத்தோன்*
*விடைபோல் வீரனைக் கொடுபோனான்;*
*சென்று சிலதூதர் உண்மைந்தனால்*
*சிக்கி வானரம் வருகுதென்றார்.* 6

### குரங்கைக் கொல்லாது கொணர்க என்றான் இராவணன்

*மதயா னைக்கோட்டின் மருப்புஒடித்த*
*மார்பின் பதக்கம்தூ துவர்க்குஈந்து,*
*வதையா தேகொண்டு வருகஎன்றான்;*
*மகனுக்கு அவர்ஓடி உரைக்க;இப்பால்*

உதையால் ஒடித்தானே மலர்க்காவை
உதிர்த்தான் அரக்கரை அனுமன்என்ன,
சுதையார் மொழிச்சீதை இன்பம்உற்றாள்;
சுற்றுண் டான்என்னச் சோபம்உற்றாள். 7

### வருந்திப் புலம்பினாள் சீதை

பார்ப்புப் பிடியுண்ட ஓதிமம்போல்
கன்றைப் பிரிப்புண்ட பாற்பசுபோல்
போர்ப்பப் புகையுண்ட ஓவியம்போல்
புரளப் பொடியுண்ட திருமேனி
வேர்ப்பப் புலம்பினள்: இடர்தீர்த்தாய்!
மீள இடர்தந்தாய், இளவீரா!
ஆர்ப்பப் பிணிப்புண்டாய் அரக்கன்கையால்,
அறமும் யான்தந்த வரமும்பொய்யோ? 8

வாழி இறையோனை வருவன்கொண்டு
அழிவுஇல் லேன்என்ற மொழிஏன்அற்றாய்?
ஆழி கொடுத்துஎந்தன் உயிரைத்தந்தாய்!
என்றென்று, அலர்மங்கை அவலம்உற்றாள்;
பாழி அனுமானைக் கொடுதந்தைமுன்
பாக சாதனன் பகைவன்உற்றான்;
யாழின் மொழிபங்கன் வரைஎடுத்தோன்
இருந்த ஓலக்கம் இயம்பல்உற்றாம்: 9

### கொலுவீற்றிருந்தான் இராவணன்

கற்றைக் கவரிவெண் சுடர்வீசக்
கயிலை மலைபோல்வெண் குடைநிழற்றச்
செற்றத் தழலும்செம் மயிரும்பொங்கத்
தெற்குஓர் வடவாலமுகம் உண்டுஎன்னக்

8. கடல் கடந்து புகுந்தனை; கண்டகர்
உடல்க டந்தும் நின்ஊழி கடந்திலை;
அடல்க டந்த திரள்புயத்து ஐய!நீ
இடர்கள் தந்தனை வந்துஇடர் மேலுமே? —கம். 32.

9. ஆழி - கணையாழி. பாழி - பெருமை.

கொற்றத் தரிநேமி சிவன்சூலம்
குலிசம் முதற்பட்ட வடுவோடும்
நற்றப் படுங்கோதை மாதர்வைத்த
நகத்தின் குறிகளும் புயத்துஇலங்க; 10

கூர்க்கும் பிறைஎயிற்று அனந்தன்சென்னிக்
குழாங்கள் விளங்கக்கொண் டிருப்பதுபோல்
ஏற்கும் மகமேரு முடிசூடி
இங்குஅக் கருங்கடல் இருப்பதுபோல்
போர்க்கும் செவ்வந்தித் துகிலும்முத்தும்
புனைந்திட்டு இருள்கள்வீற் றிருப்பதுபோல்
பார்க்கும் தொறும்சந் த்ரசூரியரும்
திக்குப் பாலகரும் பயப்படவே; 11

இகழ்வா வரும்மா ளிடரும்அல்லால்
இமையோர் முதலாரும் ஏவல்செய்வார்
புகல்வாள் நுதலார்மோ கனரூபம்
புருட ரூபங்கள் போல்தோன்றத்
தகவா மேனகை நடம்ஆடத்
தருண அரம்பையர் இசைபாட
மிகவாம் அங்கங்கே முகங்கள்பத்தும்
விழிகள் இருபதும் காட்சிகொள்ள; 12

### இராவணனைப் பார்த்தான் அனுமன்

தானா தரித்துஒன்றை மனம்வேகத்
தனைஆ தரிப்பார்கண் தனைச்சூழ,
நானா பரிமளம் அளைந்ததென்றல்
நஞ்சம் போல்மெய்யில் பறந்துஏற,
மானார் முகச்செந்தா மரைக்குஅலரியாய்
வானோர் கைச்செந்தா மரைக்குஇந்துவாய்
ஆனார் மணிக்குன்றம் போன்றுஇருந்த
அரக்கர் கோமானை அனுமன்கண்டான். 13

### அனுமனின் ஆலோசனை

அருகில் பணிகண்ட கருடனைப்போல்
அறுத்துப் பாசத்தே தலைகள்பத்தும்
திருகிச் சுரர்காணத் திருமீட்டால்
தேடிப் போந்தபுன் கவிக்குஅடிமை;
தருகித் துயில்கொள்ளப் பொறுத்துஒழிந்தேன்;
தானைக் கடல்சூழ இருக்கப்பெற்றேன்;
பொருகுற்று இறந்தாலும் புகழ்உண்டுஎன்றே
பொருப்பிற் பாய்சிங்கம்போல் உள்நினைந்தான். 14

எடுத்த சினம்மீள மனத்துஒன்றுஎண்ணி,
இறவா வரத்தான்இரா மற்குஅல்லால்
கடுத்த ஒருவரை ஒருவர்வெல்லோம்;
காலம் பலசெல்லில், ஒருதிங்கள்மேல்
விடுத்து விடும்ஆவி மிதிலைப்பொன்னும்;
வெய்யன் தலைபத்தும் வீட்டஎங்கோன்
தொடுத்த துணிவுஉண்டுஎன்ற அத்தைஎண்ணித்
தூதே முறைமைஎன்று துணிந்தான்,தூயோன். 15

### யார் நீ?

பூவன் மகன்மைந்தன் புதல்வன்முன்னே
புதல்வன் அனுமந்தன் தனைக்காட்டி,
மாவன் வழுவாளன் நிகர்வீரன்
வலியன் இவன்என்று வணக்கம்செய்ய—
தீவன் பொறியோடும் புகைஏறச்
சீறி, மாருதி தனைநோக்கி,
யாவன் நீ?வந்த கருமம்என்னே?
என,ரா வணன்தான் வினவல்உற்றான். 16

14. பாவ காரிதன் முடித்தலை பறித்திலன் என்றால்
ஏவது யான்இனி மேல்செயும் ஆள்வினை? என்றான். —கம். 52.
உறங்கு கின்றபோது உயிர்உண்டல் குற்றம்என்று ஒழிந்தேன்.
—கம். 51.

15. வெல்லலாம் இராமனால்; பிறரும் வெல்வரோ? —கம். 56.
என்னையும் வெலற்குஅரிது இவனுக்கு; ஈண்டுஇவன்
தன்னையும் வெலற்குஅரிது எனக்கு; தாக்கினால்
அன்னவே காலங்கள் கழியும். —கம். 57.

16, சிவன்எனச் செங்கணான் எனச்செய் சேவகன், இவன், —கம், 63,

கேசவனோ? நான்முகனோ?
கிரீசுரனோ? வேலவனோ?
வாசவனோ? உருமறைத்தாய்;
வலியதிக்குப் பாலர்உள்ளோ?
பூசல்செய்துஇவ் ஊர்அழிக்கப்
பூசுரர்செய்து ஏவினரோ?
நீசொல்?என்றுஅங் கவன்கேட்க;
நீடுஅனுமான் நிகழ்த்தல்உற்றான்: 17

**அனுமனின் விடை**

செப்பியபேர் தமக்குள்அல்லேன்;
சிறுவலியோர்க்கு ஏவல்செய்யேன்;
மெய்ப்புகழான் பங்கயக்கண்
வீரவில்லி தூதுவன்யான்;
அப்புனிதன் யாவன்என்றால்?
அடிஅடைந்தோர் இருவினையும்
தப்பும்,உங்கள் வலியும்மிக்கோர்
தருவரமும் தவிர்க்கநின்றான். 18

முனிவர்உள்ளும் தேவருள்ளும்
மூவருள்ளும் அல்லன்;அவன்
மனுமரபில் உலகுஆண்ட
மன்னர்மன்னன் மைந்தன்போலாம்;
தனுவலியோன்; மறைக்கும்எட்டான்;
தருமம்எல்லாம் தான்ஆவான்;
துணிவுறுவா ரணம்காத்தான்;
சுரர்கணம்காத்து அருளவந்தான். 19

தொட்டமுக்கா லமும்கணக்கும்
துறந்தபெரும் பரஞ்சோதி;
கட்டரைக்காய்ந்து அறநெறியைக்
காத்துஅடியார் பிறப்புஅறுப்பான்

19. வேதமும் அறனும் சொல்லும்; மெய்அற மூர்த்தி, வில்லோன். —கம். 73.
போர்அணங்கு இடங்கர் கவ்வப் பொதுநின்று முதலே என்ற
வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க வந்தான். —கம். 74.

அட்டடர்சூ லம்கரகம்
ஆழிவைத்து ஓர்வில்லேந்தி
மட்டலர்ஆல் இலைக்கயிலை
மாற்றிஅயோத் தியிற்பிறந்தான். 20

ஆயவர்க்கே அடிமைசெய்வேன்;
அணிஇழையைத் தேடிஎங்கும்
போயவர்க்குள், தென்திசைக்கண்
போந்தவெந் சேனைக்குஅதிபன்
தூயவெற்றி வாலிமைந்தன்
தூதன்;என்பேர் அனுமன்என்ன;
மாயஉள்பா தகன்நகைத்தே
வாழ்ந்துளனோ வாலி?என்றான். 21

### அஞ்சாதே அரக்கா!

அஞ்சாதே வாள்அரக்கா!
அற்றனையே அவ்வுறவும்;
மஞ்சார்தோள் வள்ளல்அம்பால்
வாலிபட்டான்; இனிமீளான்;
நஞ்சான்வா ளும்அன்றே
நசித்ததுஎன்றே வாள்அனுமான்,
வஞ்சா!கேள், எங்கள்மன்னன்
மார்த்தாண்டன் மைந்தன்என்றான். 22

வாலியைஏன் எய்துகொன்றான்?
வதைத்தவன்தே வியைஅவற்காய்
வாலிமகன் தேடுவதேன்?
வாசம்எங்கே? ராமன்என்ன;

20. மூலமும் நடுவும் ஈறும் இல்லதுஓர் மும்மைத் தாய
காலமும், கணக்கும். நீத்த காரணன் கைவில் ஏந்தி,
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான்.
—கம். 75

22. அஞ்சலை அரக்க! பார்விட்டு அந்தரம் அடைந்தான் அன்றே,
வெஞ்சின வாலி; மீளான்; வாலும்போய் விளிந்த தன்றே;
அஞ்சன மேனி யான்தன் அடுகணை ஒன்றால் மாழ்கித்
துஞ்சினன்; எங்கள் வேந்தன், சூரியன் தோன்றல் என்றான்.
—கம், 79.

வாலியல்மா ருதிமொழிவான்:
வந்துஅடைந்த கதிர்மகற்கு
வாலிபமால் மகுடம்,முன்னே
வைத்தபின்,வா லியைவதைத்தான். 23

ஆண்டில்ஒரு பாதிவைகி
அருக்கன்மகன் தன்னுடனே
ஈண்டியவெம் படைசூழ
எழுந்தருளி, எம்பெருமான்
தூண்டினனே நாலுதிக்கும்;
தோகையைத்தே டும்பணியே
பூண்டுவந்தோம் என்றுஅனுமான்
புகல;இரா வணன்புகல்வான்: 24

**வந்த காரியம் என்ன?**

கேவலனோ நும் குலத்தோன்,
கேடிலியை வதைத்தவன்பால்
ஏவல்செய்து வாழல்உற்றீர்;
எளிதோநும் கீர்த்திஎன்றான்;
கோவெனவாழ் தமயனைத்தான்
கொல்லுவித்தும் கொன்றவற்காய்
யாவதுஎன்பால் உனைவிடுத்தோன்
இயம்பியசொல் அறைந்திடு?என்றான். 25

**தூதனாக நீதி உரைத்தான் அனுமன்**

சயம்பெறும் சாமம்பேதம்
தானதண்டம் எனப்பெரியோர்
இயம்புறுநீ தியைஇவனோடு
இயம்பிடுவோம் என்று,அனுமான்
நயம்பெறுசூ ரியன்மகன்சொல்
நன்றுஎனநீ உணர்வை— என்றால்
பயன்பெறுசொல் உனக்குஅவன்தான்
பகர்ந்தவண்ணம் பகருகின்றேன்: 26

23. வால் இயல் மாருதி - தூயதன்மை வாய்ந்த அனுமன். வால் இப மால் - இராமன்.

புலன்அடக்கித் தவம்புரிந்த
புண்ணியம்பா ழேவிடத்தான்
நலமடக்கோ தையைஇரங்காய்
நலிந்துசிறை வைத்ததினால்
குலம்அக்கேடு உற்றதுஉன்னால்
குறுகியதுஆ னாலும்இன்னம்
தலமடக்காது இனிதுஇருப்பாய்
தகவுரைத்தேன், உறுபொருள்கேள்: 27

அறத்தைவெல்லாப் பாவம்என்னும்
அதுமறந்தாய்; அருந்தவத்தின்
திறத்தைஎல்லாம் திருவைவெஃகும்
தீக்காமம் நீக்குகையால்;
நிறத்தைஎல்லாம் கெடுத்துவிடும்;
நீர்மையும்போம்; ஆண்மையும்போம்;
மறத்தைஎல்லாம் தோல்விசெய்யும்;
வரும்பழியும் நரகமுமே. 28

அங்கம்நில்லாது இளமைநில்லாது
அமரரைவென்ற அரசுநில்லா;
மங்கைநல்லார் ஆசையினால்
மண்ணிறந்தார் எண்ணிறந்தார்;
சங்கைஇல்லார் உலகாண்டோர்;
சாகார்ஆர்? தழல்வார்க்கும்
துங்கநல்ஆ ரணன்மகன்நீ,
துறந்தனையே அறந்தனையே. 29

பொற்றார்பூண் முடிபலவும்
புயம்பலவும், பிறர்மனைமேல்
பற்றாசைபா வம்ஒக்கும்
படர்தீமுன் பஞ்சுஅலவோ?
அற்றார்பால் இடாப்பொருளாம்
அடர்ப்பெரும்கா மமும்நெருப்பாம்;
நற்றாரை நற்றுவதில்
நாசிஅற்றால் வாசிஉண்டோ? 30

உரந்தொடுத்த உயிர்கள்எல்லாம்
உகந்துஇறைஞ்சும் ராமனையே
பரன்தொடுத்த சரங்கள்பொய்யா;
பாடலைக்கேட்டு, உனக்குஅருளால்
அரன்கொடுத்த வரங்கள்பொய்யாம்;
ஆதலின்சீ தையைவிடவே
திரன்கெடுக்க வேண்டிநின்பால்
தினகரன்சேய் சொலிவிடுத்தான். 31

## தூதனாகிய நீ பலரையும் வதைத்தது ஏன்?

எனக்கேட்டு, நகைத்துஅரக்கன்
எனக்குஒருபுன் குரங்குஉரைத்த
மனக்கோட்டம் சொலும்தூதா!
வதைத்ததுஏன்நீ பலரை?என்ன;
உனைக்காட்ட ஒருவர்இல்லை,
உடன்றுசெய்தேன் உபாயம்என்ன;
வினைக்காட்டன் கொல்லும்என்றான்;
விலக்கிவிபீ டணன்உரைப்பான்: 32

## தடுத்துரைத்தான் வீடணன்

முன்னவன்தாள் வணங்கிநின்று,
முறைமையில்மூ வுலகுஆள்வாய்!
சொன்னஒன்னார் சேதிசொல்லும்
தூதரைமுன் கொன்றவர்ஆர்?
அன்னம்அன்னார் தமைக்கொலினும்
அடாதுஇது; மூவரும்நகைப்பார்;
பின்னவனைக் கொலாதுவிட்டால்
பெருமைஅன்றோ? முனியல்என்றான். 33

32. காட்டு வார்இன்மை யால்கடி காவினை
வாட்டி னேன்;என்னைக் கொல்ல வந்தார்களை
வீட்டினேன்; பின்னும் மென்மையி னால்உன்தன்
மாட்டு வந்தது, காணும் மதியினால். —கம். 104.

## வாலைச் சுட்டு விரட்டுங்கள்

*சாலநன்றே எம்பிசெஞ்சொல்,*
*சாகாவாறு இங்குஇவனை*
*வால்அளவும் சுட்டுஊரை*
*வளையவந்து விடுமின்என்றான்;*
*கோலமைந்தன், பலபாசம்*
*கொணர்ந்துகட்டும் தோளைஎன்று*
*சீலஅயன்தன் படைஅவிழ்த்தான்;*
*செறிகயிற்றால் பலர்பிணித்தார்.* 34

34. *நல்லது உரைத்தாய், நம்பி!இவன் நவையே செய்தான் ஆனாலும்,*
*கொல்லல் பழுதே; போய்அவரைக் கூறிக் கொணர்தி கடிதுஎன்னா,*
*தொல்லை வாலை மூலம்அறச் சுட்டு நகரைச் சூழ்போக்கி*
*எல்லை கடக்க விடுமின்கள் என்றான்; நின்றார் இரைத்துஎழுந்தார்.*
*—கம். 112.*

## 14 ஊர் சுடு படலம்

—இலங்கையை அனுமான் கொளுத்தியது

வேதன் படையால் விசித்துமுற்றும் கார்மேக
நாதன் விடுத்தமட்டும் நான்உரைத்தேன்—வாதன்சேய்
வாலில்இட்ட செந்தழலை வாரிசுற்றும் தென்னிலங்கை
மேலில்இட்டு மீண்டதுசொல் வேன். 1

**கயிற்றால் கட்டி வாலிலே தீக்கொளுத்தி விட்டனர்**

இடையில் கயிறும்மங் கலநாணும்
இரண்டுஅன்றி, பிறகண்ணில் கண்டதுஎல்லாம்
விடையின் கயிறும்வெம் பரியானை
விசித்த கயிறுஊசற் கயிறுஉள்ளிட்ட
தொடையில் கயிறும்கொண்டு இறுக்கிக்கட்ட
சுற்றுண்டு அனுமானும் வேதன்தெய்வப்
படைஇற்று அழியாமல் தழல்இட்டுஅவ்வூர்
பதம்அற்று அழியச்செய் வகைஉன்னினான். 2

கயிற்றில் பிணிப்புஉண்டுஅங்கு எளியார்போல்
காயம் சோர்ந்துஉள்ளே பரனைக்கண்டு
பயிற்புஉற்று உலகத்தோடு ஒழுகிச்செல்லும்
பரம யோகிபோல் அனுமன்செல்ல;
செயிற்புஉற்று இருநூறா யிரவர்பற்றித்
தெருவில் போய்,வாலிற் பலசேலை
குயிற்றிச் சொரிந்துஎண்ணெய் தோய்த்துச்செந்தீ
கொளுத்திப் பகிரண்டம் குலுங்கஆர்த்தார். 3

**தீயே அவனைச் சுடாதே**

பொழிதேன் மலர்க்காவும் படையும் சிந்திப்
புருடன் செயல்சீதைக்கு ஓத வந்து
பழுதே ஆகின்ற குரங்கின் தன்மை
பாரும் எனஎங்கும் சாற்றிச் சொன்னார்;

குறிப்பு: இப்படலம் இலங்கை எரியூட்டு படலம் என்று கம்பராமாயணப் பதிப்புகளில் காணப்பெறும்.

அழுதே அலர்மங்கை அலக்கண் உற்றாள்;
அறிவா ளியைப்புல்லோர் அலைக்கை நன்றோ?
தொழுதேன் உனைத்தீயே அனைத்தும் வல்லாய்
சுடாதே அனுமானை அருள்செய் என்றாள். 4

தெளிந்த மனச்சீதை மொழிந்த சொல்லால்
தீயும் பயப்பட்டுக் குளிரல் உற்றான்;
குளிர்ந்து அனுமன்தன் வாலின் மட்டோ,
குளிர்ந்த வளர்வேள்வித் தழல்கள் எல்லாம்;
குளிர்ந்த வடவையும் மீளா நரகமும்
குளிர்ந்த திகிரியும் மேகத்து உருமெலாம்
குளிர்ந்த சிவன்நெற்றி விழியும் மெய்யும்
குளிர்ந்த ஊழிவெங் கனலும் அன்றோ. 5

## விண்மிசை அடைந்தான் அனுமான்

தண்ணா னதுஅன்றிச் சனகன்தையல்
தன்கற் பால்என்று மகிழ்ந்துஅனுமான்
எண்ணார் பொறிபோல் அந்நகர்காட்ட
இரண்டா வதுகண்டான் அறிவேபோல்
விண்ணா னதுமீதில் விசைத்துஎழுந்தான்
விழுந்து அங்குஇருநூ றாயிரரும்பொன்ற,
கண்ணார் கயிற்றொடும் பொலிந்துநின்றான்
கடுவெம் பணிபூண்ட கருடனைப்போல். 6

சிரித்த அரன்போல வாயுமைந்தன்
சீரோன் பதம்உன்னித் திரிபுரத்தை
எரித்த சரம்போலும் சுடர்வாலை
இலங்கா புரம்வேக நீட்டிப்பின்னும்

4. நீயே உலகுக்கு ஒருசான்று; நிற்கே தெரியும் கற்பு;அதனில்
தூயேன் என்னின், தொழுகின்றேன் எரியே! அவனைச் சுடல்!என்றாள்.
—கம். 122.

6. மற்றுறு பொறிமுன் செல்ல மறைந்துசெல் அறிவு மான. —கம். 127.

அதாவது, புறத்துறுப்பான இந்திரியங்கள் பொருள்களிடத்து முன்னே செல்ல, அவற்றின் பின்னே மறைந்து செல்கின்ற அறிவை ஒப்ப அனுமன் இலங்கையை ஒன்றாகப் பார்த்தானாம்.

பருத்த நெருப்போடும் விழும்இடிபோல்
பாய்ந்து மனைதோறும் தாவிச்சென்றான்;
உருத்த பசிதீர அனுமன்என்னும்
உருத்திரன் அருளாலே அனலன்உண்டான். 7

## நகரம் பற்றி எரிந்தது; பதறினர் மகளிர்

மிக்க கொடிஆடைக் காட்டைச்சுட்டு
விதானங் களைச்சுட்டு வீட்டைப்பற்ற,
மைக்கண் அரக்கியர் ஓடப்புக்கார்;
வாசல் எரிகண்டு பூசல்இட்டார்;
திக்குளங் கணும்ஓடிப் புகைமூட,
சித்ர மடவார்தம் குழல்சோர,
கைக்கண் மகவோடும் புலம்பல்உற்றார்
கான மயில்எங்கும் புலம்பினபோல். 8

அரக்கர் அரக்கியர் குழல்கற்றையும்
அருண மணிச்சோதி இல்லிடங்களும்
பரக்க நெருப்புப்பட்டு எரிவதும்
படாமல் எரிவதும் தெரியாதாம்;
கரக்க மனைஅட்டில் ஓமத்தீயும்
கதிபெற் றனஒக்கும் நெடுந்தீயுள்;
உரக்க வளர்ந்திட்ட கொழும்புகைதான்
உலகம் அளந்திட்ட மால்ஆமால். 9

உந்தும் உருளோடும் கொடியோடும்
உருகித் திரண்டபொன் தேர்கள்எல்லாம்;
வெந்த கருந்தோலும் உரிந்துசிந்த
வெள்ளா னைகள்ஒத்த காரானை;
வந்து பெருநீரும் பாய்ந்துசென்றார்
வன்ன முலைமாதர் அன்னங்கள்போல்;
சிந்து மறுகவெம் பொறிவீழத்
திகைத்தார் மீனொடும் துடிக்கல்உற்றார். 10

### இலங்கை மாந்தர் அவலம்

கருகு முகில்வேக விசும்பிற்செல்வார்;
காணல் புனல்என்றுஅங்கு அதில்வீழ்வார்;
உருகும் செழும்பொன்கோ புரம்கடலுள்
ஓடித் திரண்டதண் டாயுதம்போல்
தருவும் மனைகளும் தரிநிற்குமோ?
தரைவெந் ததுசெம்பொன்; ஆகையினால்,
வருகும் அரக்கர்தம் இடம்சேர்ந்து
தழலும் மதுபானம் பருகிற்றுஅன்றே. 11

கணவ னைப்போரில் இழந்தமின்னார்
கடமை என்றுகன லில்வெந்தார்;
கணவண் டினம்எங்கும் திரிந்துமற்றும்
கமல வனம்என்றே விழுந்துபொன்ற,
மணவண் டினையோடும் கனிகாய்பூ
மரங்கள் பணைவேரும் பொடிஆகி,
மணவண் டமும்காய உருகும்பொன்னீர்
வார வேரொடும் வான்ஒக்குமால். 12

மேகம் கரியாக உருகும்பொன்போல்
வெய்யோன் விளக்கினன் கொளுந்தீயால்;
ஆகம் உருகித்தண் மதிதோயும்
அமுதால் அரக்கரும் சிலர்பிழைத்தார்;
தாகம் கொடும்தீபந் திகளைப்பற்றச்
சாவுற் றனகட்டுப் பரிஇனங்கள்;
மாகம் தனில்ஏறிப் புகைவிழுங்க
மறிந்தார் மறலியை விழுங்கவல்லார். 13

### புகையோ புகை

எழும்புஊ டலைவிட்டுக் கூடும்முன்னே
எழுந்தார் விழுந்தார்சா கரநீரில்
[தழும்புஊ டலைச்சினந்து அழுங்கிநொந்து
சால வருந்திக் கரைசேர்ந்தார்]

அழும்பூ விழிசோரச் சிலர்சொரிந்தார்;
அழல்மே கலைபற்றிக் குழலைப்பற்றிச்
செழும்பூ டணம்மின்னப் புகைக்குள்செல்வார்
திரைக்குள் தோல்பொம்மை நிகரானார். 14

துகிலும் எரியப்புக் கார்குஞ்சியால்
சூடுஉண் பதுபோலும் கடல்தானும்;
முகிலின் புகைபோயும் துள்ளல்உற்ற
முன்னீர் கொதிக்கச்சா கரமீன்கள்;
அகிலின் புகைவிம்ம ஆழிதன்னில்
ஆழி போல்நந்தா வனம்வேக
மிகிலும் கொடுந்தீயின் கொழுந்துஈதுஎன்று
வேறு தெரியாக்கற் பகக்காடே. 15

**கருகி வெந்து உருகின யாவும்**

மிகைக்கும் கணைவில்வேல் விறகாக
வெந்து ஒழிந்ததுஆ யுதசாலை;
முகைக்குரு செவிநட்டுத் தறிபிடுங்கி
முறுக்கி வால்வீசிட்டு ஓடும்கைம்மா,
புகைக்குள் உறும்அன்னம் காகங்கள்போல்
பொருகைக் கயங்கள்கா ரானைகள்போல்;
நகைக்குப் பால்கடல் கருங்கடல்போல்
நாதன் வரையும்கார் வரைஒத்ததே. 16

கரத்தில் மகவுஒன்றும் மருங்கில்ஒன்றும்
கதறும் மகவோடும் சிலர்ஓடும்,
உரத்தின் கடல்மீன்கள் விழுங்கப்புட்கள்
உலுத்த கொடியாரை அடைந்தவர்போல்;

14. வரையி னைப்புரை மாடங்கள் எரிபுக, மகளிர்,
புரையில் பொன்கலன் வில்லிட விசும்பிடைப் போவார்,
கரைஇல் நுண்புகைப் படலையில் கரந்தனர்; கலிங்கத்
திரையி னுள்பொலி சித்திரப் பாவையின் செயலார். —கம். 22.

16. மிக்க வெம்புகை விழுங்கலின், வெள்ளியங் கிரியும்,
ஒக்க, வெற்பினோடு; அன்னமும் காக்கையின் உருவ;
மக்க வேலையின் படியது, பாற்கடல்; முடிவில்
திக்க யங்களும் கயங்களும் வேற்றுமை தெரியா. —கம். 26.

மரத்தின் தொகைவேலை மலைகள்சுட்டு
வடமே ருவைப்பற்றும் வடவனல்போல்
புரத்தின் பொருள்முற்றும் எரித்தசெந்தீ
புகைந்து ராவணன் மனைபுக்கதே. 17

### எரிந்தது இராவணன் மாளிகை

அரக்கன் அமரர்தம் பதிகொண்டநாள்
அலையும் சுரர்போல, இலங்கைதன்னில்
வருக்க மடவாரும் மறவோரும்
மற்றும் பலபேரும் குலைந்துஓட,
நிரக்க மனைமாடம் அனைத்தும்வெந்து
நிருதர் கோன்எழு நிரைக்கோயில்
உருக்க நிறைந்துஒன்றாய் உருகித்தெற்கும்
உளதாம் மகமேரு எனநின்றதே. 18

### தப்பி வெளியேறினான் இராவணன்

பொருவான் அரக்கன்தன் கிளைஞருடன்
புட்ப மானத்தில் ஏறிப்போனான்;
வருவான் ஊழிச்செந் தழல்வந்துற்றதோ
வாழ்மா நகர்வெந் ததுஎன்?என,
செருவா னரம்தானே வாலில்வைத்த
தீயால் எரித்ததுஇவ் ஊரைஎன்றார்;
ஒருவா னரம்சுடஇந் நகர்வெந்ததீ
உண்பா னாஎன்றுஎன்று அரக்கன்நக்கான். 19

### அனுமனைப் பிடிக்க விரைந்தனர் வீரர்கள்

எரித்தகன லைக்கடிது பற்றிவருக என்றான்;
எரித்தகுரங் கைக்கொலை செயப்பிடிமின் என்றான்;
வரித்தசொல் அமைச்சர்தரு புத்திரர்கள் என்பார்
மனத்துஎழு சினத்துஎழுவர் அக்கணம் எழுந்தார்;

17. மருங்கின் மேலொரு மகவுகொண்டு, ஒருதனி மகவை
அருங்கை யால்பற்றி, மற்றொரு மகவுபின் அரற்ற,
நெருங்கி னாரொடு நெறிகுழல் சுறுக்கொள நீக்கிக்
கருங்க டல்தலை வீழ்ந்தனர், அரக்கியர், கதறி. —கம். 28.

விரித்தகடல் ஒத்தபடை சுற்றிடவி ரைந்தார்;
மிகுத்தசிலை கைக்கொடுஇர தத்தின்மிசை சென்றார்;
பரித்ததிசை எட்டையும் வளைத்தனர்கள் கண்டார்;
படைக்குலம் இடிக்குலம் எனக்கொடு சொரிந்தார். 20

வளைத்தவர் தமைத்தனது வால்கொடு வளைத்தான்
மருத்துமகன் மிக்கதோர் மராமரம் எடுத்தான்
உளைத்தவர் உடல்சிதற மோதஉதி ரத்தார்
உளப்பொடு நெருப்பவிய ஓடினர் கடற்கே
அளைத்தஒரு லட்சம்உள சேனைபட மிக்கார்
அளக்கரில் விழக்கடலில் வாலையும் நனைத்தே
களத்துஎதிர் அமைச்சர்கள் குமரர்எழு வர்க்குஓர்
கணத்தில்வினை கட்டுஅழிய வானகம் அளித்தான். 21

* திருவிருந்த வனம்வேகாத்
திறன்அறிந்தான், மிகவியந்தான்;
தருவிருந்த கரத்துஅனுமான்
சானகிபா தம்பணிந்தான்;
வெருவிருந்தான்; மனம்குளிர்ந்தான்;
விடைகொடுஎன்றான்; தொழுதுசென்றான்;
பருவிருந்தார் தொடர்வர்என்றே
பருதியும்தான் கடல்புகுந்தான். 22

## 15 திருவடி தொழுத படலம்

—இலங்கையினின்றும் மீண்டு வந்த அனுமான்
இராமபிரான் திருவடிகளை வணங்கியது

### வான்வழி மீண்டு மயேந்திரம் சேர்ந்தான்

*மாலைநினைந்து அனுமன்அங்கோர்*
*மலையினின்றும் மேல்எழுந்தான்;*
*வேலையில்லை நாகம்எய்தி,*
*விளைந்தசெயல் விளம்பியபின்,*
*கோலமகேந் திரத்தைஉற்றான்;*
*குறித்துஉறங்காத் துணைவர்எல்லாம்*
*சாலமகிழ்ந்து ஆர்த்தெழுந்து*
*தாய்வரக்காண் கன்றுகள்போல்.* 1

### பாராட்டி மகிழ்ந்தனர் வானரவீரர்

*நாளாரப் பசித்துஇருந்தோர்*
*நல்அமுதம் புசிப்பதுபோல்*
*தாளாரப் பூண்டுகொள்வார்;*
*தடமலர்க்கண் நீர்பொழிவார்;*
*தோளார அணைத்துஉகப்பார்;*
*சுமந்துகொண்டே ஆடிடுவார்;*
*கேளாமல் பொருள்அறிந்தோம்*
*கிளர்முகமே உரைத்ததுஎன்பார்.* 2

*ஆளானோம்; காய்கனிதேன்*
*அமுதுசெய் என்றுஆதரித்து,*
*வாளாலும் வேலாலும்*
*வடுக்கண்டு இரக்கம்உற்றார்;*
*வேளாண்மை அங்கதற்கும்*
*விதிமகற்கும் முதல்வணங்கி,*
*நீளாண்மை அவர்க்குஅவர்க்குஆம்*
*நெறிமுறைசெய் தான்அனுமான்.* 3

2. மானவாள் முகமே நங்கட்கு உரைத்தது மாற்றம் என்று
தாம்நுகர் சாகம் எல்லாம் முறைமுறை சிலவர் தந்தார். —கம். 5.

3. விதிமகன் - சாம்பவன்.

### நிகழ்ந்தது கூறினான்

*ஆசிநும்பால் அருள்புரிந்தாள்*
*ஆளுடையான் தேவிஎன,*
*மாசில்கவி வீரர்எல்லாம்*
*வணங்கினர்தம் கரம்குவித்து;*
*பேசிடுதீ எனப்பிராட்டி*
*பெருங்கற்பும், கொடுத்தமணி*
*வாசியையும் புகன்று, அனுமான்*
*மறைத்தனன்போர் மொழிந்திலனே.* 4

### செய்வது இனி யாது?

*வீரமை வடுக்கள்சொல்ல,*
*வென்றதைமீண் டதுவிளம்ப,*
*சூரிலங்கை தனைஅனுமான்*
*சுட்டதுவெண் புகைகாட்ட,*
*சேரலர்தம் படைப்பெருக்கம்*
*திருமீளா வாறுஉரைக்க,*
*ஏரமாவா னரர்அறிந்தார்*
*ஏதினிநாம் செய்வது?என்றார்.* 5

### முந்திச் சென்றான் அனுமான்

*மங்கையைக்கண் டதுபகர்வோம்*
*வள்ளல் இடர்தீரஎன்றே,*
*அங்கவர்தாம் எழுந்துசென்றார்;*
*அதற்குமுன்னே மாருதியைப்*

4. ஆண்தகை தேவி உள்ளத்து அருந்தவம் அமையச் சொல்லி,
பூண்டபேர் அடையா ளம்கைக் கொண்டதும் புகன்று, போரில்
நீண்டவாள் அரக்க ரோடு நிகழ்ந்ததும், நெருப்புச் சிந்தி
மீண்டதும் விளம்பான், தான்தன் வெற்றியை உரைப்ப வெள்கி.
—கம். 9.

5. வீரமை - வீரத்தின் இயல்பு (புதுச்சொல்). ஏரமா - விளக்கமாக.
பொருதமை புண்ணே சொல்ல வென்றமை போந்த தன்மை
உரைசெய, ஊர்தீ இட்டது ஓங்கிரும் புகையே ஓத,
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்ட,
தெரிதர உணர்ந்தேம்; பின்னர் என்இனிச் செய்தும்? என்றார்.
—கம். 10

புங்கவன்தன் துயர்ஆற்றப்
போமெனவே, விரைந்துசென்றான்;
இங்குஅனுமான் செயல்உரைத்தேன்;
இராமபிரான் செயல்உரைப்பேன்: 6

## இராமனைத் தேற்றியிருந்தான் சுக்கிரீவன்

இரவிமகன் தேற்ற,எங்கோன்
இறந்துஇறந்து பிறப்பவன்போல்;
பரவியபேர் மூன்றுதிக்கும்
பாவையைக்கா ணாமல்வந்தார்;
விரவியமா ருதிமுதலோர்
மீண்டிலர்நாள் அவதிவந்தும்;
அரவிடையாள் இறந்தனளோ?
அதுகொடுதாம் இறந்தனரோ? 7

தேடல்உற்றா ரோஇனமும்,
திறல்அரக்கர் வஞ்சனையால்
பாடல்உற்றா ரோ?தவமே
பண்ணல்உற்றா ரோ?துயரால்
வாடல்உற்றா ரோ?எனமால்
வருந்தல்உற்ற போது,அனுமான்
கூடல்உற்றான் தெற்குநின்று
கொளும்கதிரோன் எழுந்ததுபோல். 8

## இராமன் முன் தோன்றினான் அனுமான்

மாதடத்தால் கண்டுவந்த
வள்ளலைத்தான் வணங்குமுன்னே,
சீதையைத்தா னேஅனுமான்
திசைநோக்கித் தெண்டனிட,
வாதைஅற்றான்; புளகம்உற்றான்;
மாதுஇருந்த நலன்அறிந்தான்;
கோதையைக்கண் டேன்கண்ணால்
என்றுஅனுமான் கூறலுற்றான்: 9

8. பாடல் - பாடு - துன்பம். மால் - இராமன்.

9. எய்தினன் அனுமனும்; எய்தி, ஏந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன்; முளரி, நீங்கிய
தையலை நோக்கிய தலையன், கையினன்,
வையகம் தழீஇநெடிது இறைஞ்சி வாழ்த்தினான், —கம், 22,

### என் பெருந் தெய்வம் ஐயா

நின்மனைவி என்பதற்கும்,
நினைஈன்ற மன்னர்மன்னன்
தன்மருகி என்பதற்கும்,
சனகன்மகள் என்பதற்கும்,
நன்மைதரும் கல்விகற்பும்
நற்பொறையும் இற்பிறப்பும்
மன்மதில்சூழ் இலங்கைவெற்பில்
மகிழ்ந்துநடம் கண்டேன்நான். 10

சினக்கிளர்வாள் அரக்கர்குலம்
தீர்த்துலகில் அறம்வளர்த்தாள்;
தனக்குஇணையார்? உன்கிளைக்கும்
தன்கிளைக்கும் பெருமைதந்தாள்;
உனக்குஇணையார்? உன்எழிற்கும்
[உன்நடைக்கும் உளவறிந்தேன்;]
எனக்குஇணையார்? எனமாதும்
[எனக்கும்நல் வரம்தந்தாள்.] 11

கண்ணினும் உளைநீ; தையல்
கருத்தினும் உளைநீ; வாயின்
எண்ணினும் உளைநீ; கொங்கை
இணைக்குவை தன்னின் ஓவாது
அண்ணல்வெங் காமன் எய்த
அலர்அம்பு தொளைத்த ஆறாப்
புண்ணினும் உளைநீ; நின்னைப்
பிரிந்தமை பொருந்திற்று ஆமோ? 12

10. விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பதும் ஒன்றும்,
கற்பெனும் பெயரது ஒன்றும், களிநடம் புரியக் கண்டேன்.

—கம். 29.

குறிப்பு: இப்படலத்தின் 12 முதல் 21 வரையுள்ள பத்துப் பாடல்கள் ஏட்டிலே சிதைவுற்றன. கம்பனார் விருத்தங்கள் அவ்விடத்தை நிறைவுசெய்கின்றன.

வேலையுள் இலங்கை என்னும்
விரிநகர் ஒருசார், விண்தோய்,
காலையும் மாலை தானும்
இல்லதுஓர் கனகக் கற்பச்
சோலைஅங்கு அதனில் உம்பி
புல்லினால் தொடுத்த தூய
சாலையில் இருந்தாள்; ஐய!
தவம்செய்த தவமாம் தையல். 13

சோகத்தாள் ஆய நங்கை
கற்பினால், தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவி மாரும்,
வான்சிறப்பு உற்றார்; மற்றைப்
பாகத்தாள், இப்போது ஈசன்
மகுடத்தாள்; பதுமத் தாளும்,
ஆகத்தாள் அல்லள், மாயன்
ஆயிரம் மௌலி மேலாள். 14

அரக்கியர் அளவுஅற் றார்கள்,
அலகையின் குழுவும் அஞ்ச
நெருக்கினர் காப்ப, நின்பால்
நேயமே அச்சம் நீக்க,
இரக்கம்என் றொன்று தானே
ஏந்திழை வடிவம் எய்தி,
தருக்குயர் சிறைஉற் றன்ன
தகையள்,அத் தமியள் அம்மா. 15

அன்னதுஓர் பொழுதில் நங்கை
ஆர்உயிர் துறப்ப தாக
உன்னினள்; கொடிஒன்று ஏந்தி,
கொம்பொடும் உறைப்பச் சுற்றி,
தன்மணிக் கழுத்தில் சார்த்தும்
அளவையில் தடுத்து, நாயேன்,
பொன்அடி வணங்கி நின்று,
நின்பெயர் புகன்ற போழ்தில், 16

அறிவுறத் தெரியச் சொன்ன
பேர்அடை யாளம் யாவும்,
செறிவுற நோக்கி, நாயேன்
சிந்தையில் திருக்கம் இன்மை
முறிவுஅற எண்ணி, வண்ண
மோதிரம் காட்டக் கண்டாள்;
இறுதியின் உயிர்தந்து ஈயும்
மருந்துஒத்தது, அனையது எந்தாய். 17

இங்குள தன்மை எல்லாம்
இயைபுளி இயையக் கேட்டாள்;
அங்குள தன்மை எல்லாம்
அடியனேற்கு அறியச் சொன்னாள்;
திங்கள்ஒன்று இருப்பென் இன்னே;
திருஉளம் தீர்ந்த பின்னை,
மங்குவென் உயிரோடு என்று,உன்
மலரடி சென்னி வைத்தாள். 18

வைத்தபின், துகிலின் வைத்த
மாமணிக்கு அரசை வாங்கி,
கைத்தலத்து இனிதின் ஈந்தாள்;
தாமரைக் கண்கள் ஆர,
வித்தக! காண்டி! என்று
கொடுத்தனன்; வேத நல்நூல்
உய்த்துள காலம் எல்லாம்
புகழொடும் ஓங்கி நிற்பான். 19

### சூடாமணி பெற்ற இராமனின் மெய்ப்பாடு

பொடித்தன உரோமம்; போந்து
பொழிந்தன கண்ணீர்; பொங்கித்
துடித்தன, மார்பும் தோளும்;
தோன்றின வியர்வின் துள்ளி;
மடித்தது, மணிவாய்; ஆவி
வருவது போவது ஆகித்
தடித்தது, மேனி; என்னே,
யார்உளர் தன்மை தேர்வார்? 20

**சுக்கிரீவன் கட்டளைப்படி புறப்பட்டது வானர சேனை**

*எழுகவெம் படைகள்! என்றான்;*
*ஏனனும் அளவில், எங்கும்*
*முழுமுரசு எற்றி, கொற்ற*
*வள்ளுவர் முடுக்க, முந்திப்*
*பொழிதிரை அன்ன வேலை*
*புடைபரந் தென்னப் பொங்கி,*
*வழுவல்இல் வெள்ளத் தானை,*
*தென்திசை வளர்ந்தது அன்றே!* 21